219

இலக்கிய மஞ்சரி

முதற் புத்தகம்

13 JUL 1931

ம. வீ. இராமாநுஜாசாரியரால்
தொகுக்கப்பெற்றது

சென்னை
...ப்ளிஷிங் ஹவுஸ் லிமிடெட்
1931

ஸ்ரீ:

இலக்கிய மஞ்சரி

முதற் புத்தகம்

13 JUL 1931

கும்பகோணம் கவர்ன்மெண்டு காலேஜ் ரிடயர்டு தமிழ்ப் பண்டிதரும்
தமிழ் மஹாபாரதப் பதிப்பாசிரியருமாகிய
ம. வீ. இராமாநுஜாசாரியரால்
தொகுக்கப்பெற்றது.

சென்னை
இந்தியன் பப்ளிஷிங் ஹவுஸ் லிமிடெட்
1931

பதிப்புரிமை] [விலை அணா 8

1135
494.81186
77177

13 JUL 1931

முகவுரை

ஆங்கில பாடசாலைகளில் தமிழ்ப்பாட புஸ்தகங்கள் சுமார் 20 வருஷத்திற்குமுன் இருந்ததற்கும் இப்பொழுது இருப்பதற்கும் பலவேறுபாடுகள் உள்ளன. அப்பொழுது, முதல் வகுப்பிலிருந்து மெட்ரிகுலேஷன் வகுப்பு வரையில், நீதியைத் தெரிவிக்கிற வெண்பாக்களையே பாடமாக வைத்திருந்தார்கள். ஒரே விஷயத்தைத் தெரிவிக்கிற ஒருவகைச் செய்யுளையே படிப்பித்தலால் உபாத்தியாயர்களுக்கும், படித்தலால் மாணாக்கர்களுக்கும் தமிழ்ப் பாடத்திலேயே சுவை குறையலாயிற்று. இந்தக்குறையை நீக்குவதின் பொருட்டு, பலவிஷயங்களைத் தெரிவிக்கிற பலவகைச் செய்யுட்களைத் தொகுத்துப் புஸ்தகமாக வெளியிடுவதற்குச் சிலர் முன் வந்தார்கள். அப்படித் தொகுக்கப்பட்ட செய்யுட்களும் உரைநடைகளும் அடங்கிய பல புஸ்தகங்கள் இக்காலத்தில் வெளிவந்து உலாவுகின்றன. அந்த வகையில் இதுவும் ஒன்று. மாணாக்கர்களுக்கு நீதிச் செய்யுளைமாத்திரம் தனியே கற்பிப்பதைக்காட்டிலும், கதைகளும் பலவகை அணிகளும் ரஸங்களும் அடங்கிய பலவகைச் செய்யுட்களைக் கற்பிப்பதில் பெரும்பயன் உண்டானதை என்னுடைய அநுபவத்தில் கண்டிருக்கிறேன். கடினமான நீதி முதலியவைகளும் கதைகளிற் கலந்து சொல்வதால் மாணாக்கர்களுக்குக் கடினமாயில்லாமல் எளிதில் நன்கு விளங்குகின்றன. அவர்கள் அவற்றை இனிது உணர்ந்து மேலும் மேலும் படிக்க வேண்டுமென்று பெரிதும் ஆவல் கொள்ளுகிறார்கள்.

இந்தப் புஸ்தகத்தில் செய்யுட்பகுதியில் பெரும்பான்மை கதைகளாகவும் சிறுபான்மை நீதிகளாகவும் உள்ள செய்யுட்களே சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவற்

றில் சிறுவர்கள் படிக்கத்தகாத சிலசொற்களை மாற்றி அந்த இடங்களில் வேறுசொற்கள் தடித்த எழுத்தில் பதிப்பிக்கப்பட்டுள்ளன. ஒரு கதையிலிருந்து சில சில பகுதிகளை எடுத்துக்கொண்டு, கதை நன்கு விளங்குவதற்காக அங்கங்கே சுருக்கமாகக் கதைத் தொடர்ச்சி எழுதப்பட்டுள்ளது. அது படிப்பவர்களுக்குப் பெரிதும் பயன்படுமென்றே எண்ணுகிறேன். உரைநடைப் பகுதியில், தமிழ்ப் பாஷையில் அதிக புஸ்தகங்கள் இல்லாமையால் நமக்கு வேண்டிய பாடங்களைத் தேர்ந்து எடுத்துத் தொகுப்பது சிரமமாயிருந்தது. ஆனாலும், தக்கவர்கள் எழுதிய நல்ல புஸ்தகங்களிலிருந்தே சில பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. தக்கவர்களெழுதிய புஸ்தகமாதலால் சில சொற்களை அவர்கள் எழுதியவாறே பதிப்பித்திருக்கிறேன். சில சொற்கள் அவரவர்களுடைய நாட்டில் வழங்கும் சொற்களாக இருக்கின்றன. சில வடசொற்கள் நன்னூலில் சொல்லிய விதிப்படியில்லாமல் வேறு விதமாக வழங்குகின்றன. பெரியோர்களெழுதினவையாதலால், மாற்றவேண்டியவையான பலாட்டிகர், ரெட்டு, உட்டினம் என்பவை போன்ற சில சொற்களையும் மாற்றாமல் விட்டிருக்கிறேன். உபாத்தியாயர் பாடஞ் சொல்லும்பொழுது அவைகளை மாணாக்கர்களுக்கு எடுத்துக் காட்டி நன்கு விளக்க வேண்டுகிறேன்.

உரைப் புஸ்தகங்களைக்கொண்டு செய்யுட்களுக்குப் பொருள் தெரிந்துகொள்வதில் படிப்பவர்களுக்குச் செய்யுட்களில் புத்தி நன்கு அழுந்துகிறதில்லை. ஆங்கில பாடசாலையில் படிப்பவர்களிற் பெரும்பாலார் உரைப் புஸ்தகத்தையே துணையாகக்கொண்டு படிப்பவர்களாதலால், பல வருஷங்கள் படித்தும், சில மாதங்கள் தனியே தமிழ் படிப்பவர்களுக்கு உண்டாகிற ஞானம் அவர்களுக்கு உண்டாவதில்லை. ஆதலால், தமிழில் நல்ல

ஞானத்தைப் பெற விரும்புவோர் உரைப்புஸ்தகத்தையே முழுதும் துணையாகக்கொண்டு படிக்கலாகாது. தங்கள் புத்தியைச் செலுத்திச் செய்யுளிலுள்ள உபமான உபமேயங்களையும் விசேஷண விசேஷியங்களையும் சந்தித் தொடர்களையும் சொற்களின் முடிபுகளையும் தெரிந்து அர்த்தத்தைக் கவனிப்பார்களானல் அவர்களுடைய அறிவு நன்கு உறுதிப்படும். அதனலேயே இதற்கு உரை எழுதி இதனேடு சேர்க்கப்படவில்லை.

இந்தப் புஸ்தகத்தில் செய்யுட்பகுதி இருக்க வேண்டிய அளவுக்குமேல் சிறிது அதிகம் இருப்பதாகத் தோற்றும். இந்தப் புஸ்தகத்தைத் தொகுக்கும்படி கேட்டு கொண்டவர்கள் 300 செய்யுள் வரையில் இருக்கவேண்டு மென்று முதலில் தெரிவித்தார்கள். அந்த அளவுக்குத்தக்க படி, உரைநடைப்பகுதியையும் இன்னும் சிறிது அதிகப் படுத்தலா மென்றல் புத்தகம் பக்கங்கள் அதிகப்படக் கூடாதென்று பின்பு ஒரு வரையறை செய்துவிட்டார்கள். ஆதலால், செய்யுட்பகுதியில் சிறிது அதிகமும் உரை நடைப்பகுதியில் சிறிது குறைவுமாகத் தோன்றும். மேலே சொன்ன காரணத்தைக்கொண்டு அறிவுடையோர் க்ஷமிப் பார்களென்று நம்புகிறேன்.

இதிலுள்ள குற்றங்குறைகளைப் பெரியோர்கள் தயை செய்து தெரிவிப்பார்களானல், அவைகளை நன்றியறிவுடனேற்று, அடுத்த பதிப்பில் திருத்திப் பதிப்பிக்கும் படி உரியவர்களைக் கேட்டுக்கொள்வேன்.

இங்ஙனம்:

ம. வீ. இராமானுஜாசாரியர்.

ஸ்ரீ:

இப்புத்தகத்திலடங்கியவை

செய்யுட்பகுதி

நளவெண்பா—புகழேந்திப்புலவர்

	பக்கம்
கடவுள் வாழ்த்து	1
தமயந்தி சுயம்வரம்	2
நளன் அயோத்தியடைதல்	13

நைடதம்—அதிவீரராமபாண்டியன்

நளன் தேவியைக் கண்ணுற்றது	17
நளன் அரசாட்சியடைதல்	25

பஞ்சதந்திரம்—வீரமார்த்தாண்டதேவர், சுகிர்லாபம்

பூனைக்கிடங்கொடுத்துக் கழுகிறந்த கதை	28

அஸம்பிரேக்ஷ்யகாரித்வம்

குரங்கு பழிவாங்கிய கதை	30

குசேலோபாக்கியானம்—வல்லூர், தேவராஜபிள்ளை

அவந்தி நகர்ச் சிறப்பு	33
குசேலர்	36
கிளைஞரும் செல்வமும்	39
குசேலரை மனைவி தூண்டுதல்	42
குசேலர் செல்வம் பெறல்	45

திருவிளையாடற் புராணம்—பரஞ்சோதிமுனிவர்

பழியஞ்சின திருவிளையாடல்	50

நீதி நூல்கள்

நீதிவெண்பா 57

நீதிநெறி விளக்கம்—குமாரகுருபர ஸ்வாமிகள் 59

அறநெறிச்சாரம் —முனைப்பாடியார் 61

திரிகடுகம்—நல்லாதனார் 62

நான்மணிக்கடிகை—விளம்பிநாகனார் 64

தனிப்பாடல்கள்

ஔவையார் 65

அதிமதுர கவிராயர் 66

காளமேகப் புலவர் 67

மாணாக்கர் வரலாறு } நன்னூல்— 67

பாடங்கேட்கு முறை } பவணந்திமுனிவர் 67

உரை நடைப்பகுதி

கடவுள்—ஆறுமுக நாவலர் 69

அருள் ஷை 70

சுகிர்லாபம் (நட்புப்பேறு)—வித்வான் தாண்டவராய முதலியார் 71

நன்றி மறவாமை—அஷ்டாவதானம் வீராசாமி செட்டியார் 93

சுகாதார தருப்பணம் — தி. செல்வகேசவராய முதலியார் 117

மார்க்கோபோலோ — ம. வீ. இராமானுஜாசாரியர் 136

பாண்டவர்களின் படைப்பயிற்சி— மஹாபாரதம் ஷீபார் பதிப்பு 142

சுயநலம் பாராட்டல் அல்லது இறந்த குழந்தை பிழைத்த கதை ஷை ஷை 159

PRINTERS:
PENROSE & CO.,
MADRAS.

ஸ்ரீ:

இலக்கிய மஞ்சரி

நளவெண்பா

கடவுள் வாழ்த்து

கலைமகள்

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பாள்—வெள்ளை
அரியா சனத்தி லரசரோ டென்னைச்
சரியா சனம்வைத்த தாய்.

திருமால்

ஆதித் தனிக்கோல மான னடியவற்காச்
சோதித் திருத்தூணிற் றோன்றினான்—வேதத்தின்
முன்னின்றான் வேழ முதலே யெனவழைப்ப
என்னென்றா னெங்கட் கிறை.

சிவபிரான்

கலாப மயிலிருந்த பாகத்தார் கங்கை
உலாவு சடைமே லுறையும்—நிலாவை
வழியவார்த் தாலன்ன மாநீற்றார் நாகம்
கழியவார்த் தார்நமக்கோர் காப்பு.

ஸ்ரீ:

தமயந்தி சுயம்வரம்

நீர்வளம் நிலவளம் நிறைந்த நிடதநாடானது, பூமி தேவியாகிய பெண்ணுக்கு முகம் போல்வது. அத்தேசத்தின் தலைநகரமாகிய மாவிந்தமென்பது, அந்த முகத்திலிட்ட திலகம்போல விளங்குவது. அதில் நளமகாராஜனென்ற ஓர் அரசனிருந்தான். அவன், கிளியும் பருந்தும் ஒரு கூட்டில் வாழவும் பசுவும் புலியும் ஒரு துறையில் நீரருந்தவும் மனுநீதி தவறாமல் அரசு புரிந்துவந்தான். அவன் யௌவனப் பருவத்தை அடைந்தபோது, ஒருநாள், பொழில்வளங் காணும்பொருட்டு அங்கே செல்வானாயினன். அங்குள்ள மலர்ப்பொய்கையிலிருந்த ஓர் அன்னத்தைக் கண்டு அதனைப் பிடித்துத்தரும்படி சொல்ல, சேடியர்கள் அவ்வன்னத்தைப் பிடித்துவந்து அரசன் முன் வைத்தார்கள். வைத்தலும், அவ்வன்னம் பயந்து மனங் கலங்கித் தன் இனத்தைக் காணாமல் வருந்தியது. அதனைக்கண்டு அரசன் மனமிரங்கி, 'மடவன்னமே! அஞ்சாதே. உன் பொன்மயமான சிறகின் அழகினையும், நடையின் அழகினையும் பார்ப்பதற்கே பிடித்தது. நீ விரும்பிய இடம் செல்லலாம்' என்று விடுத்தனன். அன்னம் அரசனிடத்துக் கொடுஞ்செய்கை சிறிதுமில்லாமையையும் அவனுடைய தண்ணளியையுங்கண்டு அவனுக்குக் கைம்மாறு செய்யக்கருதி அவனைப் பார்த்து, 'அரசனே! விதர்ப்ப தேசத்தின் ராஜதானியாகிய குண்டினபுரத்தில் வீமராஜனென்னும் ஓர் அரசனுண்டு. அவனுக்குத் தமயந்தியென்னுமோர் புதல்வி இருக்கிறாள். அவள் அழகிலும் குணத்திலும் மிகச்சிறந்தவள். அவளுக்கு நிகரான பெண் தேவலோகத்திலுமில்லை. அவளுக்

குத் தகுதியான கணவன் யாரென்று மூவுலகிலும் தேடியுங் காணேன். நின்னைக் கண்டவுடன், நான் அவளை நினைத்தேன். அவளையடையத் தேவரும் முயலுகின்றார்கள். அவள் அவர்களிடத்து விருப்பம் வையாமல் உன்னையே விரும்பும்படி செய்வேன்' என்றது. அரசன் அவள் வடிவழகை முன்னமே பலரும் சொல்லக் கேட்டவனாதலால் பெருமகிழ்ச்சியடைந்து, தன் விருப்பத்தைத் தெரிவித்து அவளைத் தனக்கு மனைவியாக்கும்படி வேண்டினான். அன்னம் விரைவிற் பறந்து சென்று குண்டினபுரத்தையடைந்து தமயந்தியை ஒரு பூங்காவனத்திற் கண்டது. அவள், அவ்வன்னத்தின் அழகையும் பொன்னிறத்தையுங்கண்டு வியந்து, அதனைப் பிடிக்க முயன்றாள். அது அவள் கைப்படுதல்போலக் காட்டி அவளை ஒரு தனியிடத்திற் கொண்டு சென்றது; அங்கே, அவளோடு அளவளாவத் தொடங்கி நளனுடைய வடிவழகையுங் குணச்சிறப்பையும் மிகப்புகழ்ந்து கூறியது.

செம்மனத்தான் றண்ணளியான் செங்கோலான் மங்கை
[யர்கள்
தம்மனத்தை வாங்குந் தடந்தோளான்—மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்து நானிலத்து மிக்கான்
உளனென்பான் வேந்த னுனக்கு. (1)

அறங்கிடந்த நெஞ்சு மருளொழுகு கண்ணும்
மறங்கிடந்த திண்டோள் வலியும்—திறங்கிடந்த
செங்கண்மா லல்லனேற் றேர்வேந்த ரொப்பரோ
அங்கண்மா ஞாலத் தவற்கு. (2)

என்று புகழ்ந்து கூறக் கேட்ட தமயந்தி, முன்னமே தன் தந்தையின் அவைக்கண் வரும் முனிவர் முதலியோர் நளனுடைய அழகு ஆற்றல் முதலியவற்றை மிகச்

சிறப்பித்துக்கூறக் கேட்டு அவனையே கணவனாக அடைய விருப்பங் கொண்டிருந்தாளாயினும், நாணத்தால் முதலில் தன் கருத்தை வெளியிடாமலிருந்தாள். அன்னம் தன்னுடைய சொல்லின் திறமையால் அவளுடைய கருத்தைச் சிறிது சிறிதாக வெளியிடும்படி செய்துவிட்டது. அவள், 'நளனையே மணப்பேன்' என்றும், 'யார்வரினும் நளனுக்கே மாலை சூட்டுவேன்' என்றும் உறுதி கூறக்கேட்டு, அன்னம் அவளிடம் விடைபெற்று, நளனிடம் சென்று நடந்தவற்றைக் கூறித் தன்னிருப்பிடம் சென்றது.

இப்படியிருக்கையில், பீமராஜன் தன் மகளுக்கு மணமுடிக்கக் கருதிச் சுயம்வரநாள் நிச்சயித்து மாநிலத்து மன்னவர்க்கெல்லாம் தூதனுப்பித் தன்னகரத்தும் பறையறைவித்தான். பலதேச மன்னரும் அங்கே வந்து நெருங்கினர். இஃது இங்ஙனமாக,

நெற்றித் தனிக்கண் ணெருப்பைக் குளிர்விக்கும்
கொற்றத் தனியாழ்க் குலமுனிவன்—உற்றடைந்தான்
தேனுடங் தெய்வத் தருவுந் திருமணியும்
வானுடங் காத்தான் மருங்கு. (3)

வீரர் விறல்வேந்தர் விண்ணாடு சேர்கின்றார்
ஆரு மிலராலென் னையுற்று—நாரதனார்
நன்முகமே நோக்கினா னகஞ் சிறகரிந்த
மின்முகவேற் கையான் விரைந்து. (4)

வீமன் மடந்தை மணத்தின் விரைதொடுத்த
தாமம் புனைவான் சுயம்வரத்து—மாமன்னர்
போயினா ரென்றான் புரந்தரற்குப் பொய்யாத
வாயினான் மாதவத்தோர் மன். (5)

அழகு சுமந்திளைத்த வாகத்தாள் வண்டு
பழகு கருங்கூந்தற் பாவை—மழகளிற்று

வீமன் குலத்துக்கோர் மெய்த்தீப மற்றவளே
காமன் றிருவுக்கோர் காப்பு. (6)

மால்வரையை வச்சிரத்தா லீர்ந்தானும் வானவரும்
கோல்வளைதன் மாலை குறித்தெழுந்தார்—சால்புடைய
விண்ணாடு நீங்கி விதர்ப்பன் றிருநகர்க்கு
மண்ணாடு நோக்கி மகிழ்ந்து. (7)

பைந்தெரியல் வேல்வேந்தன் பாவைபாற் போயினதன்
சிந்தை கெடுத்ததனைத் தேடுவான்—முந்தி
வருவான்போற் றேர்மேல் வருவானைக் கண்டார்
பெருவானிற் றேவர் பெரிது. (8)

காவற் குடைவேந்தைக் கண்ணுற்று விண்ணவர்கோன்
ஏவற் றொழிலுக் கிசையென்றான்—ஏவற்கு
மன்னவனு நேர்ந்தான் மனத்தினான் மற்றதனை
இன்னதென வோரா திசைந்து. (9)

செங்கண் மதயானைத் தேர்வேந்தே தேமாலை
எங்களிலே சூட்ட வியல்வீமன்—மங்கைபால்
தூதாக வென்றானத் தோகையைத்தன் னாகத்தால்
கோதாக வென்றானக் கோ. (10)

தேவர் பணிதலைமேற் செல்லுந் திரிந்தொருகால்
மேவுமிளங் கன்னிபான் மீண்டேகும்—பாவில்
குழல்போல நின்றுழலுங் கொள்கைத்தே பூவின்
நிழல்போலுந் தண்குடையா னெஞ்சு. (11)

நளன், 'பிறர் காணாமல் கன்னிமாடத்துப் போய் வருவது எங்ஙனம்?' என்று கேட்டபொழுது, இந்திரன் யாரும் அறியாமற் செல்லும் விஞ்சையை அவனுக்களித்து, 'போய்வருக' என்றான். அங்ஙனமே நளன் சென்று தம

யந்தி எதிரே நிற்க, ஒருவரையொருவர் பார்த்து ஒருவர் மற்றொருவரழகில் ஈடுபட்டனர். தமயந்தி மேலோங்கிய பேரன்பை நாணத்தால் வெளியிடாளாகி அவனைப்பார்த்து,

காவல் கடந்தெங்கள் கன்னிமா டம்புகுந்தாய்
யாவனோ விஞ்சைக் கிறைவனோ—தேவனோ
உள்ளவா சொல்லென்றா ளூசற் குழைமீது
வெள்ளவா ணீர்சோர விட்டு. (12)

நளன், தனது ஆசையாகிய தழலைத் தனது நேர்மையென்னும் நீரால் அவித்துக்கொண்டு நின்று, தான் தேவர்களுடைய தூதாக வந்திருத்தலையும் தன் நாடு முதலியவற்றையும் கூறினன்.

என்னுரையை யாதென் றிகழா திமையவர்வாழ்
பொன்னுலகங் காக்கும் புரவலனை—மென்மாலை
சூட்டுவா யென்றுன் றொடையிற்றேன் றும்பிக்கே
ஊட்டுவா னெல்லா முரைத்து. (13)

இயமரநின் றார்ப்ப வினவளைநின் றேங்க
வயமருதோள் மன்னா வகுத்த—சுயம்வரந்தான்
நின்பொருட்டா லென்று நினைகென்றா ணீள்குடையான்
தன்பொருட்டா னைவா டளர்ந்து. (14)

போதரிக்கண் மாதராள் பொன்மாலை சூட்டத்தான்
ஆதரித்தார் தம்மோ டவையகத்தே—சோதிச்
செழுந்தரள வெண்குடையாய் தேவர்களு நீயும்
எழுந்தருள்க வென்றா ளெடுத்து. (15)

வானவர்கோ னேவல் வழிச்சென்று வாணுதலைத்
தானணுகி மீண்டபடி சாற்றவே—தேன்முரலும்
வண்டார் நளன்போந்து வச்சிரா யுதற்றொழுதான்
கண்டா ருவப்பக் கலந்து. (16)

விண்ணவர்த மேவலுடன் வீமன் றிருமகள்பால்
நண்ணு புகழ்நளனு நன்குரைத்த—பெண்ணணங்கின்
வன்மொழியுந் தேவர் மனமகிழத் தான்மொழிந்த
மென்மொழியுஞ் சென்றுரைத்தான் மீண்டு. (17)

அங்கி யமுதநீ ரம்பூ வணியாடை
எங்குநீ வேண்டினைமற் றவ்விடத்தே—சங்கையறப்
பெற்று யெனவருணை னுகண்ட லன்றருமன்
மற்றோனு மீந்தார் வரம். (18)

அங்கவர்கள் வேண்டும் வரங்கொடுக்கப் பெற்றவர்கள்
தங்களொடுந் தார்வேந்தன் சார்ந்தனன்மேல்—மங்கை
வயமருவு கின்ற மனக்கா வலர்க்குச்
சயமரந்தான் கண்டதோர் சார்பு. (19)

முறைசெறிந்த நாளேழு முற்றியபின் கொற்ற
வரைசெறிந்த தோண்மன்னர் வந்தார்—விரைசெறிந்த
மாலை துவள முடிதயங்க வால்வளையும்
காலை முரசுங் கலந்து. (20)

மன்றலங்தார் மன்னர் நடுவணைய வந்திருந்தான்
கன்று குதட்டிய கார்நீல—மூன்றில்
குறுவிழிக்கு நேர்நாடன் கோதைபெருங் கண்ணின்
சிறுவிழிக்கு நோற்றிருந்த சேய். (21)

மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே [றத்துச்
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்—மின்னி
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னஞ் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று. (22)

மன்னர் குலமும் பெயரும் வளநாடும்
இன்ன பரிசென் றியலணங்கு—முன்னின்று

தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டினாள்
தேர்வேந்தர் தம்மைத் தெரிந்து. (23)

காவலரைத் தன்சேடி காட்டக்கண் டீரிருவர்
தேவர் நளனுருவாச் சென்றிருந்தார்—பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாண் மற்றவரைக் காணாநின்
றாசலா டுற்றா ளுளம். (24)

பூணுக் கழகளிக்கும் பொற்றொடியைக் கண்டக்கால்
நாணுக்கு நெஞ்சுடைய நல்வேந்தர்—நீணிலத்து
மற்றேவர் வாராதார் வானவரும் வந்திருந்தார்
பொற்றேர் நளனுருவாய்ப் போந்து. (25)

மின்னுந்தார் வீமன்றன் மெய்ம்மரபிற் செம்மைசேர்
கன்னியா ளாகிற் கடிமாலை—அன்னந்தான்
சொன்னவனைச் சூட்ட வருளென்றாள் சூழ்விதியின்
மன்னவனைத் தன்மனத்தே வைத்து. (26)

கண்ணிமைத்த லானடிகள் காசினியிற் றோயதலான்
வண்ண மலர்மாலை வாடுதலான்—எண்ணி
நறுந்தா மரைவிரும்பு நன்னுதலே யன்னாள்
அறிந்தா ளளன்றன்னை யாங்கு. (27)

விண்ணரச ரெல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகல் ஞாலங் களிகூர—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன். (28)

திண்டோள் வயவேந்தர் செந்தா மரைமுகம்போய்
வெண்டா மரையாய் வெளுத்தவே—ஒண்டாரைக்
கோமாலை வேலான் குலமாலை வேற்கண்ணாள்
பூமாலை பெற்றிருந்த போது. (29)

மல்லன் மறுகின் மடநா குடனாகச்
செல்லு மழவிடைபோற் செம்மாந்து—மெல்லியலாள்
பொன்மாலை பெற்றதோ ளோடும் புறப்பட்டான்
நன்மாலை வேலா னளன். (30)

சுயம்வரத்துக்கு வந்த அரசர்கள் தத்தம் ஊர்களுக்குச் சென்றார்கள். தேவர்கள் நளனையும் தமயந்தியையும் வாழ்த்தித் தம்மூர்க்குச் செல்லுகையில், அவர்கள் கலியைச் சந்தித்தார்கள். தேவர்கோன் கலியைப்பார்த்து அவன் வந்த காரணத்தை வினவ, அவன், 'தமயந்தியை விரும்பிவந்தேன்' எனலும், அவர்கள், 'தமயந்தி நளனுக்கு மாலை சூட்டினாள்' என்றனர். அதுகேட்ட கலி, மிகச்சினந்து, 'தேவர்களை அவமதித்து ஒரு நரனுக்கு மாலை சூட்டிய அவளை அவள் கணவனை விட்டுப் பிரிப்பேன்' என்றும், 'அவள்கணவனுக்கு அளவில்லாத தீங்கிழைப்பேன்' என்றும் சபதங்கூறி, நிடதநாடு சென்று, அங்கே அரசனிடம் தான்புகுதற்கு இடம்பெறாமையால் ஓர் தான்றிமரத்தை அடைந்து அதில் வசிப்பானாயினன். இஃது இங்ஙனமாக,

நளன் தமயந்தியுடனும் பீமராஜன் முதலானவர்களுடனும் அரண்மனை சென்று சோதிடநூலோர் கூறிய நல்லநாளில் சுபமுகூர்த்தத்தில் மணம்புரிந்து அங்கே சில நாள் தங்கியிருந்தபின், பீமராஜனிடம் விடைபெற்றுத் தன்னகர்க்குத் தமயந்தியுடன் மீண்டுவந்தான். அங்கே அவனும் தமயந்தியும், இந்திரனும் சசியும்போலவும், சந்திரனும் ரோகிணியும்போலவும் மனமகிழ்ச்சியுடன் இனிது வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு இந்திரசேனனென்னும் ஒரு புதல்வனும் இந்திரசேனையென்னும் ஒரு புதல்வியும் பிறந்தார்கள். அவர்களுடைய அமிழ்தினுமினிய மழலைச்சொல்லைக்கேட்டு மகிழ்ந்திருக்குநாளில், நளராஜன், ஒருநாள், காலை நன்குகழுவாமல் சந்திசெய்யப்புக,

அதுவே காரணமாக, அந்த நளனை அடைவதற்குப் பன்னிரண்டு வருஷமாகச் சமயம் பார்த்துக்கொண்டு தான்றியிலொளிந்திருந்த கலி புருஷன் அவனை அடைந்தான். உடனே, கலி புட்கரனிடம் சென்று நளனுடையராஜ்யத்தை அவனுக்கு வாங்கித்தருவதாகவும், தான் கலியென்பதாகவும், நளனைச் சூதினுல் வெல்வதாகவும் உறுதி கூறித் தான் ஒரு காளை வடிவெடுத்து நின்ருன். புட்கரன் அதன் மேலேறிக் கொண்டு நளனிடம் வந்து அவனைச் சூதுக்கழைத்தான். நளன் அதற்குடன்பட்டு ஆடத் தொடங்கினுன். கலிபுருஷன் சூதாடுகாய்களிற் புகுந்து புட்கானுக்கு அனுகூலமாக விழச் செய்யவே, நளன் நாடுநகரங்களையும் மற்றச் செல்வங்களனைத்தையும் தோற்ருன். நளனுக்குப் பந்தயம் வைக்கப் பொருளொன்றுமில்லாமையால், புட்கரன், அவனைப்பார்த்து, 'தமயந்தியைப் பந்தயமாகவைத்து ஆடுவாயாக' என்ருன். நளன் அச்சொல்லைக்கேட்டுப் பொருதவனுகிப் புஷ்கரனைப் பார்த்து, 'நீ இங்ஙனம் கூருதே. நீவென்ற நினது நகரத்தில் ஒருகணமும் இரேன்' என்று சொல்லித் தமயந்தியினிடம் சென்று நடந்தவற்றையெல்லாம் புண்ணில் வேல் நுழைந்தாலென அவளுக்குக்கூறி அவளோடு வனஞ் செல்லப் புறப்பட்டான். அவர்கள் நகரவீதியிற் செல்லும் போது பட்டணத்து ஜனங்கள் அவர்களுடைய குணதிசயங்களைக்கூறிப் பிரிவாற்ருது வருந்திப் பலவாறு புலம்புவாராயினர். அதுகேட்ட புட்கரன், 'நளனைத்தொடர்ந்துசெல்வார்க்குக் கடுந்தண்டம் விதிப்பேன்' என்று நகரெங்கும் பறையறைவித்தான். கலிபுருஷனும், நளனும் தமயந்தியும் செல்லுகிறவழி தெரியாதபடி மாயம்செய்தான். நகரத்து ஜனங்கள் திரும்பி வந்துவிட்டனர். நளன் தமயந்தியையும் தன்னிருமக்களையும் அழைத்துக்கொண்டு வனத்திற் செல்லுகையில் தமயந்தியைப்பார்த்து, 'மக்களிருவரை

யுங்கொண்டு வனத்திற்செல்லுவது மிக்கதுன்பந்தருவ தாகும். ஆதலின், நீ இவர்களோடு உன் தந்தையிடம் செல்வாயாக' என, அவள் அவனையும் உடன்வரும்படி வேண்ட, அவன் அதனைப் பலகாரணங்கூறி மறுக்க, அவர்கள் தம்மக்களை அவ்வழியே வந்த ஒரு வேதியனோடு குண்டினபுரத்துக்கு அனுப்பினர். பின்பு இருவரும் அந்தக் காட்டுவழியே செல்லுகையில், கலிபுருஷன் அன்னப்புள்ளாய்த்தோன்ற, தமயந்தி நளனைப்பார்த்து, 'இந்தப் பக்ஷியைப் பிடித்துத் தருக' என்று வேண்ட, இருவரும் ஓராடை உடுத்து மற்றோர் ஆடையால் அந்தப் பக்ஷியை வளைத்தனர். அது அந்த ஆடையைக் கவர்ந்து சென்றது. அது கலியின் வஞ்சனையெனத் தெரிந்து தமயந்தி அவனைச் சபித்தாள். பிறகு, இருவருக்கும் உயிர் ஒன்றானதுபோல உடையும் ஒன்றாகவே, இருவரும் பகல்முழுதும் காட்டில் அலைந்து திரிந்து இரவில் ஒரு பாழ்மண்டபத்தே தங்குவாராயினர்.

பகலெல்லாம் வெய்யிலில் அலைந்த களைப்பால் தமயந்தி அயர்ந்து நித்திரை போயினள். நளன் தங்களுக்கு நேர்ந்த கஷ்டங்களை நினைத்தும், தமயந்தி அங்ஙனம் பாழ்மண்டபத்தில் சயனிக்க நேர்ந்ததைக் கண்டும், மனம் மிக வருந்தினன். 'இனி, தமயந்தி உடன் வருவாளாயின் அவளது வருத்தத்தைக் காணல் அரிது' என்று நினைத்து அவளை விட்டுப்பிரியக் கருதினன். உடனே கலி ஒரு கத்தி வடிவாகி அருகிற் கிடந்தான். நளன் அதனை எடுத்து அந்த ஆடையைப் பாதியாக அரிந்துகொண்டு அவளை விட்டு நீங்கினன். அவன், சிறிது தூரம் செல்லுவான்; நீங்கத் துணியாமல் திரும்புவான்; தியங்கி நிற்பான். இந்த நிலைமையில், அவளைப் பாதுகாக்கும்படி தேவதைகளை வேண்டிக்கொண்டு பிரிந்து செல்வானாயினன்.

தமயந்தி விழித்துக்கொண்டு கையினால் தடவிப் பார்க்க, நளனைக்காணாமையால் திடுக்கிட்டெழுந்து கூந்தல் குலையவிழுந்து கோவென்று கதறியழுதாள். இப்படிப் புலம்பிக் கொண்டிருக்கையில் சூரியன் உதயமாயிற்று. எதிர்ப்பட்ட மிருகங்களையும் பக்ஷிகளையும், 'நளராஜனைக் கண்டதுண்டா?' என்று கேட்டுக்கொண்டே செல்லுகையில், அவளை ஒரு மலைப்பாம்பு விழுங்கியது. அவள் அதன் வாய்ப்பட்டு ஓவென்று அலறினாள். அவ்வொலி கேட்ட ஒரு வேடன் அவளை அப்பாம்பின் வாயிலிருந்தும் விடுவித்தான். அவன் அவளுக்குத் தீங்கிழைக்கப்புக, அவள் சீறி நோக்கினமையால் அவன் அக்கணத்தில் நீறாகி நிலத்தில் விழுந்தான். பிறகு, அவள் அவ்வழியே வந்த வணிகர் கூட்டத்தோடு சேர்ந்து வழிச்சென்று வழியில் நேர்ந்த சில இடையூறுகளுக்குத் தப்பிச் சேதி நகரத்தை அடைந்தாள். வீதி வழியே செல்லுகின்ற அவளுடைய வடிவத்தையும் வேடத்தையும் கண்டு ஐயுற்று அரசன்தாய் அவளையழைத்து, 'நீ யார்? உன் வரலாறு என்னை?' என்று வினவினாள். தமயந்தி தன்னை இன்னளென்று தெரிவியாமல் தன்கணவன் தன்னைவிட்டுப் பிரிந்ததாகவும் தான் அவனைத்தேடிக்கொண்டு அங்கு வந்ததாகவும் கூறி, அவள் கட்டளைப்படி, அங்கே இருந்தாள்.

பீமராஜன் நளனையும் தமயந்தியையும் தேடும்படி ஒரு வேதியனைத் தூதனுப்பினான். அவன் பலவிடங்களிலும் தேடித் தமயந்தியைச் சேதியரசனரண்மனையில் கண்டான். அவனால் சேதியரசன் தாய் தமயந்தியைத் தெரிந்து, தமயந்தி தனக்கு மகள்முறையாக வேண்டுமென்பதையும் சொல்லி, முகமன்கூறி, அவள் விருப்பப்படி அவளைக் குண்டினபுரத்துக்கு அனுப்பினாள். அங்கே வந்த தமயந்தியைக்கண்டு குண்டினபுரத்திலுள்ள ஜனங்

கள் மிகவருந்தினர். தந்தையும் தாயும் மிக்கதுயரத்தில் ஆழ்ந்தனர். தமயந்தி மிக்க துக்கத்துடன் அங்கே இருந்தாள்.

நளன் அயோத்தியடைதல்

நளமகாராஜன் தமயந்தியை விட்டுப்பிரிந்து செல்லுகையில், வழியில், பின் வருமாறு ஓர் ஒலி உண்டாயிற்று.

மன்னு வுனக்கபய மென்னு வனத்தீயில்
பன்னக வேந்தன் பதைத்துருகிச்—சொன்ன
மொழிவழியே சென்றான் முரட்கலியின் வஞ்சப்
பழிவழியே செல்கின்றான் பார்த்து. (31)

ஆருந் திரியா வரையிருளி லங்஖னே
சோர்குழலை நீத்த துயரோடும்—வீரன்
திரிவானத் தீக்கானிற் செந்தீயின் வாய்ப்பட்
டெரிவானைக் கண்டா னெதிர். (32)

தீக்கடவு டந்த வரத்தைத் திருமனத்தின்
ஆக்கி யருளா லரவரசை—நோக்கி
அடைந்தா னடைதலுமே யாரழலோ னஞ்சி
உடைந்தான்போய்ப் புக்கா னுவந்து. (33)

வேத முனியொருவன் சாபத்தால் வெங்கானின்
ஆதபத்தின் வாய்ப்பட் டழிகின்றேன்—காதலால்
வந்தெடுத்துக் காவென்றான் மாலை மணிவண்டு
சந்தெடுத்த தோளானைத் தான். (34)

சிரியாய் நீயெடுப்பத் தீமை கெடுகின்றேன்
கூருந் தழலவித்துக் கொண்டுபோய்ப்—பாரில்
விடுகென்றான் மற்றந்த வெந்தழலான் வெம்மைப்
படுகின்றான் வேல்வேந்தைப் பார்த்து. (35)

என்றுரைத்த வவ்வளவி னேழுலகுஞ் சூழ்கடலும்
குன்றுஞ் சுமந்த குலப்புயத்தான்—வென்றி
அரவரசைக் கொண்டகன்றா ஞரணியந் தன்னின்
இரவரசை வென்றா னெடுத்து. (36)

மண்ணின்மீ தென்றனைநின் வன்றாளா லொன்றுமுதல்
எண்ணித் தசவென் றிடுகென்றான்—நண்ணிப்போர்
மாவலான் செய்த வுதவிக்கு மாறாக
ஏவலாற் றீங்கிழைப்பெ னென்று. (37)

ஆங்கவன்றா னவ்வா றுரைப்ப வதுகேட்டுத்
தீங்கலியாற் செற்ற திருமனத்தான்—பூங்கழலை
மண்ணின்மேல் வைத்துத் தசவென்று வாய்மையான்
எண்ணினான் வைத்தா னெயிறு. (38)

வீமன் மடந்தை விழிமுடியக் கண்டறியா
வாமநெடுந்தோள் வறியோருக்—கேமம்
கொடாதா ரகம்போற் குறுகிற்றே மெய்ம்மை
விடாதான் றிருமேனி வெந்து. (39)

ஆற்ற லரவரசே யாங்கென் னுருவத்தைச்
சிற்றமொன் றின்றிச் சினவெயிற்றால்—மாற்றுதற்கின்
றென்கா ரணமென்றா னேற்றமரிற் கூற்றழைக்கும்
மின்கா லயின்முகவேல் வேந்து. (40)

காயுங் கடகளிற்றாய் கார்க்கோ டகனென்பேர்
நீயிங்கு வந்தமை யானினைந்து—காயத்தை
மாறாக்கிக் கொண்டு மறைந்துறைதல் காரணமா
வேறாக்கிற் றென்றான் விரைந்து. (41)

கூனிறால் பாயக் குவளை தவளைவாய்த்
தேனிறால் பாயுந் திருநாடா—கானில்

தணியாத வெங்கனலைத் தாங்கினு யிந்த
அணியாடை கொள்கென்று ஞங்கு. (42)

சாதி மணித்துகினீ சாத்தினுற் றண்கழுநீர்ப்
போதின்கீழ் மேயும் புதுவரால்—தாதின்
துளிக்குநா நீட்டுந் துறைநாடர் கோவே
ஒளிக்குநா ணீங்கு முரு. (43)

வாகு குறைந்தமையான் வாகுகனென் றுன்னுமம்
ஆக வயோத்தி நகரடைந்து—மாகனகத்
தேர்த்தொழிற்கு மிக்கானீ யாகென்றான் செம்மனத்தால்
பார்த்தொழிற்கு மிக்கானைப் பார்த்து. (44)

இணையாரு மில்லா னிழைத்த வுதவி
புணையாகச் சூழ்வானிற் போனுன்—பணையாகத்
திண்ணுகை மோரெட்டுந் தாங்குந் திசையனைத்தும்
எண்ணுகை வேந்த னெழுந்து. (45)

நினைப்பென்னுங் காற்றசைப்ப நெஞ்சிடையே மூளும்
கனற்புகைய வேகின்றான் கண்டான்—பனிக்குருகு
தண்படா நீழற் றனிப்பேடை பார்த்திரவு
கண்படா வேலைக் கரை. (46)

கொம்ப ரிளங்குருகே கூறு திருத்தியால்
அம்புயத்தின் போதை யறுகாலால்—தும்பி
திறக்கத்தே னூறுந் திருநாடன் பொன்னை
உறக்கத்தே நீத்தேனுக் கொன்று. (47)

புன்னை நறுந்தாது கோதிப் பொறிவண்டு
கன்னிப் பெடையுண்ணக் காத்திருக்கும்—இன்னருள்கண்
டஞ்சினு னாவி யழிந்தா னறவுயிர்த்து
நெஞ்சினு னெல்லா நினைந்து. (48)

காதலியைக் காரிருளிற் கானகத்தே கைவிட்ட
பாதகனைப் பார்க்கப் படாதென்றோ—நாதம்
அளிக்கின்ற வாழிவா யாங்கலவ வோடி
ஒளிக்கின்ற தென்னோ வுரை. (49)

பானலே சோலைப் பசுந்தென்றல் வந்துலவும்
கானலே வேலைக் கழிக்குருகே—யானுடைய
மின்னிமைக்கும் பூணாளவ் வீங்கிருள்வா யாங்குணர்ந்தால்
என்னினைக்குஞ் சொல்வீ ரெனக்கு. (50)

போவாய் வருவாய் புரண்டு விழுந்திரங்கி
நாவாய் குழற நடுங்குறுவாய்—தீவாய்
அரவகற்று மென்போல வார்கலியே மாதை
இரவகற்றி வந்தாய்கொ லின்று. (51)

முன்னீர் மடவார் முறுவற் றிரள்குவிப்ப
நன்னீ ரயோத்தி நகரடைந்தான்—பொன்னீர்
முருகுடைக்குந் தாமரையின் மொய்ம்மலரைத் தும்பி
அருகுடைக்கு நன்னாட் டரசு. (52)

மான்றேர்த் தொழிற்கு மடைத்தொழிற்கு மிக்கோனென்
றான்றேய்க்கும் வேலா னுயர்நறவத்—தேன்றேய்க்கும்
தார்வேந்தற் கென்வரவு தானுரைமி னென்றுரைத்தான்
தேர்வேந்தன் வாகுகனைச் சென்று. (53)

அம்மொழியைத் தூத ரரசற் கறிவிக்கச் [குத்
செம்மொழியாத் தேர்ந்ததனைச் சிந்தித்தே—இம்மொழிக்
தக்கானை யிங்கே தருமி னெனவுரைப்ப
மிக்கானுஞ் சென்றான் விரைந்து. (54)

பொய்யடையாச் சிந்தைப் புரவலனை நோக்கித்தான்
செய்ய முகமலர்ந்து தேர்வேந்தன்—ஐயாநீ

எத்தொழிலின் மிக்கனைகொல் யாதுன் பெயரென்றான்
கைத்தொழிலின் மிக்கானைக் கண்டு. (55)

அன்ன மிதிப்ப வலர்வழியுந் தேறல்போய்ச்
செந்நெல் விளைக்குந் திருநாடர்—மன்ன [றான்
மடைத்தொழிலுந் தேர்த்தொழிலும் வல்லென்யா னென்
கொடைத்தொழிலின் மிக்கான் குறித்து. (56)

ரிதுபன்னன் நளனைக் குதிரைச்சாலைக்குத் தலைவ னாக நியமிக்க அவன் அங்கே வசித்து வந்தான்.

நைடதம்

நளன் தேவியைக் கண்ணுற்றது

மக்கள் வாண்முக நோக்கிய மடவர னெஞ்சம்
நெக்கு வாடுதல் கண்டநற் றூயுள நெகிழ்ந்து
கக்கு செந்தழற் காலவேற் காதலற் குறுகி
நக்க பூங்கழ னளனையு நாடுகென் றுரைத்தாள். (57)

ஓட ரிக்கணு ளுரைத்தலு மொற்றரைக்கூவி
ஆட கப்பசும் பொலன்கழ னளனைநீ ராய்ந்து
தேடி வம்மினென் றரசர்கோன் றிசைதொறுஞ் செலுத்த
நாடி னாரவர் நளிகடல் வரைப்பெலா நடந்தே. (58)

துருவு மொற்றரி லொருவன்மீண் டணங்கின் முன்றோன்றி
அரிவை மூதெயி லயோத்திமா நகரினி லடைந்தேன்
புரிக ருங்குழன் மனைவியைப் போக்கினன் புலம்பும்
ஒருவ னிவ்வுழி யுண்டுகொ லெனவினு வினனுல். (59)

ஓகை யோடெனக் கொருவனுங் குளங்கனிந் துருகி
வாகை வெஞ்சிலை யிருதுபன் னற்குயர் மான்றேர்ப்

பாகன் கொய்யுளைப் பரியுளந் தேர்பவ னொருவன்
தோகை யைப்பிரிந் தாரு ருழப்பவன் சோர்வான். (60)

அழலி லாதுண வமிர்தென வடுந்தொழில் புரிவோன்
மழக ளிற்றினன் னடையினன் வாகுக னென்போன்
எழுவு லாந்திணி தோளின னீங்குள னென்ன
ஒழுகு பூங்கொடி மருங்குலா யுணர்ந்தனன் வந்தேன்.(61)

என்று கூறிய வந்தணற் கிருநிதி வழங்கி
நன்று நின்னுரை யின்னமு மயோத்தியி னண்ணி
மன்றன் மாலேவே லிருதுபன் னற்குள மகிழ்வ
தொன்று கூறுவ துளதென வுரைத்தன்மே யினளால்.(62)

நாட்ட மூன்றுடை நாயகன் வரத்தினு னங்கை
மீட்டுங் கன்னிகை யாயினள் சுயம்வரம் விழைந்தாள்
கேட்டு மாநிலக் கிழவரு மவ்வுழி யிறுத்தார்
பூட்டு வார்சிலை மன்னநீ போதியேற் போவாய். (63)

நாளை நன்மணம் புணர்வது நிடதநா டளிக்கும்
காளை யாருயி ருளன்கொலோ கழிந்தனன் கொல்லோ
ஆளி மொய்ம்பினு யென்றுநீ யறைகென வறைந்தாள்
வாளை வென்றரி பரந்துமை தோய்ந்தகண் மடவாள். (64)

சுருதி நூற்றுறை போயவன் றனைவினி லெய்தி
இருது பன்னனை யடைந்திவை யாவையு மியம்ப
மருமலர்க்குழன் மன்றல்கேட் டலுமுள மகிழ்வுற்
றுருவ வாம்பரித் தேர்விடு வாகுவற் குரைப்பான். (65)

தளரு நுண்ணிடைத் தமயந்தி சுயம்வரம் நாளை
உளைவ யப்பசும் புரவியி னுள்ளமோர்ந் தனையேல்
தெளியுங் கேள்வியாய் விரைவினிற் செலுத்துகதேரென்
றளிமு ரன்றுபைந் தேனுகர் தாரினு னறைந்தான். (66)

கேட்ட வாகுவன் கிளியென மிழற்றுதீங் கிளவி
காட்டு ணீத்தது நினைத்தன னாயினுங் கற்பு
நாட்டு கின்றவ ளித்திறம் புரியுமோ நம்மைக்
கூட்டு தற்கிஃ திழைத்தன னாமெனக் குறித்தான். (67)

நொறில்வ யப்பரித் தேர்பண்ணி நொய்தினிற் கொணரா
ஏறுழ்வ லித்தடந் தோளினும் தேர்மிசை யிவரின்
நறும லர்ப்பசும் பூந்தொடை விதர்ப்பர்கோ னாட்டின்
உறுவ லிப்பகல் கழிவதன் முன்னென வுரைத்தான். (68)

என்று கூறலு மிளங்கதிர்ப் பரிதிபோ லிறைவன்
குன்று போலுயர் கொடிஞ்சியந் தேர்மிசைக் கொள்ள
நின்ற யாவரும் வியப்புற நினைவருங் கடுப்பின்
மன்ற லந்தொடை வாகுவன் வாம்பரி விடுத்தான். (69)

விடுத்த வாம்பரி வருந்தலு மெய்த்தவர் தனக்குக்
கொடுத்த விஞ்சையைக் கொய்யுளைப் பரியொடுங் கூறக்
கடுப்பை யாவரு முணர்ந்திலர் கால்விசைத் தோடி
அடுத்த வார்கழல் விதர்ப்பர்கோ னணிகெழு நாட்டில். (70)

கூந்தன் மாவுள மறிதலிற் சாலிகோத் திரனே
வாய்ந்த கேள்வியின் மாதலி யோவன்றி நளனும்
ஏந்தல் வேற்றுரு வெடுத்தன னேயென வெண்ணி
வேந்தர் வேந்தனு மணிமுடி துளக்கினன் வியந்தான். (71)

முத்த வெண்குடை வேந்தர்கோன் முழவுறழ் தடந்தோள்
உத்த ரீயமங் நெறியிடை வீழ்தலு முணர்ந்து
தத்து வாம்பரி நிறுவியத் துகிறரு கென்னப்
பத்தி யோசனை நடந்தது தேரெனப் பகர்ந்தான். (72)

இன்ன வாய்மைகேட் டரசனும் வியப்புட னேகப்
பின்னு மையிரு காவத மகன்றதற் பின்னர்

முன்னர்த் தோன்றிய தளியினம் பெடையொடு மூசப்
பொன்னந் தாதுகு பூந்துணர்ப் பொரியரைத் தான்றி. (73)

தான்றி மாமரந் தோன்றலுந் தேரினைத் தகைத்துத்
தோன்று மிம்மரத் திலைகளுந் தொக்கமென் பழனும்
மூன்று கோடியே முப்பதிற் றிரண்டென மொழிய
ஆன்ற கேள்வியோனெண்ணியற் றுமென வியந்தான். (74)

இனைய விஞ்சைமற் றெனக்குநீ யளித்தனை யென்னில்
துனைவ யப்பரி யுளமுணர் விஞ்சையான் சொல்வன்
வனைபொ லன்கழன் மணிமுடி மன்னவென் றுரைப்ப
அனைய விஞ்சையை வாகுவற் களித்தனன் னன்றே. (75)

இருது பன்னனவ் விஞ்சையை வாகுவற் கீய
மருவி நின்றவன் கலிதணந் தேகிவா ளரவம்
எரிசெய் வெவ்விடங் கான்றவீ னிதயநெக் குருகி
வெருவி வாய்விடா விடத்தினை யுமிழ்ந்தன னன்றே. (76)

தணந்த வெந்திறற் கலியினைச் சபிக்குவ னென்னுக்
கணங்கொள் வண்டிமிர் தாரினு னுளத்திடைக் கருதல்
உணர்ந்த வெங்கலி தமயந்தி யுரைத்தசா பத்தால்
அணங்க ராவுமிழ் விடத்தினு லின்றள வயர்ந்தேன். (77)

இழைத்த தீவினை தணந்தன னின்றுதொட் டுன்பேர்
வழுத்தி னுரையு மருவலென் மன்னவென் றேத்த
அழற்கொ டுஞ்சினந் தணிந்தன னுடல்வே லரசன்
குழைத்த தான்றியி லேறினன் கொடியவெங் கலியே. (78)

விண்ட மென்மலர் நறவினை விளரியஞ் சுரும்பர்
உண்டு துஞ்சுதார் நிடதர்கோன் றேர்கடி தோட்டி
மண்டு தீம்புன லகழிசூழ் மாமதிற் குடுமிக்
கொண்டல்கண்படு குண்டினபுரத்தில்வந் தடைந்தான். (79)

சில்லி யந்தடந் தேர்வரு கம்பலே கேளா
ஒல்லே யித்திறந் தேர்விட நளனலா தொருவர்
வல்ல ரோவென மனத்திடை யெண்ணி மற்றனையோன்
அல்ல னேனுயிர் துறப்பனென் றுன்னின ளணங்கே.(80)

மருவு பாகனைத் தேரொடும் வாயிலி னிறுவி
இருது பன்னனவ் வீமன்மாட் டேகலு மெதிராப்
புரிவ யாவையும் புரிந்துபல் காவதம் போக்கி
உருவப் பூணினுய் வந்தமை யெவன்கொலென்
[றுரைத்தான். (81)

ஈங்க டைந்தது மன்னநிற் காணிய வெனலும்
வீங்கு,தோளினு னினியநன் மொழிபல விளம்பிப்
பாங்கு ளார்தமை யுறையுளொன் றமைக்கெனப் பணிப்ப
ஆங்கு விண்ணவர் நகரினும் விழுமிதொன் றமைத்தார்.(82)

இருது பன்னன்வேந் தருளினு லவ்வயி னெய்தி
அரசர் யாவருந் தொக்கில ராய்வளேப் பணைத்தோள்
விரைசெய் கோதைதன் சுயம்வர மென்னவே தியன்முன்
உரைசெய் மாற்றமற் றென்கொலென் றயிர்த்தன
[னுறைந்தான். (83)

தமயந்தி, ருதுபன்னற்குத் தேர்செலுத்திவந்திருப்பவன் நளமகாராஜனேவென்று பார்த்துவரும்படி தன் தோழியை அனுப்பினுள்.

கொங்கு வாய்மடுத் தினவண்டு கூட்டுணுங் கூந்தல்
திங்கள் வாண்முகத் தெரிவைதன் னேவலிற் றிறம்பா
மங்கை யெய்திமற் றியாவனீ யெத்தொழில் வல்லே
இங்கு வந்தவா றென்னென வாகுவ னிசைப்பான். (84)

விரிம லர்க்குழற் றமயந்தி சயமரம் வேட்ட
இருது பன்னன்மான் றேர்விடும் வாகுவ னென்பேர்

புரிவல் வெந்தழ லின்றியு மடைத்தொழில் புனலற்
றருகு பாலையிற் றீம்புனல் தருவலென் றுரைத்தான். (85)

அவள், 'இந்த வித்தைகள் நளனையன்றி அறிவா ரில்லை. இவைகளை நீ அவ்வரசனிடம் கற்றுக்கொண்டிருக்க வேண்டும். அவன் இப்பொழுது எங்கே வசிக்கிறான்? அதனை விவரித்துச் சொல்லவேண்டும்' என்றனள். அதற்கு, அவன்,

மேய விஞ்சையோர் நளனொடுங் கற்றிலென் விறல்வேல்
சேய னானினி துறைவதிவ் விடமெனத் தெருளேன்
தூய கற்பினர் காதலர் துறப்பினு மற்றோர்
நாய கற்பெற நினைவர்கொ லோவென நவின்றான். (86)

இன்ன கூறலு மடவரல் கதுமென வேகி
மின்ன னாளுடன் கேட்டன யாவையும் விளம்பி
அன்ன வன்றன துருவலான் மொழிகுவ தனைத்தும்
முன்னி னம்மிறை மொழிவதே போன்மென மொழிந்
[தாள். (87)

மொழிதல் கேட்டலு மொய்குழல் வாலரி யுதவி
அழலி லாதிவை யடுவது காண்டியென் றறையக்
குழைகொள் வாண்முகக் கொம்பனா ளவனுழைக் குறுகி
இழைகொ னுண்ணிடை சொற்றவா றிசைத்தன
[ளீந்தாள். (88)

ஈய்ந்த வாலரி பெய்தபொற் குழிசிதீ யின்றி
ஆய்ந்த கேள்வியான் றொடுதலு மடிசிலா வமைய
வேய்ந்த பூங்குழல் கண்டுபோய் வேய்மலர்ப்
[பொறையால்
சாய்ந்த நுண்ணிடைத் தமயந்தி தன்னொடு
[மொழிந்தாள். (89)

அழலு நீருமின் றமிழ்தென வடுதொழில் கேட்டுக்
குழையு நெஞ்சின ளின்னுயிர்க் கொழுநனெனன் றெண்ணி
விழைவி னேடுதன் மக்களை யவனுழை விடுத்தாள்
மழலை மென்மொழி மக்களு மன்னன்மாட் டடைந்தார். ()

அடைந்த மக்களைக் காண்டலு மழலிடு மெழுகின்
உடைந்த துள்ளநீ ரூற்றிருந் தொழுகின நெடுங்கண்
தொடர்ந்த மும்மல முருக்கிவெம் பவக்கடல் தொலையக்
கடந்து ளோர்களுங் கடப்பரோ மக்கண்மேற் காதல்.(91)

மழலை மென்மொழி மக்களைக் காண்டலு மன்னன்
அழுது துன்புற லாய்வளைத் தோழிகண் டேகித்
தொழுது சொற்றலுங் கொழுநனு மென்பது துணிந்து
முழுவ லன்புடைத் தாயொடுந் தந்தைபான் மொழிந்தாள்.

மழைத்த டங்கணுண் மன்னவன் பணியினுன் வேந்தை
அழைத்து வம்மென வாய்வளைத் தோழியை விடுப்பக்
குழைத்த பூங்கொடி யன்னவள் வாகுவற் குறுகித்
தழைத்த காதலால் வருகென மன்னனுஞ் சார்ந்தான்.(93)

மறுவில் கற்பினண் மானவேன் மன்னவன் வரலும்
குறைவி லன்பினள் பிழைபிலள் கண்படை கொள்வாள்
இறையு நீப்பரு மனைவியை யிருள்படு கானில்
அறனி ழுக்குற நளனல தியாவரே யகல்வார். (94)

என்று கண்கணீ ரிடையறு தொழுகிட மாசு
துன்று மேனியுந் துணிபடு மாடையு மாகி
நின்ற மாதினை நோக்கின னெட்டுயிர்ப் பெறிந்து
குன்றி ரண்டென வீங்குதோட் கொற்றவன் கூறும் (95)

அலர்ம லர்ப்பசுங் கொடியனு யரையிருட் போதில்
கலிவ யத்தனுய்க் காட்டிடை நீத்தன னின்னை

நலியும் வெங்கலி தணந்தபி னண்ணினெ னின்பால்
மெலியன் மீட்டுமோர் சயமரம் வேட்டதென்
[னென்றான். (96)

நிடதர் கோவினை யயோத்தியி னேடினென் கண்டேன்
படரு றேலென வந்தொரு மறையவன் பகரக்
கடிதி னெய்துவான் மணவினை யிழைத்தனென் கருத்தில்
அடிய னேன்றனை யையுறே லெனமொழிந் தழுதாள். (97)

முன்னை நல்லுருக் காட்டென முற்றிழை மொழியப்
பன்ன கத்திறை யுதவிய பூந்துகில் பரிவால்
மன்ன ரேறனன் புனைதலு மாணுரு வெய்திக்
கன்னல் வேளினுங் கவினலங் கனிந்திட நின்றான். (98)

நின்ற மன்னனை நிரைவளைக் கைம்மலர் கூப்பி
மன்ற லங்குழன் மடவரல் வணங்கின ணிற்ப
வென்றி வேலுடை விதர்ப்பர்கோன் விளைந்தமை கேட்டுத்
துன்று தன்கிளை மன்னவர் சூழ்வரப் புகுந்தான். (99)

அன்ன காலையி லகலிரு விசும்பிலோர் வாணி
மன்ன கேட்டியிம் மடவரல் தன்னைமூ வாண்டும்
இன்ன லின்றியா மளித்தனஞ் சயமர மென்று
உன்னை யிவ்வழிக் கூட்டுதற் கொண்டொடி
[யிழைத்தாள். (100)

வடபு லத்தினி னேக்குனர் மாசற விளங்கும்
கடவுண் மீனினுந் தொழுதகு கற்பினுக் கரசாம்
கொடிம ருங்குலை யையுறு தருளெனக் கூர்வேல்
நிடதர் கோமகன் மகிழ்வுற நிகழ்ந்ததை யன்றே. (101)

தமர வேலையி னர்தர துந்துமி தழங்க
அமரர் யாவரும் பூமழை பொழிந்துநின் றார்த்தார்

உமிழ் செழுங்கதிர் மணிமுடி வீமனு முவந்தான்
குமர னன்னவன் கோல்வளைத் தோளியை
[யடைந்தான். (102)

மண்க ளித்தது மாதிரங் களித்தன மலர்மேல்
பெண்க ளித்தனள் பேரறங் களித்தது கண்டோர்
கண்க ளித்தன களித்தன கலைவலோர் நெஞ்சம்
விண்க ளித்தன களித்தது வீமன்மா நகரம். (103)

நளன் அரசாட்சி அடைதல்

மழைம தக்களி யானையுங் கலினவாம் பரியும்
செழும ணித்தடந் தேர்களும் வயவருஞ் செறிய
எழுக டற்புவி மன்னரு மிறைஞ்சினர் செல்ல
அழலு யிர்க்கும்வே லரசனு நிடதநா டடைந்தான். (104)

மூதெ யிற்புறத் திறுத்தபின் மொய்யமர் தொடங்கப்
போதல் செய்கவெம் போர்த்தொழிற் கஞ்சினை யாயின்
காத லிற்கவ ருடுவான் வருகெனக் கழறித்
தூது போக்கினன் புட்கரன் றனக்குவேற்
[றூன்றல். (105)

போய தூதுவர் புட்கரற் கித்திறம் புகல
ஆயுங் கேள்விநூ லமைச்சொடும் வேறிருந் தாய்ந்து
காயும் போரினில் வேறன்மற் றரிதெனக் கருதி
மாய வெங்கவ ருடுவான் வருகென விடுத்தான். (106)

விட்ட தூதுவரு ரைத்தசொற் கேட்டலும் விரிந்து
மட்டு லாந்தொடை மார்பினன் மாநக ரெய்திக்
கட்டு வார்கழற் புட்கர க்ஷீறுநா மாடற்
கொட்டம் யாதென வுரைத்தன னுலங்கெழு
[தோளான். (107)

வயிர:வாட்படை மன்னவர் மன்னநீ தோற்பின்
முயலி லாமதி பூத்திடு முழுநெறிக் குவளை
அயர நீண்டகட் டேவியை யளித்தியான் றோற்பின்
உயிரி னோடுநின் னுலகெலாந் தருவனென்
[றுரைத்தான். (108)

அன்ன வாறிவைந் தாடலும் புட்கரன் றோற்ப
மன்ன முன்னநீ வென்றதுங் கொடுங்கலி வயத்தால்
நின்ன தாருயிர் சேர்ந்தன னெம்பியா தலினால்
தொன்ன கர்க்கினி தேகெனப் பணித்தனன்
[றோன்றல். (109)

பணித லைக்கொடு புட்கரன் போதலும் பன்னூல்
கணிதர் சொற்றநல் லோரையிற் கடிநக ரெய்தி
அணிபொ லன்கழன் மன்னவன் விதர்ப்பர்கோ னளித்த
மணிசெய் மேகலை வாணுதற் கொற்றரை
[விடுத்தான். (110)

ஒற்ற ரேகியவ் விதர்ப்பர்கோன் றன்னுழை யுரைப்ப
அற்ற மில்லென வரும்பொரு ளாங்கவர்க் களித்துக்
கற்றை வார்குழன் மதர்நெடுங் கண்ணியைக் கணிதர்
சொற்ற வோரையில் விடுத்தனன் றோன்றன்மா
[நகரில். (111)

வெள்ளத் தானையு மகளிருஞ் சூழ்வர வேந்தன்
உள்ளத் தாமரை மலருறை யோடரிக் கண்ணாள்
வள்ளத் தாமரைப் பொகுட்டின்மேல் வண்டுகண் படுக்கும்
அள்ளற் றீம்புனற் கழனிசூழ் நிடதநா
[டடைந்தாள். (112)

நவ்வி நோக்கியர் சூழ்வர நகைநிலா வெறிக்கும்
கொவ்வை வாய்மலர்ப் பூங்குழற் கோடியிடை மடந்தை

தெய்வ நாண்மலர்த் தவிசிழி திருமக ளென்ன
எவ்வ மில்லதோ ரெரிமணிச் சிவிகைநின்
[றிழிந்தாள். (113)

பருதி வானவ னெதிர்தலும் பனியிதழ் விரிந்த
முருகு லாநறுந் தாமரை போன்முக மலரா
அருகு நுண்ணிடை யின்னுயிர்க் காதல னம்பொன்
திருவ நாண்மலர்ச் சேவடி சென்னியிற் சேர்த்தாள். (114)

அப்படித் தொழுத மங்கையை நளன் தன் தடக்கையாலெடுத்துத் தழுவினுன். அவள், வாட்டமுற்றிருந்த தன்னுடைய உயிர் தளிர்ப்பாளாயினள். இருவரும் தம்மக்களுடன் செய்குன்றுகளிலும் புனற்றடங்களிலும் மலர்ச் சோலைகளிலும் மகிழ்ந்து விளையாடி நெடுங்காலம் இனிது களித்து வாழ்ந்தனர்.

ஆழி சூழ்புவி முழுவது மாழியொன் றுருட்டி
வாழி நல்லறம் புரிந்தரு மகம்பல வாற்றிச்
சூழி மால்வரைப் பிடருறு சுமையொழித் தாறப்
பாழி யம்புயத் துலகெலாம் பரித்தினி திருந்தான். (115)

பஞ்சதந்திரம்

சுகிர்லாபம்

பூனைக்கிடங்கொடுத்துக் கழுகிறந்த கதை

திரைகெழு கங்கா தீரத் திரிகூட மலைப்பா லித்திப்
பருமரப் பொந்திற் கண்ணும் பைத்தகூர் நகமு மில்லா
ஒருகிழக் கழுகு மற்றைப் பறவைக ளுணவு நல்க
மருவுநாள் பார்ப்பை யுண்பான் மார்ச்சாலம் வந்த
[தாங்கே. (116)

அதைச்சிறு பார்ப்பெ லாங்கண் டஞ்சியே யிரைதல்
[கேட்டுப்
பதைப்புறு கழுகு நீரேன் பயமுறு கின்றீ ரென்ன
இதற்குளே பூனை யுய்வ தெண்ணியக் கழுகின் பாற்போய்
விதிர்ப்பொடு வணங்க நீயார் விளம்பெனப் பூனை
[கூறும். (117)

வேறு

எனதுபெயர் நெடுஞ்செவிய னெனக்கழுகு நீயிவண்விட்
டுனதிடத்திற் கோடிலையேற் சாவாயென் றுரைத்திடலும்
நினதிடத்தில் வருமென்றன் வரலாற்றை நீகேட்டுச்
சினவுகினு நன்றென்னச் செப்புமா லப்பூனை. (118)

பேதமாஞ் சாதியினுற் பிராணிகளைக் கொல்லுவதும்
நீதியா லுபசார நிகழ்த்துவது நன்றன்றால்
ஆதலா லவனவன்ற னுசாரந் தனைக்கண்டே
யாதுசெயத் தக்கதோ வதுசெய்த லியல்பென்ன. (119)

ஆக்கமிகுங் கழுகரச னதைக்கேட்டிப் பூனையினை
நோக்கியா னுனியிங் குற்றபடி நவலென்னத்

தேக்குபுனற் கங்கைநதி தீரத்திற் றினந்தோறும்
ஆக்கையமிழ்ந் திடமூழ்கிச் சாந்திரா யணமாற்றி. (120)

தங்குற்றே னீமிகவுந் தருமவா னெனக்கேட்டே
இங்குற்றே னேனென்னில் வயதுமுதி ரியற்புலவர்
எங்குற்று ரெனவினவி யெய்தியறங் கேட்டிடுதல்
பொங்குற்ற மரபென்று புகலுவரெந் நூலோரும். (121)

அறம்விடுத்திட் டெனைக்கொல்ல வகந்துணிந்தா யில் [லறத்தின்
திறமடுத்தோர் நடைநின்போற் கண்டதிலைத் தெவ் [வருந்தம்
புறமடுத்து வந்தவர்க்குப் புரிந்திடுவ ருபசாரம்
மறமடுத்து வெட்டுகின்ற வருக்குநிழல் செயுமரமே. (122)

அதிதியெவன் பாலெய்தி முகம்வாடு மோவவன்றன்
பதிதருபுண் ணியங்கொண்டு பாவத்தை யவற்கீவான்
மதிகொடிய சண்டாளன் மனைக்கண்ணுங் கதிரெறிப்பான்
புதியரெவர் வந்திடினும் பூசிப்பார் பெரியோரே. (123)

என்றிசைப்பக் கழுகதைக்கேட் டியம்புமிறைச் [சிகளருந்திக்
கொன்றுழல்வ துமதுகுலக் குணமெனமுன் குறித்ததென
நின்றவண்மற் றதைக்கேட்ட நெடுஞ்செவியன் றரை [தொட்டு
நன்றுசிவ சிவவென்று நற்கரத்தாற் செவிபொத்தி. (124)

தருமநூற் பலதெரிந்து சார்ந்துவை ராக்கியந்தீக்
கருமமெலா நீக்கினென்யான் கடுங்கொலையே பாதகத்தில்
பெரிதாகு மதுபுரியி னரகடைவர் பெருங்கானில்
மருவுபலா திகளுண்பார் மருவுவரோ பாவமென. (125)

கடுங்கழுகு தெளியுமா றிவ்வாறு கட்டுரைத்து
நெடுஞ்செவிய னெனும்பூனை நிலைத்ததன்வீ டுற்றதற்பின்
மடம்படுபோர்ப் பிணையுண்டு வைகுதலும் பறவையெலாம்
ஒடுங்குபறழ் காணமற் றேடலறிந் தோடியதே. (126)

புள்ளுகளக் கழுகிருக்கும் பொந்தடைந்து பார்த்திடலும்
வெள்ளெலும்புஞ் சிறகுகளும் விழுந்துறக்கண் டிது
[கொன்ற
தெள்ளவினம் பார்ப்பையெனக் கொன்றவா லதையிதனல்
உள்ளகுணந் தெரியாம லிடங்கொடா ரொருவருக்கும். ()

அஸம்பிரேக்ஷ்ய காரித்வம்

குரங்கு பழி வாங்கிய கதை

தவமிகு மயோத்தி யாளுஞ் சந்திர சேனன் றன்சேய்
கவிகளி னுடல் காணுங் கருத்தறிந் தொருசா லைக்கண்
சவிபெறு குரங்க னேகந் தான்வளர்த் திடுமந் நாளில்
புவிபுக ழரச னேவல் புரிபவர் சண்டை யிட்டார். (128)

ஒருகுரங் கதுகேட் டுத்தன் னுறவினர்க் குரைக்கு
[மிப்போர்
பெருகுறிற் றீதா மற்றோர் வனத்தினும் பெயர்வோ
[மென்ன
உரைசெயக் கிழநின் சொற்கேட் டுண்பதை யறேமென்
[றேவா
னரமெலா மிகழ்ந்து பேச நடுங்கியங் கவரை விட்டே. ()

தன்குடும் பத்தி னேடோர் கானிடைச் சார்ந்த தப்பால்
பின்பொரு நாளச் சண்டை பெரிதுற வவரி லேயோர்
வன்பினன் கொள்ளிக் கட்டை மற்றவன் மேலே வீச
முன்புறு குதிரைச் சாலை மேலது மூண்ட தன்றே. (130)

சாலையு மெரிய வாசி தாஞ்சில விறந்த வெண்ணில்
கோலவெம் புரவி தீயிற் கொண்டன காய மன்னன்
பாலடைந் ததனைக் காப்போர் பகர்தலு மந்நோய் தீர்க்கும்
சீலனை யழைத்து மாக்க ளுயினோய் நீக்கு கென்றான். (131)

மருத்துவன் குரங்கு நெய்யா லன்றிநோய் மாயா
[தென்றான்
செருத்தொழி லிறைவன் சாலை சேர்ந்துள குரங்கை
[யெல்லாம்
வருத்தியந் நெய்யைக் கொண்டுவாசிநோய் வாசி யாக்கென்
றுரைத்தன னவ்வா றேநோ யொழித்தனன் மருத்து
[நூலோன். (132)

இப்பழி யிறையி டத்தே வாங்குவே னென்று
[முன்போய்த்
தப்பிய கிழக்கு ரங்கு தன்மனம் பதைத்தே யெண்ணி
ஒப்பிலாப் பெருங்கா னத்தி லொருகுள மிருக்கக் கண்டு
வெப்பறு பேயோன் றிங்கு மேவவே வேண்டு
[மென்று. (133)

எண்ணியக் குளத்திற் கஞ்சத் தாளினு லிருநீ ருண்ண
நண்ணிய பேய்கண் டங்கு நணுகிநின் பெருமை கண்டுன்
கண்ணெதிர்ப் பட்டே னென்று கழுத்துறு மாலை தன்னைத்
துண்ணென வெடுத்து நல்க வாங்கியே சொலுங்கு
[ரங்கே. (134)

எவ்வள விந்த நீரி லுனக்குள வலிமை யென்னச்
செவ்வியோ யிந்த நீரி லாயிரம் பேர்சேர்ந் தாலும்
கைவ்வலித் துண்டற் கானு சத்தியென் கண்ணுண்
[டென்ன
இவ்விடம் புசிப்பு னக்கே யான்கொடு வருவ னென்றே. ()

மாலையைக் கழுத்திற் பூண்டு வானர மகன்று வேந்தன்
பாலடைந் திடவ வன்றான் பார்த்திந்த மணியின் மாலை
சீலனே யெங்குசம்பா தித்தனை யெனக்கு ரங்கு
கோலமா ரொருகா னத்திற் குளந்தானென் றுளது
[மன்னா. (136)

அக்குளந் தன்னிற் காலை யடைந்துமுன் குதிப்போர்க்
[கெல்லாம்
இக்கதிர் மணிக ளெய்து மெனச்சொல யானு மெய்தித்
திக்கொளி விரிக்குஞ் சோதிச் செழுமணி பெறுவே
[னென்று
புக்கவக் குரங்கி னோடும் போயினன் சேனை சூழ. (137)

போனபி னிதுவே காலம் புகுந்தநின் சேனை யெல்லாம்
கானவிர் மலர்த்த டத்திற் களிப்பொடு குதித்துத் தங்கட்
கானநன் மணிகள் கொண்ட பின்னரே யரச நீயும்
நானுமொண் மணிகள் கொள்வே மென்றதந் நாகந்
[தானே. (138)

அப்படி யாக வென்றே யரசனுஞ் சேனை யோரைக்
குப்புறு கென்ன வோதக் குதித்தலு மவரைப் பற்றித்
துப்புறு பூதந் தானுந் தொடர்ந்திழுத் துண்ட தங்கே
தப்புறு வேந்தன் றானுந் தடத்திடைக் காத்தி
[ருந்தான். (139)

நெடும்பொழு தங்கு காத்து நீரிடைக் குதித்த சேனை
அடங்கலும் வராமை கண்டே யரசனக் குரங்கை
[நோக்கித்
தடந்தனிற் குதித்த சேனை சார்ந்தில தென்னே யென்றான்
நடந்தொரு மரத்தின் கொம்பி னுகமுன் னேறிச்
[சொல்லும். (140)

கொழிபுகழ் வேந்த னேயெங் குலத்தையெல் லாநீ [கொன்ற
பழிதனை வாங்க வந்தேன் முடித்தனன் பண்டு நின்சோ
றழிபசிக் குண்டே னாத லாலுனை விடுத்தே னென்று
மொழிதர விரங்கி வேந்தன் முந்துதன் னகர்புக் கானே. (141)

குசேலோபாக்கியானம்

அவந்திநகர்ச் சிறப்பு

செந்தமிழ் பழுத்த நாவிற் றீஞ்சுவைப் புலவ ரானும்
அந்தமில் சேட னானு மறைதர முடியாச் சீரச்
சுந்தர நகர்வ ளப்பஞ் சொலவெனக் கடங்கா வேனும்
சிந்தையிற் களிப்புத் தூண்டச் சிறிதணிந் துரைப்பல் [கேண்மோ. (142)

துறைதுறை தோறுஞ் சங்கஞ் சூன்முதிர்ந் துயிர்த்த [முத்தம்
அறைபுனல் வாரி யெக்க ராக்கிட வரப்பி லேற்றித்
தறைசமஞ் செய்து வித்தித் தண்புனன் மள்ளர் பாய்ச்சக்
கறையடி மாய்க்குஞ் செந்நெற் கதிர்க்குலைச் செறுக்கள் [சூழும். (143)

செம்பொனால் வெண்பொ னால்விற் செறிபல மணிக ளாற் [செய்
தம்பொன்மா நகரத் துள்ளா ரமைத்தனர் வேண்டா [ரற்றால்
நம்புநாம் புறத்தே நிற்ற லன்றெனக் கொண்டாற் [போலும்
பம்புவார் கதலி கந்தி பைங்கமுகு பொலியுங் காட்சி.(144)

நெய்க்கருங் கூந்தன் மின்னார் நீர்குடைந் தகற்று நான
மெய்க்கவின் மறைத்த சாந்தம் விண்ணுலா நதியு நாறச்
செய்க்கருங் குவளை மேய்ந்த திண்மருப் பெருமை பாய
வைக்கழுக் கடையே போன்மேல் வாளைபாய் வாவி
மல்கும். (145)

பொங்குபல் லவப்பூஞ் சோலை புதுமதுக் கனிகள் காய்கள்
தெங்கிள நீர்கண் மற்றுந் தேவரு மரம்பை மாரும்
அங்கிருந் தயில நாளு மளித்திடு நல்லூ ரூற்றோர்
எங்கிருந் தாலும் வேட்ட யாவையுந் துய்ப்பரன்றே. (146)

வேறு

மஞ்சின மெனமட மாத ரோதிகண்
டஞ்சிறை மயிலகங் களிகொண் டாடுவ
விஞ்சிருட் பூம்பொழின் மேவு கோகிலம்
அஞ்சிவாய் திறந்திடா தழுங்கிச் சாம்புமால். (147)

வண்டிமிர் குழலினார் வதனப் பேரெழிற்
கெண்டகு முழுமதி யெதிரற் றேகுதல்
கண்டுமை தீட்டறி குறியைக் காசினி
மண்டிய களங்கென மயங்கி யோதுமால். (148)

ஒழுங்குறு சுடர்களை யுற்று விக்குற
விழுங்குறு பாப்பினம் விட்டொளித்திடல்
செழுங்கதிர் மாடமேற் சென்று லாமயில்
அழுங்கிய சாயலார்க் கஞ்சிப் போலுமால். (149)

கிஞ்சுக மங்கலார் கிளக்குந் தேமொழிக்
கஞ்சிடா தெதிர்த்தலி னவற்றைா நாடொறும்
வெஞ்சிறை யிட்டென விளங்கு பன்மணிப்
பஞ்சரத் திருவினார் பாவை யன்னவர். (150)

வெஞ்சிறைப் பட்டவர் தமக்கு வேண்டிய
அஞ்சுவை யுணவற வரச ளித்தல்போல்
வஞ்சிய ரச்சுவா கதங்கள் வாய்மடுத்
துஞ்சிடக் கனிமுத லுணக்க ணல்குவார். (151)

வேறு

வருவிருந் தெதிர்கொண் டேற்று மலர்முக மினிது காட்டி
அருமைசான் முகமன் கூறி யறுசுவை யுணநன் கூட்டித்
திருமலி கவிமு னோர்க்குச் செம்பொன்முன் னுன நல்கிப்
பெருமைசான் றொழுகும் பின்னோர் பெருகிவாழ் தெருக்
கள் பல்ல. (152)

அன்னியர் பொருளுந் தத்த மரும்பொரு ளென்ன வுள்ளத்
துன்னியொ ன்றனந்த மாக வுஞற்றும்வல் லபத்தாற்
[கண்ட
என்னரு மிறும்பூ தெய்து மெழின்மிகும் வணிக ரென்றும்
மன்னிவாழ் வெய்து மிக்க மறுகுகள் பலவ யங்கும். (153)

தேசினிற் சிறந்தோர் செல்வத் திறத்தினி லுயர்ந்தோ
[ராற்றும்
பூசலில் வென்றி கொள்ளும் போர்ப்புலி யன்னார் தூய
வாசமார் மாலை மார்பர் மழையென விரவ லாளர்க்
காசறு தான மீயு மரசர்வாழ் மறுகு மோர்பால். (154)

மறுவறு முத்தீ யென்றும் வளர்ப்பவ ரைந்தென் றோதும்
தெறுபுல னவித்த மேலோர் செய்யமா றனுது செங்கேழ்
நறுமல ருந்தி பூத்த நாதனே யனைய தூயர்
அறுதொழி லாளர் வீதி யவண்பல வயங்கு மன்னோ. (155)

தேரொலி புழைக்கை மாக்கள் சீறிசை பரிமா வோதை
வாரியை கழற்கால் வீரர் மணிப்புயந் தட்டு மார்ப்பு
நாரியர் சிலம்பின் சும்மை நரப்பியா ழரவ மின்ன
சேரவொன் றாகி யேழு திரைகள்வா யடக்கு மன்றே. (156)

குசேலர்

ஆங்கதிற் குசேலப் பெயரினேன் முனிவ
  ரருங்குலத் தினியபாற் கடலில்
பாங்குறு மதிபோற் றேன்றினேன் வண்டர்
  பாண்செய மணநறுக் கொழிக்கும்
பூங்கம லத்தில் வாழ்பொறி யிலகும்
  பொருப்பன நிறத்துமால் பதத்தைத்
தாங்குறு முளத்தன் பொறிகடீச் செயலிற்
  சார்வுறு தடக்குறு மேலோன். (157)

தன்னுயிர் போல மன்னுயிர் புரத்தல்
  சான்றவர்க் குறுதியென் றென்றும்
மன்னிய மறைநூன் மொழிந்திடு மதுமன்
  வாய்மையே யென்றுணர்ந்தவனுய்த்
துன்னிய வுலகி லிருதிணை யுயிருந்
  தூங்கிய மகிழ்ச்சிமீக்கூர
நன்மையே புரிவான் றன்னமு முளத்தி
  னுடிடான் றீமைசெய் தலையே. (158)

அடக்கமும் பொறையுங் கருணையு நண்பு
  மழுக்கறுத் திலாமையு மென்றும்
விடற்கருந் தவத்தோ டொருங்குற வளர்ப்போன்
  வெகுளியுங் காமமு மயக்கும்
கடக்கருந் தீமை நாடொறும் விளைக்குங்
  கயவர்க டொடர்ச்சியுந் தன்னைத்
தொடற்கரி தாக வடியறக் காய்ந்தோன்
  றாயர்க்குந் தூயவன் மாதோ. (159)

படியிலா மறைநூன் முற்றுணர்ந் தடுத்தோர்
  பக்குவத் திறன் மதித்தறியா

ஓடிவறு சரியை யாதியா நான்கு
முற்றுறப் பயிற்றுசாந் தீபன்
அடிமல ரடையா விருக்குமுன் மூன்று
மையமுன் மூன்றும்விட் டோடக்
கடிகெழு காயாம் பூங்கதிர் மேனிக்
கண்ணனே டமர்ந்துகற் றனனே. (160)

கொழுந்துவிட் டெரியும் பசித்தழ லவித்துக்
கோதில்வை ராக்கிய மிக்குற்
றழுந்துபட் டிடாத சாந்திரா யணமு
னளப்பருஞ் செயற்கரு விரதம்
எழுந்துவிட் டொளிரப் பற்பக லாற்றி
யென்பொடு நரம்புக டோன்றிச்
செழுந்தசை வற்றி யிளைத்தயாக் கையனுய்த்
திகழ்ந்தனன் சீர்த்தியந் தணனே. (161)

ஒன்றுமெய் வாய்கண் ணுசிகா தென்ன
வுரைத்திடும் பொறிவழி யூறு
துன்றிய சுவையுள் ளொளிமணஞ் சத்தஞ்
சொல்லுமிவ் வைம்புல னென்றும்
ஒன்றுபட் டுள்ளக் குறிப்பறிந் தொழுக
வொருக்கிய தவவலி யினனுய்
நின்றுளா னிவனைப் புகழ்தரா ரெவரே
நீடிய பவத்தொடக் கறுப்பார். (162)

மெத்திய பற்பல் கிழிதுணி யிணைத்து
மெல்லிழைச் சரட்டினுற் பொல்லம்
பொத்திய சிதரே நல்லுடை யாகப்
புனைந்தகா ரணத்தினுற் கடல்சூழ்
எத்திசை யவருங் குசேலனென் றுருபே
ரிட்டழைப் பர்கண்மதக் கலுழி

தத்திய கரடத் தறுகண்மால் யானைத்
தரியலர் கூற்றெனப் பொலிவோய். (163)

மாற்கடல் கடந்த மனத்தனுய் வேத
வரம்புகண் டிலங்குமிக் குசேலன்
பாற்கடன் மிசையோர் கார்க்கடல் போலப்
பையர வணைமிசைத் துயில்வோன்
சேற்கரு நெடுங்கட் டிருமகள் வருடச்
சிவந்துகாட் டிடுமரை மலர்த்தாள்
ஏற்குமென் றுள்ளத் திருவியெந் நாளு
மியற்றரும் பூசனை யியற்றும். (164)

இந்தக் குசேல முனிவர், குருவினிடம் விடைபெற்றுத், தமதிருப்பிடம் சென்று, பெண்களுக்குரிய நால்வகைக் குணங்களுமமைந்த ஓர் உத்தமியை மணம் புரிந்தனர். அவள் குற்றமற்ற நற்குலத்திற் பிறந்தவள்; நற்குணங்களெல்லாம் ஓர் உருக்கொண்டாற் போன்றவள்; கொழுநனுடைய குறிப்பறிந்து நடப்பவள்; உண்மையே பேசுபவள். அவள் பெயர் க்ஷுத்க்ஷாமை யென்பது. இவ்விருவரும் விதிமுறை வழுவாது இல்லறம் நடத்திவருகையில், கடவுளருளால், இவர்களுக்கு இருபத்தேழு புதல்வர்கள் உண்டாயினர். குசேலர் அதிகாலையில் எழுந்து தம்முடைய நித்யகர்மங்களை முடித்து, வனத்திற் சென்று, அங்கே உதிர்ந்து கிடக்கும் நீவாரப் புல் தானியத்தைப் பொறுக்கி யெடுத்துவந்து தம்மனைவியினிடம் கொடுக்க, அவள் அதனை விரும்பி வாங்கிக் கஞ்சியாக்கித் தேக்கிலைத் தொன்னையில் அதிதிகளுக்கும் தன்கொழுநருக்கும் மக்களுக்கும் கொடுத்து மிஞ்சியதைத் தானுண்டு பசி தீர்வாளாயினள். மக்களெல்லாரும் அந்தப் புல்லரிசிக் கஞ்சியையும் வயிறுநிரம்ப உண்டநாளில்லை. அவர்களுக்கு உணவே இப்படி இருக்கையில் மற்றக் குழந்தைகளைப்

போல, உடுக்க உடையாவது தரிக்க ஆபாரணங்களாவது இல்லையென்பது சொல்லவும் வேண்டுமோ?

குசேலர் தமக்குக் கிடைத்த பாகத்தை உண்டு திருப்தியடைந்து கடவுளினுடைய திருவடிகளை இடையறாது தியானித்துக்கொண்டிருப்பர். அவர், மனைவி மக்களைப் பற்றிச் சிறிதும் கவலையடைவதில்லை. இங்ஙனமாகையில், க்ஷுத்க்ஷாமை தங்கள் மக்களுடைய வருத்தத்தைப் பார்த்து, ஒருநாள், குசேலமுனிவரை அடுத்து இன்சொற் கூறி அவருக்கு அருள்வரச் செய்து, 'ஸ்வாமி! நம்மக்கள் படுந்துன்பங்களை நீக்குவது தேவரீருடைய கடமையன்றோ? துவாரகாநாதரான ஸ்ரீகண்ணபிரான் இளமையில் தேவரீருடன் சேர்ந்து கலைபயின்றவராமே? அவர் இப்பொழுது பெருஞ்செல்வத்து மன்னியிருத்தலால் அவரிடம் சென்று சிறிது பொருள் பெற்று வந்தால் அது நம்மக்களுடைய பெருந்துன்பத்தை நீக்குவதாகுமே' என்று வேண்டினள்.

கீழோரும் செல்வமும்

குசேலர் அவளுக்கு, 'அவரவர் முற்பிறப்பிற் செய்த வினையின்படியே இப்பிறப்பில் எல்லாம் கிடைக்கும்' என்றும், 'நமது முயற்சியிலாவது ஒன்றுமில்லை' என்றும் சில உண்மைப் பொருள்களை எடுத்துக் கூறத்தொடங்கினர்.

வளநிதி படைத்தோ மென்றும்
வடிவவில் லுடையோ மென்றும்
அளவில்சே யின்றோ மென்று
மனுபவந் தமைந்தோ மென்றும்
இளமையிற் சிறந்தோ மென்று
மெழினல முடையோ மென்றும்

உளமகிழ் கூர்வர் சற்று
முண்மைநா லுணர்ச்சி யில்லார். (165)

உயிர்க்கொலை புரித லுண்ணு
முணவுமா றுட்டஞ் செய்தல்
அயிர்ப்பிலா நண்பர் மாட்டு
மமைதரக் குய்யஞ் செய்தல்
பயிர்ப்புமிக் குறநல் லோரைப்
பழித்தல் பொய்க் கரியுரைத்தல்
செயிர்ப்பிலா லயத்தி டத்துஞ்
சென்றுபட் டிமையி யற்றல். (166)

இவைமுதற் பலவு மாந்த
ரியற்றிநாள் கழியா நிற்பர்
அவையெலாம் பொருணி மித்த
மாகுமப் பொருளைப் பெற்றால்
குவையுறப் புதைத்து வைத்துக்
குதுகுதுப் படைந்து காத்து
நவையுறு பணப்பே யென்னு
நாமமும் பெறுவர் மாதோ. (167)

ஒருசிறு தரும மேனு
முஞற்றிடா ரிரப்போர் வந்து
தருநிகர் கரத்தா வென்று
சாற்றினுங் கொள்ளாராகிக்
கருணைசற் றின்றி யெல்லை
கடந்திடத் துரந்து மீள்வர்
மருவுபல் கிளையு மோம்பார்
வளம்படைத் தென்பெற் றூரால். (168)

முறைதவிர் கொடுங்கோன் மன்னர்
முனிவிற்கு நனியு மச்சம்

கறைகெழு கரவு செய்வார்
காத்திற்கு மழற்கு மச்சம்
மறைவறு தாய மாக்கள்
வெளவு வரென்று மச்சம்
அறைபொருள் பெற்று ரல்ல
ரச்சமே பெற்றார் போலும். (169)

ஒல்லொழுக் கினரைத் தீய
வொழுக்கரென் றுரைக்கச் செய்யும்
புல்லொழுக் கினரைத் தூய
புலத்தரென் றுரைக்கச் செய்யும்
நல்லகற் புடைய மாதர்
நலத்தையஞ் சாமை செய்யும்
பல்வகைத் துயருஞ் செய்யும்
பாழ்ம்பொருள் பற்று ளார்க்கே. (170)

கோடிபொன் னளிப்ப னின்றே
கோடிரோர் மாத்தி ரைக்குள்
ஊடிய கிளைக்கோர் வார்த்தை
யுரைத்தடை குவனென் றாலும்
தேடிய கால தூதர்
சிமிழ்த்தல்விட் டொழிவ ரேகொல்
வாடிய மருங்கு னங்காய்
மாண்பொருட் பயன்கண் டாயோ. (171)

பொருவறு பந்த மெல்லாம்
புணர்த்திடுந் தெய்வ சிந்தை
ஒருவமே விட்டு நிற்கு
முறக்கமு மிறக்கச் செய்யும்
கருவினுட் புகுத்து மின்ன
கரிசுகண் டதனு லன்றோ

இருநிலத் திடைவெ றுக்கை
யென்மனூர் புலமை சான்றோர். (172)

சிறியரே மதிக்கு மிந்தச்
செல்வம்வந் துற்ற ஞான்றே
வறியபுன் செருக்கு மூடி
வாயுளார் மூக ராவர்
பறியணி செவியு ளாரும்
பயிறரு செவிட ராவர்
குறிபெறு கண்ணு ளாருங்
குருடராய் முடிவ ரன்றே. (173)

பல்கதிர் விரித்துத் தோன்றிப்
பாடுசெய் கதிரே போல
மல்லனீ ருலகிற் றோன்றி
மறைந்திடு நும்மை விட்டுச்
செல்வமென் றுறுவ தற்குஞ்
செல்வ மென்றுரைக்கும் பேர்நன்
றல்லலை விளைப்ப தாகா
தரும்பெறற் செல்வம் பாவாய். (174)

என்று கூறினர்.

குசேலரை மனைவி தூண்டுதல்

அவரது மனைவி, அவைகளுக்குத் தக்கவாறு விடை கூறி, 'கடவுள் காப்பது உண்மையேயானாலும், அவன் வேண்டினர்க்கு வேண்டியாங்கு அளிப்பவனாதலால், நம் முடைய முயற்சியும் அவசியம் வேண்டும்' என்று வற்புறுத்திக் கூறலானாள்.

கலைமுழு தோர்ந்து கரிசெலா மறுத்த
காந்தனே பருமணி யரவத்

தலைகிடந் திமைக்குந் தாத்திரி யதனிற்
சாற்றருந் தக்கநன் முயற்சி
உலைவறப் புரியா வொருவனுக் கெங்ங
னுற்றிடுஞ் செல்வ நன்னிலத்தை
நிலைபெற வுழுது வித்திலான் றனக்கு
நீள்பய னுற்றிடுங் கொல்லோ. (175)

மானிட னொருவன் றனக்கருஞ் செல்வம்
வாய்க்கவென் றனுதின முயற்சி
தானுஞற் றுவனேற் கடவுளு மதனைத்
தந்தளிக் குறுமதா லன்றோ
ஆனபே ரறிஞர் திருவினை முயற்சி
யாக்குமம் முயற்சியில் லாமை
ஈனமா ரின்மை புகுத்திடு மாலென்
றியாருநன் குணர்தர நவில்வார். (176)

மக்களே தேவர் நரகரென் றறிஞர்
வகுக்குறு முயர்திணை யாதி
தக்கபல் லுயிர்க்குஞ் சக்கர முதலாச்
சாற்றுமைம் படைகரத் தேந்தும்
மைக்கடன் மேனி வள்ளல்வேண் டியவீ
வானென வாய்மலர்ந் தனையான்
மிக்கபன் முயற்சி புரிகிலார் தமக்கவ்
விண்ணவன் யாங்ஙன மருளும். (177)

செயத்தகு முயற்சி செய்திடிற் செயிர்தீர்
செய்யவண் மணாளனு மிரங்கி
வியத்தக வேண்டு மியாவையு மளிப்பன்
விளம்புறு முயற்சிசெய் யானேல்
நயத்தகு போக மளித்திடா னென்று
நானிலத் தறிஞர்நன் குரைப்பர்

உயத்தகு நெறிமா லடியுன லென்றே
யோர்ந்தமா தவப்பெருங் கடலே. (178)

முன்புநல் வினைசெய் தவர்முயற் றின்றி
முன்னிய வெலாமுண்ப ரென்னில்
இன்பவா லரியே முதலுப கரண
மெலாமினி துடையவ ரேனும்
வன்புற வடுதன் முயற்சியில் லாமை
வயிற்றெழு பசித்தழ லவிய
நன்பத மாமோ மறைமுழு துணர்ந்த
நற்றவக் குணப்பெருங் குன்றே. (179)

கடவுளீ குவனென் றெண்ணிநித் தியமுங்
கருதுறு முயற்சிசெய் யானேல்
அடலுறு செல்வ மடைகுவ னேகோ
லருங்கலத் திட்டபா லடிசில்
மிடலுடைக் கரத்தா லெடுத்துண ுதெங்ஙன்
வீங்குவெம் பசிப்பிணி யொழிப்பன்
உடல்பவந் தனக்கோ ராகர மாகு
முடனனி வாட்டுமெய்த் தவத்தோய். (180)

முன்பொரு கராவான் மொய்வலி சிந்து
மும்மதக் கறையடிக் கயமும்
வன்புடைப் பொன்னன் புரிகொடு மையினன்
மனமெலி பிரகலா தனனும்
அன்பினோ டேத்தி யழைத்தலா னன்றே
யலைகடல் வண்ணன்வந் தாண்டான்
என்பரா தலினன் முயற்சிசெய் பவருக்
கெய்தரும் பொருளுமொன் றுளதே. (181)

கமலமே லவனைத் தோற்றிய வுந்திக்
கமலன்வெங் தொடரெனப் பகரும்

முமலவே றறுத்த முனிவர்வேண் டாம
லெங்ஙன முயறிரு வளிப்பன்
விமலவே தியநீ யுளத்தின்வேண் டுவையேல்
வேண்டிய வேண்டியாங் களிக்கும்
அமலநால் வேத மாறுசாத் திரநன்
காய்ந்தவர் தமிற்சிறந் தவனே. (182)

முன்னரும் பற்பன் முனிவரர் பன்னாண்
முயலரு மருந்தவ முயன்று
பன்னரும் பேறு மாதவ னளிப்பப்
படைத்தனர் பவளவாய்ச் செங்கால்
அன்னவே றுயர்த்த நான்மறை முனிவ
னனையநற் பெருந்தவ ரேறே
உன்னருஞ் செல்வ மன்னமா லீய
வுறிற்புக ழன்றிவே றிலையே. (183)

அப்பரந் தாம னிணையடி யன்றி
யாதர விலையென வறிந்தாய்
செப்பரு மாசை பொய்கொடுஞ் சீற்றஞ்
செற்றுளா யெனினும்விண் ணுளும்
நப்புரந் தரனு தியர்தொழு மன்னு
னண்ணுறுந் துவாரகை யணுகி
ஒப்பில்பல் வளனுந் தருதியென் றிரக்கி
லுறுங்கொலோ தாழ்வதி னுணர்ந்தோய். (184)

குசேலர் செல்வம் பெறல்

குசேலர் அதனைக் கேட்டு, 'உலகில் செல்வர்களிடத்துச் செல்வதும், அவரிடம் செல்வத்தை யாசிப்பதும் இகழத்தக்கவையே. கண்ணனிடம் செல்லுதலும் அவனிடம் ஒன்றை யாசித்தலும் குறைவுடையனவென்று சிறிதும் கருதினேனில்லை. மனோவாக்குக்கெட்டாத பரம்

பொருளாகிய ஸ்ரீ கண்ணபிரானை அடுத்தும் நித்தியமான பரமபதத்தை விரும்பாமல் அநித்தியமான செல்வப் பொருளை விரும்புவது, திருப்பாற்கடலை அடுத்தமீன் அந்தப்பாலை விரும்பாது அதிலுள்ள அழுக்கு முதலிய வற்றை விரும்புவது போலுமென்று நினைத்தேன். கண்ணனைத் தரிசித்துவருதலில் பெருவிருப்புடையேன். ஆனால், 'ஆலயங்களுக்கும் பெரியோர்களிடத்தும் அரச ரிடத்தும் வெறுங்கையோடு போகலாகாது; அவர்கள் விரும்பக் கூடிய எதையேனும் கொண்டு செல்ல வேண் டும்' என்பர். நான் கண்ணபிரானிடம் போகும்போது எதைக் கொண்டுபோவேன்?' என்றனர். அவரது மனைவி அதைக்கேட்டு அன்றுமுதல் நாள்தோறும் தனதுகணவர் கொணர்ந்து கொடுக்கும் தானியத்தில் சிறிது சிறிது எடுத்துவைத்து அதனை அவலாக்கி ஒரு பழைய கந்தையைப் பலமடிப்பாக மடித்து அதில் அந்த அவலை முடிந்து குசேலரிடம் கொடுக்க, அவர் அதனை வாங்கிக் கொண்டு வழிநடக்கலுற்றார். கண்ணனைக் காணலா மென்னும் பெருவிருப்பமானது பிடர் பிடித்துந்த விரைந்து சென்று துவாரகையில் கண்ணபிரானுடைய அரண்மனை வாயிலை அடைந்தார். அங்குள்ள வாயில் காவலரிற் சிலர், இவருடைய நரைத்துத் திரைத்து மூப்படைந்த மேனியையும் அழுக்கடைந்த கந்தையுடை யினையும் பார்த்து அவமதித்து இவரை உள்ளே புக வொட்டாமல் தடுத்தனர். அங்கிருந்த விவேகிகளான வேறு சிலர், இவர் உண்மை ஞானியென ஊகித்து இவ ருடைய வருகையை ஸ்ரீ கண்ணபிரானிடம் விரைந்து சென்று தெரிவித்தார்கள். தெரிவித்தவுடன், ருக்மிணி யோடு ஸல்லாபஞ் செய்துகொண்டிருந்த ஸ்ரீ கண்ண பிரான் அப்படியே எழுந்து குசேலரிருக்குமிடம் ஓடிச் சென்று அவரை எதிர்கொண்டழைத்துவந்து தக்க

ஆசனத்திலிருக்கச் செய்து வணங்கி உபசரித்து அவருக்குத் தானே ஸ்நானஞ் செய்வித்து அறுசுவையமைந்த நால்வகை உணவுகளையும் உண்பித்து அவரைத் தனது படுக்கையில் உட்கார வைத்துச் சந்தன தாம்பூலங் கொடுத்து யோகக்ஷேமம் விசாரிப்பானாயினான். அவருடைய மனைவிமக்களின் குணாதிசயங்களைக் கேட்டும் இளமைக் காலத்தில் தாங்கள் குருகுலவாஸஞ் செய்தபோது நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில், 'பலநாளுக்குப் பின்வந்த தேவரீர் எனக்கு என்ன கொண்டுவந்திருக்கிறீர்? உம்முடைய இனிய மனைவியார் ஒன்றுங்கொடாமல் வரச்சொல்லி யிருக்கமாட்டாரென்பது நிச்சயம். ஆதலால், கொணர்ந்ததைக் கொடுக்கவேண்டும்' என்று கேட்டனன். குசேலர் அங்குள்ள செல்வப் பெருக்கத்தையும் ஆகாராதிகளின் மேன்மையையும் பார்த்துத் தாம் கொணர்ந்த அவலைக் கொடுக்க வெட்கியிருந்ததைக் குறிப்பாலுணர்ந்த கண்ணன் அந்த அவற்பொதியைத் தானே எடுத்தவிழ்த்து ஒருபிடி அவலை உண்டான். இரண்டாவதுபிடி எடுக்கையில் ருக்மிணி தேவி, 'ஒரு பிடி உண்டதற்கே இம்மறையவர் இந்திரனும் அடைதற்கரிய பெருஞ்செல்வத்தை அடைந்தார். மறுபிடி உண்ணற்க' என்று அவன் கையைப் பிடித்துக் கொண்டாள். பிறகு, கண்ணபிரான் குசேலரோடு இரவு முழுதும் வார்த்தை சொல்லிக்கொண்டிருந்து அதிகாலையில் அவருக்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டான். குசேலர் கிருஷ்ணனுடைய தரிசனத்தாலும் ஸல்லாபத்தாலும் நிரம்பிய மனத்தராகி வழிச்செல்வாராயினர். அரண்மனையிலிருந்த வேலைக்காரிகளும் மற்றவர்களும் கண்ணன் குசேலரிடம் காட்டிய அன்பையும் அவருக்குச் செய்த உபசாரங்களையும் ஒன்றுங் கொடாமல் உடனே

விடைகொடுத்தனுப்பினதையும்பற்றித் தம்முள் பலவாறு பேசுவாராயினர்.

அம்மறையோ னொருபொருளுங் கேளானாய்ச்
சென்றதையா மறிந்தோ மன்ற
மம்மர்தபுத் தீத்துவப்பார்க் காணிலன்றோ
கேட்பவர்க்கு வாயுண் டாகும்
விம்மலுறு நசையினரு மிவனிடத்துக்
கேட்பதற்கு மேவா ரென்றால்
தம்மையுணர்ந் துயர்ந்தவரோ கேட்கத்தக்
கவரென்றார் தடங்கட் சில்லோர். (185)

என்னினைத்து வந்தானோ வவனிவனும்
யாதுநினைத் திருக்கின் றானோ
பன்னரிய விவன்செய்யு மாயையெவ
ராலறியப் படும்வாய் வந்த
இன்னவெலாம் பேசிடுத லறிவன்று
நமக்கெனவண் டிரங்குங் கூந்தல்
மின்னனைய நுண்ணிடைப்பே ரமர்க்கண்மட
மாதர்சிலர் விளம்பி னாரே. (186)

சிற்றிடைப்பே ரமர்க்கண்மட மாதர்பல
ரிவைமுதலாச் செப்பி நிற்கக்
கற்றவரேத் தெடுக்குமுனி துவரைநெடுந்
தெருப்பலவுங் கடந்து போகி
வற்றுதலில் பெருங்கடலு மீங்குபுதன்
னூர்க்கேகும் வழியைக் கூடி
நற்றவமாந் தன்னிலக்கிற் சிந்தையுற
மிகமகிழ்ந்து நடக்குங் காலை. (187)

அருந்தவர்கள் புகழ்சீர்த்தி யமைந்ததிருக்
கண்ணபிரா னருளி னாலே

பொருந்துவிர தாதிகளான் மிக்கிளைத்த
தன்னுடம்பு பூரிப் புற்ற
திருந்தபழங் கந்தைசெழும் பொன்னுடை
யாயிற்று விலங்குங் கண்டப்
பெருந்துளப மணியாரம் பெருவிலைமுத்
தாரமாப் பிறங்கிற் றாலோ. (188)

செவியணிபுல் லியபொருள்க ளரதனகுண்
டலமாகித் திகழ்ந்த வான்ற
சவியணிகை விரற்றருப்பைப் பவித்திரம்பொன்
னாழியாய்த் தகைந்த தோங்கும்
புவியணியுங் கட்டழகு காமனுங்கா
முறுசிறப்பிற் பொலிந்த தம்ம
கவியணியு மதகளிற்றுக் கதிகமாம்
வலியுமுடற் கலந்த தன்றே. (189)

பாயபெரு மிடிமுன்னே தனக்கொழிந்த
வவித்தை யெனப்பாறி மாய்ந்த
தேயவழி நடையிளைப்பு முதலியவெல்
லாஞ்சற்று மின்றாய் விட்ட
காயவெயில் குளிர்ந்ததுபா லையுநீரு
நிற்றிளமென் காலும் வீசிற்
றாயவிவை யனைத்துமுணர்ந் திறும்பூது
மிகக்கொண்டா னன்ன காலை. (190)

அவர் தம் ஊர்ப்புறம் வந்து பார்க்கையில், அங்குள்ள குடிசைகளெல்லாம் பெரிய மாளிகைகளாகி அளவற்ற செல்வங்கள் நிரம்பியிருத்தலைப் பார்த்துத் தமது இல்லம் இதுவென்று தெரியாமல் திகைத்தனர். அவர் அங்ஙனம் வருதல் தெரிந்த அவரது தேவி எதிரே வந்து வணங்கி யழைக்க, அவர் தமதில்லம் சென்றனர். அவர் தமது

குடிசை பெரிய மாளிகையானதையும் அளகை வேந்தனும் அழுக்காறு கொள்ளும்படி எல்லாச் செல்வங்களும் நிரம்பியிருத்தலையும் மிகமெலிந்த சரீரமுள்ள தம்முடைய மனைவியும் மக்களும் கட்டழகுடையவர்களாகி விலையுயர்ந்த ஆடையாபரணங்களையணிந்து விளங்குதலையுங் கண்டு, அவை யெல்லாம் ஸ்ரீ கண்ணபிரானுடைய திருவருளே யென்று அவனுடைய திருவடிகளைத் தியானித்தார். அளவில்லாத பெருஞ் செல்வத்தை அடைந்திருந்தும், முன்போலவே கடவுளுடைய திருவடிகளை இடைவிடாமல் தியானித்துக்கொண்டு மனைவிமக்களுடன் நெடுங்காலம் இனிது வாழ்ந்திருந்தார்.

திருவிளையாடற் புராணம்

பழியஞ்சின திருவிளையாடல்

குரவன்செங் கோல்கைக் கொண்ட குலோத்துங்க வழுதி [செங்கண்
அரவங்கம் பூண்ட கூட லாதிநா யகனை நித்தம்
பரவன்பின் வழிபா டாளுப் பத்திமை நியமம் பூண்டான்
இரவஞ்சுங் கதுப்பி னல்லா ரீரையா யிரவருள்ளான். (191)

வேறு

அப்பதினு யிரவர்க்கு மொவ்வொருத்திக் கவ்வாறு
ஒப்பரிய வறுபதினு யிரங்குமா ருளரவருள்
செப்பரிய வல்லாண்மைச் சிங்கவிளை வேறனையான்
வைப்பனையான் முதற்பிறந்த மைந்தன்பே ரனந்த [குணன். (192)

கலைபயின்று பரிநெடுந்தேர் கரிபயின்று பலகைவாள்
சிலைபயின்று வருகுமரர் திறநோக்கி மகிழ்வேந்தன்
அலைபயின்ற கடலாடை நிலமகளை யடலணிதோள்
மலைபயின்று குளிர்தூங்க மகிழ்வித்து வாழுநாள். (193)

ஒரு வேதியன் திருப்புத்தூரிலிருந்து தன் அம்மானிடம் போதற்காகத் தன் மனைவியோடும் கைக்குழந்தையோடும் மதுரையை நோக்கி வந்துகொண்டிருந்தான்.

வருவானுண் ணீர்வேட்டு வருவாளை வழிநிற்கும்
பெருவானந் தடவுமொரு பேராலி னிழலின்கீழ்
ஒருவாத பசுங்குழவி யுடனிருத்தி நீர்தேடித்
தருவான்போய் மீண்டுமனை யிருக்குமிடந் தலைப்படுமுன்.()

இலைத்தலைய பழுமரத்தின் மிசைமுன்னா ளெய்ததொரு
கொலைத்தலைய கூர்வாளி கோப்புண்டு கிடந்ததுகால்
அலைத்தலைய வீழ்ந்தும்மை வினையுலப்ப வாங்கிருந்த
வலைத்தலைய மானோக்கி வயிறுருவத் தைத்தன்றால். (195)

அவ்வாறவ் வணங்கனையா ளுயிரிழந்தா ளவ்வேலைச்
செவ்வாளி யேறிட்ட சிலையுடையா னொருவேடன்
வெவ்வாளி யேறனையான் வெயிற்கொதுங்கு நிழல்தேடி
யவ்வால நிழலெய்தி யயல்நின்று னிளைப்பாற. (196)

தண்ணீர்க்குப் போயாவி தலைப்பட்ட மறையவனும்
உண்ணீர்கைக் கொண்டுமீண் டொருங்கிருந்த குழவி
[யொடும்
புண்ணீர்வெள் ளத்துக்கால் தாழ்ந்துயிரைப் புறங்கொடுத்த
பண்ணீர மழலைமொழிப் பார்ப்பனியைக் கண்ணுற்றான்.()

அயில்போலுங் கணையேறுண் டவ்வழிபுண் ணீர்சோர
மயில்போல வுயிர்போகிக் கிடக்கின்றாள் மருங்கணைந்தென்

உயிர்போல்வா யுனக்கிதுவென் னுற்றதென மத்தெறிதண்
தயிர்போலக் கலங்கியறி வழிந்துமனஞ் சாம்பினன்.(198)

இனையதோர் பெண்பழியை யாரேற்ரு ரெனத்தேர்வான்
அனையதோர் பழுமரத்தின் புறத்தொருசா ரழல்காலும்
முனையதோர் கணையோடு முடக்கியகைச் சிலையேந்தி
வினையதோர்ந்தெதிர்நின்ற விறல்வேடன் றனைக்கண்டான்.

வேறு

காப்பணி தாளன் வாளொடு வீக்கிய கச்சாளன்
கூர்ப்பக ழிக்கோ லேறிடு வில்லன் கொலைசெய்வான்
ஏற்பன கைக்கொண் டிவ்விடை நின்ரு னிவனேயென்
பார்ப்பனி யைக்கொன் றின்னுயி ருண்டு பழிபூண்டான்.()

என்னம தித்தே யேடா வேடா வென்னேழை
தன்னைவ தைத்தாய் நீயே யென்னுத் தழல்கால்கண்
மின்ன லெயிற்றுக் கூற்றென வல்வாய் விட்டார்த்து
மன்னவ னணைப் பாசமெ றிந்து வலித்தேகும். (201)

இங்ஙனம் அவ்வேதியன் மாண்ட மனைவியை முதுகில் எடுத்துக்கொண்டும் குழந்தையைக் கையால் அணைத்துக்கொண்டும் அரசன் அரண்மனைவாயிலை அடைந்தான்.

மட்டவிழ் தாரான் வாயின் மருங்கே வந்தெய்தா
உட்டுக ளில்லா வேடனை முன்விட் டுயிரன்னாள்
சட்டக நேரே விட்டெதிர் மாறன் றமர்கேட்பக்
கட்டழல் சிந்தா முறையிடு கின்ருன் கையோச்சா. (202

கோமுறை கோடாக் கொற்றவ ரேறே முறையேயோ
தாமரை யாள்வாழ் தண்கடி மார்பா முறையேயோ

மாமதி வாஞேன் வழிவரு மைந்தா முறையேயோ
தீமைசெய் தாய்போற் செங்கைகு றைத்தாய் முறை
[யேயோ. (203)

பிறங்குங் கோலான் மாறடு கொற்றம் பெறுவேந்தன்
உறங்கும் போதுந் தன்னரு ளாணை யுலகெங்கு
மறங்குன் ருவாக் காப்பதை யென்ப வஃதியாதிம்
மறங்குன் ருதான் செய்கொலை காவா வழியென்ருன்.(204)

வாயிலு ளார்த மன்னவன் முன்போய் மன்னுநம்
கோயிலின் மாடோர் வேதியன் மாதைக் கொலைசெய்தான்
ஆயின னென்ருேர் வேடனை முன்விட் டவிந்தாளைத்
தாயினன் வந்திங் கிட்டயர் கின்ருன் றமியென்ருர். (205)

இறைமக னஞ்சா வென்குடை நன்ரு லென்காவல்
அறமலி செங்கோ லஞ்சுப யந்தீர்த் தரசாளும்
முறைமையு நன்ருன் மண்கலி மூழ்க முயன்றேந்தும்
பொறைமையு நன்ரு லென்றுபு லந்து புறம்போந்தான். ()

வேதிய னிற்குந் தன்மைதெ ரிந்தான் மெலிவுற்ருன்
சாதியின் மிக்காய் வந்தது னக்கென் றளர்கின்ருய்
ஓதுதி யென்னக் காவலனைப்பார்த் துரைசான்ற
நீதியுளாய்கே ளென்றுரை செய்வா னிகழ்செய்தி. (207)

இன்றிவ ளைக்கொண் டோர்வட நீழ லிடையிட்டுச்
சென்றுதண் ணீர்கொண் டியான்வரு முன்னிச் சிலை
[வேடன்
கொன்றய னின்ரு னென்றுலை யூட்டுங் கொலைவேல்போல்
வன்றிறன் மாறன் செவிநுழை வித்தான் மறையோனுல்.()

அந்தணன் மாற்றந் தன்னையு முட்கொண் டறநோக்குஞ்
சந்தன வெற்பன் மறவனை நோக்கத் தாழ்ந்தன்ஞன்

எந்தைபி ரானே நாயடி யேனின் றெய்ப்பாற
வந்துபு குந்தே னந்தம ரத்தின் மருங்கோர்சார். (209)

ஐயே நானுங் கொன்றவ னல்லேன் கொன்றுரைக்
கையேன் வேறுங் கண்டில னென்று னிவளாகத்
தெய்யே றுண்ட வாறெவ னென்று ரெதிர்நின்றூர்
மெய்யே யையா யானறி யேனிவ் வினைவென்றுன். (210)

இக்கொலை செய்தான் யானல னென்ஞு துளனென்னத்
தக்கவ னேயோ தறுகண் மறவ னுரைமெய்யோ
சிக்கவொ றுத்தா லல்லதை யுண்மை செப்பானென்
றெக்கவு ரைத்தார் மந்திர ருள்ளார் பிறரெல்லாம். (211)

மன்னன் றூனு மற்றது செய்மின் னெனமள்ளர்
பின்னந் தண்டஞ் செய்தனர் கேட்கப் பிழையில்லான்
முன்னஞ் சொன்ன சொற்பெய ராணுய் மொழியாநின்
றின்னந் தீரத் தேருமி னென்று னென்செய்வான். (212)

ஆற்றவொ றுக்குந் தண்டமு மஞ்சா னறைகின்ற
கூற்றமு மொன்றே கொன்ற குறிப்பு முகந்தோற்றூன்
மாற்றவ ரேயோ மாவோ புள்ளோ வழிவந்த
கோற்றொடி யைக்கொன் றென்பெற வல்லான் கொலை
[செய்வான். (213)

கைதவ ணுமிக் கானவ னேயோ பிறரேயோ
செய்தவர் யாரே யிக்கொலை வேட்டஞ் செய்தோர்மா
வெய்தவி லக்கிற் றப்பிய கோரு னேறுண்டிம்
மைதவழ் கண்ணுண் மாய்ந்தன ளேயோ வறியேனல். ()

என்னு முன்னித் தென்னவ னின்ன மிதுமுன்னூல்
தன்னு லாயத் தக்கதை யென்றுன் றகவிற்றம்
அன்னு ரந்நூ லாய்ந்திது நூலா லமையாதால்
மன்னு தெய்வத் தாலே தேறும் வழியென்றூர். (215)

வேந்தர்கள் சிங்கம் வேதிய னைப்பார்த் திதுதீர
ஆய்ந்துன துள்ளக் கவலையொ ழிப்பே னஞ்சேனின்
ஏந்திழை யீமக் கடனிறு விப்போ தென்றேவித்
தேந்துணர் வேங்கைத் தார்மற வோனைச் சிறைசெய்தான்.

மின்னனை யாடன் செய்கடன் முற்றூ மீண்டோனைத்
தன்னமர் கோயிற் கடைவயின் வைத்துத் தானேகிக்
கொன்னவில் வேலான் றங்கள் குடிக்கோர் குலதெய்வம்
என்னவி ருந்தா ரடிகள்ப ணிந்தா னிதுகூறும். (217)

வேறு

மன்றூடு மணியே யிம் மறவன்றூன் பார்ப்பனியைக்
கொன்றூனோ பிறர்பிறிதாற் கொன்றதோ விதுவறநூல்
ஒன்றூனு மளப்பரிதாக் கிடந்ததா லுன்னருளால்
என்றூழ்வு கெடத்தேற்றூ யென்றிரந்தா னவ்வேலை. (218)

திருநகரின் புறம்பொருசார் குலவணிகத் தெருவின்கண்
ஒருமனையின் மணமுளதங் கந்தணனோ டொருங்குநீ
வருதியுன துளங்தேறூ மாற்றமெலாங் தேற்றுதுமென்
றிருவிசும்பி னகடுகிழித் தெழுந்ததா லொருவாக்கு. (219)

திருவாக்குச் செவிமடுத்துச் செழியன்றன் புறங்கடையில்
பெருவாக்கு மறையவனோ டொருங்கெய்திப் பெரும்பகல்
[போய்க்
கருவாக்கு மருண்மாலைக் கங்குல்வாய்த் தன்னைவேற்
றுருவாக்கிக் கடிமனைபோ யொருசிறைபுக் கினிதிருந்தான்.

அன்றிறைவ னருளாலங் கவர்கேட்க வம்மனையின்
மன்றன்மகன் றனக்களந்த நாளுலப்ப மறலியிருட்
குன்றமிரண் டெனவிடுத்த கொடும்பாசக் கையினர்வாய்
மென்றுவருஞ் சினத்தவரி லொருவனிது வினவுமால். (221)

இன்றேயிங் கிவனுயிரைத் தருதிரென விரும்பகட்டுக்[பில்
குன்றேறுங் கோனுரையாற் கொள்வதெவன் பிணியுடம்
ஒன்றேனு மிலனொருகா ரணமின்றி யுயிர்கொள்வ
தன்றேயென் செய்துமென மற்றவனீ தறைகிற்பான். ()

ஆற்றுலே றுண்டகணை யருகொதுங்கும் பார்ப்பனியைக்
காற்றுல்வீழ்த் தெவ்வாறு கவர்ந்தோமப் படியிந்தச்
சாற்றுர வாரத்திற் றும்பறுத்துப் புறநின்ற
ஈற்றுவை வெருளவிடுத் திவனுவி கவர்கென்றுன். (223)

அந்தமொழி கேட்டரச னருமறையோய் கேட்டனேயோ
இந்தமொழி யெனப்பனவ னிவனிவ்வா றிறந்தாலென்
பைந்தொடியா ளிறந்தது மப்படியேயென் மனக்கவலே
சிந்தவிது காண்பேனென் றொருங்கிருந்தான் றென்ன
[னெடும். (224)

ஒட்டியபல்கிளை துவன்றியொல்லொலிமங் கலந்தொடங்கக்
கொட்டியபல் லியமுழங்கக் குழுமிய வோசையின்
[வெருண்டு
கட்டியதாம் பிறப்புனிற்றுக் கற்றுவொன் றெதிர்ந்தோடி
முட்டியதான் மணமகனை முடிந்ததா லவனுவி. (225)

மணமகனே பிணமகனுய்மணப்பறையே பிணப்பறையாய்
அணியிழையார் வாழ்த்தொலிபோ யழுகையொலி யாய்க்
[கழியக்
கணமதனிற் பிறந்திறுமிக் காயத்தின் வரும்பயனை
உணர்வுடையார் பெறுவருணர் வொன்றுமிலார்க் கொன்று
[மிலே. (226)

கண்டானந் தணனென்ன காரியஞ்செய் தேனெனத்தன்
வண்டார் பூங் குழுன் மனைவி மாட்சியினுங் கழிதுன்பங்

கொண்டான்மற் றவனொடுந்தன் கோயில்புகுந்தலர்வேப்பந்
தண்டாரா னமைச்சர்க்கும் பிறர்க்குமிது சாற்றினான்.(227)

மறையவனை யின்னுமொரு மணமுடித்துக் கோடியென
நிறையவரும் பொருளீந்து நீபோதி யெனவிடுத்துச்
சிறையழுவத் திடைக்கிடந்த செடித்தலைய விடிக்குரல
கறையுடல்வே டனைத்தொடுத்த கால்யாப்புக்கழல்வித்து.()

தெளியாதே யாமிழைத்த தீத்தண்டம் பொறுத்தியென
விளியாவின் னருள்சுரந்து வேண்டுவன நனிநல்கி
அளியானு மனத்தரச னவனையவ னிடைச்செலுத்திக்
களியானை விழவெய்த கௌரியனைப் போய்ப்பணிவான்.()

வேறு

ஆதாரம் பெருகப் பாவியேன் பொருட்டெம்
மடிகணீ ரரும்பழி யஞ்சும்
நாதரா யிருந்தீ ரெந்தையார்க் குண்டே
நான்செயத் தக்கதொன் றென்னக்
காதலிற் புகழ்ந்து பன்முறை பழிச்சிக்
கரையின்மா பூசனை சிறப்பித்
தேதமக தகற்றி யுலகினுக் குயிரா
யிருந்தன னிறைகுலோத் துங்கன். (230)

நீதி நூல்கள்

நீதிவெண்பா

தாமரை பொன்முத்துச் சாமரைகோ ரோசனைபால்
பூமருதேன் பட்டுப் புனுகுசவ்வா—தாமழன்மற்
றெங்கே பிறந்தாலு மெள்ளாரே நல்லோர்கள்
எங்கே பிறந்தாலு மென். (231)

அரிமந் திரம்புகுந்தா லானை மருப்பும்
பெருகொளிசேர் முத்தும் பெறலாம்—நரிநுழையில்
வாலுஞ் சிறிய மயிரெலும்புங் கத்தபத்தின்
தோலுமல்லால் வேறுமுண்டோ சொல். (232)

மென்மதுர வாக்கால் விரும்புஞ் சகங்கடின
வன்மொழியி னலிகழு மண்ணுலகம்—நன்மொழிசேர்
ஓதுகுயி லேதங் குதவியது கத்தபந்தான்
ஏதபரா தஞ்செய்த தின்று. (233)

ஆனை மருப்பு மருங்கவரி மான்மயிரும்
கானவரி யுகிருங் கற்றோரும்—மானே
பிறந்தவிடத் தன்றிப் பிறிதொருதே சத்தே
சிறந்தவிடத் தன்றோ சிறப்பு. (234)

வென்றி வரியுகிரும் வெண்கவரி மான்மயிரும்
துன்றுமத யானைச் சுடர்மருப்பும்—நின்றநிலை
வேறுபடி னுஞ்சிறப்பா மெய்ஞ்ஞானி நின்றநிலை
வேறுபடி னுஞ்சிறப்பா மே. (235)

பொறிப்பறிவில் லாதபல புத்திரரைப் பெற்றதிலோர்
நற்புதல்வ ரைப்பெறுத னன்றாமே—பொற்கொடியே
பன்றிபல குட்டி பயந்ததினு லேதுபயன்
ஒன்றமையா தோகரிக்கென் றோது. (236)

பொன்னுங் கரும்பும் புகழ்பாலுஞ் சந்தனமும்
சின்னம் படவருத்தஞ் செய்தாலும்—முன்னிருந்த
நற்குணமே தோன்று நலிந்தாலு முத்தமர்பால்
நற்குணமே தோன்று நயந்து. (237)

நிந்தையிலாத் தூயவரு நிந்தையரைச் சேரிலவர்
நிந்தையது தம்மிடத்தே நிற்குமே—நிந்தைமிகு

தாலநிழற் கீழிருந்தான் றன்பா லருந்திடினும்
பாலதெனச் சொல்லுவரோ பார். (238)

எல்லோர் தமக்கு மினிதுதவ லன்றியே
நல்லோர் தமக்குதவி நாடாரே—வல்லதரு
நாமநிதி மேக நயந்துதவ லன்றியே
தாமுதவி நாடுமோ சாற்று. (239)

கங்கைநதி பாவஞ் சசிதாபங் கற்பகந்தான்
மங்க லுறும்வறுமை மாற்றுமே—துங்கமிகும்
இக்குணமோர் மூன்றும் பெரியோ ரிடஞ்சேரில்
அக்கணமே போமென் றறி. (240)

நீதிநெறி விளக்கம்

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை. (241)

எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்
துய்த்துணர் வில்லெனி னில்லாகும்—உய்த்துணர்ந்தும்
சொல்வன்மை யின்றெனி னென்னா மஃதுண்டேல்
பொன்மலர் நாற்ற முடைத்து. (242)

முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉம்
கற்றன மென்று களியற்க—சிற்றுளியால்
கல்லுந் தகருந் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால். (243)

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க—தம்மினும்

கற்றூரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்
எற்றே யிவர்க்குநா மென்று. (244)

நட்புப் பிரித்தல் பகைநட்ட லொற்றிகழ்தல்
பக்கத்தார் யாரையு மையுறுதல்—தக்கார்
நெடுமொழி கோறல் குணம்பிறி தாதல்
கெடுவது காட்டுங் குறி. (245)

கண்ணேக் கரும்பா நகைமுகமே நாண்மலரா
இன்மொழியின் வாய்மையே தீங்காயா—வண்மை
பலமா நலங்கனிந்த பண்புடையா ரன்றே
சலியாத கல்ப தரு. (246)

புறநட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேறுதல் வேண்டும்—கழிபெரும்
கண்ணோட்டஞ் செய்யேல் கருவியிட் டாற்றுவார்
புண்வைத்து மூடார் பொதிந்து. (247)

மனத்த கறுப்பெனி னல்ல செயினும்
அனைத்தெவையுந் தீயவே யாகும்—எனைத்துணையும்
தீயவே செய்யினு நல்லவாக் காண்பவே
மாசின் மனத்தி னவர். (248)

தெய்வ முளதென்பார் தீய செயப்புகின்
தெய்வமே கண்ணின்று நின்றுறுக்கும்—தெய்வம்
இலதென்பார்க் கில்லைத்தம் மின்புதல்வர்க் கன்றே
பலகாலுஞ் சொல்வார் பயன். (249)

வஞ்சித் தொழுகு மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோ மென்று மகிழற்க—வஞ்சித்த
எங்கு முளனொருவன் காணுங்கொ லென்றஞ்சி
அங்கங் குலைவ தறிவு. (250)

அறநெறிச் சாரம்

இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை யெருவட்டி
அன்புநீர் பாய்ச்சி யறக்கதி ரீனவோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய். (251)

காலைச்செய் வோமென் றறத்தைக் கடைப்பிடித்துச்
சாலச்செய் வாரே தலைப்படுவார்—மாலை
கிடந்தா னெழுத லரிதான்மற் றென்கொல்
அறங்காலைச் செய்யாத வாறு. (252)

கல்லா வொருவனைக் காரணங் காட்டினும்
இல்லைமற் றொன்று மறனுணர்தல்—நல்லாய்
நறுநெய் நிறைய முகப்பினு மூழை
பெறுமோ சுவையுணரு மாறு. (253)

காய்த லுவத்த லகற்றி யொருபொருட்கண்
ஆய்த லறிவுடையார் கண்ணதே—காய்வதன்கண்
உற்ற குணந்தோன்றா தாகு முவப்பதன்கண்
குற்றமுந் தோன்றாக் கெடும். (254)

போற்றியே போற்றியே யென்று புதுச்செல்வம்
தோற்றியார் கண்ணெல்லாந் தொண்டேபோல்—ஆற்றப்
பயிற்றிப் பயிற்றிப் பலவுரைப்ப தெல்லாம்
வயிற்றுப் பெருமான் பொருட்டு. (255)

உள்ளா ரிருந்துந்தம் முள்ளமறப் பெற்றாரேல்
கள்ளவிழ் சோலையாங் காட்டுள்ளார் காட்டுள்ளும்
உள்ள மறப்பெறு கல்லாரேல் நாட்டுள்ளும்
நண்ணி நடுவூ ருளார். (256)

நின்னை யறப்பெறு கிற்கிலே னன்னெஞ்சே
பின்னையான் யாரைப் பெறுகிற்பேன்—நின்னை
அறப்பெறு கிற்பேனேற் பெற்றேன்மற் றீண்டே
துறக்கந் திறப்பதோர் தாள். (257)

தானே தனக்குப் பகைவனு நட்டானும்
தானே தனக்கு மறுமையு மிம்மையும்
தானே தான்செய்த வினைப்பயன் றுய்த்தலால்
தானே தனக்குக் கரி. (258)

சோறியாரு முண்ணாரோ சொல்லியாருஞ் சொல்லாரோ
வேறியாரும் வையத்து வேறாரோ—தேறி
உரியதோர் ஞானங்கற் றுள்ளந் திருத்தி
அரிய துணிவதா மாண்பு (259)

பண்ணமை யாழ்குழல் கீதமென் றின்னவை
நண்ணி நயப்ப செவியல்ல—திண்ணிதின்
வெட்டெனச் சொன்னீக்கி விண்ணின்பம் வீட்டொடு
கட்டுரை கேட்ப செவி. (260)

திரிகடுகம்

தொல்லவையுட் டோன்றுங் குடிமையுந் தொக்கிருந்த
நல்லவையுண் மேம்பட்ட கல்வியும்—வெல்சமத்து
வேந்துவப்ப வட்டார்த்த வென்றியு மிம்மூன்றுந்
தாந்தம்மைக் கூறுப் பொருள். (261)

கணக்காய ரில்லாத வூரும் பிணக்கறுக்கும்
மூத்தோரை யில்லா வவைக்களனும்—பாத்துண்ணும்
தன்மையி லாள ரயலிருப்பு மிம்மூன்றும்
நன்மை பயத்த லில. (262)

தாளாள னென்பான் கடன்படா வாழ்பவன்
வேளாள னென்பான் விருந்திருக்க வுண்ணாதான்

கோளாள னென்பான் மறவாதா னிம்மூவர்
கேளாக வாழ்த லினிது. (263)

வருவாயுட் கால்வழங்கி வாழ்தல் செருவாய்ப்பச்
செய்தவை நாடாச் சிறப்புடைமை—எய்தப்
பலநாடி நல்லவை கற்ற லிம்மூன்றும்
நலமாட்சி நல்லவர் கோள். (264)

உண்பொழுது நீராடி யுண்டலு மென்பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலும்—தோல்வற்றிச்
சாயினுஞ் சான்றாண்மை குன்றாமை யிம்மூன்றும்
தூஉய மென்பார் தொழில். (265)

தன்னச்சிச் சென்றாரை யெள்ளா வொருவனும்
மன்னிய செல்வத்துட் பொச்சாப்பு நீத்தானும்
என்று மழுக்கா றிகந்தானு மிம்மூவர்
நின்ற புகழுடை யார். (266)

தன்னை வியந்து தருக்கலுந் தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்—முன்னிய
பல்பொருள் வெஃகுஞ் சிறுமையு மிம்மூன்றும்
செல்வ முடைக்கும் படை. (267)

வைததனை யின்சொல்லாக் கொள்வானு நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானும்—ஊறிய
கைப்பதனைக் கட்டியென் றுண்பானு மிம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார். (268)

கிளைஞர்க் குதவாதான் செல்வமும் பைங்கூழ்
விளைவின்கட் போற்றா னுழவும்—இளையனாய்க்
கள்ளுண்டு வாழ்வான் குடிமையு மிம்மூன்றும்
உள்ளன போலக் கெடும். (269)

ஈதற்குச் செய்க பொருளை யறநெறி
சேர்தற்குச் செய்க பெருநூலை—யாதும்
அருள்புரிந்து சொல்லுக சொல்லை யிம்மூன்றும்
இருளுலகஞ் சேராத வாறு. (270)

நான்மணிக்கடிகை

கள்ளி வயிற்றி னகில்பிறக்கு மான்வயிற்றின்
ஒள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கு மறிவார்யார்
நல்லாள் பிறக்குங் குடி. (271)

கற்றார்முற் றோன்றா கழிவிரக்கங் காதலித்தொன்
றுற்றார்முற் றோன்றா வுறாமுதல்—தெற்றென
அல்ல புரிந்தார்க் கறந்தோன்றா வெல்லாம்
வெகுண்டார்முற் றோன்றா கெடும். (272)

கன்றாமை வேண்டுங் கடிய பிறர்செய்த
நன்றியை நன்றாக் கொளல்வேண்டும்—என்றும்
விடல்வேண்டுந் தன்கண் வெகுளி யடல்வேண்டும்
ஆக்கஞ் சிதைக்கும் வினை. (273)

இன்னாமை வேண்டி னிரவெழுக விந்நிலத்து
மன்னுதல் வேண்டி னிசைநடுக—தன்னொடு
செல்வது வேண்டி னறஞ்செய்க வெல்வது
வேண்டின் வெகுளி விடல். (274)

மனைக்குப்பாழ் வாணுத லின்மைதான் செல்லும்
திசைக்குப்பாழ் நட்டோரை யின்மை யிருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை யின்மை தனக்குப்பாழ்
கற்றறி வில்லா வுடம்பு. (275)

கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை கொண்டானில்
துன்னிய கேளிர் பிறரில்லை மக்களின்

ஒண்மைய வாய்ச்சான்ற பொருளில்லை யீன்றாளோ
டென்ன கடவுளு மில். (276)

என்று முளவாகு நாளு மிருசுடரும்
என்றும் பிணியுந் தொழிலொக்கும்—என்றும்
கொடுப்பாருங் கொள்வாரு மன்னர் பிறப்பாரும்
சாவாரு மென்று முளர். (277)

சாவாத வில்லை பிறந்த வுயிரெல்லாம்
தாவாத வில்லை வலிகளும்—மூவா
திளமை யிசைந்தாரு மில்லை வளமையில்
கேடின்றிச் சென்றாரு மில். (278)

இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்
கிளைஞரில் போழ்திற் சினங்குற்றங் குற்றம்
தமரல்லார் கையகத் தூண். (279)

எல்லா விடத்துங் கொலைதீது மக்களைக்
கல்லா வளர விடறீது—நல்லார்
நலந்தீது நாணற்று நிற்பிற் குலந்தீது
கொள்கை யழிந்தக் கடை. (280)

தனிப்பாடல்கள்

ஔவையார்

விரக ரிருவர் புகழ்ந்திடவே வேண்டும்
விரனிறைய மோதிரங்கள் வேண்டும்—அரையதனில்
பஞ்சேனும் பட்டேனும் வேண்டு மவர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனு நன்று. (281)

வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கறையான்
தேன்சிலம்பி யாவர்க்குஞ் செய்யரிதால்—யாம்பெரிதும்

வல்லோமே யென்று வலிமைசொல வேண்டாங்காண்
எல்லார்க்கு மொவ்வொன் றெளிது. (282)

காணாமல் வேணதெல்லாங் கத்தலாங் கற்றோர்முன்
கோணாமல் வாய்திறக்கக் கூடாதே—நாணாமல்
பேச்சுப்பேச் சென்னும் பெரும்பூனை வந்தக்கால்
கீச்சுக் கீச்சென்னுங் கிளி. (283)

சித்திரமுங் கைப்பழக்கஞ் செந்தமிழு நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்தம்
நடையு நடைப்பழக்க நட்புந் தயையும்
கொடையும் பிறவிக் குணம். (284)

கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்ற கலைமடந்தை யோதுகிறாள்—மெத்த
வெறும்பந் தயங்கூற வேண்டாம் புலவீர்
எறும்புந்தன் கையாலெண் சாண். (285)

ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றும்
காத லிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு. (286)

ஒன்றாகக் காண்பதே காட்சி புலனைந்தும்
வென்றான்றன் வீரமே வீரமாம்—என்றானும்
சாவாமற் கற்பதே வித்தை தனைப்பிறர்
ஏவாம லுண்பதே யூண். (287)

அதிமதுர கவிராயர்

மூச்சு விடுமுன்னே முந்நூறு நானூறும்
ஆச்சென்றா லைந்நூறு மாகாதோ—பேச்சென்ன
வெள்ளைக் கவிகாள மேகமே நின்னுடைய
கள்ளக் கவிக்கடையைக் கட்டு. (288)

காளமேகப் புலவர்

இம்மென்னு முன்னே யெழுநூறு மெண்ணூறும்
அம்மென்றா லாயிரம்பாட் டாகாதோ—சும்மா
இருந்தா லிருப்பே னெழுந்தேனே யாயின்
பெருங்காள மேகம் பிளாய். (289)

முக்காலுக் கேகாமுன் முன்னரையில் வீழாமுன்
அக்கா லரைக்கால்கண் டஞ்சாமுன்—விக்கி
இருமாமுன் மாகாணிக் கேகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரையின் றோது. (290)

மாணுக்கர் வரலாறு

தன்மக னாசான் மகனே மன்மகன்
பொருள்நனி கொடுப்போன் வழிபடு வோனே
உரைகோ ளாளர்க்கு உரைப்பது நூலே. (291)

அன்ன மாவே மண்ணொடு கிளியே
இல்லிக் குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணாக்கர். (292)

களிமடி மானி காமி கள்வன்
பிணிய னேழை பிணக்கன் சினத்தன்
துயில்வோன் மந்தன் தொன்னூற் கஞ்சித்
தடுமா றுளத்தன் தறுகணன் பாவி
படிறனின் னோர்க்குப் பகரார் நூலே. (293)

பாடங்கேட்குமுறை

கோடல் மரபே கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
குணத்தொடு பழகி அவன்குறிப் பிற்சார்ந்து
இருவென விருந்து சொல்லெனச் சொல்லிப்

பருகுவ னன்ன ஆர்வத்த னாகிச்
சித்திரப் பாவையி னத்தக வடங்கிச்
செவிவா யாக நெஞ்சுகள னாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்
போவெனப் போத லென்மனார் புலவர். (294)

நூல்பயி லியல்பே நுவலின் வழக்கறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்தவை அமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்த லென்றிவை
கடனாக் கொளினே மடநனி யிகக்கும். (295)

ஒருகுறி கேட்போ னிருகாற் கேட்பின்
பெருக நூலிற் பிழைபா டிலனே. (296)

முக்காற் கேட்பின் முறையறிந் துரைக்கும். (297)

ஆசா னுரைத்த தமைவரக் கொளினுங்
காற்கூ றல்லது பற்றல னாகும். (298)

அவ்வினை யாளரொடு பயில்வகை யொருகால்
செவ்விதி னுரைப்ப வவ்விரு காலும்
மையறு புலமை மாண்புடைத் தாகும். (299)

அழலி னீங்கா னணுகா னஞ்சி
நிழலி னீங்கா னிறைந்த நெஞ்சமோடு
எத்திறத் தாசா னுவக்கு மத்திறம்
அறத்திற்றிரியாப் படர்ச்சி வழிபாடே. (300)

ஸ்ரீ

க. கடவுள்

உலகமாவது சித்தும் அசித்துமென இருவகைப் படும் பிரபஞ்சமாம். சித்து அறிவுடைய பொருள். அசித்து அறிவில்லாத பொருள். அசித்தென்றாலும், சடமென்றாலும் பொருந்தும். உலகம் தோன்றி நின்று அழியுங்காரியமாய் உள்ளது. ஆதலினால், உலகத்தைப் படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் மூன்று தொழில் களையுஞ் செய்தற்கு ஒரு கடவுள் இருக்கின்றார் என்பது நன்றாக நிச்சயிக்கப்படும்.

கடவுள் என்றும் உள்ளவர்; அவருக்குப் பிறப்பும் இறப்பும் இல்லை. அவர் எங்கும் நிறைந்தவர்; அவர் இல் லாத இடம் இல்லை. அவர் எல்லாம் அறிபவர்; அவர் அறியாதது ஒன்றுமில்லை. அவருடைய அறிவு இயற்கை யறிவு; ஒருவர் அறிவிக்க அறிபவரல்லர். அவர் எல்லாம் வல்லவர்; அவரால் இயலாத கருமம் ஒன்றுமில்லை. அவர் அளவிடப்படாத ஆனந்தமுடையவர்; தம்முடைய அநுபவத்தின் பொருட்டு வேறொன்றையும் வேண்டுபவ ரல்லர். அவர் தம்வயமுடையவர்; பிறர்வயமுடையவ ரல்லர். அவர் உயர்வும் ஒப்பும் இல்லாதவர்; அவரின் மேலானவரும் இல்லை; அவருக்குச் சமமானவரும் இல்லை. அவர் சகல லோகத்துக்கும் ஒரே நாயகர். அவர் செய்யுந் தொழில்களுள் ஒன்றாயினும் அவருடைய பிரயோசனத் தைக் குறித்ததன்று; எல்லாம் ஆன்மாக்களுடைய பிர யோசனத்தைக் குறித்தவைகள். அவர் ஆன்மாக்களிடத் துள்ள கைம்மாறில்லாத அளவுகடந்த திருவருளே திரு மேனியாக உடையவர்.

கடவுள் ஆன்மாக்கள்பொருட்டு வேதம் ஆகமம் என் னும் முதனூல்களை அருளிச்செய்தார். அவைகளிலே

விதிக்கப்பட்டவைகளெல்லாம் புண்ணியங்கள். விலக்கப் பட்டவைகளெல்லாம் பாவங்கள். அவர் புண்ணியத்தைச் செய்த ஆன்மாக்களுக்கு இன்பத்தையும், பாவத்தைச் செய்த ஆன்மாக்களுக்குத் துன்பத்தையும் கொடுப்பார். துன்பத்தைக் கொடுத்தலினால் அவரை வன்கண்ண ரென்று கொள்ளலாகாது. தீமை செய்த பிள்ளைகளைப் பிதா மாதாக்கள் தண்டித்தலும், சில வியாதியாளர் களுக்கு வைத்தியர்கள் சத்திரமிட்டறுத்தலும், இருப்புக் கோல் காய்ச்சிச் சுடுதலும், கண்ணிற்படலத்தை உரித் தலும் அவர்களிடத்துள்ள இரக்கத்தினாலன்றி வன் கண்மையினாலல்லவே. அதுபோலக் கடவுள் பாவஞ் செய்த ஆன்மாக்களைத் தண்டித்தல், அப்பாவத்தை ஒழித்து மேலே பாவஞ்செய்யாவண்ணம் தடுத்து அவர் களை நல்வழியிலே செலுத்தி உய்வித்தற்கு ஏதுவாதலி னால், அதுவும் கருணையேயாம்.

உ. அருள்

அருளாவது, இவை தொடர்புடையவை என்றும் இவை தொடர்பில்லாதவை என்றும் நோக்காது இயல் பாகவே எல்லாவுயிர்கண்மேலுஞ் செல்வதாகிய கருணை. அருளெனினும், கருணையெனினும், இரக்கமெனினும் பொருந்தும். உலகவின்பத்துக்குக் காரணம் பொருளே யாதல்போலத் தருமத்துக்குக் காரணம் அருளேயாம். அருளென்னும் குணம் யாவரிடத்திருக்குமோ, அவ ரிடத்தே பழிபாவங்களெல்லாம் சிறிதும் அணுகாது நீங்கிவிடும். வாய்மையாகிய தகழியிலே பொறுமையாகிய திரியை இட்டு, தவமாகிய நெய்யை நிறையப் பெய்து, அருளாகிய விளக்கை ஏற்றினால், அஞ்ஞானமாகிய

பேரிருள் ஓட்டெடுப்ப, பதியாகிய மெய்ப்பொருள் வெளிப்படும். மரணபரியந்தம் தன்னுயிரை வருந்திப் பாதுகாத்தல்போலப் பிறவுயிர்களையும் வருந்திப் பாதுகாப்பவன் யாவன், அவனே உயிர்களுக்கெல்லாம் இதஞ் செய்பவனாகி, தான் எந்நாளும் இன்பமே வடிவமாக இருப்பன்.

உயிர்களெல்லாம் கடவுளுக்குத் திருமேனிகள் ; அவ்வுயிர்களுக்கு நிலைக்களமாகிய உடம்புகளெல்லாம் கடவுளுக்கு ஆலயங்கள். ஆதலால், கடவுளிடத்து மெய்யன்புடையவர்கள் அக்கடவுளோடு உயிர்களுக்கு உளதாகிய தொடர்புபற்றி அவ்வுயிர்களிடத்தும் அன்புடையவர்களே யாவர்கள். உயிர்களிடத்து அன்பில்லாதபொழுது கடவுளிடத்து அன்புடையவர்போல் ஒழுகுதல் நாடக மாத்திரையே யன்றி உண்மை யன்றென்பது தெள்ளிதில் துணியப்படும். பிறவுயிர்களிடத்து இரக்கமில்லாதவர் தம்முயிருக்கு உறுதி செய்துகொள்ளமாட்டார். ஆதலால், அவர் பிறவுயிர்களிடத்து மாத்திரமா, தம்முயிரிடத்தும் இரக்கமில்லாதவரே யாவர். அவர் தமக்குத்தாமேவஞ்சகர்.

ந. சுகிர்ல்லாபம்

(நட்புப்பேறு)

“புத்திசாலிகளா யிருக்கிற சிநேகிதர்கள் திரவியமில்லாதிருந்தாலும், வேறே சாதனங்கள் இல்லாவிட்டாலும், காகமும் எலியும் ஆமையும் மானும் நட்பினல் ஒன்றை ஒன்று காப்பாற்றினற்போல் ஒருவர்க்கொருவர் உதவுவார்கள்” எனச் சோமசன்மா சொல்ல, ராஜகுமாரர்கள் “அஃது எப்படி ?” என, அவன் சொல்லத் தொடங்கினன்.

I. புருக்கள் வலையில் சிக்கிக்கொண்ட கதை

"கோதாவரிக் கரையிலுள்ள ஒரு பெரிய வன்னி மரத்தில் லகுபதன னென்னுங் காகம் வாசஞ் செய்து கொண்டிருக்கையில், ஒரு நாள் விடியற்காலத்தில் அங்கே எமனைப்போல மிகவும் பயங்கரமான வேடன் ஒருவன் வந்தான். லகுபதனன், அவனைப் பார்த்துப் பயப்பட்டு, 'இந்தத் துராத்மா என்ன பண்ணுவானோ தெரியவில்லை; ஆகையால், இதைச் சோதிக்க வேண்டும்' என்று, இரை தேடுகிற யத்தனத்தை விட்டிருக்க, இதற்குள்ளே அவ் வேடன் வலையை விரித்துப் பலவகைப்பட்ட தானியத் தைத் தெளித்து அங்கே ஓர் செடி மறைவிற் பதுங்கிக் கொண்டு இருந்தான். அதன் பிறகு, தன் பரிவாரத் தோடு அந்த மரத்தில் வந்திறங்கின சித்திரக்கிரீவனென் னும் புருவரசு, அங்கே இறைத்திருக்குந் தானியத்தைப் பார்த்துத் தன் பரிவாரப் புருக்களுடனே, 'இந்த நிர் மானுஷ்யமான காட்டில் தானியம் எப்படி வரும்? யாரா யினுங் கொண்டு வந்து போட்டிருக்க வேண்டும்; இது நமக்குத் தெரிந்தாலல்லாமல் இதைப் பக்ஷிக்கலாகாது. ஏனென்றால், ஒரு பிராமணன் பொற் காப்புக்கு ஆசைப் பட்டுப் புலியினால் எப்படி மரணமடைந்தானோ அப்படி இது ஏதோ ஒரு விபரீதமாகத் தோன்றுகிறது' என, புருக்கள் அதைக் கேட்டு, 'அது எப்படி? மஹா ராஜாவே!' என, சித்திரக்கிரீவன் சொல்லுகிறது.

1. பொற்காப்புக்கு ஆசைப்பட்டு ஒரு பிராமணன் மரணமடைந்த கதை.

'நான் தென்காட்டில் மேய்ந்து கொண்டிருக்கையிற் பார்த்தேன்'; அதைக் கேளுங்கள். ஒரு கிழப்புலி பல வீனத்தால் ஆகாரஞ் சம்பாதிக்கக் கூடாமல் ஓர் ஏரிகரை

யில் நீராடிக் கையில் தருப்பைவைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கையில், ஒரு பிராமணன் அந்த வழியில் வந்தான். புலி, அவனைப் பார்த்து, 'ஓ! பிராமணு! இந்தப் பொற்காப்புத் தருகிறேன்; வா' என, இதைக்கேட்டு, அப் பிராமணன் அந்தப் புலியைப் பார்த்து, 'இந்தக் காப்பு நமக்கு வலியக் கிடைக்கிறது; ஆனல், மரணத்துக்கிடமாகிய புலியின் கிட்டப் போகலாகா தாகையால், இந்தக் காப்பில் ஆசை வைக்கலாகா தென்போமானல், மரணத்துக்கு நாலண்டையும் வழி; ஆகையால், இதைக் குறித்துப் பிரயத்தனம் அவசியம் பண்ணவேண்டும்' என்று இவ்விதமாகத் தன் துராசைக் கேற்பத் தனக்குள்ளே ஆலோசித்து நிச்சயித்துக்கொண்டு புலியைப் பார்த்து, 'ஐயா! புலியாரே! காப்பு எங்கே இருக்கிறது?' என, புலி கையில் வைத்துக்கொண்டு, 'இதோ பார்! பிராமணேத்தமா!' எனக் காண்பித்தது. பிராமணன், 'உன்னிடத்தில் எனக்கு எப்படி நம்பிக்கை?' என, புலி, 'நான் வைகறையில் மூழ்கி நித்திய தானம் பண்ணிக்கொண்டிருக்கிறேன்; நகமும் பல்லும் போன கிழவனு யிருக்கிறேன். இப்போது என்னிடத்தில் நம்பிக்கை இல்லையா? வேட்டல், ஓதல், கொடுத்தல், தவம், சத்தியம், உறுதி, பொறுமை, ஆசையின்மையென்னும் இவ்வெட்டுத் தருமங்களையும் நான் அறிந்திருக்கிறதனல் இந்த அபூர்வ வஸ்துவை யாருக்காகிலுங் கொடுக்க இச்சிக்கிறேன். இதனல், என்னிடத்தில் நற்குண மிருக்கிற தென்றும் எவ்வளவானலுந் துர்க்குணமில்லையென்றும் அறியவில்லையா?' என, அப்போது, பிராமணன், 'இது மெய்தான்; ஆனலும், புலி மனிதரை அடித்துத் தின்னுகிறதென்று மிகவும் லோகாபவாத மிருக்கிறது' என, புலி, 'நான் தரும சாஸ்திரமும் அறிந்திருக்கிறேன். தம் பிராணன் தமக்கு எப்படித் தித்திப்போ அப்படியே

எல்லார்க்கு மிருக்குமென்றறிந்து சாதுக்கள் பிராணிகளிடத்தில் தயையா யிருக்கிறார்கள் ; தம்மைப் போலச் சுகதுக்கங்களைப் பிறரிடத்தும் நினைக்கிறார்கள். நீ மிகவுந் தரித்திர னாகையால், உனக்குக் கொடுக்க யத்தனிக்கிறேன். சாஸ்திரமும் இப்படியே இருக்கிறது ; எப்படியும் ஏழைக்கே கொடுக்கவேண்டும் ; செல்வமுள்ளவனுக்குக் கொடுக்கலாகாது. ஏனென்றால், மருந்து நோயாளிக்கு எப்படிக் குணங் கொடுக்குமோ அப்படி நோயில்லாதவனுக்குக் கொடுக்குமா ? ஆதலால், நீ இந்த ஏரியிலே முழுகி வந்து காப்பை வாங்கிக்கொண்டு வீட்டுக்குப் போ' என்றவுடனே, பிராமணன், ஐயோ ! பிராமணனுக்குப் பின்புத்தி யாகையால், புலியின் பேச்சை நம்பி ஸ்நானம் பண்ணுகிறதற்கு ஏரியி லிறங்கினவுடனே, உளையிற் புதைந்து காலைப் பிடுங்கிக்கொண்டு வரக் கூடாமல் திகைத்தான். புலி அதைப் பார்த்து, 'பிராமணா! பயப்படாதே ; நான் உன்னைச் சேற்றினின்றும் எடுக்கிறேன் ; சற்றிரு' என்று சொல்லிக்கொண்டு மெல்லெனப் போய் அவனைப் பிடித்துக்கொண்டது. அப்போது, பிராமணன் எண்ணமிடுகிறான்: 'துஷ்டர்கள் வேதாத்தியயனம் பண்ணியிருந்தாலும் தருமசாஸ்திரம் அறிந்திருந்தாலும் அவர்கள் வார்த்தையில் நம்பிக்கை வைக்கலாகாது; எவன் சுபாவம் எப்படியோ அது எப்போதும் போகாது; இப்படி யிருக்கையில், நம்முடைய சாதிக்கு இயல்பாயிருக்கிற பேராசையினால் இந்தத் துஷ்டனிடத்தில் விசுவாசம் வைத்து மோசம் போனேன்' என்று இப்படி பச்சாத்தாபப்பட்டுக்கொண்டிருக்கையில், அந்தப் புலி அவனைக் கொன்று தின்றது. ஆகையால், 'மிகவும் ஆலோசனை பண்ணி எதொன்று செய்யத் தக்கதோ அதைச் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் யாதொரு தீங்கும் நேரிடாது' என்று இப்படிச் சொன்ன வார்த்தை

யைக் கேட்டு, ஒரு புறு, கர்வத்தோடு, 'இப்படி ஆலோசித்தால் ஓர் இரையும் நமக்கு அகப்படாது. மேலும், வெட்கப்படுகிறவன், பொறுமையுள்ளவன், சந்தோஷப்படாதவன், குரோதமுள்ளவன், நீராச்சந்தேகமுள்ளவன், பிறர் பொருளாற் சீவிக்கிறவன் இந்த ஆறு பேரும் துக்கத்தையே அனுபவிப்பார்கள்' என, இதைக் கேட்டுப் புறுக்களெல்லாம் தானியத்தைத் தின்னும்பொருட்டுப் போய் நிலத்திலிறங்கி வலையில் அகப்பட்டன. புறுவரசன், அதைப் பார்த்து, 'எல்லாரும் என் சொல்லைக் கேளாமற் போனூர்கள்; இப்போது நான் ஒன்றியாயிருந்து பலனில்லை' என்று சொல்லி அதுவும் வலையில் வந்து அகப்பட்டது.

வேடன், பக்ஷிகள் வலையிற் சிக்கிக்கொண்டதைப் பார்த்து அதனிடத்திற்கு வரத் தொடங்கினுன். அதைப் புறுக்கள் கண்டு, சித்திரக்கிரீவனைப் பார்த்து, 'நாங்கள் நீசன் புத்தியைக் கேட்டு உன்னை அவமானம் பண்ணினோம்; அதன் பலன் பிராப்தியாயிற்று' என, அப்போது சித்திரக்கிரீவன், 'இப்போது இதைச் சொல்லிப் பயனென்ன? இதற்கு ஓர் உபாயம் இருக்கிறது. எல்லோரும் வலையோடு கூட ஒருமிக்கப் பறந்து வேறிடத்திற்குப் போகவேண்டும்; அப்படிச் செய்தாற்றான் பிராணனைக் காப்பாற்றலாம்' என, இதைக் கேட்டவுடனே, எல்லாப் பறவைகளும் வலையோடுகூடச் சடிதியிற் பறந்துபோயின. அதை வேடன் தூரத்திலிருந்து பார்த்து ஆச்சரியப்பட்டு, 'இவைகள் ஒரே மனதாய் வலையைக் கொண்டுபோயின; ஆயினும், இவைகளுள் ஒன்றுக்கொன்று சண்டை நேரிடும். அப்போது என் கையில் அகப்படும்' என, நினைத்துக்கொண்டு அவைகளின் பின்னே ஓடும்போது, புறுக்கள் கண்ணுக்கு எட்டாமல் மறைந்துபோய்விட்டன. பிறகு, அவன் வருத்தப்பட்டுத்

திரும்பி வந்துவிட்டான். இவ்வாச்சரிய மெல்லாம் பார்த்திருந்த லகுபதன னென்னுங் காகம், அந்தப் புறுக்களின் பின்னே போயிற்று. கபோதராஜா, தன் கூட்டத்தைப் பார்த்து, 'கண்டகிநதி தீரத்திலிருக்குஞ் சித்திரவனத்தில் என் சிநேகிதனான இரணியகனென்னும் ஓர் எலியரசன் இருக்கிறான். அவன் பல்லினாலே நம்முடைய வலையை அறுப்பான். அங்கே நடவுங்கள்' என, இதைக் கேட்டு, அவை அப்படியே எலியரசன்வளையண்டை போயிறங்கின.

அப்போது, ஏதாவது ஆபத்து நேரிடு மென்பதைக் குறித்துத் தன் வளைக்கு நூறு வழி செய்துகொண்டு உள்ளேயிருந்த எலியரசன், புறுக்கள் இறங்கின சப்தத்தைத் கேட்டுப் பயந்து அடங்கியிருக்கையில், சித்திரக்கிரீவன், 'சிநேகிதா! இரணியகனே! எங்களோடே ஏன் பேசவில்லை?' என, இதைத் தன் சிநேகிதனுடைய தீங்குர லென்றறிந்து சந்தோஷத்தோடு கூடச் சீக்கிரமாக வளையினின்றும் வந்து, 'நான் புண்ணியவானாகையாற் சித்திரக்கிரீவன் என்னும் மித்திரன் என் வீட்டுக்கு வந்தான். இவ்வுலகத்தில் மனமொத்த மித்திரனோடு சம்பாஷிப்பதிலும் வேறே ஆனந்தம் ஏது?' என்று உபசாரஞ் சொல்லி, பிறகு, அதனுடைய அவஸ்தையைப் பார்த்து மிகவும் துக்கித்து, 'மித்திரா! நீ எல்லாரைக் காட்டிலும் சமர்த்தனல்லையோ? உனக்கு இப்படிப்பட்ட காரியம் எப்படி நேரிட்டது?' என, புறு, 'எந்தக் காலத்தில் எது நடக்குமோ அது நடக்கும். விதி வலிது. அதன்முன் யாருடைய உபாயம் நடக்கும்? கடல்பெருகி மேலிட்டால் அதற்குக் கரை ஏது?' என, இரணியகன், 'இந்தப் பேச்சு மெய்யே; நூறு நாழிகை வழி தூரத்திலிருந்து வஸ்துக்களைத் தெரிந்துகொண்டு போகிற நீ, இன்றைக்கு வேடன் வலையைப் பாராமற் சிக்கிக்

கொண்டனையே! பார்! சந்திர சூரியர்களுக்கு இராகு கேதுக்களாற் பீடை வருதலும், யானையும் பறவையும் பாம்புங் கட்டுப்படுதலும், புத்திசாலிகளுக்கு வறுமை வருதலுந் தெய்வத்தின் மகிமையே யல்லாமல் வேறல்ல' என்று சொல்லி, சித்திரக்கிரீவன் கட்டுண்டிருந்த வலைக் கயிற்றை அறுக்கத் தொடங்கிற்று. அப்போது, சித்திரக் கிரீவன், 'மித்திரா! முன்னே என் பரிவாரத்தினுடைய கயிற்றை அறு; பிறகு, என் பாசத்தைத் துணி' எனக் கேட்டு, எலி! 'என் பல்லு மிகவும் மெதுவானது; அதற்குப் பலமுங் கொஞ்சம்; ஆகையால், இத்தனை பெயருடைய பந்தனைகள் எனக்கு எப்படி அறுபடும்? உன் தலையை அறுத்துப் பின்பு என் சாமர்த்தியத்துக்குத் தக்கதாக அவர்களுடைய தலையையும் அறுப்பேன்' என, சித்திரக்கிரீவன், 'நல்லது; முன்னே இவர்களுடைய பாசத்தை அறு' என, இரணியகன், 'தன்னைக் காப்பாற்றிக்கொண்டு தன் பரிவாரங்களைக் காப்பாற்றவேண்டும்; அறம் பொருள் இன்பம் வீடாகிய இவைகளுக்குப் பிராணன் முக்கிய சாதனமாகையால், அதைக் காப்பாற்றினால், எல்லாவற்றையுங் காப்பாற்றினாற் போலாகிறது' என, சித்திரக்கிரீவன், 'இந்த நீதி சரிதான்; ஆயினும், இப்படிப்பட்ட வேதனையினின்றும் பாலனம் பண்ணுகிறதற் கல்லவோ என்னை இவர்கள் ராஜாவாக நினைக்கிறார்கள்? ஆகையால், என் பிராணனிடத்தில் இச்சையை விட்டு இவர்களைப் பிழைப்பி' என, அதைக் கேட்டு, எலி, 'நீ பரமசாது; அடுத்தவர்களை ஆதரிக்கிறவனா யிருக்கிறாய். எசமானனிடத்தில் விசுவாசமா யிருக்கிற சேவகனும், சேவகனிடத்திற் பிரீதியா யிருக்கிற எசமானனுஞ் சுகமடைவார்கள்' என்று சொல்லி, எல்லாவற்றின் பாசங்களையும் அறுத்துச் சித்திரக்கிரீவனுடைய கட்டையும் சேதித்தது. பிறகு, ஒன்றுக்கொன்று தழுவிக்கொண்டு

பிரியவார்த்தைகள் சொல்லின. சித்திரக்கிரீவன் பரிவாரத்தோடு கூடத் தன்னிடத்திற்குப் போயிற்று.

II. லகுபதனன் இரணியகனுடன் நட்புக் கொள்ளுதல்

லகுபதனன் என்னுங் காகம், இவற்றையெல்லாம் பார்த்து ஆச்சரியப்பட்டு இரணியகனை நோக்கி, 'நீ பாக்கியவானு யிருக்கிறாய்; ஆகையால், நானும் உன் சினேகத்தை விரும்புகிறேன்; நீ தயை செய்து எனக்குச் சினேகனாக வேண்டும்' என, அப்போது இரணியகன் 'நீ யார்?' என, காகம், 'நான் லகுபதனனென்கிற காக்கை' என, அதைக் கேட்டு எலி, 'உனக்கும் எனக்கும் வெகு தூரம். உலகத்திற் சமானஸ்தர்களுக்குள்ளேயே சினேகமுண்டாகிறது; நான் உனக்கு இரை; நீ என்னைத் தின்கிறவன்; இப்படி இருக்கையில், இஃது எப்படியாகும்? ஆபத்துக்கே முகாந்தரமாம். நரியின் சினேகத்தினால் ஒரு மான் வலையில் அகப்பட்டதுபோல் உன்னால் எனக்குப் பொல்லாங்கு நேரிடும்' என, லகுபதனன் அதைக் கேட்டு, 'மான் எப்படி வலையிற் சிக்கிக்கொண்டது?' என, எலி சொல்லத் தொடங்கிற்று.

2. நரியின் சினேகத்தினால் மான் வலையிலகப்பட்ட கதை

'மகத தேசத்தில் சண்பக வனத்தில் மானுங் காகமும் ஒன்றுக்கொன்று நட்பாயிருந்தன. அப்படி யிருக்கையில், அந்த மான் மனதின்படி புல் முதலானவைகளை மேய்ந்து கொழுத்திருக்கிறதை ஒரு நரி பார்த்துத் தனக்குள்ளே ஆலோசித்து, 'இவன் நமக்கு அசாத்தியனு யிருக்கிறான். ஆகையால், இவனை வஞ்சனையாற் கொல்லவேண்டும்' என்றிப்படி நிச்சயித்து, அதன் சமீபத்திற் போய், 'சினேகிதா! சுகமா?' என, அதைக் கேட்டு, மான்

'நீ யார்?' என, நரி, 'நான் க்ஷுத்திரபுத்தி யென்கிற நரி; இந்தக் காட்டில் யாருமற்ற பாவியாய் ஒருவனாகத் திரிந்து கொண்டிருந்தேன்; இன்றைக்கு உன்னைப் பார்த்து மிகுந்த சந்தோஷத்தை அடைந்தேன்; இப்போது உனக்கு வேலை செய்துகொண்டு உன்னிடத்தி லிருக்க இச்சிக்கிறேன்' என, இதைக் கேட்டு மான், 'நல்லது' என்றது. பிறகு, பொழுது போனவுடனே, இரண்டுஞ் சண்பக மரத்தின் கீழே வந்தன. அம்மரத்தின்மேல் வாசம் பண்ணிக்கொண்டிருந்த மானின் சினேகிதனாகிய சுபுத்தி என்னுங் காகம், இவ்விரண்டையும் பார்த்து, மானை, 'ஓ! மித்திரா! உன்னண்டையி லிருக்கிறவன் யார்?' என, மான், 'இந்தச் சம்புகன் என்னுடனே சினேகிக்க விரும்புகிறான்' என, அப்போது காகம், 'மித்திரனே! சடிதியில் வந்த வழக்கமில்லாதவனை நம்பலாகாது. ஒருவன் குலமும் நடத்தையுந் தெரியாமல் அவனுக் கிடங் கொடுத்தால் ஒரு பூனைக்குச் சரற்கவனென்னுங் கழுகு இடங் கொடுத்து இறந்தாற்போல நேரிடும்' என, அதைக்கேட்டு, மான், 'சரற்கவன் எப்படிச் செத்தான்?' என, காகஞ் சொல்லுகிறது.

3. பூனைக்கு இடங்கொடுத்துக் கழுகு இறந்த கதை

'பாகீரதி தீரத்தில் திரிகூட மென்னும் மலையில், ஒரு முதிய இத்திமரத்தின் பொந்தில் வாசம் பண்ணிக் கொண்டிருந்த நகமுங் கண்ணுமில்லாத சரற்கவனென்னும் ஒரு கிழக் கழுகானது மற்றைப் பக்ஷிகள் தன்னிடத்தில் இரக்கம் வைத்துத் தங்கள் ஆகாரத்திற் கொஞ்சங் கொஞ்சம் நெருக்கிக் கொடுக்கத் தின்று கொண்டு ஜீவித்திருக்கையில், ஒருநாள் நெடுஞ்செவியனென்னும் பூனை பறவைகளுடைய குஞ்சுகளைத் தின்ன வேண்டி அந்த மரத்தின்கீழே வர, அதைக் குஞ்சுகள்

பார்த்துப் பயந்து பெருங்கூச்சலிட்டன. கழுகு அதைக் கேட்டு, 'நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள்? இங்கே யார் வந்தான்?' என, இதற்குள்ளே பூனை சாற்கவனைப் பார்த்து, 'நான் செத்தேன்' எனப் பயப்பட்டு உடனே மனதில் தைரியம் பண்ணிக்கொண்டு, 'இந்தச் சத்துருவைத் தப்பித்துக்கொண் டோடுகிறதற்கு நமக்குச் சக்தியில்லை; ஆகையால், இவன் சமீபத்திற் போக வேண்டும்; பின்னர் எது உண்டாகுமோ அது உண்டாகட்டும்' என்றிப்படி நிச்சயித்து, அந்தக் கழுகின் அருகிற் போய், 'சமர்த்தனே! உனக்கு வந்தனம் பண்ணுகிறேன்' என, கழுகு அதைக்கேட்டு, 'நீ யார்?' என, அப்போது, பூனை, 'நெடுஞ்செவிய னென்னும் பூனை' என, பின்பு சாற்கவன், 'நீ சீக்கிரமாக இவ்விடம் விட்டோடிப்போ; இல்லாவிட்டாற் சாவாய்' என, பூனை, 'நான் என் விருத்தாந்தத்தைச் சொல்லுகிறேன்; அதைக் கேள்; பிறகு, கொல்லத் தக்கதானுற் கொல்லு; ஜாதி பேதத்தினுலேயே பிராணிகளைக் கொல்லுவதாவது பூசிப்பதாவது யோக்கியமல்ல; ஆதலால், அவனவன் நடத்தையைப் பார்த்து எது செய்யத்தக்கதோ அதைச் செய்யவேண்டும்' என, கழுகு, இதைக் கேட்டுப் பூனையைப் பார்த்து, 'நீ ஏன் வந்தாய்? சொல்' என, பூனை, 'நான் கங்காதீரத்தில் நித்திய ஸ்நானம் பண்ணிச் சாந்திராயண முதலாகிய விரதங்கள் ஆசரித்துக்கொண்டிருக்கிறேன். நீ மிகவுந் தருமவானுயிருக்கிருயென்று பக்ஷிகளால் எப்போதுங் கேள்விப்படுகிறதனுலும் வயதின் முதிர்ந்த வித்துவானிடத்தில் தருமங் கேட்கவேண்டுமென்று சாஸ்திர மிருக்கிறதனுலும் நான் உன்னிடத்திற்கு வந்தேன். நீ தர்மத்தை விட்டு என்னைக் கொல்லத் துணிந்தாய்; இப்படி இல்லறத்தாருடைய ஆசாரம் நான் எங்கும் பார்த்ததில்லை. சத்துருவுந் தங்கள் வீட்டுக்கு வந்தாற் சாதுக்கள் அவனுக்

குச் சம்மானம் பண்ணுவார்கள். மரம் தன்னை வெட்டுகிற வனுக்கும் நிழல் கொடுக்கவில்லையா? சாதுக்கள் தங்கள் வீட்டுக்கு எவன் வந்தாலும் பூசிக்கிருர்கள்; குறைச்ச லொன்றும் பண்ணுகிறதில்லை. அதிதி யாருடைய வீட்டுக்கு வந்து முகம் வாடிப் போகிருனே அவன் தன் பாவத்தை அவ்வீட்டெசமானனுக்குக் கொடுத்து இவன் புண்ணியத்தைக் கைக்கொண்டு போகிருன். ஆகையால், சாதுக்கள் எல்லாரிடத்திலுந் தயைசெய்கிருர்கள். சந்திரன் சண்டாளன்வீட்டிலும் பிரகாசிக்கிருன்' என, கழுகு, இதைக் கேட்டு, 'பூனை இறைச்சிகளைத் தின்கிறது; மேலுங் கொலை செய்கிறது' என்று நினைத்து இப்படி நான் சொன்னேன்' என, அதைக் கேட்டு, நெடுஞ்செவியன் பூமியைத் தொட்டுச் சிவ சிவ வென்று உச்சரித்துக் காதின்மேற் கையை வைத்து, 'நான் தரும சாஸ்திரங்கள் கேட்டு மிகுந்த வைராக்கியமடைந்து பொல்லாத கருமங்களை யெல்லாம் விட்டுவிட்டேன். ஏனென்ருல், அநேக சாஸ்திரங்களிற் கொலை செய்வது போல வேருெரு பாதகமில்லை யென்று சொல்லி யிருக்கின்றது. எவர்கள் மற்ருெருவனைக் கொன்று தங்களுக்குச் சுகத்தை விரும்புகிருர்களோ அவர்கள் நரகத்தை அடைகிருர்கள். ஆகையால், கொலைசெய்யாம லிருப்பதுபோல வெருெரு தருமமில்லை யென்று நினைத்துக் காட்டிலிருந்துகொண்டு காய் கனி கிழங்குகளைச் சாப்பிடுகிறவர்கள் பாதக மெப்படிப் பண்ணுவார்கள்?' என்று சொல்லிக் கழுகுக்கு நம்பிக்கை வரப்பண்ணி, அதன் வீட்டிலிருந்தது. பிறகு, அந்த ருத்திராக்ஷப்பூனை பக்ஷிகளின் குஞ்சுகளை நாடோறும் அங்கே கொண்டுவந்து தின்றுகொண்டிருக்கத் தலைப்பட்டது. அப்போது, குஞ்சிழந்த பறவைகளெல்லாம் கிலேசப்பட்டு ஒன்ருய்க்கூடித் தங்கள் குஞ்சுகளைச்

சோதிக்கத் தொடங்கின. பூனை இதை யறிந்து அவ் விடம் விட்டு ஓடிப்போயிற்று. அந்தப் பக்ஷிகள் அங்கே பார்த்துக்கொண்டே கழுகின் பொந்தண்டை வந்து பார்க் கையில், அந்தக் குஞ்சுகளுடைய எலும்புகளும் சிறகு களும் விழுந்து கிடக்கக் கண்டு, 'நம்முடைய குஞ்சுகளை இந்தத் துரோகிக் கழுகே பக்ஷித்தது' என்று நிச்சயித்து, அந்தக் கழுகைக் கொத்திக் கொன்றன. ஆகையால், ஒரு வனுடைய குணந்தெரியாமல் அவனுக்கு இடங் கொடுக்க லாகாது' என, அப்போது, நரி, 'ஒருவன் சுபாவம் சினேகிக் கிறதற்கு முன்னே தெரியுமா? நல்லோர்களுக்குச் சுபா வத்தினாலே காரியமில்லை; அவர்களுடைய சினேகம் கண்ட மாத்திரத்திலேயே ஆகிறது' என, மான் அதைக் கேட்டுக் காகத்தைப் பார்த்து, 'எப்படி நீ எனக்கு மித்திரனோ அப்படியே இவனுமிருக்கட்டும். நீ ஒன்றும் தடை சொல்லாதே' என்று சொல்லி நரியைத் தன்னிடத்தில் வைத்துக்கொண்டது. பிறகு, மூன்றும் தங்கள் மார்க்கத் தின்படி வயிற்றை நிரப்பிக்கொண்டு ராத்திரிக்கு அந்த இடத்தில் வந்துகொண்டிருந்தன.

இப்படி யிருக்கையில், ஒரு நாள், நரி மானைப் பார்த்து, 'மித்திரா! இந்தக் காட்டில் ஓரிடத்தில் இள விளவென்று நேர்த்தியான பயிர் இருக்கிறது. அதை உனக்குக் காண்பிக்கிறேன்' என்று சொல்லி, அதை இட்டுக்கொண்டுபோய்க் காட்டிற்று. அன்று முதலாய் அந்த மான் போய்த் தினமானம் பயிரை மேய்ந்து கொண்டிருக்கையில், அதைக் கொல்லைக்காரன் பார்த்து அங்கே வலை கட்டினான். பின்பு, மான் அங்கே வழக்கப் படி மேயப்போய் அதிற் சிக்கிக்கொண்டு, 'இப்போது என்னை மித்திரனைத் தவிர யார் விடுவிப்பான்?' என்று மனதிலெண்ணிக்கொண் டிருக்கையில், அங்கே நரி வந்து, 'என்னுடைய மனோரதம் நிறைவேறிற்று; இப்போது

நான் இதன் எலும்பையும் மாமிசத்தையும் நிரம்பத் தின்னுவேன்' என்று வாயூற மனதி லெண்ணிக்கொண்டு சும்மா இருந்தது. அதைக் கண்டு, மான், 'மித்திரா! ஏன் சும்மா இருக்கிறாய்? என்னுடைய தளையைச் சீக்கிர மாக அறுத்து என்னை விடுவி. சங்கட காலத்திற் சினேகி தர்கள் உடை யிழந்தவன் கைபோல் உதவுகிறார்கள்' என, சம்புகன், 'ஆம்; நீ சொல்வதெல்லாம் மெய்யே; ஆயினும், எனக்கு இன்றைக்கு விரத தினமாகையால், நான் இந்தத் தோல் வலையைத் தீண்ட மாட்டேன்; நாளைக்கு என்ன சொன்னாலுங் கேட்பேன். சினேகிதனுக்காக நான் பிராணனையும் விடத் தக்கவன்' என்று சொல்லி, அதன் கண்ணுக்குத் தப்பித்துக்கொண்டு அங்கே ஓரண்டை ஒளித்துக்கொண்டிருந்தது. காகம் இராத்திரி மான் வர வில்லையென்று அதைத் தேடும்பொருட்டு இங்கு மங்குந் திரிந்துகொண்டு அங்கே வருகையில், அந்தமானின் அவஸ் தையைப் பார்த்து, 'சினேகிதா! உனக்கு இந்த அவஸ்தை இப்படி ஏன் வந்தது?' என, மான், 'இது உன் வார்த்தை யைக்கேளாமையால் வந்த பலன்' என, காகம், 'உன் கூட் டாளியான சம்புகன் எங்கே போனான்?' என, மான், 'என்னுடைய இறைச்சியைத் தின்பதற்காக இங்கேதான் ஒளித்துக்கொண்டிருப்பான்' என, அதைக் கேட்டு, காகம், 'தனக்கு இதம் பண்ணுகிற மித்திரன் பேச்சைக் கேளாதவனுக்கு விபத்துச் சீக்கிரமாக வரும். பின்னும், அவன் சத்துருவுக்குச் சந்தோஷம் வருவிக்கிறான்' எனச் சொல்லிக்கொண்டிருக்கையில், கொல்லைக்காரன் கையில் ஒரு தடியை எடுத்துக்கொண்டு வர, அவனைப் பார்த்துக் காகம் மானுக்கு, 'மித்திரா! நீ இப்போது மூச்சை யடக்கிக்கொண்டு செத்தவனைப்போலக் கிடந்தால் அவன் உன்னைப் பார்த்து நீ செத்தாயென் றெண்ணிக் கொண்டு கட்டிய வலையை அவிழ்த்துச் சுருட்டி வேறே

ரிடத்தில் வைக்கப் போவான்; அப்போது நான் கத்துகி றேன்; அதைக் கேட்ட மாத்திரத்தில் நீ மிகவும் விரை வாக ஓட்டம் பிடி' என்று சொல்லித் தான் அப்படியே பொய்யாக மானின் கண்ணைக் குத்திக்கொண்டிருந்தது. இதற்குள்ளே வந்த கொல்லைக்காரன் மானைப் பார்த்துச் செத்ததென்றெண்ணிக் கட்டியிருந்த வலையை அவிழ்த்து ஓரிடத்தில் ஒன்றாகக் கூட்டி வைக்கப்போனான். காகம் அதைப் பார்த்துச் சங்கேதப்படி கத்த, மான் அதைக் கேட்டவுடனே ஓட்டம் பிடித்தது. அதைக் கொல்ல நினைத்து அந்தக் குடியானவன் தடியை விசிறி யெறிய, அது பதிவிருந்த நரிமேற்பட்டது. நரி உடனே இறந்தது. ஆகையால், புண்ணியமாவது பாவமாவது மிகுதியானால் அதன் பலன் உடனே உண்டாகிறது' என்று சொல்லிப் பின்னும் எலி, 'இப்படி மானுக்கு நரியின் சினேகம் போல் உன் உறவு உபயோக மன்று' என, காகம் 'உன்னைத்தின்றால் எனக்குப் போதுமா? நீ பிழைத்திருந்தால் நான் சித்திரக்கிரீவனைப் போலச் சுகமடைவேனென்று உன் நட்பை விரும்புகிறேன்' என, பின்னும் இரணியகன், 'நீ எனக்குப் பகைவன்; உன் னுடனே நான் சினேகம் பண்ணுகிறதில்லை. சத்துரு தனக்கு அனுகூலமாயிருந்தாலும் அவனோடே சினேகிக்க லாகாது; தண்ணீர் வெந்நீரானாலும் நெருப்பை யவிக்கும். ஆகையால், எது தக்கதோ அதைச் செய்யவேண்டும். தண்ணீரில் வண்டியும் பூமியின்மேற் கப்பலும் நடக்குமா? இதனால் சத்துருக்களிடத்தில் நம்பிக்கை வைக்கலாகாது' என்றிப்படிப் பலவிதமாகச் சொல்ல, காகம், 'நான் உன்னுடனே சினேகிப்பேன்; இல்லாவிட்டாற் பட்டினி யாக இருந்து இங்கேயே பிராணனை விடுவேன். நெருப் பின் வெப்பத்தினாற் பொன் முதலானவை உருகி ஒன்று கின்றன. யாதேனுமொரு நிமித்தத்தினாலே விலங்கு

பறவைகள் மித்திரத்துவத்தை அடைகின்றன. பயத்தினு லாகிலும் யாதோராசையினுலாகிலும் மூடர்களுக்குச் சினேக முண்டாகிறது. சாதுக்களுடைய சினேகமோ கண்ட மாத்திரத்தில் உண்டாகிறது. மண்பானை சீக்கிர மாய் உடைகிறது; பிறகு, பொருந்துகிறதில்லை; பொற் குடஞ் சீக்கிரத்திலுடையாது; உடைந்தாலும் ஒன்றும்; இப்படியே, துர்ச்சன சற்சனர்களுடைய சினேகமு மிருக் கிறது' என, இதைக் கேட்டு, இரணியகன், 'உன் வார்த்தையால் நான் சந்தோஷமடைந்தேன். இப்போது உனக்கும் எனக்கும் சினேக மிருக்கட்டும். இனிமேல், நாமிருவரும் ஒருமனதா யிருக்கவேண்டும். உபகாரம் பண்ணுகிறவன் மித்திரனென்றும் அபகாரம் பண்ணுகிற வன் சத்துருவென்றும் அறிந்து, மனக்களங்கமில்லாமல், நடக்கவேண்டும்' என்றிப்படிப் பேசி நிச்சயித்து, இரணி யகன் லகுபதனனுக்குச் சிறிது ஆகாரங் கொடுத்துத் தன் வளையிற் போயிற்று. சினேக லாபம் பெற்ற காகமும் அதனிடத்திற் செலவு பெற்றுக்கொண்டு தன்னிடத்திற் குப் போயிற்று.

அதுமுதலாய் இவைகள் அத்தியந்த சினேகமாய் ஒன்றுக்கொன்று ஆகாரங் கொடுத்துக்கொண்டு பலபல வார்த்தைகள் பேசிக்கொண்டிருக்கையில், ஒருநாள், லகுபதனன் எலியைப் பார்த்து, 'மித்திரா! இப்போது இங்கே இரை அகப்படாமையால் வேருே ரிடத்திற்குப் போக இச்சிக்கிறேன்' என்று சொல்லிற்று.

III. காகமும் எலியும் ஆமையும் நட்புக் கோள்ளுதல்

அதைக் கேட்டு இரணியகன், 'எங்கே போகிருய்?' என, அப்போது, அது, 'தண்டகாரணியத்தில் கர்ப்பூர கௌர மென்னுந் தடாகத்தி லிருக்கிற ஆமையாகிய

மந்தர னென்பவன் எனக்குச் சிநேகிதனா யிருக்கிறான். அவன் எனக்கு விதம் விதமான மீன்களைக் கொடுத்துப் போஷிப்பான். அதைக் குறித்து நான் அவனிடத்திற்குப் போகிறேன்' எனக் கேட்டு, இரணியகன், 'மித்திரா! அவ்விடத்துக்கு என்னையுங் கொண்டுபோக வேண்டும். நான் தேசாந்தரம் போக விரும்புகிறேன்' என, அப்போது, காக்கை, 'நீ அப்படி விரும்புவானேன்?' என, இரணியகன், 'அங்கே போன பின்பு சொல்வேன்' என, லகுபதனன் இரணியகனை எடுத்துக்கொண்டு அந்த இடத்துக்குப் போயிற்று. அவைகளைப் பார்த்து, மந்தரன் அவ்விரண்டுக்கும் ஆதித்தியம் பண்ணிற்று.

அப்போது, லகுபதனன் மந்தரனைப் பார்த்து, 'இந்த இரணியகன் மிகவும் பரோபகாரி; இவன் சித்திரக்கிரீவனை அவன் கூட்டத்தோடு கூட வலையினின்றும் விடுவித்தான்; அப்போது இவன் நட்பு நிலைமையைப் பார்த்து நானும் இவனுடனே நட்புக்கொண்டேன்' என, அதைக் கேட்டுக் கூர்மம் சந்தோஷப்பட்டு இரணியகனைப் பார்த்து, 'மித்திரா! நீ இந்த மனித சஞ்சாரமில்லாக் காட்டில் வருவானேன்?' என, அப்போது எலி சொல்லுகிறது.

IV. எலி தன் வரலாறு கூறுதல்

'சம்பகாவதி யென்னும் பட்டணத்தில் சூடாகர்ணனென்னும் ஒரு சந்நியாசி, மிகுந்த சோற்றைக் கப்பரையிற்போட்டு உறியின்மேல் வைத்துவிட்டு நித்திரை பண்ணிக்கொண்டிருப்பான். பின்பு, அந்தச் சோற்றை நான் தின்றுகொண்டு சுகமாயிருக்கிற நாளில் அங்கே வீணாகர்ண னென்னுமொரு சந்நியாசி வந்து அவனோடு கூட அனேக கதாப் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருக்கையில், அந்தச் சூடாகர்ணன் கையி லொரு தடியினாலே பூமியைத்

தட்டிக்கொண்டு சோற்றைக் காப்பாற்றிக்கொண்டிருந் தான். அப்போது, வீணாகர்ணன், 'என்னுடைய கதையை அநாதரவு பண்ணி நடுவே வேறே என்ன வியாபாரத்தி லிருக்கிறாய்?' என, சூடாகர்ணன், 'உன் வார்த்தையை அநாதரவு பண்ணவில்லை. ஆனால், இவ்வெலி என் பாத் திரத்திலிருக்கிற அன்னத்தை நாடோறுந் தின்னுகிறது; அதை ஓட்டுகிறேன்' என, வீணாகர்ணன், அப்போது உறியைப் பார்த்து, 'கொஞ்ச பலமுள்ள இந்த எலி இவ்வளவு உயரம் எப்படிக் குதிக்கிறது? இதற்கு ஏதோ ஒரு காரணமிருக்கவேண்டும்; அதுதான் எதுவா யிருக்கலாமென்றாலோசித்துப் பார்த்தால், மிகவும் இங்கே திரவிய மிருக்கவேண்டும்; உலகத்தில் திரவிய முள்ளவர்கள் பல முள்ளவர்களாயிருக்கிறார்கள்; அசாத் தியமான காரியங்களைச் சாதிக்கிறார்கள்; ராஜத்துவத் துக்கும் இது காரணமாகும்; எல்லாம் இதனாலாகின்றன' என்று சொல்ல, அந்தச் சந்நியாசி இதைக் கேட்டு மெய்தா னென்று நம்பிப் பூமியை வெட்டி, ஐயோ! என் திர வியத்தை எடுத்துக்கொண்டான். அன்று தொடங்கி நான் இளைத்துப்போனேன். பின்பு, எனக்கு இரையும் கிடையாததனால் மெள்ள மெள்ள நடந்துகொண்டிருக்கை யில் அந்தச் சந்நியாசி பார்த்து, 'பார்! இந்த எலி இப் போது தன்னுடைய சாதித்தன்மையை அடைந்திருக் கிறது. முன்னிருந்த தன் மதம் போய்விட்டது. ஆகை யால், பணமில்லாதவர்களை எல்லோரும் அற்பமாய் நினைக் கிறார்கள்' என, இதைக் கேட்டு, 'நான், இப்போது இங்கே இருப்பது சரியன்று; இதை வேறொருவரோடுஞ் சொல்லலாகாது; பொருளிழவுங் கிருகச்சித்திரமும், தானமும், மானமும், அவமானமும், ஆயுளும், தனமு மாகிய இவைகளைப் புத்திமான் வெளிப்படுத்தலாகாது; தன் விதி பிரதிகூலமா யிருக்குங் காலத்தில் பராக்

கிரமமும் முயற்சியும் வீணுகின்றன; பணமில்லாத வனுக்கு வன வாசத்தைக்காட்டிலுஞ் சுக மில்லே; எந்த இடத்தில் நாம் பணக்காரராயிருந்தோமோ அந்த இடத்தில் ஏழையாயிருப்பது உத்தமமன்று' என்று மறுபடி இழந்த பணத்தை யெடுத்துக்கொள்ள ஆயத்தப்பட்டேன். அப்போது, சந்நியாசி என்னைத் தடியாலடித்தான். அதனுலே மிகவுந் துக்கப்பட்டு உன் சினேகிதனேடேகூட இங்கே வந்தேன்' என, மந்தரன், 'மித்திரா? நீ இதனுல் அதைரியப்பட்டு உறைவிடந் துறந்தோமென்று வருத்தப்பட வேண்டாம். சாதுக்கள் எங்கே போனுலும் மரியாதை பெறுகிருர்கள். சிங்கம் வேருேரு காட்டுக்குப் போனுலும் புல்லேத் தின்கிறதில்லே; யானையையே தின்னும். உற்சாகமுள்ளவன், சந்தோஷமுள்ளவன், தைரியசாலி, சூரன், களங்க மில்லாதவன், இவர்களிடத்திலே லக்ஷ்மி தானே வந்தடைகிருள். நீ பணமிழந்தாலும் எப்போதுஞ் சந்தோஷத்தோடே கூடி இருக்கிருய். ஆகையால், உனக் கிருக்கிற சுகம் பணத்தாசையால் மயங்குகிறவர்களுக்கில்லே. இன்னுங்கேள். மேகச் சாயை, துஷ்டனுடைய தயை, இளம்புல், பாலஸ்திரீ, யௌவனம், தனம் இவைகள் வெகு நாளேக்கு நில்லா. ஆகையால், இவை இழந்துபோனுல், அழுதுகொண்டு ஆகாரத்தைக் குறித்து ஏங்கியிருக்கலாகாது. ஏனெனில், எவன் கர்ப்பத்திலிடுகிருனே அவன் பிறக்கிறதற்கு முன்னேதானே தாயினிடத்தில் பாலேயமைத்து வைக்கிருன். அப்படிப்பட்டவன் ஆயுள் உள்ளவரைக்குங் காப்பாற்ற மாட்டானு? நீ நல்ல விவேகியாயிருக்கிறதனுல் இவையெல்லாம் உனக்குத் தெரிந்தே யிருக்கும். இனிச் சினேகமாய் என்னிடத்திற் சுகமாயிரு' என, இவையெல்லாங்கேட்டு, லகுபதனன், 'மந்தரா! நீ சகல குண சம்பன்னன்; மேலுஞ் சற்குணன்; சாதுக்களுக்கு

வந்த ஆபத்தைச் சாதுக்களே நிவர்த்தி பண்ணுகிறார் களென் றறிந்து நாங்கள் உன்னை நாடி வந்தோம்' என்று சொல்லி, நீண்ட பெரிய மரத்தின்மேற் போய் உட்கார்ந்து தன் சுபாவப்படியே இங்கு மங்கும் பார்த்துக்கொண் டிருக்கையில், ஏதோ ஒரு பய முகாந்தரத்தை அறிந்து, அவ்விரண்டையும் நோக்கி, 'நீங்கள், உங்களிடத்தில் ஒளித்துக்கொண்டிருங்கள்' என, மந்தரன் தண்ணீரிற் போயிற்று; எலி வளையில் நுழைந்தது. காகம் விருக்ஷத் தின் நுனியி லிருந்து பார்க்கையில் ஏதொன்றுங் காணப் படாமையால் பின்பு அம் மூன்றும் ஒன்றுக் கொன்று பேசிக்கொண்டிருந்தன.

V. காகமும் எலியும் ஆமையும் மானும் நட்புக் கொள்ளுதல்

அங்கு அவைகளின் சமீபத்தில் சித்திராங்கனென் னும் ஒரு கலைமான் வந்து, 'நான் வேடர் பயத்தால் உங்க ளிடத்தில் இருக்கலாமென்று வந்தேன்' என, அதைக் கேட்டு மந்தரன் அதற்குச் சம்மானம் பண்ணி, 'இது உன் வீடு; நான் உன் சேவகனென் றெண்ணிக்கொண்டு சுகமா யிருக்கவேண்டும்' என முகமலர்ந்து மனங்கலந்த இன்சொற் சொல்ல, பிறகு, அதுவும் இவைகளுடன் நட் புக்கொண்டிருந்தது.

அப்படி யிருக்கையில், ஒரு நாள் சித்திராங்கனென் னும் மான் புல் மேய வேறோரிடத்திற்குப் போய் மீண்டு சாயங்காலம் வாராமையால், ஆமை, 'மேயப்போன மான் இன்றைக்கேன் சாயந்திரம் வரவில்லை' என்று விசனப்பட, அதை யறிந்து எல்லாம் விசனமடைந்தன. மறுநாள் விடியற்காலத்தில், காக்கை பறந்து நாலுபக்கத்திலும் பார்த்துக்கொண்டு போகையில், சித்திராங்கன் தோல் வலையிலகப் பட்டிருப்பதைக் கண்டு அதன் கிட்டப்போய்

'மித்திரா! உனக்கு இந்த அவஸ்தை எப்படி நேரிட்டது?' என, மான் 'இப்போது இதைக்கேட்டுப் பிரயோஜனமில்லை; நீ போய் இரணியகனைச் சீக்கிரமாக இட்டுக்கொண்டு வந்தால் அவன், வேடன் வருவதற்குள் என் பாசத்தை யறுத்து என்னை விடுவிப்பான். வேடன் வந்தால் ஒருபாயமும் நடவாது' என, இதைக் கேட்ட காக்கை, உடனே, விரைவாகப் போய் அவைகளுடனே நடந்த காரியத்தைச் சொல்லி இரணியகனை இட்டுக்கொண்டு வந்தது. வந்த இரணியகன், மானைப் பார்த்து, 'நீ சமர்த்தனுபிருக்கையில் வலையிலெப்படி அகப்பட்டாய்?' என்றது.

VI. மான் தன் வரலாறு கூறுதல்

மான், 'வல்லமை யிருந்தாலும் வருவது வரும்; இப்போது என்னைச் சீக்கிரமாக விடுவி; எனக்குப் பழைய பயமிருக்கின்றது. முன் நான் குட்டியாயிருக்கையில் வேடன் வலை கட்டி என் கூட்டத்தை வளைத்தான். மற்றவைகள் பெரிய மான்களா யிருந்தபடியாற் குதித்து வலையைத் தாண்டிப்போயின. எனக்குக் குதித்தோடச் சக்தி யில்லாதிருந்த தாதலால், வேடன் பிடித்து ராஜாவினிடத்திற்கொண்டுபோனன். ராஜா வாங்கித் தன் பிள்ளை கையிற் கொடுக்க, அங்கே நான் வெகுநாளிருக்கையில், ஒருநாள் மேக கர்ச்சனையைக் கேட்டு மிகவும் சஞ்சலப்பட்டு, காற்று மழையாற் பீடிக்கப்பட்டு, மான்கூட்டங்கள் ஓடும்போது, 'அவற்றின் பின் நான் ஓடுவேனு!' என்று மனுஷபாஷையில் எனக்குள்ளே பேசிக்கொண்டேன். ராஜகுமாரன் இதைக்கேட்டு நாற்றிசையும் பார்த்து என்னையும் பார்த்தான். பின்பு, சற்றுநேரஞ் சும்மா இருந்து, 'இது மனுஷனைப்போல் எப்படி உச்சரித்தது? ஆகையால், இது ஒரு விசித்திரப் பிராணியா யிருக்கிறது'

என்று நினைத்துப் பயத்தினாற் சுரத்தில் விழுந்தான். பிறகு, விடியற்காலத்தில் ஜோதிஷர்களை அழைப்பித்து அவர்களுடனே இதைச் சொல்ல, அவர்கள், 'எல்லா மிருகங்களும் மனிதரைப்போற் பேசுகின்றன. ஆயினும், நமக்கு முன்னே பேசுகிறதில்லை; அதுவும் உன்னைப் பாராமல் பேசிற்று; இதற்காக நீ பயப்படவேண்டாம். இது ஒரு விசித்திரப் பிராணியும் அன்று. இதனால், உனக்கு எவ்வளவும் பயமில்லை' என, இதைக் கேட்டு ராஜகுமாரன் என்னை விட்டுவிட்டான். பிறகு, இக்காட்டில் வந்தேன். இப்படி முன்ஒருதரம் வலையிலகப்பட்டேனாகையால், என்னைச் சீக்கிரமாக விடுவிக்கச் சொல்லுகிறேன்' என, இதற்குள்ளே மித்திரத்துவத்தினாலே மந்தரனும் அங்கே வந்து இரணியகனைப் பார்த்து, 'மித்திரா! இப்படித் தாமசம் பண்ணுகிறது சரியன்று. இப்போது வேடன் வந்தால் நாமெல்லாம் ஓடிப்போவோம். வலையிலகப்பட்ட சித்திராங்கனைப் பிடித்துக்கொள்வான்; இதைக் குறித்து எனக்குக் கிலேசமாயிருக்கிறது. நினைப்பின்படி மனதிலிருக்கிறதை அறிகிற சினேகிதனும், பிறர் துக்க மறிகிற பிரபுவுங் கிடைக்கிற தருமை' என்றிப்படிச் சொல்லிக்கொண்டிருக்கையில், வேடன் சடிதியில் எமனைப்போல் தூரத்தில் வந்தான்.

VII. காகம் முதலியன வேடனை வெல்லுதல்

லகுபதனன் கண்டு, எலியைப் பார்த்து, 'மித்திரா! வேடன் வந்தான்; இப்போது பெரிய சங்கடம் நேரிட்டது' என, அதைக் கேட்டு இரணியகன், அதிசீக்கிரமாய்ச் சித்திராங்கன் வலையை அறுத்தது. அறுத்தவுடனே, கிட்டவந்த வேடனைப் பார்த்து எல்லாம் ஓட்டம் பிடிக்க, அப்போது அவன் விசனமடைந்து நாலண்டையும் பார்க்கையில் மந்தரன் தன் நடையின்படி நடந்து

கொண்டிருந்தது. வேடன் அதைப் பார்த்துப் பிடித்துத் தன் வில்லிற் சேர்த்துக் கட்டிக்கொண்டு கொஞ்சம் சந்தோஷத்தோடே போகும்போது, அதைப்பார்த்து, மானும் எலியுங் காகமும் மிகவுஞ் சிரமப்பட்டு, 'இப்போ தென்ன செய்யலாம்' என்று வேடன்பின்னே போகத் தொடங்கின. அப்போது, இரணியகன், 'ஒரு சங்கடம் நிவிர்த்தி யாகிறதற்குள்ளே மற்றொன்று வந்து நேரிட்டது. ஆகையால், சீவனுக்குத் தேகத்தோடுகூட அநேகந் துக்கங்களை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. இந்தத் துன்பஞ் சினேகத்தினால் நமக்கு வந்தது. எவன் மித்திரனிடத்தில் விசுவாசம் வைக்கிறானோ அந்த விசுவாசம் அவனுக்குத் தாய், தந்தை, சகோதரன், பிள்ளை, சுற்றங்களிடத்தி லிராது' என்று இப்படி வெகுவிதமாய்த் துக்கித்துப் பின்னும், 'வேடன் தூரமாகப் போவதற்கு முன்னே மந்தரனை விடத்தக்க உபாயம் பண்ணவேண்டும்; பிறகு, ஆகமாட்டாது' என, அப்போது அவைகள் 'என்ன செய்யலாம்? சொல்' என, எலி 'சித்திராங்கன் வரிகரையில் செத்தவனைப்போலக் கிடக்கவேண்டும்; அதன்மேற் காகம் உட்கார்ந்து கொண்டு பொய்யாகக் குத்தவேண்டும்; அப்படியிருந்தால், அதை வேடன் பார்த்து மந்தரனைப் பூமியில் வைத்துவிட்டு மானண்டை போவான்; இதற்குள்ளே, நான் ஆமையின் கட்டைச் சேதிப்பேன். பிறகு, அவ்வாமை தண்ணீரிலோடிப்போம்' என, இதைக் கேட்டு எல்லாம் அவ்வாறே செய்து மந்தரனை விடுவித்தன. பிறகு, அந்த வேடன் வாய்த்தவிடம்போய் அடுப்பு நெருப்பு மிழந்தவள் போல வெட்கி மிகவும் வருத்த மடைந்து, 'கைக்கு வராத பெரிய லாபத்தை இச்சித்துக் கைக்கு வந்த சிறிய லாபத்தை இழந்தேனே! யார்க்கும் அதிக ஆசை அதிக நஷ்டம்; கிடைத்த மட்டும் போதுமென்று நினைக்கிறவனே மகா

புருஷன்' என்று இங்ஙனம் எண்ணிக்கொண்டு, தன் வீட்டுக்குப் போனவுடனே, அந்தக் காகமும் ஆமையும் மானும் எலியும் மிகவும் சந்தோஷமடைந்து தங்களிடத்தில் முன்போல வாழ்ந்திருந்தன" என்றனன்.

ச. நன்றி மறவாமை

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று."

என்னும் திருக்குறளில், தனக்கு ஒருவன் முன் செய்த நன்மையை மறந்துவிடுவது அறமன்று; அவன் செய்த தீமையைச் செய்தபொழுதே மறந்துவிடுவது அறமாமென்று திருவள்ளுவ நாயனாராற் சொல்லப்பட்டமையால், தாய், தந்தை, குரு, தெய்வம், அரசன், பெரியோர் முதலானவர்கள் செய்த நன்றியை எந்நாளும் மறவாமற் சிந்தித்து ஒழுகல் வேண்டும்.

தாய் செய்ந்நன்றி

தாயானவள் பத்துமாதம் கர்ப்பத்திற் சுமந்து வருந்திப் பெற்று, கண் திறவாமல் இறகு முளையாமல் இருக்கிற சிறு குஞ்சுகளைப் பறவைகள், தமது சிறகின்கீழ்ச் சேர்த்து அணைப்பதுபோல, ஈ மொய்க்காமலும், எறும்பு கடியாமலும், குருகு பறவாமலும், வெய்யில் படாமலும், காற்று வீசாமலும், பனி பெய்யாமலும், மார்பிலும் தோளிலும் வயிற்றிலும் அணைத்து, பாலூட்டி, *
* * * * மூக்குச் சிந்தி, நாசியூதி, செவியுருவி, நீராட்டி, நெற்றிக்கு திலகக்காப்பிட்டு, விழிக்கு அஞ்சனந்தீட்டி, பல பணிகளும் பூட்டி, கன்னங்

கிள்ளி, உச்சிமோந்து, கண்ணோடு கண் வாயோடு வாய் முகத்தோடு முகம் வைத்துக் கொஞ்சி, முத்தாடி, அருந்த னம்போலப் பாவித்துப் பொற்றொட்டிலிட்டு,

"ஆராரோ ஆராரோ ஆராரோ ஆராரோ
சீரார் பசுங்கிளியே தெவிட்டாத செந்தேனே
பேரார் குலக்கொழுந்தே பெருமானே ஆராரோ—ஆராரோ
இருகண் மணியே இலஞ்சியமே யென்னுயிரே
ஒருகுடைக்கீழ் நீயிவ் வுலகாள வந்தவனே—ஆராரோ
தெள்ளமுத கும்பமே தித்திக்குஞ் செங்கரும்பே
பிள்ளைக்கலி தீர்த்த பெரியமத குஞ்சரமே—ஆராரோ
மாணிக்கக் கால்நாட்டி வஜ்ர வடம்பூட்டி [ஆராரோ
ஆணிப்பொற் றொட்டிலிட்டேன் அருமருந்தே கண்வளராய்—
அத்தை மடிமேலும் அம்மான்மார் தோள்மேலும்
வைத்துமுத் தாடும் மரகதமே கண்வளராய்—ஆராரோ"

என்று தாலாட்டிச் சீராட்டி, நாடோறும் வாயது கையது கொடுத்துப் போஷித்து, தன் கன்றுக் கிரங்குங் கறவை போல நெஞ்சிரங்கி, நோயணுகாது மருந்தளித்துப் பத் திய மிருந்து, கண்ணை இமைகாப்பதுபோல் அபாயம் வராமற் காத்து, நாளொருமேனியும் பொழுதொரு வண் ணமுமாக வளர்த்துப் பெற்ற தாயென்று குறியாமல், தனக்குச் * * செய்தற்கரிய குற்றத்தைச் செய்தாலும் * * அதை நினையாமல், பிறருடனுஞ் சொல்லாமல், தன் புருஷனுக்குந் தெரியவொட்டாமல், தானுந் தண்டியாமல், * * * பின்பு இப்படிச் செய்தானே என்பதையும் கடுகளவாவது நினையாமல் அன்பாய்ப் பாலிப்பதையும்,

தந்தை செய்ந்நன்றி

தந்தையானவன் பசியாமல் ஊணும் உடையுந் தந்து, துஷ்ட சகவாசஞ் செய்யவாவது, ஓடி யொளித்துத் தூர்த்தனைத் திரியவாவது, சூதாடிப் பொய்பேசிப் புறங்

கூறவாவது தாசிகாந்தனாய் வேசிவீடு நுழையவாவது துர்வியாச்சியங் தொடுக்கவாவது தன்னிச்சையாய் விடாமல் அடக்கி,

“ அள்ளிக் கொடுக்கின்ற செம்பொன்னு மாடையு மாதரவாக்
கொள்ளிக்கும் பட்ட கடனுக்கு மென்னைக் குறித்தலல்லால்
துள்ளித் திரிகின்ற காலத்தி லேயென் றுடுக்கடக்கிப்
பள்ளிக்கு வைத்தில னேதந்தை யாகிய பாதகனே ”

என்று நினைத்து, பின்பு தான் வியசனப்படுதற்கு ஏதுவாகத் தன்னை மூடனாய்ப் போகவொட்டாமல், இதந் தெரிந்து ஐந்து வயதிலே கல்விக்கழகத்தில் விடுத்துப் பூரண பண்டிதனாகக் கல்வி பயிற்றுவித்து, சபையாரெல்லாம் பூஜ்யதை பண்ணத்தக்க யோக்கியனாம்படி செய்வதையும் மறவாமல்,

“ அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம் ” என்பதனாலும் “ தந்தைதாய்ப் பேண் ” என்பதனாலும், அவர்களை இகழாமல் தெய்வமாக எண்ணி வணங்கி அவர்களுக்குக் கீழமைந்து, அவர்கள் குற்றங்களைப் பிறரறியாது மறைத்து, “தாய்சொல்லிற்சிறந்த வாசகமில்லை” என்றும், “ தந்தைசொன் மிக்க மந்திர மில்லை” என்றுஞ் சொல்வதனால், அவர்கள் சொல்லைக் கடவாமற் சிரசாவகித்து, மாதுரு பிதுருவாக்கிய பரிபாலகனாய், தாய் தந்தையர் தன்னை அன்ன வஸ்திராதிகளிற் குறைவில்லாமல் போஷித்ததுபோல, ஒன்றுலொன்றுங் குறைவில்லாமல் அன்புடனே தானும் அவர்களைப் போஷிக்கவேண்டும். பெற்றவர்களுக்குப் புத்திரனன்றிப் போஷகன் வேறே யார் ?

குழந்தைப் பருவத்தில் தானிச்சைப்பட்டுக் கேட்ட பதார்த்தங்களை யெல்லாம், தனக்கு அவர்கள் பிரியத்துடன் வழங்கியதுபோல, வார்த்திகத்தில் அவர்கள் ஆசைப்பட்ட பண்டங்களையெல்லாம், தன்னைக் கேளாததற்கு

முன்னமே குறிப்பறிந்து தான் அவர்களுக்கு வழங்க வேண்டுமன்ரே? "தாயிடப் பிள்ளையிடத் தானே மன மகிழ" என்கிருர்களே. தன்மேல் ஈப்பறவாமல் அவர் கள் தன்னைக் காத்ததுபோல, அவர்கள்மேல் தூசுபற வாமல் தானும் அவர்களைப் பாதுகாக்க வேண்டும்.

மாதுரு பிதுரு கைங்கரியம் தனக்கு லபிக்கவேண்டு மென்று, தான் கடவுளைப் பிரார்த்தித்து எதிர்பார்த் திருந்து, அவர்கள் தேகவியோக மானவுடனே அவர் களுக்குப் பிரேத சமுஸ்கார முதலாகிய கடன்களெல் லாம், லோபமில்லாமற் சிரத்தை யுடனே நடத்த வேண்டும். தாய்கடன் கழிப்பதற்குச் சர்வசங்க பரித்தி யாகஞ்செய்த சந்நியாசிகளும் காத்திருக்கின்ருர்களே. இதற்குத்திருஷ்டாந்தம்—முற்றத் துறந்த பட்டினத்தார், தாய் இறக்குமளவும் காத்திருந்து அவள் மரித்த பின்பு, வாழை மரங்களைக் காஷ்டமாக அடுக்கி, அதன்மேல் அவளைக் கிடத்தி வாய்க்கரிசி யிட்டு,

"முன்னை யிட்டதீ முப்பு ரத்திலே
பின்னை யிட்டதீ தென்னி லங்கையில்
அன்னை யிட்டதீ யடிவ யிற்றிலே
யானு மிட்டதீ மூள்க மூள்கவே"

என்று சொல்லிக் கொள்ளி வைத்துக் குடமுடைத்துப் பால் தெளித்து உத்தர கிரியைகளும் செய்து முடித்துச் சென்ருர் என்பதே.

தனது கல்வி, அறிவு, ஆண்மை, பொறுமை, உண்மை, ஒழுக்க முதலியவைகளைப் பார்த்து, 'இந்த மகானுபாவன் வித்தையில் அகத்தியனே? அறிவில் ஆதிசேஷனே? ஆண்மையில் விக்கிரமாதித்தனே? சாந்தத்தில் தரும ராஜனே? வாய்மையில் அரிச்சந்திரனே? நீதியில் மனுச் சக்கரவர்த்தியோ?' என்று அதிசயித்து, 'அம்மம்ம! இவனைப் பெறுவதற்கு இவன் பிதா என்ன தவத்தைச்

செய்தானோ' என்று சகலமானவர்களும் சொல்லும்படி, நல்ல கீர்த்தியைப் பிதாவுக்குச் சம்பாதித்துக் கொடுக்க வேண்டும். பெரும்பாலும் தாய் தந்தையர் பெயரை விளக்குகிறதற்குத்தானே பிள்ளை பிறக்கிறது?

மேலும், தன்னைப் பெற்றபொழுது அடைந்த மகிழ்ச்சியிலும் அதிக மகிழ்ச்சியைப் பெற்றதாய் அடைய, 'உன் மகன் சகலகலை வல்லவன்; சாதுரியகுண சம்பன்னன்' என்று அறிவுடையோர் சொல்லும்படி அவள் செவியிற் கேள்விப்படச் செய்யவும் வேண்டும்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்"

இவ்வாறன்றித் தாய் தந்தையர் தன்னைப் பெற்று வளர்த்த அருமை பெருமைகளை எவ்வளவும் நினையாமல், 'அவர்களென்னைப் பெறுகிறதற்கு இரவும் பகலும் ஊண் உறக்கமின்றி உபவாசித்து, உடம்பை யொறுத்து, ஊசி முனையில் நின்று, அருமையாகத் தவம் செய்தார்களோ? * * * ஆடு நனைகிறதென்று கோநாய் குந்திக்கொண்டழுமோ?' என்று வாய் கூசாமற் பிதற்றுகின்ற வம்பன் இவனென்றும்,

தன் குற்றத்தைக் கண்ட பிறனொருவன், வெட்கப் பட்டு நீ இப்படி அக்கிரமமாய் நடக்கலாமோ என்று தன்னைக் கேட்க, தான் நாணாமல், 'அடபோ! நீ என்ன கண்டாய்? இஃது அவசியம் பிதுராசாரம்' என்றுசொல்லி, தன் பிதா முதலானவர்கள் செய்த குற்றத்தையும் வெளிப் படுத்திய பேதை இவனென்றும்,

உட்சுவரிருக்கப் புறச்சுவர் பூசுவார்போலத் தன்னைப் பெற்ற மாதா பிதா முதலானவர்கள் தங்கள் உதர போஷணைக்கு ஓர் எதுவுமில்லாமல், கொழுக்கொம்பில்லாத கொடிபோல் அலைந்துகொண் டிருக்கையில், அவர்களை

ஆதரியாமல், ‘மாதா மனமெரிய வாழா யொருநாளும்’ என்பதையு முணராமல், தனக்கு யாதொரு சம்பந்தமு மில்லாத அந்நியர்மேல் இரக்கங்கூர்ந்து, அவர்களைச் சம் ரட்சணை செய்கின்ற டம்பன் இவனென்றும்,

ஒரு பெண்சாதி போனால் அநேகம் பெண்சாதிமார் வருவார்கள்; பெற்றதாய் போனால் வருவாளா என்று பாரமார்த்திகமாக யோசியாமல், எடாகூடமாய், எந்தப் பெண்டுகளையும் தாயென்றாற் குற்றம் பாராட்டார்கள். மனைவி யென்றாற் குற்றம் பாராட்டாதிருப்பார்களா? ஆதலால், தாய் முதலானவர்களிலும் மனைவியே தேடக் கிடையாத திரவியமென்று பெரிதாக மதித்து, அவள் பாதம் பூமியிற்பட்டால் அபசாரமாமென்று நடுங்கி, அவளைப் பஞ்ச கல்யாணிக் குதிரைமேல் ஏற்றி, பெற்ற தாய் தலைமேற் புல்லுச் சுமை வைத்து, கொண்ட பெண் டாட்டிக்குக் குடை பிடித்துக் கொண்டு போகின்ற மாபாவி இவனென்றும்,

தாயைத் தாசியென்றும் வேசியென்றும் இழிவாகப் பேசி ஏசி, கொஞ்சமாவது பழிக்கஞ்சாது கொலைசெய்த பஞ்சமாபாதகன் இவனென்றும்,

* * * *

தன் தகப்பனுக்குத் தான் பிச்சைக்கஞ்சி வார்க்கும் எச்சில் ஓடு காணமற் போனதனிமித்தம், கொஞ்சமாவது பச்சாத்தாபமில்லாமல் பழியென்றும் பாராமல், தடி கொண்டு சாடித் தகப்பனைத் தண்டித்த தறுதலை இவ னென்றும்,

பிதா புத்திரனைக் குறித்து, ‘சிரஞ்சீவி தம்பி இன்ன முதலியாருக்குச் சுவாமி கிருபையால் சகல போக பாக் கியமும், சந்தான சமிர்த்தியும், வாகனப் பிரதிஷ்டையும், அகண்ட சாம்ராச்சியமும், லட்சுமி விலாசமும், ராஜ

வசிகரமும், தீர்க்காயுளும், சதாகாலமும் வற்றாத சமுத்திரம்போலக் குறைவின்றி மேன்மேலும் பெருகவுண்டாகுக' என்று, உபசாரமாகவும் பட்சமாகவும் எழுதியனுப்பிய கடிதத்தை வாசித்துப் பார்த்து, 'ஓ! ஓ! இவனென்ன சர்வ முட்டாளா யிருக்கிறான். 'ராஜமாநிய ராஜபூஜித மகாராஜ ராஜஸ்ரீ முதலியாரவர்கள் வடிவில் மன்மதனும் நாணத்தக்கவராய், கல்வியிற் சரசுவதிக்குக் குருபீடமாய், புஜபலத்தில் வாயுகுமாரனை ஜயிப்பவராய், தர்மத்தில் தருமபுத்திரன் தலையை மிதிப்பவராய், ஒழுக்கத்தில் அணுவளவும் பிசகாதவராய், சத்துருக்கள் நடுங்குஞ் சங்கிராம சிங்கமாய், * * * புருஷோத்தமராய், சற்சனர் மெய்ச்சும் சபாபூஷணமாய், ஒப்புயர்வில்லாத உத்தம சற்பாத்திரமாய் விளங்காநின்ற மிட்டாதாரராகிய இன்ன முதலியாரவர்கள் திவ்ய சமுகத்திற்கு, அடியேன் தங்கள் ஊழியனாகிய இன்னான் ஸவிநய பயபக்தியுடனே, தாங்களிருக்குந் திக்குநோக்கிச் சாஷ்டாங்கமாகத் தண்டன் சமர்ப்பித்து எழுதிக்கொண்ட விண்ணப்பம்' என்று, நமது உத்தியோக ஸ்திதிக்குத்தக்க மரியாதையாயெழுதாமல், எவனோ காமாட்டி யொருவன் நாட்டுப்புறத்தானுக்கு எழுதுவதுபோல, இப்படியு மெழுதினான்; பார்த்தையா' என்று முகங்கறுக்க, கண்சிவக்க, வாய் பதைக்க, பல்லை நெறநெறவென்று கடித்து, மீசை படபட வென்று துடிக்க, கலகலவென்று சிரித்து, உதட்டைப் பல்லால் அதுக்கி, கையோடுகை புடைத்து, வாய் கண் மூக்குச் செவிகளிலிருந்து குப் குப்பென்று புகையெழும்ப, திக் திக்கென்று நெருப்புப் பொறிபறக்க, பொள்ளென்று சரீரம் வெயர்க்க, பெருமூச் செறிந்து, புருவம் நெற்றிமேல் வில்லைப்போல் வளைந்தேற, கொடிய காலாந்தகனைப் போலக் கோபித்து, தன் பக்கத்தில் இருந்தவர்க

ளெல்லாம் கிடுகிடென்று நடுநடுங்கி நாவறண்டு நெஞ்சுலர்ந்து தடுமாறித் தத்தளிக்க, உக்கிராகாரமாகக் கொக்கரித்து ஆர்ப்பரித்துத் தகப்பனை அக்கணமே கைப்பிடியாகப்பிடித்துவரச் சொல்லி அவனுள்ளீரல்கருகி இஃதென்ன கொள்ளையென்று குடர் குழம்ப, கண்களை உருட்டி விழித்து உறுக்கிப் பார்த்து, பிரளயகால ருத்திரனைப்போல அட்டகாசஞ் செய்து, 'ராஜாதி ராஜ ராஜமார்த்தாண்ட ராஜ உத்தண்ட ராஜகெம்பீர ராஜ குஞ்சரமாகிய அகண்ட மண்டலேசுர னென்று, சக்கிரவர்த்திகளும் சரணாகதி செய்யத்தக்க கனம்பொருந்திய நாம், நத்தைக்குள் முத்துப் பிறந்ததுபோலவும், சேற்றிற் செங்கழுநீர் பூத்ததுபோலவும், சுடுகாட்டில் வில்வமரம் முளைத்ததுபோலவும், எவ்வளவோ தாழ்ந்த நிலைமையிலிருக்கின்ற உனக்குப் பிள்ளையாய்ப் பிறந்ததைப்பற்றியும், பிச்சைக்காரன் பணப் புதையல் கண்டெடுத்தாற்போல, மூதேவி முண்டை மகனாகிய நீ, லட்சுமி புத்திரனாகிய நம்மைப் பெற்றதைப்பற்றியும், இப்படிக்கெல்லாம் அவமானப் படுத்தலாமா? நாலுபேர் கேட்டால் நகைக்க மாட்டார்களா?' என்று தகப்பனைத் தாட்சிணியமின்றித் தாறுமாறாக வைது, 'நீ செய்த குற்றத்திற்கு ஐம்பது ரூபா அபராதங் கொடுக்கவேண்டும்' என்று கடுந்தண்டம் விதித்த தூராங்காரி இவனென்றும், தானும் கெட்ட பெயர் எடுக்கலாகாது; தாய் தகப்பன் பெயரையுங் கெடுக்கலாகாது.

குருவானவர் செய்ந்நன்றி

குருவானவர், ஆமை தானிட்ட முட்டைகளை இடைவிடாது நினைப்பதுபோல, சீஷனுக்குப் பரிபாக முண்டாக வேண்டுமென்று தமது திருவுளத்தில் நினைத்தும், மீன் தன் சினையை நோக்குவதுபோலச் சீஷனது அஞ்ஞானம்

நீங்க அவனிடத்திற் கிருபாநோக்கம் வைத்தும், பறவை தானீன்ற அண்டத்தைச் சிறகினு லணைப்பதுபோலத் தேகபந்த மொழியக் கரத்தினல் அவனைப் பரிசித்தும், தமது சந்நிதானத்தில் இருக்கச்செய்து அவன் முகத்தை நோக்கிப் பின் வருமாறு தத்துவங்களைப் போதிப்பார்.

சித்து, அசித்து, ஈசுரன் என மூன்று தத்துவங்களுண்டு; அம்மூன்றனுள், சித்தென்பது ஆத்மா, அசித்தென்பது சரீரம், ஈசுரனென்பது கடவுளாம்.

மேற்படி ஆத்மா அணுவாய் நித்தியமாய்க் கிஞ்சிஞ்ஞத்துவ முடையதாய்ச் சுதந்திரமில்லா திருப்பது; சரீரம் அநித்தியமாய்ச் சடமாயிருப்பது; கடவுளோ நித்தியராய்ச் சர்வஞ்ஞராய்ச் சர்வசுதந்திரராய்ச் சர்வ சக்தராய்ச் சர்வபரிபூரணராயிருப்பவர்.

இந்தச் சரீரம், பிருதிவி முதலாகிய ஸ்தூல பூதங்களும், சப்த ஸ்பரிச முதலாகிய சூட்சும பூதங்களும் சேர்ந்தானது. இச்சரீரம் நீயன்று; ஆத்மாவே நீ; இச்சரீரமோ உனக்கு அந்நியமாயிருந்தும் உன்னைவந் தடைந்தது; அவிவேகத்தால் நீயல்லாத தநுகுணங்களை நீயென்றும், உனவல்லாதனவான போகங்களை உனவென்றும் அபிமானித்து முறையே நான் என்றும் எனது என்றும் அகப்பற்றும் புறப்பற்று முடையனாய்ப் பல பாவங்களையுஞ் செய்து, உழலவேண்டி வந்தது. இதற்கு நிவிர்த்தி எங்ஙனமெனில்,—

77177

பொறிகளாகிய மதயானைகளைப் புலன்களின்மேற் செல்ல வொட்டாமல் அறிவென்னும் அங்குசத்தால் அடக்கி, நெஞ்சமாகிய குதிரையைப் பகிர்முகமாகிய செண்டுவெளியில் ஓடவிடாது, பக்தியாகிய கடிவாளத்தை யிறுக்கி வைராக்கியமென்ற கலையைப் பூட்டி, அந்தர் முகத்தில் நிறுத்தி, பரமகாருணியராகிய கடவுளைத் தியா

னித்து, அவருக் கடிமை பூண்டு, "அற்றது பற்றெனி னுற்றது வீடு" என்ற வண்ணம், அகங்கார மமகார மாகிய பற்றுக்களைக் கைவிட்டு, இனித் துஷ்கிர்த்தியங் களைச் செய்யாது, கடவுள் ஆணைக்கமைந்து அவருடைய திருவடித்தொண்டு செய்து, உனக்கொன்று மில்லையென் னும் உபாய பரதந்திரனு யொழுகினுல், பந்தங்கெட்டு மோட்சங் காணியாட்சி யாகுமென்று அநுக்கிரகித்து, மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரணங்களாலும் காணப்படாத கடவுளைக் காட்டிக்கொடுத்த அவரது உப தேசத்தை மறவாது சிந்தித்து, சதாகாலமும் அவர் கிரு பைக்குப் பாத்திரமா யிருக்கவேண்டும்.

குருவைச் சாமானியராக நினையாமல், மானைக்காட்டி மானைப் பிடிப்பதுபோல, மாநுட வுருக்கொண்டு வந்தவ ராகப் பாவித்து, அவர் வாக்கிலிருந்து வரும் மந்திரத் தைக் கேவலம் மனிதர் வாய்ச்சொல்லாக மதியாமல் கடவுளது திருவாக்கிலிருந்து தொன்றுதொட்டுப் பரம் பரையாய் வந்த பரமார்த்த மென்று உண்மையாக மதிக்க வேண்டும்.

எப்படிப்பட்ட மகாத்துமாக்களானுலும் குருவார்த் தைக்கு எதிர்வார்த்தை பேசாமல், குரு வாய்மொழி யைக் கடவுள் திருவாய் மொழியாக நம்பினுலல்லவோ அவர்களுக்கு அநேக கற்பங் கழிந்தாலும் அழியாது நித்தியமாயிருக்கின்ற மோட்சசித்தி யுண்டு. நம்பாதவர் களுக்கு என்ன வுண்டு ?

குருவின் உபதேசமே காமக்குரோதாதி உட்பகை யைச் சேதிக்கின்ற வாளாயுதமென்றும், குருப்பிர சாதமே கடவுள் வரப்பிரசாதமென்றுஞ் சிந்திக்கவேண் டும். எங்கும் குருவில்லாத வித்தையில்லை யாதலால், எப் பொழுதுங் குருவைத் தொடர்ந்து ஆஸ்ரயிக்க வேண்டு மல்லவோ? 'குருபாதமே கதி' என்று சமுத்திரத்தில்

இறங்கினவனுக்கு, அச்சமுத்திரங் கணுக்கால் ஆழமாயிருந்ததென்றும், 'என் பாதமே கதி' என்றிறங்கினவன், அதில் அமிழ்ந்து இறந்தானென்றுஞ் சொல்லக்கேட்டிருக்கிறேமே.

ஒருநாள் ஒரு சீஷன் குருவின் உபதேசத்தைக் கேட்டவுடனே, "சுண்ணம்பிலிருக்கிறது சூட்சம், சூட்சத்திலிருக்கிறது மோட்சம்" என்று அறியும் அறிவில்லாமையால், 'இஃதென்ன ஆச்சரியம்? ஆருக்குத் தெரியாது; அண்டை வீட்டுக்காரன் பெயர் என்று முன்னமே சொல்லலாகாதா? ஏன்காணும் இதற்காக இத்தனைபணம் செலவிடச்செய்தாய்?' என்று சொன்னதாகவுஞ் சொல்லுகிறார்களே!

'கூரையேறிக் கோணற்சுரைக்காய் அறுக்காத குருக்களா, நாளை வானத்தைக் கீறி வைகுந்தம் காட்டப் போகிறார்?' என்று குருவைப் பரிகாசஞ்செய்த சீஷனுமிருந்தான் அல்லவா? இவ்விதமான அபக்குவர்களுக்கெல்லாம் பந்தம் நீங்குமா?

ஆசாரியர் சீஷனைத் தேடிவர, அவரைக் கண்ட மாத்திரத்தில், "கும்பிடப்போன தெய்வங் குறுக்காக வந்தது" என்று எண்ணி, அதிசீக்கிரமாக எழுந்திருந்து எதிர்கொண்டுபோய்த் தீர்க்கதெண்டம் சமர்ப்பித்து, கைகட்டி வாய்பொத்தி உபசரியாமல், குந்தியபடி இருந்து, "ஏண்டா குருக்களே! எங்கடா வந்தாய்? சாமி! சாமி! தெண்டம்ஐயா!" என்ற கெர்வபுஞ்சமாகிய சர்வ மூடனைப் போலக் குருவை அசட்டை பண்ணினவன் அதோகதி அடைவான்.

கடவுள் செய்நன்றி

கடவுளானவர் தமது நிரேதுக கிருபையினாலே, மூலப்பிரகிருதியில் அழுந்திக் கட்டுப்பட்ட ஆத்மாவுக்கு,

கரசரணுதி அவயவங்களைக் கொடுத்துப் பூமியில் ஜெனிப்பித்து, போஷித்து, பரிபாலித்து, பரமாத்மாவாகிய தமக்கும் ஜீவாத்மாவுக்கும் உள்ள தாரதம்மியம் இவ்வகைப்பட்டதென்று வேதாகமங்களின் மூலமாக விளக்கி, பூனையானது தன்னைத் தழுவத் தெரியாத சக்தியற்ற குட்டியைத் தன் வாயினுற் கவ்விச்செல்வதுபோல, தம்மை ஆஸ்ரயித்து வழிபாடு செய்ய அறியாத சக்தியற்ற ஆத்மாவானது அறிந்து வழிபடச் செய்தும், குளவியானது, அற்ப ஜந்துவாகிய புழுவினைத் தன்னுருவாக்குவது போல, தமது திவ்விய சொரூபத்தை அது மருவப் பண்ணியும், உலகத்தார் மேகத்திற்கு ஒரு நன்மையும் செய்யாதிருந்தும், அம்மேகம் அவர்களுக்கு க்ஷேமமுண்டாக மழையைச் சொரிவதுபோல, கடவுளானவர் ஆத்மாவினிடத்திற் கைம்மாறு வேண்டாது, அடைதற்கரிய அசாத்தியமாய் ஒப்பற்ற பெரியவீட் டின்பத்தை அடையும்படி செய்யும் மகோபகாரத்தை, "வான் செய்த நன்றிக்கு வையகமென்செய்யுமதை மறந்திடாதே" என்றபடி எப்பொழுதும் மறவாது தியானிக்கவேண்டும்.

தெய்வபக்தியே தீவினையாகிய உளையைக் கடந்து செல்லும் ஊன்றுகோல்; தெய்வதரிசனமே பிறவிக் கடலைக் கரைகாணும் நாவாய்; தெய்வத்தியானமே முத்தியாகிய மேல் வீட்டிலேறும் நூலேணி; தெய்வத்தின் அருளுதயமே அஞ்ஞான இருளையொழிக்கும் ஆதித்தியோதயம்; தெய்வவணக்கமே நரகவாசலை அடைக்கும் தாழ்; தெய்வத்தை வாழ்த்தும்வாழ்த்தே பாசவிலங்கைத் தறிக்கும் வெட்டிரும்பு. தெய்வபக்தி உதிக்காமல் உலக பாசம் ஒழியென்றாலும் ஒழியாது. தெய்வத்தைத் தொழாமற் பாவநிவாரண மாகிறது பிரயாசம். தெய்வத்தை ஆராதிப்பதல்லவோ தவஞ்செய்கை? அதற்கு அந்நியமாகச் செய்வன வெல்லாம் அவஞ் செய்கையே. ஒரு

நொடிப்பொழுதாவது தெய்வத்தைத் துதியாத நாவுக்குப் பரிசுத்தமேது? தெய்வசிந்தனையினாலன்றிச் சித்தசுத்தி சொப்பனத்திலும் வருமா? சுயகாரிய துரந்தரனுஞ் சுவாமி காரிய வழவழகனுமா யிருப்பவனுக்குத் தெய்வ கடாட்சம் எவ்வாறு கிடைக்கும்? குழந்தையுந் தெய்வ மும் கொண்டாடுமிடத்தில் என்கிறார்களே.

சூரியரஸ்மி பாயாததும், காற்றுவீசாததுமாகிய இடமுமிருக்கலாம். கடவுளின் வியாபகத்திற்கு அந்நி யமோ ஒன்று மில்லை. ஆதலால், அவருக்கு அகம் புறம் எங்கும் முகம்; சகலாண்ட சராசரமும் அவருடைய திரு வுருவமாம். அதனால் அவர் காணாத காட்சியும், அவர் கேளாத கேள்வியும், அவர் பேசாத பேச்சும், அவர் அறியாத விஷயமு மில்லை. அதுபற்றி எவர்களும் அவ ராணையை மீறிக் குற்றஞ் செய்யவும், செய்த குற்றத்தை மறைக்கவும், ஒரு விதத்திலாவது அவரை வஞ்சிக்கவுங் கூடாது; என்றாலும், எக்காலமும் அவர் திருவுளத்திற்குப் பாங்காய் நடக்கின்ற பக்தர்செய்த குற்றத்தை மாத்திரம் அவர் கண்டும் காணாமலும், உணர்ந்தும் உணராமலு மிருப்பார்.

சிலர் தங்களுக்கு வருத்தம் சம்பவித்த காலத்தில், தாம்செய்தவெல்லாம் குறையாயிருக்க, 'நானென்ன குறை செய்தேன்?' என்றும், தாம் செய்த சதியை நினையாமல், 'என்னளவில் தெய்வம் சதிசெய்ததே' என்றும், 'அதை வணங்குகிறதுதா னேதுக்கு? அதற்கென்ன கண்ணில் லையா?' என்றும், 'சாற்றுக்கில்லாத வாழைக்காய் பந்த லிலே கட்டித் தொங்க விருக்கிறதோ? இப்படிப்பட்ட ஆபத்துக்கு உதவாமல் இனியென்னதான் சாதிக்க விருக் கிறது?' என்றும், தெய்வத்தை நிந்திப்பார்கள்; அது நன்மையேயன்று.

குருட்டுக்கண் தூங்கியென்ன விழித்தென்ன? தெய்வ பக்தி யில்லாதவர்கள் கங்காஸ்நானஞ் செய்தாலும், வனவாசம் பண்ணினாலும், மலைக்குகைக்குள்ளே கண்ணைத்திறவாமல் யோகத்தி லிருந்தாலும், முக்தி யடைய மாட்டார்கள். ஆமை, மீன், தவளை முதலானவைகள் கங்கா நதியில் உற்பவித்து, அக்கங்கைக்குள்ளேதானே மூழ்கியிருந்தும், யானை, புலி, கரடி முதலியவைகள் காட்டில் உற்பத்தியாகி, அக்காட்டினிடத்திலேயே வாசஞ் செய்தும், பகற்குருடாகிய கோட்டான் மரப்பொந்துக் குள்ளேதானே கண்ணைமூடிக்கொண்டிருந்தும் என்ன பிரயோசனம்?

தத்துவவிசாரணை செய்து, தாடி சடை வளர்த்து, தலையை முண்டித்து, தண்ட கமண்டல மேந்தி, தவ வேடம் பூண்டிருந்தும், தெய்வத்தியான மில்லாதவர்க்கு என்ன பயனுண்டு? அவர்கொண்ட கோலம் அலங்கோல மான பேய்க்கோலம், அல்லது பிணக்கோலமே.

தெய்வத்தை அஞ்சலியாத கை நெற்குற்றும் உலக்கை, அல்லது வீட்டு உத்திரக்கை. தெய்வத்தைப் பணியாத முடி கழனியில் நடும் நாற்றுமுடி, அல்லது கம்பள நார்முடி. தெய்வத்தைத் தரிசியாத கண் நுங்குக் கண், அல்லது பாம்புப் புற்றுக்கண். தெய்வத்தை வாழ்த் தாத வாய் மலஜலமோடுங் கால்வாய், அல்லது சுண்ணம் புக் காளவாய். தெய்வஸ்தலத்தைத் தேடிச்செல்லாத கால் கொல்லைப்பரண் கால், அல்லது பந்தலுக்கு நாட்டுங்கால். தெய்வஸ்துதியைக் கேளாத செவித்தொளை பருத்த நுகத்தொளை, அல்லது பாழான சாரத்தொளையாம்.

காற்றுக் கெதிரே ஏற்றிய விளக்கைப்போல, அடிக் கடி யலைந்து, ஓயாமலாடும் பம்பரம்போல இடைவிடாது சுழன்று, ஒரு வேலையு மில்லாவிட்டாலும் நிற்க நேர

மில்லாமல் திரியும் நாய்போல அரைக்கணமுந் தங்காது, காடுமலை காளுறுக ளெல்லாங் கடந்து, லோகாலோக மெங்கும் ஓடியுழல்கின்ற பொல்லாத மனமென்னும் குரங்கு, அஞ்ஞானமாகிய வெறிகொண்டு, ஆணவமாகிய மரத்திலேறி, பலவகை யெண்ணமாகிய இலைகள் செறிந்த ஆசையாகிய கிளைகளைத் தாவி, தீவினையாகிய கனிகளைக் கொள்ளைகொண்டு, சேஷ்டை செய்ய வொட்டாமல், அதனை நிராசையாகிய கயிற்றினுற் கட்டி, விடயவாதனை யில்லாமல் அடக்கிவைத்தாலும், தெய்வத்தை உணரும் ஞானமில்லாதவர்களுக்கும் மோட்சத்திற்கும் வெகு தூரமே.

"ஐயறி வறிந்தவை யடங்கினவ ரேனு
மெய்யறிவி லாதவர்கள் வீடது பெருரே."

என்றுஞ் சொல்லி யிருக்கின்றதே.

தெய்வநிலை இத்தன்மைத்தென்று, அத்தெய்வத்தின் அருளைக்கொண் டறிந்தாலன்றி மற்ருெரு விதத்தில் தெளியக் கூடாமையால், யானைகண்ட குருடர் போலவும்,

"தோள்கண்டார் தோளே கண்டார் தொடுகழற் கமலமன்ன
தாள்கண்டார் தாளே கண்டார் தடக்கைகண் டாரு மஃதே
வாள்கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்
ஊழ்கொண்ட சமயத் தன்ன ளுருவுகண் டாரை யொத்தார்."

என்றுற் போலவும், உலகத்திலுள்ள பற்பல சமயத் தாரும் பற்பல அவசரமாகத் தாம்தாம் கண்டதையே பொருளென மதித்து, அதற்குத் தக்க யுக்தி சாதனங் களைக்கொண்டு சாதிப்பார்கள். அதை விரிக்கிற் பெருகு மாதலின் அது நிற்க.

ஒளவையானவள், புகழேந்தியென்னும் புலவரை நோக்கி, தன் ஐந்துவிரலையு முடக்காமல் நெருக்கி உள்ளங் கையைக் குவித்தும், ஐந்துவிரலையு முடக்கிப் பிடித்தும்,

கடைவிர விரண்டையும் முடக்கி, மற்ற மூவிரலையுங் கோணமாக நிறுத்தியும், நால்விரல் மடக்கிச் சுட்டுவிரலை ஊர்த்துவமுகமாக நிறுத்தியும், ஐந்துவிரலையுங் குவித்தும் காட்டி, இந்த ஐந்து சமிக்கையைக் குறித்து ஒரு வெண் பாப் பாடவேண்டும் என்ற மாத்திரத்தில், அவர்,

"ஐய மிடுமி னறநெறியைக் கைப்பிடிமின்
இவ்வளவே யாயினுநீ ரிட்டுண்மின்—தெய்வம்
ஒருவனே யென்று முணரவல் லீரேல்
அருவினைக ளைந்து மறும்."

என்று பாடிய பாடலுள்ளும்,

"எத்தேயத் தெத்திறத்தோ ரெவ்வருணத் தெவ்வுருவி னென்னை யாய்ந்தார், அத்தேயத் தத்திறத்தோர்க் கவ்வருணத் தவ்வுருவி னவர்நே ராவன், முத்தேவர் முத்தொழிலு முக்கணமுங் கடந்தும றைமுடிவின் முத்தி, வித்தாகித் தனிநின்ற பரப்பிரமப் பழம்பொ ருள்யான் மெய்க்கொள் வாயே."

என்ற செய்யுளுள்ளும், தெய்வ மொன்றென்று சொல்லு கின்றதனாலும், காரிய மாகிய பணியும் பாண்டமும் பலவா யினும், காரணமாகிய பொன்னும் மண்ணும் ஒன்றாய் விளங்குவதனாலும், தெய்வ மொன்றென்றே தெளிய வேண்டு மல்லது, பலவென்று பிரமிக்கலாகாது.

அரசன் செய்ந்நன்றி

அரசனானவன் உலகத்திற்கு அன்பிற்சிறந்த தாய் போலத் தோன்றி மன்னுயிர் யாவையுந் தன்னுயிர்போலக் கருதி,

"மாநிலங்கா வலனென்பான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மால்
ஆனபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனோ."

என்ற வண்ணம், தன்னாலாவது, தன் பரிசனத்தாலாவது, பகைவர்களாலாவது, திருடர்களாலாவது, மற்ற உயிர்க

ளாலாவது, சிறிதுங் கொலை களவு கற்பனை முதலாகிய உபத்திரவம் அணுகாமல், குடிகளுக்கு க்ஷேமமுண்டாகும்படி முறைதவறாது செங்கோல் செலுத்தி, பிரஜைகளிடத்திற் கடுஞ்சொற் சொல்லாமலும், கடுந்தண்டம் விதியாமலும், அவரவர் தாரதம்மிய மறிந்து பட்சபாத மில்லாமல், தயையாய்ப் பரிபாலனஞ் செய்கின்றதை மறக்கலாகாது.

ஆரைப் பகைத்தாலும் அரசனைமாத்திரம் பகைக்கலாகாது; அரசவையி லிருந்து வறிதே அடிக்கடி நகைப்பதும், பரிகாசஞ் செய்வதும், ஒருவர் செவியி லொருவர் இரகசிய சமாசாரஞ் சொல்வதும், அரசனுக் கெதிரே அடக்கமில்லா திருப்பதும், அரசனோ டெதிர்த்து அவனை அலட்சியமாகப் பேசுவதும், வீண்போகாமல் திரவிய நஷ்டத்தையும், மானபங்கத்தையும், பிராண சேதத்தையும் வருவிக்கும். செங்கோலுக்கு முன்னே சங்கீதமா?

“ செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையு மவித்தொழுக
லான்ற பெரியா ரகத்து.”

என்றும் சொல்லுகின்றதே.

அரசனது தயையைப் பெற்று, அவனை அந்நியோந்நியமாகச் சிநேகித்து, அவனுக்கு அநுகூலப்படாத விரோதிகளையெல்லாம் ஜெயித்து, அவன் மனமகிழும்படி அநேக திரவியங்களைச் சம்பாதித்துக் கொடுத்து, அவனால் நன்குமதிக்கப்பட்டவர்க ளானாலும், அவன் விஷயத்தில் நெறிதவறி இலேசமாத்திரம் பிழைசெய்தாலும் குடி முழுகிப்போம். வேங்கைப்புலியும் ராஜாவும் சரியென்கிறார்களே! ஆதலால், அவனை விஷசர்ப்பம் போலவும் கடுநெருப்புப் போலவும் நினைத்து, அவனுக்குப் பயந்து நடக்கவேண்டும்.

துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்கிற அரச னில்லாத நாடு, தன்னரசு நாடாய் உபத்திரவத்திற்கே உறைவிட மாகும்.

"அரச னுடைமைக்கு ஆகாசவாணி சாட்சி" என்பதனால், அவனை வஞ்சித்து அவனுக்குச் செலுத்தத் தகும் இறைப்பொருளை அபகரிக்கலாகாது; அபகரிப்பது கர்த்துரு துரோகமாம். மாதுரு துரோகம், பிதுரு துரோகம், குரு துரோகம், சுவாமி துரோகம், சிநேக துரோகம் இவைகள் மறுமையில் துன்பத்தை விளைக்கும். இஃது இம்மையிற்றானே துன்பத்தைச் செய்யுமாதலால், அவை களினும் இது மிகக்கொடியதாம்; ராஜதரிசனமும் ராஜ தயையும் ராஜாபிமானமும் ஒருவர்க்கு எளியவல்ல.

அரசன், பொன் மணி நெல் முதலிய மிதமற்ற திரவிய பலமும், மலையரண் காட்டரண் மதிலரண் நீர ரணாகிய நால்வகையரண்சூழ்ந்த ஸ்தானபலமும், அகண்ட ராச்சிய பலமும், சமுத்திரம்போல் அளவிறந்த ரத கஜ துரக பதாதிகளென்னும் சதுரங்கபலமும், வில் கணை முதலிய எய்வனவும், சக்கிரம் தோமர முதலிய எறிவனவும், வாள் பரிசை முதலிய வெட்டுவனவும், சூலம் ஈட்டி முதலிய குத்துவனவுமாகிய ஆயுத பலமும், சத்துருக்களுக் கெதிரே மான் கூட்டத்திற் புகுந்த பெரும்புலி போலவும், யானைக் குழாத்திற்கு முற்பட்ட வீரசிங்கம் போலவும் கர்ஜித்து, நிர்ப்பயமாய் முன் வைத்த காலைப் பின்வையாமல் முதுகுகாட்டாமல் விழித்த கண் சிமிட்டாமல், காயமென்ன கற்கண்டா, உயிரென்ன தித்திப்பா, ஆறினுமரணம் நூறினுமரணம் என்பதை நிச்சயித்துப் பிராணனைத் துரும்புபோல் அலட்சியம் பண்ணி, இறந்தால் வீரசொர்க்கம், வென்றால் ராச்சிய லாபம் உண்டென்கிற நம்பிக்கையினால், முன்காயப்பட

மூர்த்தன்னியமாய்ப் போர்செய்து, எதிரிகள் அதமாகக் கண்டதுண்டமாக்கி வெல்லுகின்ற உத்தண்டமான புஜ பலமும், எந்தத் திக்குப் போனாலும் அபஜயப்படாமற் சாதித்து வரத்தக்க காலபலமும், மந்திரி பிரதானிமார்க ளுடைய ஆலோசனையின் பலமும், தானுபதிகள் நியாயாதி பதிகளுடைய விசேஷ பலமும், மெய்காப்பாளர் கடை காப்பாளர்களுடைய காவற்பலமும், தன்னைவிட்டு நீங்காத உறுதிச்சுற்றத்தின் பலமும், தனது பூரணமான வித்தியா பலமும், விவேக பலமும், என்றுஞ் சலியாத மனோ பலமும், எங்குங் கிள்ளாக்குச்செல்லாநிற்கும் வாக்குப் பலமுமாகிய உப பலங்களைப் பிரபலமாகப் படைத்தமை யால், தான் நினைத்தபடி யெல்லாம் முடிப்பதற்கு ஒரு விதத்திலுந் தடையில்லையே; அதுபற்றி, தனக்குள்ளே, ‘நாம் முறைதவறி நடந்தால் நம்மைக் கேட்பவனார்? நமக் கெதிர் ஒருவருமில்லை; நாம் அடித்தது ஆட்டம், பிடித்தது பெண்டு’ என்று கர்வித்தால்,

“மலையின்மிக் கானவ ரென்றாலுங் கர்வ மமதையுற்றால்
நிலைமைகெட் டோடுவ ரீடே றுவதில்லை நிச்சயமே
அலைகடற் றேங்குந் துரியோ தனன்செல்வ மத்தனையும்
தலைமுறைக் கும்வந்த கேடாகும் ரத்ன சபாபதியே.”

என்றவண்ணம், அவசியங் கேடுவருமாதலால், அவன், “நமக்குமேலே தெய்வமிருக்கிறது. ‘அரசன் அன்றறு றுக்கும்; தெய்வம் நின்றறுக்கும்’ தெய்வம் பொறுத் தாலும் பூமி பொறுக்காது; அண்டமிடிந்து தலைமேல் விழும். அதனால், நெருப்பாறும் மயிர்ப்பாலமுமாக நடக்க வேண்டும்” என்று கருதி, மழையைத் தனக்காதாரமாக நோக்கியிருக்கும் பயிர்போல, குடிகள் தமக்கு ஆதார மாகத் தனது செங்கோலையே நோக்கி யிருப்பதையும், அச்செங்கோல் கோணின்ல் எங்கும் கோணுமென்பதை யும், ‘ஏழை யழுத கண்ணீர் கூரியவாளொக்கும்’ என்ப

தையும் உய்த்துணர்ந்து, தானே தன் மனத்தில் இரக்கங் கூர்ந்து நீதி பிசகாது நடக்கவேண்டும். அங்ஙனம் நடவாமல் அநீதியாய் நடந்தால் அவனை இஃது உனக்குத் தகாதென்று தண்டிக்கவாவது, அவனைத்தள்ளி வேறோரரசனை ஸ்தாபிக்கவாவது, ஆருக்குச் சாத்தியம்? வாழைத் தோட்டம் கருப்பந் தோட்டங்களிற் புகுந்து, வாழைகள் கரும்புகளை வேருடனே பிடுங்கி முறித்துச் சாடுகின்ற பெரிய மதம்பிடித்த யானையைச் சிறியகொசுகுக் கூட்டம் போய்த் தடுக்கக் கூடுமா? மழைக்குக் குடைபிடிப்பதுண்டு. இடிக்குக் குடை பிடிப்பார்களா?

"படித்துச்செங் கோன்மன்னர் நீதிசெய்யாதுவெம் பாவஞ்செய்தால்
பிடித்துத்தள் ளத்தக்க பேருமுண் டோவிந்தப் பேருலகில்
அடித்துச் சொரியு மழைக்கேயல் லாம லதிர்ந்துவிழும்
இடிக்குக் குடையுமுண் டோவெள்ளை நாவ லிருப்பவனே."

என்று மிருக்கின்றதே.

ராஜாவைத் தந்தையாகவும், ராஜபத்தினியைத் தாயாகவும் பாவித்து வணங்கவேண்டும். தாய்மார் பாராட்டுந்தாய், உணவூட்டுந்தாய், பாலூட்டுந்தாய், கைத்தாய், செவிலித்தாய் என ஐவராவர். அன்றியும் அரசன் தேவி, குருவின்தேவி, அண்ணன்தேவி, தன்தேவியையீன்றாள், தன்னையீன்றாள் எனவுஞ் சொல்லப்படுவர். தந்தையர் பிறப்பித்தோன், கல்வி கற்பித்தோன், மணமுடிப்பித்தோன், அன்னந் தந்தோன், ஆபத்துக் குதவினோன் என ஐவகைப்படுவர். குருவானவர் வித்தியாகுரு, உபதேசகுரு என இருவராவர். இவருங் காரணகுரு காரிய குரு என்று சொல்லப்படுதலுமுண்டு. அரசர் சிங்காசனாதிபதி, சேனாதிபதிஎன இருவகையாவர். தேசாதிபதிமன்னர் மன்னன் எனவும், மகாராஜன் யுவராஜன் எனவுஞ் சொல்லப்படுவர். தாய் தந்தை குரு அரசன் என்னும் இவர்களுக்குள் தாரதம்மியம் உண்டாயினும், அவர் அத்தன்

மையர் இவர் இத்தன்மையரென அவரை ஒருவருக்கொரு வர் வேறுபாடு உடையவராக எண்ணுவதும் பேசுவதும் யுக்தமன்று.

பெரியோர் செய்ந்நன்றி

பெரியோர்கள் ஜீவகாருணியத்தால் யாம் பெற்ற பேறு வையகம் பெறுக என்று எண்ணி, சகலரும் விதி விலக்குக்களை அறிந்து நெறிவழாதொழுகி, இம்மை யின்பத்தையும் மறுமை யின்பத்தையும் அடையும்பொருட்டு லோகோபகாரமாகச் சகல தர்மங்களையும், ஆசாரம் விவகாரம் பிராயசித்தம் என மூன்றுவகையாகச் சாஸ்திர முகத்தால், உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளக்கி அநுக்கிரகித்ததனால், அந்த ஆப்தவசனத்தை மறவாது சிந்திக்கவேண்டும்.

மேற்கூறிய ஆசார தர்மமாவது, யாவரும் தங்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட நிலைகளிலே நின்று, அவைகளைக் குறித்துச் சொல்லிய தர்மங்களில் வழுவாது நடத்தல்; விவகார தர்மமாவது, ஒரு பொருளையே ஒருவன் எனதென்றும் மற்றொருவன் தனதென்றும் சுதந்திரித்து அந்தப் பொருளின்மேல் வழக்குத் தொடுத்தல்; பிராயச்சித்த தர்மமாவது, மேற்குறித்துச் சொல்லிய ஆசார வழியிலும் விவகார வழியிலும் பிசகி நடந்தவர்களை அவ்வழியிலே தவறாது நிலைக்கச் செய்யும்படி, பகைவர் சிநேகர் அயலோர் என்னும் பட்சபாதமில்லாமல், பொதுப்பட ஆராய்ந்து அதற்கேற்கத் தண்டித்தலாம்.

"பெரியாரைத் துணைக்கொள்" என்றதனால், என்றும் பெரியோரையே நேசிக்கவேண்டும். அவர்கள் நேசத்தை ஒரு பொழுதுங் கைவிடலாகாது. அநேகராது பகையைத் தேடிக்கொள்வதனால் வருந் தீமையிலும், ஒரு

பெரியோரது நேசத்தை இழந்துவிடுவதனால் வருந் தீமை பதின்மடங்கு அதிகமாகும்.

"பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்."

என்று சாஸ்திரஞ் சொல்லுகின்றதே.

ருத்திராட்சப் பூனைபோலவும் கோமுக வியாக்கிரம் போலவும் வேஷதாரிகளாய்ப் பிரபஞ்சத்தாரை மயக்கும்படி நடிப்பவர்களையன்றி, "சேரிட மறிந்துசேர்" என்றதற்கு ஏற்கக் களங்கமில்லாத பொன்போலும் உண்மையாகிய பெரியோர்களை அறிந்து அவர்களிடத்திற் சேர்ந்து அவர்கள் சொற்படி நடக்க வல்லவர்களுக்கு, அறம் பொருள் இன்பம் வீடென்பவைகளில், எதுதான் அரிதாகும்? "கற்பகதருவைச் சார்ந்த காகமு மமுதமுண்ணும்" அல்லவோ?

"முருகுவிரி மலர்க்கொடிகண் மூங்கின்மிசைப் படர்ந்துபோய்ப்
பொருவரிய துறக்கத்துப் புகுந்துவளர் கற்பகமாம்
மாமுழுதும் படர்ந்துலவும் வளர்மதியின் மேலாய
பெரியவரை யடைந்தொழுகப் பெறிற்றுறக்கம் புகலரிதோ."

என்றுஞ் சொல்லி யிருக்கின்றதே.

தபோமகிமை, சாபாநுக்கிரக சாமர்த்தியம், அஷ்டாங்கயோகம், அஷ்டமாசித்தி முதலாகச் சொல்லி முடியாத தமது வல்லமைகளை யெல்லாம் நீறுபூத்த நெருப்புப் போலவும், கரித்துணியில் முடிந்த மாணிக்கம் போலவும் புறத்தில் தோன்றாமல் அடக்கி, கோபமாகிய நெருப்பை மூண்டு எழவொட்டாமற் கிருபையாகிய நீரினாலவித்து, சாந்தத்தையே மேற்கொண்டு பரம சாதுக்களாய் இருப்பதனாலும், "சிறியோர்செய்த சிறுபிழையெல்லாம் பெரியோராயிற் பொறுப்பது கடனே" என்பதனாலும், பெரியோர்களுக்குக் கோபம் வராதென்று எளிதாக நினைத்து நெருப்பை முன்தானையில் முடிவதுபோலவும், விஷ

பரீட்சை பண்ணுவதுபோலவும் அவர்கள் விஷயத்தில் அபசாரப்பட்டுக் கோப மூட்டலாகாது. மௌனம் மலையைச் சாதிக்குமல்லவோ?

துறவு மெய்யறிவு ஆசையில்லாமை முதலிய நற்குணமென்னும் அசைவற்ற பெரிய மேருசிகரத்தில் ஏறியிருக்கின்ற சான்றோருடைய கடுங்கோபமாகிய நெடுங்கழியில் இறங்கினவர்கள், துக்கமாகிய முதலைவாயில் அகப்பட்டுக் கரை சேரமாட்டார்கள்.

மற்றச் சுற்றத்தார்கள் சிநேகர் அயலார் முதலானவர்கள் செய்த நன்றியையும், சத்திரம், சாவடி, தோப்பு, துரவு, ஏரி, வாவி, குளம், கோயில், சந்தி, சதுக்க முதலியவைகளை உண்டாக்கினவர்கள் செய்த நன்றியையும், மறக்கலாகாது. மேலும், பொருளினால் வாக்கினால் சரீரத்தினால் எவரெவர் எவ்வளவு சொற்பமான உதவியைச் செய்தாலும், இது எம்மாத்திரமென்று அற்பமாயெண்ணாமல், அவ்வுதவி செய்யப்பட்டகாலம் காரணம் முதலியவைகளைப் பற்றி மிகப் பெரிதாகவே கொள்ளவேண்டும்.

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார்"

என்று வழங்குகின்றதே.

"ஆண்டியைக் கண்டால் லிங்கன், தாதனைக் கண்டால் ரங்கன்" என்பவரைப்போல, அவரவர்களுக்கு ஏற்றபடி நடித்து அவர்களால் தமக்குவேண்டிய உதவிகளை வேண்டியபடிக்கெல்லாம் பெற்றுக்கொண்டு, அவர்களுக்குப் பிரதியுபகாரஞ் செய்யவேண்டுமென்ற எண்ணம் சிறிதுமின்றி, "அறுந்த விரலுக்குச் சுண்ணும்பிடாமல்" லோபகுணத்தையே பெரும்பான்மையாகக் கொண்டு, "இடாள் தொடாள் மனுஷர்மேற் செத்த பிராணன்" என்ற பாவனையாக விசுவாச காதகர்களா

யிராமல், யதார்த்தமாக ஒரு நன்றி செய்தார்க்கு ஆபத்து வந்தகாலத்தில் பெறுதற்கரிய தமது உயிரையாவது கொடுத்து அக்கடனைக் கழிப்பதுமன்றி, அவ்வொரு நன்றியினிமித்தம் அவர் அநேகம் பிழைகளைச் செய்தாலும், அவைகளையெல்லாம் பாராட்டாமற் பொறுத்துக் கொள்ளவும் வேண்டும்.

"ஒருநன்றி செய்தாரை யுள்ளத்தே வைத்துப்
பிழைநூறுஞ் சான்றோர் பொறுப்பர்"

என்றுஞ் சொல்லுகின்றதே.

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு."

எந்த நன்றியை மறந்த பாவத்திற்கும் பிராயச்சித்த முண்டு; ஒருவர் செய்த நன்றியை மறந்த பாவத்திற்கு மாத்திரம் பிராயச்சித்தமில்லை; நரகமே கதி.

'சாரத்தை உட்கொண்டு சக்கையை உமிழ்ந்துவிடுவது இயல்புதானே' என்றெண்ணி ஒருவர் செய்த நன்றியை மாத்திரம் ஏற்றுக்கொண்டு அந்நன்றி செய்தாரை அவமதிப்பது தர்மமல்ல; பழத்தைக்குறித்து மரத்தைப் பாலிப்பதுபோலவும், பாலைக்குறித்துப் பசுவைப் போஷிப்பது போலவும், செய்த நன்றியைக் குறித்துச் செய்தாரையும் மறவாமல் நன்கு மதிக்க வேண்டும். 'உப்பிட்டவர்களை உள்ளளவும் நினைக்க வேண்டும்' என்கிறார்களே.

ரு. சுகாதார தருப்பணம்

1. சுகம்:—'நோயற்ற வாழ்வே வாழ்வு.' 'நோய்க்கிடங் கொடேல்.' 'விரதங் கெட்டாலும் சுகம் தக்கவேண்டும்.' சுகமாவது, மன மொழி மெய்கள் வயப்பட்டிருப்பதும், அவற்றுல் செய்யலான கருமங்களைச் செய்ய இயலுதலும் ஆகிய நிலைமை: யாக்கை நொய்மை, நோக்கின் தூய்மை, கரணங்கள் தொழிற் குரியவாதல், பசி மிகுதல் முதலா யின குறிகளால், உடலில் யாதொரு பிணியு மின்றெனத் துணிதலான நிலைமை. நாம் உண்ணும் உணவை ஜீரணிக் கச் செய்கிற ஜீரணக்கருவிகளும், உணவிலிருந்து இரத் தத்தை உண்டாக்கி அதைத் தேகமெங்கும் வியாபிக்கச் செய்கிற இரத்தக்கருவிகளும், இரத்தத்தைச் சுத்தப் படுத்தும்படி ஆகாயத்தை உட்கொள்ளும் சுவாசக்கருவி களும், தேகத்திலுள்ள மற்றக் கருவிகளும், யாதொரு சேதமும் அடையாமல், அததற்குரிய தொழிலை வருத்த மின்றி நடத்தும்பொழுது, நாம், யாதொரு துன்பத்தை யும் அடையாமல், நமக்குள்ள பல காரியங்களைக் குறை வின்றிச் செய்யலான தேக நிலைமையே சுகமெனப்படும் எனச் சுகாதார விளக்கத்தில் உரைத்திருக்கின்றது. இதன் மறுதலையான நிலைமையே அசௌக்கியம்.

2. சுகங்கெட்டவன் தானும் ஒரு பயன் எய்தான்; பிறர்க்கும் பயன்படான். இவன், வறிஞனயின், தன்னுற வினர் முதலாயினூர்க்குக் கால நஷ்டமும் திரவிய நஷ்டமும் உண்டாக்கி, அவர்கட்கு வீண் சுமை ஆகிருன்: தனிக ஞயின், தன் பொருளால் நுகர்தலான இன்பம் நுகர்த லின்றி, வறிஞனே யாகிருன். பலாட்டிகராய் யானை போல்வாரும், சுகங்கெட்டால், பலஹீனராய்ப் பூனை

போல்பவர் ஆகின்றனர். 'சாதல் விளியாவரு நோயி னன்றால்.' சுகம் கெடாமல் நீடிய ஆயுள் பெற்றவர்களே, நண்பர் உறவினர் முதலானவர்க்கும் உலகிற்கும் பெரு நன்மை இயற்றத் தக்கவர்கள்.

3. தன் நோய்க்குத் தானே மருந்து:—பழவினையால் வருவனவும் பாரம்பரியமாக வருவனவும் ஆன பிணிகள் நீங்க, ஏனைய வெல்லாம், சுகாதார விதிகளை உணர்ந்து அவைகளை அனுட்டியாமையால் உண்டாவனவே. அவ் விதிகளை அனுட்டிப்பவர்கள், நோய்க் கிடங்கொடாமல், ஆயுள் முழுவதும் சுகித்திருக்கலாம். சுகத்துக்குச் சாதக மானவற்றைக் கைவிடாமல், அதற்குப் பாதக மானவற் றைக் கடிபவர்களே, 'தமக்கு மருத்துவர் தாம்.' இளமை யில் மூப்புத்துன்பம் அடைதற்கும், முதுமையில் இளமை யின்பம் நுகர்தற்கும், அவரவரே காரணர். 'இளமையை மூப்பென் றுணர்த லினிதே.'

ஐரோப்பிய மருத்துவப் புலவர்கள் சுகாதார சாஸ் திரத்தை இயன்ற மட்டில் தீர்க்கமாக வரையறை செய்திருக்கின்றனர். இங்கிலீஷில் பயிற்சியில்லாதவர் பொருட்டு, அதில் சுலபசாத்தியமான சில விஷயங்கள் மாத்திரம், தமிழ்நூற் கருத்துக்களையும் இடையிடையில் தழுவி, இந்த வியாசத்தில் சுருக்கமாக விளக்கப்படு கின்றன.

4. சுத்தம்:—இதன் பெருமையை, 'சுத்தம் சோறி டும்' என்பதனு லறியலாம். சுத்தமாவது மலின மில்லாத தன்மை. ஆங்கிலேயர்கள் தேகசுத்தியை ஆன்மசுத்திக் கிரண்டாவதாகக் கொள்கின்றனர். வீட்டைச் சுத்தி செய்வதும், பாண்டங்களைச் சுத்தி செய்வதும், நீராடு வதும், தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரிப்பதுமே, நமது மதானுசாரத்தில் முக்கியாமிசம். 'கந்தையானுலும் கசக்

கிக் கட்டு, கூழானாலும் குளித்துக் குடி' என்பதே நம்ம வர்களில் வறிஞரும் வழங்கும் மூதுரை. ஆகவே, இவர் களுக்கு இதைக் குறித்து வெகுவாய் விரித்துரைத்தல் வேண்டா. ஆயினும், சற்றும் அழுக்கு நீங்காமல், சாஸ் திரத்தின் பொருட்டு வஸ்திரம் தோய்ப்பதும் ஸ்நாநம் பண்ணுவதும் முதலிய துராசாரங்கள் சிலரிடத்தில் உண்டு. 'செய்வன திருந்தச் செய்' என்பதை, எவரும், எவ்விஷயத்திலும், மறத்தலாகாது. வாயு வாசஸ்தானம் ஜலம் ஆஹாரம் தேகம் என்பவற்றின் சுத்தத்தைக் குறித்து நம்மவர்கள் நன்றாய்க் கவனிப்பதில்லை. இவற் றின் அசுத்தமே விஷபேதி முதலிய கொடிய வியாதிகட் குக் காரணமாகையால், இவற்றைக் குறித்துச் சிறிது கூறுவது இன்றியமையாததாகும்.

வாயு:—பருக நீரின்றியும் உண்ணச் சோறின்றியும் சிலநாளளவும் சீவித்திருக்கலாம்: சுவாசம் விடாமல் ஒரு நிமிஷநேரமும் இருக்க முடியாது. சீவன் எனப் பொருள் படுகிற உயிர் என்னும் தமிழ் மொழி, காற்று என்றும் பொருள்படுகிறது. இதனால் சீவனுக்கு முக்கியாதார மாவது காற்று என்பது போதரும். காற்றில் ஜீவாதார வாயு உப்புவாயு கரியமிலவாயு நீராவி என நால்வகை அமி சங்கள் உண்டு. இவற்றில், ஜீவாதாரவாயு சரீரத்தில் உள்ள இரத்தத்தைச் செவ்விரத்தமாகச் செய்யும். செவ் விரத்தம் ஆரோக்கியத்துக்கு ஆதார மானது. கரியமில வாயுவின் சேர்க்கையால் இரத்தம் அசுத்தமாகிய காரிரத்த மாயின், வியாதி உண்டாகும். மார்பில் நுரையீரலில் பரவுகின்ற இரத்தமானது, நாம் உச்சுவாசம் செய்யும் காற்றிலுள்ள ஜீவாதாரவாயுவைக் கிரகித்துக்கொண்டு, தான் தேக முழுவதும் பரவி ஓடிவருகையில் தன்னிடம் சேர்மான மாகும் கரியமில வாயுவை நிசுவாசக் காற்றுடன் வெளிப்படுத்தி விடுகின்றது. ஆகையால், தேகத்தில்

இரத்த சுத்திக்குக் காரணம், நாம் சுவாசிக்கும் காற்றே. அசுத்த வாயுவைப் பூரித்தால் செவ்விரத்தம் காரிரத்தம் ஆகும். சுத்தவாயுவைப் பூரித்தால் காரிரத்தம் செவ் விரத்தம் ஆகும். ஆதலால், நாம் எப்போதும் சுத்தவாயு வையே சுவாசித்தல் வேண்டும். தன்னாலும் பிறராலும் இரேசிக்கப்பட்ட காற்றும் துர்க்கந்தம் அளாவிய காற்றும் அசுத்தமாகிய நச்சுக்காற்றாகும். காற்றில்லாத ஒடுங்கிய வீட்டினுள்ளும் நெருங்கிய ஜனக்கூட்டத்தினுள்ளும் இருத்தல் ஆகாது. இருந்தால், அசுத்தவாயுவே பூரிக்கப் படும்.

வாசஸ்தானம் :—நம்முடைய வாசஸ்தானங்களில் காற்றுச் சுத்தமாக இருப்பதானால், வீட்டைச் சுற்றிலும் சாலகக் கல்மஷங்களும் குப்பை கூளங்களும் அழுகற் பண்டங்களும் இன்றி, வீடுகளும், அடைபட் டிருக்காமல், பெரிய வாயில்களும் பலகணிகளும் அமைந்து, காற்றுத் தாராளமாய் வரவும் போகவும் தக்கவைகளாக இருத்தல் வேண்டும். வீட்டி னருகில் துர்க்கந்தமான நீர்நிலைகள் இருத்தலாகா. மேற்கூரையில் ஒட்டடை முதலியவற்றை நீக்கிவிடல் வேண்டும். சுவர்களை, மலினமாகாமல், பழுது பார்த்தும் மண் தீற்றியும் சுண்ணும்பு பூசியும் வைத்திருத் தல் வேண்டும். தரையை, ஓதம் ஏறவொட்டாமல், திருத்தியும் புதுக்கியும் வைத்துக்கொள்ளல் வேண்டும். படுக்கை வஸ்திரங்களை, அப்போதைக்கப்போது சுத்தி செய்தல் வேண்டும். வீட்டினருகில் சேரவொட்டாமல், மலசலங்களை, உடனுக்குடனே நீக்குவித்தல் வேண்டும். ஒவ்வொருவரும் அவரவர் வீட்டையும் கொல்லையையும் இங்ஙனம் சுத்தமாக வைத்திருந்தால், காற்று, அசுத்த மாகாமல், சுவாசத்துக்கு யோக்கியமாக இருக்கும். மனித ரில் சிலர் துஷ்ட சகவாசத்தால் கெட்டுப்போவது போல, வாயுவும் ஜலமும் கெட்ட வஸ்துக்களோடு கூடினால், அவை,

தம்மளவில் கெட்டுப்போவது மன்றி, அவைகளை உப யோகிக்கின்றவர்களுக்கும் தீங்கை விளைவிக்கின்றன.

ஜலம் :—ஆகவே, வாயுவின் சுத்தத்தைப் போன்று, ஜலசுத்தமும் அத்தியாவசியம் ஆனதே. 'தண்ணீரையும் தாயையும் பழிக்கலாமா' என்ற மூதுரையை மறவாமல், சிலர் கலங்கற் சின்னீரையும் உண்பர்: குளிக்கப் போயும் சேற்றைப் பூசிக்கொள்வர். பருகவும் சோறு சமைக்கவும் உபயோகிக்கும் நீருள்ள கிணறு குளங்களின் அருகில், குப்பை கூளங்களைக் கொட்டி வைப்பதும், மலசல மோசனஞ் செய்வதும், ஆடுமாடுகளைக் கட்டிவைப்பதும், அவற்றில் வஸ்திரங்களைத் தோய்ப்பதும், காலலம்புவதும், ஆடுமாடுகளைக் குளிப்பாட்டுவதும், அவற்றினீரை அசுத்தப்படுத்தும் காரணங்களேயாம். இங்ஙனம் அசுத்தமான நீரை உபயோகிப்பதே, விஷபேதி முதலிய கொடிய வியாதிகளுக்குக் காரணமாகும் என ஐரோப்பிய மருத்துவ நிபுணர்கள் கட்டுரைக்கின்றனர். 'புறந்தூய்மை நீரான மையும்.' அந்நீர் தன்னளவில் தூயதன்றாயின், அதனால் எங்ஙனம் தூய்மை உண்டாகும்? நாம் அனுபவிக்க வேண்டிய எல்லாப் பொருள்களையும் சிருஷ்டித்து உலகத்திலே வைத்துவிட்ட கடவுள், தண்ணீரை மட்டும் நம்முடைய ஸ்வாதீனத்தில் விடாமல், ஆகாசத்தில் மேக ரூபமாய் வைத்துக்கொண்டு, வேண்டும்போது மழை பெய்வித்து, நம்முடைய பானதிகளை அடிக்கடி புதுப்பித்துக்கொண்டு வருகிறார். இதனால், ஜலத்தினுடைய அருமை பெருமை நன்றாய் விளங்குகிறது. ஸ்நாந பானங்களுக்கு ஊற்றுநீரும் ஓடுநீரும் யோக்கியம். சூரியகிரணம் படாத நீரும் காற்றுப் படாத நீரும் பாசிநீரும் அதிகச் சேறுள்ள நீரும் இலை உதிர்ந்த நீரும் புழுவுள்ள நீரும் துர்க்கந்தமுள்ள நீரும் வியாதிகளை விளைவிக்கும். இவைகள் ஸ்நாநம் சமையல் பானம் என்பவைகளுக்கு ஆகா.

பானத்துக்கு, எவ்வித நீரையும் தெளிவித்து வடிகட்டிக் கொள்வதும், காய்ச்சி வடிகட்டிக் கொள்வதும் உத்தமம்.

* * * * உண்ணுங்கால்
நீர்சுருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி யுண்பவர்தம்
பேருரைக்கிற் போமே பிணி.

தண்ணீரைச் சேமித்துவைக்கும் பாத்திரங்களின் உட்புறத்தை அப்போதைக் கப்போது நன்றாய்த் தேய்த்துக் கழுவிச் சுத்தம் செய்தல் வேண்டும்.

ஆஹாரம் :—ஆஹார சுத்தியாவது, அழுகலும் நாறலும் இல்லாத தானிய தவசங்களை, தவிடு மண் கல் கப்பி திப்பி காம்பு கோது முதலியவைகளை நீக்கி, சுத்தமான பாத்திரங்களில், அவசியமான சம்பாரங்களைக் கலந்து, சுவை யுள்ளனவும் ஜீரணிக்கத் தக்கனவுமாக நன்கு சமைத்து, சுத்தமான பாத்திரங்களில் இட்டு உண்ணுதலாம். பித்தளை முதலிய உலோகங்களால் செய்த பாத்திரங்களினும் மட்கலங்களே உத்தமம். மட்கல மல்லாதவைகளுக்கு ஈயம் பூசுதல் பரிகாரம். இந்த விவரங்களெல்லாம் பதார்த்தகுண விளக்கம் பாக சாத்திரம் முதலியவற்றால் தெளிவாகும். அனுவசியமான சம்பாரங்களையும் வாசனைப் பண்டங்களையும் சேர்ப்பதனால், கெடுதி விளைவ தல்லது, நன்மை உண்டாவதில்லை.

தேகம் :—சுவாச வாயுவும் ஸ்நான பானத்துக் குரிய ஜலமும் ஆஹாரமும் சுத்தமாக் இருப்பது அவசியமாதல் போலவே, நமது தேகத்தைச் சுத்தமாக வைத்திருப்பதும் தேகாரோக்கியத்துக்கு அவசியமாகும். சரீரத்திலுள்ள மயிர்க்கால்களின் வழியாக வேர்வையாய்க் கழியும் அழுக்குக்களெல்லாம் இரத்தத்தினின்று தடையின்றிப் பறியும்பொருட்டும், காற்று வீசுகையில் சரீரத்தின்மேல் வந்து பதியும் தும்பு தூசிகள் ஒழியும் பொருட்டும்,

தினந்தோறும் சரீரத்தை ஒழுங்காகத் தேய்த்து ஸ்நாநம் செய்தல் வேண்டும். ஸ்நாநத்துக்குப் பிராதக்காலமே தக்கது.

> காலைக் குளிக்குக் கடும்பசியுண் டாநோய்போ
> மாலைக் குளிக்கவைகள் மத்திபமே.

வெந்நீரிலே செய்யும் ஸ்நாநத்திலும் தண்ணீரிலே செய்யும் ஸ்நாநமே உடம்புக்கு அதிக உறுதியைத் தரும். வாரத்துக்கு இரண்டு தரமாயினும் ஒரு தரமாயினும் எண்ணெய் தேய்த்து வெந்நீரில் ஸ்நாநம் செய்தல் வேண்டும். அப்போதைக் கப்போது, அழுக்கு வஸ்திரத்தைக் களைந்து விட்டு, சுத்தமான வெள்ளை வஸ்திரம் தரிக்கவேண்டும்.

5. ஒளி:—சருமத்தின்மீது ஒளி படுவது சரீரத்துக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும். தரை மட்டத்திற் றாழ்வாய் ஓதமும் இருளுமான அறையினுள்ளேயிருந்து வேலை செய்கின்றவர்கள், தமது சரீரம் விளர்த்து, வியாதி அடைகின்றனர். சருமத்தை ஊடுருவிச் செல்லும் ஒளியானது, சருமத்துக்கு மாத்திரமே யன்றி, இரத்தத்துக்கும் நயத்தைக் கொடுக்கும். அந்நயம் அதன் வழியாகத் தேக முழுவதிலும் சென்று செறியும். ஆகையால், வீடுகளும் கல்விச்சாலைகளும் கம்மியச்சாலைகளும் மடைப்பள்ளிகளும், காற்றுத் தாராளமாய் வீசத் தக்கவைகளாக இருப்பதுடன், வெளிச்சம் செம்மையாகப் பிரவேசிக்கத் தக்கவைகளாகவும் இருத்தல் வேண்டும். பயிர் பச்சை செடி கொடி முதலிய தாவரங்களுக்குப் போலவே, மனிதருக்கும், சூரியகிரணமானது, நன்மையைக் கொடுக்கும். 'மரத்தின்கீழாகாமரம்' என்றபடி, நிழலிலேயுள்ள பயிர்கள் வளர்ச்சியும் வளமுங் குன்றியிருக்க, சூரியகிரணம் படுவதான வெளியிடத்தில் உள்ள பயிர்கள் செழிப்புற்று வளர்கின்றன. அங்ஙனமே, இருட்டறைகளில் இருப்பவர்கள் வெளுத்து உரம் குன்றியிருக்க,

நல்ல வெளிச்சமுள்ள வீடுகளி லிருப்பவர்கள் தேககாந்தி யும் உரமும் பெற்று வாழ்வர்.

6. உழைப்பு :—எடுத்தாளாத பொருள் உதவாது. துலக்காத ஆயுதம் துருப்பிடிக்கும். உழைப்பில்லாத உடல் உரங்கொள்ளாது. உழவு கைத்தொழில் முதலிய வற்றைச் செய்வோர், உடலுரம் பெற்று நோயின்றிப் பலாட்டியராக நீடிய வாயுள் பெற்றிருக்க, யாதொன்றுஞ் செய்யாமல் சோறுண்டு சோம்பி யிருப்பவர், தேகபல மின்றி மெலிந்திருப்பதும், அடிக்கடி வைத்தியரைத் தேடித் திரிவதே உத்தியோகமாக இருப்பதும் பிரத்தி யக்ஷம். வாணிபம் இலேககம் உவாத்திமை முதலாகத் தேகப்பிரயாசை யில்லாத ஜீவன முடையவர்களும், யாதொரு தொழிலு மின்றிப் பிதுரார்ஜிதமான பொரு ளுதவியால் உண்டுடுத்து நாள்கழிக்கும் சுகஜீவிகளும், கல்வி கற்கு மாணாக்கர்களும், தாந்தாம் உண்ட உணவு ஜீரணமாகி உடலில் உதிரம் பரவி உறுப்புக்களும் நரம்பு களும் உரம் பெறுதற்பொருட்டு, ஏதாவது ஒருவிதத்தில் உழைப்புக்கொள்வது இன்றியமையாதது. சரீரப்பிர யாசை கொள்ளாவிடின், இன்னேரன்னேர் அஜீரணம் காய்ச்சல் கைகால் பிடிப்பு ஸ்தூலம் பாரிசவாயு துர்ப் பலம் முதலியவற்ருல் பீடிக்கப் பெறுவர். இவர்களுக்கு ஔஷதங்கள் தத்தத்கால பரிகாரமே யன்றி வேருகா. இவர்களுக்கு உழைப்பே பரமௌஷதம். இந்தப் பர மௌஷதம் கொள்ளாவிடின், இந்த ரோகங்கள் கஷ்ட சாத்தியமும் அசாத்தியமு மான ரோகங்கள் ஆகிவிடும். தங்கள் தங்கள் இருப்பிற்கும் வயதுக்கும் தேகவியற் கைக்கும் ஏற்றபடி, சிலம்பப்பயிற்சி, மல்லயுத்தம், சாரி போதல், வெளிக்காற்றில் கானவீடயாய் உலாவிவருதல், தூரவு குளங்களில் நீஞ்சுதல், நந்தவன முதலியன வைத்துப்பயிரிடல் முதலியவற்றில் எதையாவது இவர்கள்

இரண்டு மூன்று நாழிகை நேரம் தினக்கிரமமாக அனுசரித்துவருதல் வேண்டும். இங்ஙனம் அனுசரிப்பது, ஏனையரிலும் நகரவாசிகளுக்குப் பின்னும் அவசியம். உலாவி வருதலுக்கு மாலைப் பொழுதினும் காலைப் பொழுதே உத்தமகாலம். சூரியன் அத்தமிக்கும் காலத்தைவிடப் பகற் காலத்தில் வேலை செய்தலே ஆரோக்கியத்துக்கு ஏதுவாகும்.

சிலம்பமுதல் மல்லயுத்தம் தேசிநடை கொள்ளின்
பலம்பாவு மெய்யிறுகும் பன்னத்—துலங்குபசி
உண்டாம் கபவாத மோடுவலி சூலையும்போம்.

யௌவனப் பருவத்தில் காளைகள் போல் ஆடியோடி உலாவாமல், எழுவதும் இருப்பதுமே மகாப் பிரயாசையாக இருப்பவர்கள், விகடமான மன்னார் சுவாமி விக்கிரகங்களே. ஏன்? இவர்களை எடுக்கவும் பிடிக்கவும் உரமான ஆள்கள் வேண்டுமாகையால், இவர்கள் பாரமான சுமைகளே. உண்டவுணவு ஜீரணியாமையால் இவர்கள் கட்டுச்சோற்று மூட்டைகளே. யாதொரு வினையு மின்றி எழுவா யுருபுகளாக இருக்கும் இவர்களைக் காரகவேது வாக்கிப் பயனிலை கொடுத்து முடிவுகாட்டாவிடின், நன்னூல் கற்றதனாலாய பய னென்? முத்தகமான இவர்களைக் குளக மாக்குதல் வேண்டும். உண்டுடுத்து எதிர்மறை வினையெச்சமான இவர்களை, உடன்பாட்டுத் தெரிநிலை நிகழ்கால எதிர்கால முற்றுவினையோடு முடிக்கவேண்டும். நிலைத்திணைப் பொருளான இவர்களை, இயங்குதிணைப் பொருள் ஆக்க வேண்டும்.

மனோ வாக்குக் காயம்:—ஜீவனத்தின் பொருட்டு உழைப்பவர்களும், தேக சௌக்கியத்தின் பொருட்டு உழைப்பவர்களும், வயது தேகவலிமை முதலியவற்றிற்கு ஏற்ற அளவாக வன்றி, அதிகமாக உழைப்புக்கொள்வதும் கெடுதி விளைக்கும். கல்வி கற்பதும் நூல்கள் எழுது

வதும் விஷயசிந்தனை செய்வதும் வாதஞ் செய்வதுமான மனேவியாபார முள்ளவர்களும், மனத்தை மிகவும் வருத்தி உழைப்பதும் கெடுதியே யாகும். மன மொழி மெய்களால் செய்யும் தொழில்களை அவை வருந்துவதற்கு முன்னே விட்டொழிக. இந்தத் திரிகரணங்களில் ஆதியும் அந்தமும் இதரேதரம். இவ்விரண்டில், ஒன்று ஏறுபடியாயின், ஒன்று இறங்குபடியாம். இவ்விரண்டையும், ஏறுமாறின்றி இணைத்துப் பிணைப்பவர்களே, எண்ணிய இலக்கை எளிதின் எய்துவோராவர். ஏனையோர் வின்னுண் அற்றவ ராவர். வாயால் மொழிதலான தொழிலையும் மிதமாகவே செய்க. 'மிதவார்த்தைக்குள்ளறிவு மெய்ச்சுகமுங் குன்றுது.'

7. உண்டி:—'அன்னம் ஒடுங்கினுல் ஐந்தும் ஒடுங்கும்.' 'அன்னமயம் பிராணமயம்.' 'ஊணற்றபோதே உடலற்றுப்போம்.' 'உண்டவன் உரஞ்செய்வான்.' 'உண்டார்மேனி கண்டால் தெரியும்.' 'ஊணினுல் புத்தி (பூணினுல் சாதி.)'

உணவின் அளவு இவ்வளவு என நிறுதிட்டமாக உரைத்தலாகாது. அவரவர் கொள்ளுதலான உணவின் அளவு, அவரவர் உடலின் அளவுக்கும் உடலுரத்தின் அளவுக்கும் உழைப்பின் அளவுக்கும் ஜீரணசக்தியின் அளவுக்கும் ஏற்றதாக இருக்கும். உண்ணும்போது, 'இன்னும் அவசிய மில்லை, உண்ட இவ்வளவே போதும்' என்கிற உணர்ச்சி ஒவ்வொருவருக்கும் இயல்பாக உண்டு. அவ்வுணர்ச்சியின் அளவாக உண்பதே மிதமான ஊண். அதுவே அவரவர்க்கு அவசியமான அளவு. அவ்வளவுக்கு மிஞ்சினுல் அமுதமும் விஷமாகும். 'மீதூண் விரும்பேல்.' 'அன்னசுரணை அதிகமானுல் அக்ஷரசுரணை குறையும்.' 'மட்டான போசனம் மனதுக்கு மகிழ்ச்சி.'

தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணில்
நோயள வின்றிப் படும்.

அளவுக்கதிகமாக உண்பார்க்கு, 'இலங்கனம் பரமௌஷதம்.'

இங்ஙனம் அளவாக உண்ணுமிடத்திலும், தேகவியல்பு கால வியல்புகளோடு மாறுகொள்ளாதனவும் சுவை வீரியங்களால் தம்முள் மாறுகொள்ளாதனவுமான உண்டிவகைகளையே உண்டல் வேண்டும். வைத்தியம் கொஞ்சமேனும் தெரியாதவர்கள் இல்லை. பகுத்தறிவெய்தும் வயதான பிறகு, இதையெல்லாம், ஒவ்வொருவரும் தம் தம் அனுபவத்தால் அறியலாம்.

மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின்.

இங்ஙனம் தேகவியல்பு முதலியவற்றோடு மாறுகொள்ளாத உணவை மிதமாக உண்பதே, நீடியவாயுள் பெறுதற்கான உபாயமாம். 'பசித்தால் உண்க; தாகமெடுத்தால் தண்ணீர் குடிக்க' என்பர் ஆங்கிலேயர். 'ஞாலந்தான் வந்திடினும் பசித்தொழிய வுண்ணோம்' என்றார் தேரையரும்.

ஜீரணசக்தி மிக்கவர்கள் நாள்தோறும் மும்முறை நான்முறை உண்பதோடு இடையில் சிற்றுண்டி கொள்ளுவர். ஜீரண சக்தியோடு தேகவுழைப்புள்ளவர்கள் இடைவேளைகளில் சிற்றுண்டி கொள்ளினும் கொள்ளாவிடினும், இரண்டுபோது உண்பதே தேகாரோக்கியத்துக்கு அனுகூலமாகும். தேரையரும், 'உண்பதிரு பொழுதொழிய மூன்றுபொழு துண்ணோம்' என்றனர்.

உழைத்தல் செய்தவுடனே உண்ணுதலும் உண்டவுடனே உழைத்தலும் ஆகா. உண்டபின் தாம்பூலம் தரித்தலால் உற்சாகம் ஜீரணவிருத்தி முதலான பல

நன்மைகள் உண்டாவதாக நமது மருத்துவ நூல்கள் கூறுகின்றன. தாம்பூலம் தரிப்பது நமது தேசாசாரம். 'உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையு மெல்லாங் கண்ணன்.......' என வருவதுங் காண்க. உண்டபின் அல்லது, இடைவேளைகளில் தம்பலந்தின்பது கூடாது. 'ஊண்பாக் கொழிய வீண்பாக் காகாது.'

8. பானம்:—தாகம் என்பது தமிழில் நீர்வேட்கை எனப்படும். இது எல்லார்க்கும் இயல்பு. நீர் வேட்கையை வேறொன்றால் தீர்ப்பது ஆகாது. சிலர் நீர் வேட்கையை அடக்க மதுபானம் செய்கின்ற துராசாரத்தை மேற்கொள்கின்றனர். 'எஞ்ஞான்றும் நஞ்சுண்பார் கள்ளுண்பவர்.' மதுபானம் சீதள மித மண்டல தேசாசாரம். அம்மண்டலத்தவரும் அதனை அமிதமாகக் கொள்வதை அநாசாரமாகக் கொள்கின்றனர். அவர்களுள்ளும் பலர் இப்பொழுது அதனைக் கடிபவ ராகின்றனர்.

9. உறக்கம்:—புலி சிங்கம் முதலிய சில வனவிலங்குகள் மாத்திரமே, புதர் குகை முதலிய இடங்களில் பகலில் ஒளித்துறைந்து உறங்கியிருந்து, இரவில் இரைதேடப் புறப்படுகின்றன. பகற்குருடான கூகை முதலிய சில பக்ஷிகளும், பாழ்ம்பொந்துகளில் தங்கியிருந்து, இரை கொள்ள இரவில் வெளிப்படுகின்றன. மாலையானல், பக்ஷிகளெல்லாம் கூடு புக்கடைகின்றன : வனவிலங்குகள் ஓரிடம் அடைந்து உறங்குகின்றன. சில விருக்ஷங்களும் இலையோடு இலை குவிந்து உறங்குவன போல்கின்றன. அதனல், விருக்ஷங்களில் ஓரின மரம், தூங்குமூஞ்சிமரம் என்றே பெயர் பெறுகின்றது. கள்வர் காவலாளர் முதலிய சிற்சிலர் தவிர, மன்பதைகளும் இரவில் உண்டபின் உறங்கிவிடுகின்றனர். குக்ஷிபாதையின் பொருட்டுப் பகலில் உழைப்பதும், அவ்வுழைப்பின் அயர்ச்சியால் இரவில்

உறங்குவதும், பொதுவில் ஜீவவர்க்கங்களின் பிரகிர்தியாக இராநின்றது. எதாவது ஓர் அவசர நிமித்தமாக ஓரிராமுழுவதும் விழித்திருந்தவர்கள், மறுநாளில் தாங்கள் வழக்கமாகச் செய்யும் தொழிலைச் செய்ய இயலாமல் இடர்ப்படுவது இயல்பு. சில தேசங்களில் சில குற்றங்களுக்குக் கண்ணிரப்பையைச் சேதித்துவிடுகிற தண்டம் விதிக்கப்படுகின்றது. அவ்வித தண்டம் பெற்றவர் உறக்கம்பிடியாமல் சிலநாளில் மரணம் அடைகின்றனர். இடையிடையில் ஆறவிடாமல், எந்நேரமும் இயக்கப்படும் இயந்திரங்கள், விரைவில் பழுதடைந்து பயனற்றன ஆகின்றன. ஆகவே, இளைப்பாறி அயர்ந்து நித்திரை செய்வது, ஜீவவர்க்கங்கள் அனைத்திற்கும் அவசியம் என்பது தெளியப்படும். பகலில் தொழில் செய்து உழைக்கும்போது சில தாதுக்கள் தேய்தலாய்க் கழிகடையாகின்றன. அவை, இரவில் நாம் அயர்ந்து நித்திரை செய்கையில், இரத்தவோட்டத்தினுல் மறுபடியும் சரிவர நிரம்பி, மறுநாள் தேக உழைப்பிற்கு ஏற்றன வாகின்றன. உற்று நோக்கின், உறக்கமே, உழைத்துப் பழுதுற்ற உடலைச் சீர் செய்யும் சிற்பி: அன்றுடம் மரித்தலான தாதுக்களை உயிர்ப்பிக்கும் சஞ்சீவி: உழைப்பால் வந்த அயர்ச்சியைப் போக்கும் உத்தம பரிகாரி: வாடிய மேனியை மாற்றேற்றி மினுக்கிக் காட்டும் பரிசனவேதி. இரவைப் பகலாக்கும் மாணக்கர்க்கு, உறக்கமே, பகலை இரவாக்கிக் கொடுக்கும் மாந்திரிகன்.

உறக்கத்துக்கு உரிய காலம் இரவே. 'உறங்குவ திராவொழியப் பகலுறக்கஞ் செய்யோம்' என்றூர் தேரையர். பகலினுறங்குவது நோய்க்கிடம். 'பகல் வளரார் நோயின்மை வேண்டுபவர்.' இரவிலும் அர்த்தஜாமம் உறக்கத்துக்கு மிகவும் இன்றியமையாதது. 'சேமம் புகினும் சாமத் துறங்கு.' நள்ளிரவுக்குப் பின்னுல் இரண்டு

நாழிகை உறங்குவதினும் நள்ளிரவுக்கு முன்னால் ஒரு நாழிகை உறங்குவது உத்தமம் என்றது ஒரு இங்கிலீஷ்ப் பழமொழி.

அதிகமாக உறங்குவதும், சோம்பலுக்கும் அதனாலுளவாகின்ற குற்றங்களுக்கும் நோய்களுக்கும் காரணமாகும். அதனாலன்றோ 'அனந்தலாடேல்' என்றார் ஔவையார். 'கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகருணனும், தோற்று முனக்குப் பெருந்துயில்தான் தந்தானோ, ஆற்ற வனந்தலுடையாய்' என்றவாறு, வேண்டிய அளவுக்கு அதிகமாக உறங்குகின்றவர்களே, நம்மவர்கள் மூதேவிக்கு உறைவிடமாக உரைப்பர். உறங்கும் அளவானது, அவரவருடைய தேகநிலைமைக்கேற்றதாயினும், சராசரியில் ஏழுமணி நேரம் போதுமானதென்று சுகாதார நிபுணர்கள் உணர்த்துகின்றனர்.

'பொழுதோடு படுத்துறங்கிப் பொழுதோடு எழுவதால் ஆரோக்கியமும் ஐசுவரியமும் அறிவின் தெளிவும் உண்டாகும்' என்றது ஒரு ஆங்கிலேயப் பழமொழி. நமது மருத்துவ நூலும் அதிகாலையில் விழித்தெழுவதைக் குறித்து,

> "புத்தி யதற்குப் பொருந்து தெளிவளிக்கும்
> சுத்த நரம்பினறற் றூய்மையுறும்—பித்தொழியும்
> தாலவழி வாதபித்தம் தத்தநிலை மன்னுமதி
> காலைவிழிப் பின்குணத்தைக் காண்"

என உரைக்கின்றது. 'வைகறைத் துயிலெழு' என்பது நாம் இளமையிற் கற்ற பழம் பாடம். ஒன்பது அல்லது பத்து மணிக்குப் படுத்துக்கொண்டால் நான்கு அல்லது ஐந்து மணிக்கு எழுதலாகும். அர்த்தராத்திரியில் விழித்துக்கொண்டு நெடுநேரம் தூக்கம் பிடியாம விருப்பவர்கள், அதிகாலையில் விழித்தெழும் வழக்கத்தை அனுஷ்டிப்பாராயின், அங்ஙனம் நித்திரையின் இடையில் எழா

மல் நல்ல நித்திரை செய்பவராவர். லௌகிக காரியங்களுக்கு உண்டாகிற இடையூறுகளாலும் வேறு மனக் கவலைகளாலும் உறக்கம் பிடியாதவர்கள், உறக்கத்தினிமித்தம், சாராய முதலிய லாகிரி வஸ்துக்களையும், பூரணாதி முதலிய லேகியங்களையும் உண்ணலாகாது. இயற்கையாய் உண்டாகிற நித்திரையே நன்மையைத் தரும். படுக்கும்போது, அன்றுடம் செய்த குற்ற நற்றங்களை ஆராய்ந்து பார்த்து, அன்றன்றளவில் அடைதலான நன்மையின்பொருட்டுக் கடவுளை நமஸ்கரித்து நிச்சிந்தையாகப் படுத்துறங்குவதே நன்மை.

வயிறு நிறைய உண்டபின்பு, உடனே படுத்துறங்குதலால் அமைதியின்மை முதலிய துர்க்குணங்கள் உண்டாகும். ஒன்றும் உண்ணுமல் பட்டினியாய் உறங்கப் புகுவதும் ஆகாது. கனவுகாண்டல் முதலியன இன்றி, மெய்ம்மறந்து உறங்குவதே நல்ல உறக்கம் ஆகும். பலபேர் படுக்கும் அறைகளிலும், மிகவும் தாழ்வான அறைகளிலும், காற்றுத் தாராளமாய்ப் பரவுதல் இல்லாத அறைகளிலும், ஓதமான தரையிலும், படுத்துறங்குதல் ஆகாது. நிலமட்டத்தில் அசுத்தவாயு அளாவி யிருத்தலினுலே, கட்டிலின்மேல் படுத்துறங்குவதே உத்தமம். பலகணி முதலியவற்றின் மூலமாய்க் காற்று நேராக உடலின்மீது வீசும் இடத்தில் படுத்தல் ஆகாது. படுக்கை யறையில், மல்லிகை முதலிய புஷ்ப வகைகளும், மாரிக்காலத்தில் கும்பிச்சட்டி முதலியவைகளும் இருத்தல் ஆகாது.

10. உற்சாகம்:—தேகாரோக்கியம் மாத்திரமே சௌக்கியத்துக்குப் போதியதன்று. உண்டி கொள்ளுதல், உறங்குதல், உழைத்தல் முதலியன செய்யும் சமயங்களில், மனச்சிந்தை யாதொன்றும் இன்றி உற்சாகங் கொண்டிருப்பது, நீடியவாயுள் பெறுவதற்கு அனுகூலமாகும். அழுக்காறு, சீற்றம், மனக்கவலை, அதிக ஆனங்

தம், வெளியிடாத துக்கம் என்றாற்போன்றவை, ஆரோக்கியத்துக்கு இடையூறு தருதலால், இவற்றைக் கடிதல் வேண்டும். இவற்றுள் யாதொன்றினாலேனும் மூளை நரம்புகள் தாக்குண்டு கலங்கினும், அவ்வண்ணங் கலங்குறும்போது, சுவல்பமான ஒரு துன்பமும் பிரமாதமாகத் தோன்றும். இங்ஙனம், அமைதி கெடுதல் காரணமாகப் பல வியாதிகள் தொடரும். ஆகவே, தாது பரீக்ஷையால் நோய்நிதானம் செய்கிற மருத்துவர்கள், 'மனநோய்க்கு மருந்துண்டா?' என விதிர்விதிர்ப்பர். 'அழுதவனுக்கு ஆங்கார மில்லை?' 'மனக்கவலை பலக்குறைவு.' 'மன மயக்கம் ஸர்வ மயக்கம்.'

'சமுசாரக் குட்டு வியாதி ரெட்டு' என்றபடி, சமுசார சஞ்சலத்தினாலும், இராசிக தெய்விகமாக நேரிடும் துன்பங்களாலும், வயது நிரம்பு முன்னரே நரை திரை மூப்பு மேலிடும். 'உமக்கு மிக்க வயதாயும் நரையில்லையே" என்ற சான்றோரை நோக்கிப் பிசிராந்தையார்,

"யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்,
மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்:
யான்கண் டனையரென் இளையரும். வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும். அதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே"

என்றனராம். வயிறுவளர்த்தற் குரிய லௌகிக காரியங்களைச் செய்து முடித்த பிறகு, தினந்தோறும் சற்று நேரம் ஏதாவது வினோத வேடிக்கைகளில் கழிப்பது, மனத்துக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும். நல்ல சரித்திரங்கள் காவியங்கள் முதலியவற்றைப் படிப்பது, மனத்துக்கு உற்சாகத்தை விளைக்கும். இதனோடு ஸங்கீதம்

கேட்பதும், உண்மை நண்பர்களோடு வார்த்தையாடி வம்பளப்பதும், எவ்வகைக் கவலைக்கும் பரமௌஷதம்.

11. **வைத்தியம் செய்துகொள்ளல்**:— சலதோஷம் தலைவலி வயிற்றுக்கடுப்பு வயிறுதள்ளுதல் முதலான சில சில்லறை வியாதிகளுக்கு, உண்டியில் காய்கறி கந்தமூலங் களை ஏற்றபெற்றி வேறுபடுத்திக்கொள்வதே தக்க பரி காரம். அவரவரனுபவத்துக்கு இயைந்தவாறு இங்ஙனம் வேறுபடுத்திக்கொள்வது கஷ்டமன்று. அசாதாரண மான யாதொரு வியாதியின் குறி தேகத்திற் காணப்பட் டால், அது முற்றுகிற வரையில் பராமரிக்கையாக இரா மல், உடனே தக்க வைத்தியரைத் தேடுவதே நன்று. நோயை ஆரம்பத்திற் களையாமல் முற்றவிட்டுப் பரி காரம் தேடுதல், முளையில் நகத்தால் கிள்ளிவிடுவதை முற்றவிட்டுக் கோடரி கொண்டு வெட்டுவதை ஒக்கும். நமது உடற்கூறறிந்தவரிடத்தில் சிகிச்சை செய்து கொள்வதே உத்தமம். கேவலம் ஏட்டுச்சுரைக்காயான வைத்தியரை நம்பாமல், சாஸ்திர ஞானத்தோடு அனுபவ முதிர்ச்சியுமுள்ள விருத்த வைத்தியரிடத்தில் சிகிச்சை செய்து கொள்வதே யுக்தமாகும். '(பால்ய ஜோசியம்); விருத்த வைத்தியம்' என்றது மூதுரை.

> "நோய்நாடி நோய்முத னாடி அதுதணிக்கும்
> வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்பது மருத்துவனுக் குரிய லக்ஷணம்.

12. பழக்க வழக்கம்:—'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டில்.' இளமையில் தேசாசாரமாக ஏறிவிட்ட பழக்க வழக்கங்களைப் பிறகு மாற்றப் புகுவது எவ்விதத்திலும் கேட்டுக்கே ஏதுவாகும். தேசாசாரமான பழக்க வழக் கங்கள் அவ்வத் தேயத்தவருக்குக் காலாந்தரமான அனுபவ முதிர்ச்சியினுல் ஏற்பட்டவை. ஒரு தேசத்திற் ருனே அவ்வம் மாகாணத்தின் சீதோஷ்ண நிலைக்கும்

தானிய தவச விளைவிற்கும் ஏனைச் சுற்றுச்சார்புகளுக்கும் ஏற்றவாருகப் பழக்க வழக்கங்கள் வேறுபடுகின்றன. பாஞ்சால தேசத்தவருடைய உண்டியும் உடையும், சோழ மண்டலத்திலும் பாண்டிமண்டலத்திலும் வசிப்பவர்களுக்குப் பொருந்துமா? மலையாளிகளுடைய நடையுடை பாவனைகள், வங்காள வாசிகளுக்கு ஏற்குமா? 'அரசன் வழிப் பட்டது அவனி,' 'அரசன் எவ்வழி, குடிகள் அவ்வழி" என்பன உண்மையே. ஆயினும், உஷ்ண மண்டலத்தில் வசிக்கின்ற நாம், உத்தர பரிமித மண்டல வாசிகளான நமது துரைத்தனத்தாரது நடையுடை பாவனைகள் அனைத்தையும் ஒரு தலைமுறையில் அப்படியே மேற்கொள்வது யுக்த மாகுமா? அவற்றில் யாதொரு கெடுதியு மில்லாமல் நன்மை தருவனவான சிலவற்றை மாத்திரம், வேண்டு மானுல், தற்கால நாகரிக நிலைமைக் கேற்ப மேற்கொள்வது உசிதமாகும். தங்கள் தங்கள் வீட்டில் பாரம்பரியமாக அனுசரித்துவரும் ஆசாரங்களையும், திடும்பிரவேசமாக மாற்றுதல் கூடாது. காலத்துக் கேற்ற கோலமாகவும், ஜீவனோபாய வேறுபாடுகளுக் கியையவும், உண்டி உடை முதலியவைகளை அவசியமானுல் நாளடைவில் சிறிது சிறிதாக மாற்றிக்கொள்க. தேசாசாரமான உண்டி உடைகளை மாற்றிக்கொள்வதனுல் 'நாம் நாகரிகமுடையவராக மதிக்கப்படுவோம்; நமது தேகாரோக்கியம் விருத்தி யாகும்' என நினைத்து, மாறுவேஷங் கொள்வது, நாடக தாரிகளுக்குரிய வேஷமே யாகும்.

முடிவு:—சிலர் தங்கள் ஆரோக்கியத்துக்குப்போதிய அளவு கவனம் செலுத்துவதில்லை. சிலர், வடக்கே நோக்கி யிருக்கும் காந்த வூசி போன்று, அதே நினைவாக இருப் பார். இவ்விருதிறவர் செய்கையும் ஒன்றற்கொன்று முரண் பாடுடையன வேனும், இவ்விரண்டும் கேட்டைத் தருவன வேயாம். சுகாதார விதிகளை ஒரு சிறிதும் அனுசரியாமல்

பராமரிக்கையா யிருப்பவர்கள், 'உப்பில்லாவிட்டால் தெரியும் உப்பருமை; அப்பனில்லாவிட்டால் தெரியும் அப்பனருமை' என்பதாக, உடலில் ஏதாவது பிரமாதமான வியாதி உண்டான பிறகே, 'என் செய்தோம்? என்னுற்றோம்? மருந்தெங்கே? மருத்துவன் எங்கே?' என நாடுவர். 'நோய்க் கிடங்கொடேல்' என்பதை மறந்து, நோய் வந்தபின் வைத்தியரையும் சுகாதார சாஸ்திரத்தையும் தேடுவது, கண் கெட்டபின் சூரிய நமஸ்காரம் செய்வதை ஒக்கும்.

ஆரோக்கியமே நினைவாக இருப்பவர்கள், சந்தையிலே வேறுபடுவதைக் கண்டு நடுங்கும் வர்த்தகர் போல், காலநிலே வேறுபடுவதைக் கண்டு நடுங்குவர். இவர்கள், 'உட்டினம் உடலே உருக்கிவிடுமோ? சீதளம் சலதோஷத்தை வரவழைக்குமோ?' என்றஞ்சி, வாயுவின் சீதோஷ்ண நிலைமைக் கேற்றவாறு, அப்போதைக்கப்போது, உடை வகைகளையும் உண்டி வகைகளையும் மாற்றிக்கொண்டிருப்பர்: உண்ணும் அளவும் உறங்கும் அளவும், காணி மாகாணியும் ஏறாமல் குறையாமல், இயந்திரம் போன் றியங்குவர். இவர்கள் தின்னாத கடைச்சரக்கு மருந்தில்லை: இவர்க ளறியாத கோரக்கர் வைத்தியமும் இல்லை. ஆரோக்கியமான தேக நிலைமையில் செய்யலான சற்காரிய சிந்தனை யாதொன்றும் இன்றிச் சரீர சுகமே பிரதான நினைவாக இருப்பதால், இவர்கள் செய்கை விரும்பற் பாலதும் அனுசரித்தற் பாலதும் அன்று. பசி தாகம் சீதோஷ்ணம் முதலியவற்றைக் காலத்துக் கேற்றவாறு தாங்கத் தக்க உடலின் தன்மையைக் கெடுத்துக்கொண்டு, இவர்கள் தொட்டாற்சுருங்கியும் நின்றாற்சுருங்கியும் ஆதலால், இவர்களிடம் வியாதி தொடர்வது வெகு சுலபம்: அதை ஓட்டுவது வெகு பிரயாசம்.

அறநெறியில் நின்று பொருளீட்டி இன்ப நுகர்ந்து வீடடைதற்குக் கருவியா யிருப்பது சரீரமாகையால், ஆயுள் பரியந்தம் யாவரும் நோய்க் கிடங்கொடாமல் தங்கள் தங்கள் சரீரத்தைப் பாதுகாப்பது கடமை. சரீரத்தை ஆரோக்கியமாகப் பாதுகாக்கு முறைகளை ஒவ்வொருவரும் அறியவேண்டும். முதலில் அம்முறைகளை நாளடைவில் அனுட்டித்துவரல் வேண்டும். முதலில் அம்முறைகளை அனுட்டிப்பது பிரயாசமாகத் தோன்றும்: அனுட்டானத்தில் வந்துவிட்ட பிறகு யாதொரு பிரயாசமுமின்றிச் சுவபாவம் ஆகிவிடும்.

கூ. மார்க்கோ போலோ

இத்தாலியா தேசத்துப் பிரதான நகரங்களுள் ஒன்றாகிய வெனிஸ் நகரத்தில் பதின்மூன்றாவது நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆண்டிரியா போலோ என்று ஒருவர் இருந்தார். அவர் ஒரு பெரிய கௌரவமுள்ள குடும்பத்திற் பிறந்தவர். அக்குடும்பத்தார்கள் இராஜ்ய நிர்வாக ஸபையில் கௌரவ அங்கத்தினர்களாக இருந்தார்கள். அவருக்கு மார்க்கோ, நிகோலோ, நேபியோ என்று மூன்று குமாரர்கள் இருந்தார்கள். நிகோலோ என்பவருடைய குமாரரே மார்க்கோ போலோ என்பவர். அந்த மார்க்கோ முதலிய மூவரும் வியாபாரத்தைத் தம்ஜீவனோபாயமாக வைத்துக்கொண்டனர்.

நிகோலோ, நேபியோ என்னும் இருவரும் 1260-ம் வருஷத்தில் கான்ஸ்டாண்டிநோபிளில் இருந்தார்கள். அங்கிருந்து வியாபார நிமித்தமாகக் கிரிமியாவுக்குச் சென்று அங்கே சிலகாலமிருந்து, பிறகு பாரஸீகமார்க்கமாகச் சீன

தேசத்தை அடைந்தார்கள். அப்போது அத்தேசத்து அரசராயிருந்த கூப்ளேகான் என்பவர் அவ்விருவரிடத்தும் அன்புபாராட்டி அவர்கள் சொல்லியவற்றை நன்குமதித்து விரும்பிக் கேட்டனர். அவ்வரசர் தம் தேசத்து ஜனங்களுக்குக் கல்வியறிவூட்டவேண்டுமென்றும் கிறிஸ்தவமதபோதனை செய்ய வேண்டுமென்றும் கருதி அவற்றுக்குத் தக்கவர்களாகிய நூறு கல்விமான்களை அனுப்ப வேண்டுமென்று உரோமா புரியிலுள்ள போப்புக்கு ஒரு கடிதம் எழுதிக் கொடுத்து அவர்களை அனுப்பினர். அங்ஙனமே, அவர்கள் உரோமாபுரி போய்ச் சேர்ந்தபோது, அந்தப்போப்பின்காலம் ஆகிவிட்டதாகக் கேள்வியுற்று மிகுந்த வருத்தமடைந்து வெனிஸ் நகரத்துக்குத் திரும்பினர்கள். ஆதலால், அரசருடைய எண்ணமும் நிறைவேறவில்லை. அப்போது நிகோலோவின் மனைவி இறந்துவிட்டாள். அவருடைய குமாரராகிய மார்க்கோபோலோவுக்குப் பதினைந்தாம் பிராயம் நிகழ்ந்தது. அங்கே இரண்டு வருஷம் இருந்துவிட்டு, 1271-ம் வருஷத்தில், அந்தச் சகோதரிருவரும் மார்க்கோபோலோவை அழைத்துக்கொண்டு யாத்திரையாகப் புறப்பட்டு ஏகரென்னுமிடம் போய்ச் சேர்ந்தார்கள். அங்கே அப்போது டடால்டோ (Tadaldo) என்பவர் போப் ஸ்தானத்தை வகித்து வந்தார். கூப்ளேகான் தம்மிடம் சொல்லிய கருத்தை அவருக்குத் தெரிவித்து 100 கல்விமான்களை அனுப்பும்படிவேண்ட, அவர் இரண்டு பேர்களை மட்டும் அனுப்பினர். பிறகு, நிகோலோவும் தம்பி முதலியவர்களும் அவ்விடம் நீங்கி, முதலில் ஒரு வழியாகச் சென்று, பிறகு, படக்ஷான் வழியாகச் சென்றதில், மார்க்கோபோலோவுக்குச் சரீர சௌக்கியமில்லாமலிருந்தது. பிறகு, அவர்கள் பாமிர்வழியாகச் சென்று சீனதுருக்கியை அடைந்து அங்கிருந்து சென்று கோபியென்

னும் பாலே வனத்தைத் தாண்டிச் சீனுவின் வடமேற்கு வழியாக, டேன்ஸட் என்னும் இடம் வந்து சேர்ந்தார்கள்; 1275-ம் வருஷத்தில் கூப்ளேகானைப் பார்த்தார்கள். நெடுங்காலம் பிரிந்திருந்த அவர்களை அவ்வரசர் மிகவும் ஆதரவோடழைத்து உபசரித்து மார்க்கோபோலோ விடம் மிக்க அன்பு பாராட்டினர். மார்க்கோபோலோ வுக்கு அப்போது பிராயம் இருபத்தொன்று. மார்க்கோ போலோ அங்கிருக்கும்போது அங்கு வழங்கிய பல பாஷைகளையும் கற்றுத் தேர்ந்து நல்ல சாமர்த்தியமுடை யவராகவே, அவரை அவ்வரசர் ஓர் உயர்ந்த உத்தி யோகத்தில் அமர்த்தினர்; உத்தியோக முறைமையில், ராஜாங்க சம்பந்தமான ஒரு விஷயத்துக்காக அவரைத் திபேத்து வழியாகப் பர்மாவுக்கனுப்பினர். அவர் அங்குப் பார்த்த விசேஷங்களை யெல்லாம் எழுதிவந்து கூப்ளே கானுக்குக் காட்டிப் பெருமகிழ் விளைத்தார்; ஒரு சமயம் யாங்சௌ என்னும் மாகாணத்துக்குக் கவர்னராக விருந் தார். பற்பல சமயங்களில், காரகோரம், பர்மா, தென் னிந்தியா முதலிய இடங்களுக்குத் தூதராக அனுப்பப் பட்டிருந்தார். இந்தச் சமயங்களில் அவருடைய தந்தை யும் சிறிய தந்தையும் என்ன செய்துகொண்டிருந்தன ரென்பது விளங்கவில்லை. தென்னிந்தியாவுக்குத் தூதராக வந்த சமயத்திலேதான் மார்க்கோபோலோ நம் தமிழகத் தைப் பார்த்திருக்க வேண்டும். தம் ஜன்மதேசத்துக்குப் போகவேண்டுமென்று கேட்டபோது, கூபிலேகான் சம்ம திக்கவில்லை. அந்தச்சமயம் பாரஸீக தேசத்து அரசருக் குச் சீனதேசத்துப் பெண் ஒருத்தியை மணஞ்செய்விப்ப தாக வார்த்தை நடந்தது. அது மார்க்கோபோலோ இந்தி யாவிலிருந்து திரும்பிவந்த சமயம். இந்த விவாகத்தை நடத்துவதில் கூப்லேகான் மிகுந்த பிடிவாதமாயிருந்தா ராதலால், மார்க்கோ போலோவையும் சேர்த்தனுப்ப

வேண்டுமென்று பாரஸீகர் விரும்பியபோது அவரை அனுப்ப இஷ்டமில்லாதவரா யிருந்தும், அவர் போகா விட்டால் மணவினை தடைப்படுமோ என்று ஐயுற்று அவரை அனுப்பினர். 1292-ம் வருஷத்தில் சீனதேசத்துக் கன்னிகையும் அக்கன்னிகையைச் சேர்ந்தோரும் மார்க்கோபோலோவும் பாரஸீகதேசத்துக்குப் பிரயாணமாகிக் கப்பலேறிச் சென்றார்கள். வழியில் சிலகாலம் சுமத்ரா தீவில் தாமதித்திருந்துவிட்டு 1294-ம் வருஷத்தில் பாரஸீகம் சேர்ந்தார்கள். அவர்கள் சேருமுன் உத்தேசித்த அரசர் இறந்துவிட்டபடியால், சீனதேசத்துப் பெண்ணை அவ்வரசர் குமாரருக்கே மணஞ் செய்வித்தார்கள்.

மார்க்கோபோலோவும் அவர் தந்தையும் 1295-ம் வருஷத்தில் வெனிஸ் நகரமடைந்தார்கள். இவ்விருவரும் மார்க்கோபோலோவிடம் எப்போது வந்தார்களென்பது விளங்கவில்லை. பிறகு, தம் தேசத்தில் உள்ள ஸெண்ட் ஜான் கிரிஸாஸ்டம் (St. John Chrisostum) என்னும் நகரத்துக்கு வந்தார்கள். தம் தேசத்தைவிட்டு அயலிடங்களுக்குப் போய்த் திரும்பிவருவதற்குள் அவர்கள் அடைந்த மாறுபாடுகள் பல. அவர்கள் பேச்சும் உடையும் நடையும் மற்ற நாகரிக குணங்களும் முற்றும் மாறுகவே இருந்தன. ஆதலால், அவர்களின் இனத்தார்கள் அவர்களைத் தெரிந்து கொள்ளவில்லை. பிறகு, அவர்கள் தங்களை எவ்வகையாகத் தெரிவித்துக்கொண்டார்களென்பது முதலிய விவரங்கள் ஜான் பாப்டிஸ்ட் ரொமேஸியா (John Baptist Romesia) என்பவர் மார்க்கோபோலோவைப்பற்றி எழுதியிருக்கும் சரித்திரத்தால் நன்கு விளங்கும்.

பிறகு, வெனிஸுக்கும் ஜிேனுவாவுக்கும் நேர்ந்த சண்டையில் காஸோலா என்னுமிடத்தில் வெனிஸ் கப்பல் தோல்வியுற்றது. அதில் மார்க்கோபோலோ கைதி

செய்யப்பட்டு 1299-ம் வருஷத்தில் விடுதலையடைந்தார். கைதியாயிருந்தகாலத்தில் தம்முடனிருந்த ரஸ்டிஷியானோ என்பவரிடம், கீழ்த்தேசத்தில் தாம் போய்ப்பார்த்த விசேஷங்களையெல்லாம் தெரிவித்தார். ரஸ்டிஷியானோ கல்விப்பயிற்சியுள்ளவராதலால் மார்க்கோபோலோவின் யாத்திரை விவரங்களையெல்லாம் எழுதிவைக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கூறினர்.

அங்ஙனமே, மார்க்கோபோலோ எல்லா விவரங்களையும் சொல்ல, ரஸ்டிஷியானோ எழுதிவைத்ததாகத் தெரிகிறது. மார்க்கோவைப்பற்றி அநேக கதைகள் சொல்வதுண்டு. அவரை அவர் தேசத்தார் மார்க்கோ மில்லியானி என்று பரிகாசமாக அழைப்பதுண்டு. மார்க்கோவின் குடும்ப ஸ்திதியைப்பற்றி ஒன்றும் நன்றாக விளங்கவில்லை. ஆனல், டோனடா (Donata) என்ற பெயரையுடைய ஒரு மனைவியும் மூன்று பெண்களு மிருந்தார்களென்று தெரிகிறது. அவர் இறந்தபின் அவருடலை லாரென்ஸோ (Lorenzo) என்னும் கிறிஸ்தவ ஆலயத்தில் அவர் விரும்பியிருந்தபடி அடக்கஞ் செய்தார்கள். 1324-1325-ல் அவர் இறந்திருக்க வேண்டுமென்றும், அப்போது அவருக்குப் பிராயம் 71 ஆக இருக்கவேண்டுமென்றும் தெரிகிறது.

அவர் இறந்தபோது மரணசாஸனம் ஒன்று எழுதிவைத்தார். அஃது இப்போதும் ஸெண்டு மாஷெஸ் (St. Mash's) என்னும் புஸ்தக சாலையில் காப்பாற்றி வைக்கப்பட்டிருக்கிறது. அவர் இறந்தபின் அவர் தேசத்தார்கள் தங்களுக்கு அவரிடமிருந்த பிரீதியை நன்கு புலப்படுத்தி விசேஷ உற்சவங் கொண்டாடினர்கள். மாஸ்க் என்னும் விளையாட்டுக் காலத்தில் ஒருவன் மார்க்கோவைப் போல வேஷந்தரித்து, அவர் செய்தவற்றை யெல்லாம் ஜனங்களுக்குச் சந்தோஷம் உண்டாகும்படி சொல்லிக் காட்டி

நடிப்பதுண்டு. அவருடைய உருவப்படம் ஒன்று இருக்கிறது. ஆனால், அஃது உண்மையானதன்று. மூன்று போலோக்களும் திரும்பி வந்தபோது வெனிஸ் ஜனங்கள் அவர்களை மறுத்த இடமாகிய கார்போலோ என்னும் இடத்தின் ஒரு பகுதி இன்றைக்கு மிருக்கிறது. அஃது இக்காலத்தில், கோராடிஸாபயோ நேரா என்னும் பெயரால் வழங்குகிறது. ஐரோப்பியர்களுக்குச் சீனாவைப் பற்றி முதலில் தெரிவித்தவர் இவரே.

சீனா, பர்மா, அந்தமான் தீவுகள், இலங்கை முதலிய இடங்களில் இவர் சஞ்சாரம் செய்திருக்கிறாரென்பது முன்னமே தெரிவிக்கப்பட்டது. அக்காலத்தில், ஐரோப்பியர்களிற் பெரும்பான்மையோர் இந்தியாவைப்பற்றிய விஷயங்களை யெல்லாம் பொய்க் கதைகளென்றே எண்ணிக்கொண்டிருந்தார்கள். அவை பொய்யல்லவென்றும் மெய்யேயென்றும் அவர்களுக்கு விளக்கியவர் இவரே. ஆபிரிக்காவின் சில பாகங்களிலும் இவர் சஞ்சரித்ததுண்டு. இவர் எழுதிய ஒரு புஸ்தகத்தை ஆதாரமாகக்கொண்டு மத்திய ஆசியாவையும் இந்தியாவையும் விளக்கக்கூடிய படம் ஒன்று 1375-ம் வருஷத்தில் எழுதப்பட்டது. அந்தப் படம் பாரிஸ் நகரத்துப் புஸ்தகசாலையில் இன்றும் இருக்கிறது. அதற்கு, காடலன் படம் என்று பெயர். அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பஸ் என்பவர் அந்தப் படத்தால் அநேக விஷயங்களைத் தெரிந்துகொண்டார். இவர் நம் தேசத்துக்கு வந்தபொழுது தெரிந்துகொண்டதாக எழுதியிருக்கும் ஊர்களின் விவரம் முதலியவைகள் தமிழகம் முதலிய பத்திரிகைகளிலும் வேறு நூல்களிலும் விரிவாக எழுதப்பட்டிருத்தலின், அவைகளை அங்கே கண்டுகொள்க.

இருப்புப்பாதைகள் தந்திகள் புகைக்கப்பல்கள் ஆகாயவிமானங்கள் முதலிய ஸௌகரியங்கள் சிறிது

மில்லாத அந்தக்காலத்தில் வேறுதேசங்களில் ஸஞ்சாரஞ் செய்வதில் எவ்வளவு சிரமமிருக்குமென்பது சொல்ல வேண்டாமன்றோ? அப்படிப்பட்டகாலத்தில் தேசபாஷையும் நடையுடைபாவனைகளும் முற்றும் மாறுயிருக்கிற நெடுந்தூரத்திலுள்ள பலதேசங்களுக்குச்சென்று அங்கங்கே பலவருஷங்கள் வசித்து அந்தஅந்தத் தேசபாஷைகளைக் கற்று அங்குள்ளவர்களோடு நெருங்கிப்பழகி அங்குள்ள அரசர்முதலானவர்களுடைய நன்குமதிப்பையும்நன்னம்பிக்கையையும் அடைந்துராஜாங்கத்தில்பெரிய உத்யோகத்தைப் பெற்று மேன்மையுற்று விளங்குவது ஸாதாரணமானதன்று. அங்ஙனம்விளங்கிய மார்க்கோ போலோவின் மனவுறுதியும் நுண்ணறிவும் நண்புடைமையும் எப்படியிருக்குமென்பதை ஊகிக்கவேண்டும். இதனுல், தேசசஞ்சாரம் ஒருவனுடைய அறிவுவளர்ச்சிக்கும் அதனுல் அவனுடைய தேசமுன்னேற்றத்திற்கும்காரணமாகிறதென்பது நன்குவிளங்குகிறது.

எ. பாண்டவர்களின் படைப் பயிற்சி

வைசம்பாயனர் ஜனமேஜயரைப் பார்த்துச் சொல்லுகிறுர். "பீஷ்மர், அந்தத் துரோணரைக் குருவாக அங்கீகரித்தார். அரசரே! பீஷ்மர், பாண்டவர்களுடன் அந்தப் பேரன்மார்களனைவரையும் அழைத்து, 'இவர்கள் உமது சிஷ்யர்கள்' என்று சொல்லிப் பலவகையான தனங்களோடு சாஸ்திரப் பிரகாரம் துரோணருக்கு அர்ப்பணம் செய்தார். அப்போது, துரோணர், புத்திமான்களுட் சிறந்தவராகிய பீஷ்மரை நோக்கி, 'ஆயுதங்கள் தெரிந்தவரும்

சிறந்த அறிவுள்ளவரென்று எல்லாராலும் மதிக்கப்பெற்ற வருமாகிய கிருபாசாரியரும் இருக்கிறார். அரசரே! நான் இருப்பதில் அந்தப் பிராமணர் மனவருத்தத்தை அடைவாராயின் நான் உங்களிடம் கொஞ்சம் தனத்தை யாசித்துப்பெற்றுக்கொண்டு ஸந்தோஷமடைந்து வந்தபடியே என் ஆச்சிரமத்திற்குச் செல்வேன்' என்று சொன்னார். இவ்வாறு சொன்னவுடன், யுத்தவீரரிற் சிறந்தவரான பீஷ்மர், பிராம்மணஶ்ரேஷ்டரும் ஆசாரியர்களில் முதன்மையானவரும் ஆயுதம் தெரிந்தவர்களுள் மேலானவருமாகிய துரோணரை நோக்கி, 'கிருபர் இருக்கட்டும். அவர், நான் எப்பொழுதும் பூஜிப்பதற்கும் போஷிப்பதற்கும் உரியவர். நீர் என்னுடைய பேரன்மார்களுக்குக் குருவாக இரும். உம்மைத்தான் ஆசாரியராக நான் நினைக்கிறேன். இந்தக்குமாரர்களை அங்கீகரித்துக்கொள்ளும். இவர்களை எப்போதும் வைத்துக்கொண்டு அஸ்திரங்கள் தெரிந்தவர்களாகச் செய்யக்கடவீர்' என்று சொன்னார். மனிதர்களிற் சிறந்தவரும் மஹாபராக்ரமசாலியுமான துரோணர் பீஷ்மரால் கௌரவிக்கப்பட்ட பிறகு, கௌரவர்களின் கிருஹத்தில் அர்க்கியம் பாத்யம் முதலிய உபசாரங்களை அடைந்து களைப்பாறினார். அந்தக்குருவானவர் களைப்பாறினபின், பீஷ்மர், தம்பேரன்மார்களாகிய குருவம்சபுத்திரர்களை அழைத்துக்கொண்டு வந்து பலவகைப்பொருள்களுடன் சிஷ்யர்களாகக்கொடுத்தார். பிரபுவாகிய பீஷ்மர், வேண்டிய பண்டங்களினால் செம்மையாக நிரப்பப்பட்டதும் தனதானியங்கள் நிரம்பினதுமாகிய வீட்டை மிகுந்தஸந்தோஷத்துடன் துரோணருக்குக் கொடுத்தார். சிறந்தவில்லாளியான அந்தத் துரோணர் மனமகிழ்ந்து பாண்டுபுத்திரர்களும் திருதராஷ்டிரபுத்திரர்களுமாகிய அந்தக்கௌரவர்களைச் சிஷ்யர்களாக ஏற்றுக்கொண்டார். துரோணர் ஸந்தோஷமடைந்து

அவர்களெல்லாரையும் அங்கீகரித்து யாருமில்லாமல் தாம் மட்டும் தனித்திருக்கையில் பாதங்களில் வந்தனஞ்செய்த அவர்களை நோக்கி, 'குற்றமற்றவர்களே! நான் விரும்பிய காரியம் ஒன்று என்னுள்ளத்தில் இடைவிடாமலிருக்கிறது. நீங்கள் அஸ்திரங்களில் தேர்ந்தபின் எனக்கு அதனை நிறைவேற்றவேண்டும். அதைப்பற்றி உறுதி சொல்லுங்கள்' என்று சொன்னார். ஜனமேஜயராஜாவே! அதைக்கேட்டு அந்தக் கௌரவர்கள் ஒன்றும் பேசாமலிருந்தனர். வீரரே! அர்ச்சுனன் மட்டும் அவர்கேட்டதையெல்லாம் வாக்குத்தத்தம் செய்தான். அதனால், துரோணர் அப்போதே அர்ச்சுனனைப் பலமுறை உச்சிமோந்து அன்புடன் தழுவிக்கொண்டு உடனே ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார். துரோணர் அசுவத்தாமாவை அழைத்து, 'அர்ச்சுனனை உனக்குச் சிநேகிதனாக அறி. என்னால் கொடுக்கப்பட்ட இவனை நீ வாங்கிக்கொள்' என்று சொன்னார். பாண்டுபுத்திரனாகிய அர்ச்சுனன், 'நல்லது, நல்லது' என்று சொல்லி அசுவத்தாமாவைக் கட்டிக்கொண்டு துரோணரைப் பார்த்து, 'பிராம்மண சிரேஷ்டரே! இன்று முதல் நியாயப்படி உமக்கு உட்பட்டவனாக இருக்கிறேன். நான் சிஷ்யன். பிராம்மணோத்தமரே! உமது அருளினால் ஜீவிக்கிறேன்' என்று சொல்லி அப்போதே அவர் பாதங்களைப் பிடித்துக்கொண்டான். பிறகு, வீரரான துரோணர் பாண்டவர்களுக்குத் தேவ சம்பந்தமும் மனித சம்பந்தமுமாகிய அனேகவிதமான அஸ்திரங்களைக் கற்பித்தார். பரதர்களுள் சிறந்தவரே! யாதவர்களும் அந்தத்தேசத்தவரும் இன்னும் பலதேசத்தவருமாகிய அனேக ராஜகுமாரர்களும் அரசர்களும் வந்துசேர்ந்து அஸ்திரவித்தைக்காகப் பிராமண சிரேஷ்டரான துரோணரை அடைந்தார்கள். அப்போது, தேரோட்டுகிறவனுக்கும் ராதையென்பவளுக்கும் புத்

திரனுகிய கர்ணன் துரோணரைக் குருவாக அடைந்தான். மிகவும் பெருமைக்காரனுகிய அந்தத் தேர்ப்பாகன் மகன் அர்ச்சுனன்மீது பொருமையுற்றுத் துர்யோதனனிடம் சேர்ந்துகொண்டு பாண்டவர்களை அவமதித்தான். அதனுல், அவன் தனுர்வேதம் கற்கவேண்டுமென்கிற ஆசையோடு துரோணரை அடைந்தான். பாண்டுவின் புத்திரனுகிய அர்ச்சுனன் அப்யாஸத்தினுலும் புஜபலத்தினுலும் விடாமுயற்சியினுலும் அஸ்திரவித்தையிலுள்ள ஆசையினுலும் அவர்களெல்லாரிலும் சிறப்புற்றவனுனன். அர்ச்சுனன், அஸ்திரப்பிரயோகம் ஒன்ருயிருந்தும் லாகவமாகச் செய்வதிலும் செய்கைக்குத் தக்கபடி அங்கங்களை அமைத்துக்கொள்வதிலும் எல்லாச்சிஷ்யர்களிலும் மேலாக இருந்தான். துரோணர், உபதேசிக்குங் காலங்களில், இந்திர புத்திரனுகிய அர்ச்சுனனை ஒப்பற்றவனென்று நினைத்தார்; இவ்வாறு எல்லாக் குமாரர்களுக்கும் பாணங்களையும் அஸ்திரங்களையும் கற்பித்தார். சிறந்த புத்தியுள்ளவனும் அஸ்திரங்கள் தெரிந்தவர்களில் மேலானவனுமாகிய அந்த அர்ச்சுனன், விசேஷங்களைத் தெரிந்துகொள்ளும் தருணங்களில் அந்த ஆசாரிய புத்திரரைவிட்டுத் தனித்துப் பிரியவில்லை. அர்ச்சுனன் குருவைப் பூஜிப்பதில் மிகுந்த முயற்சியை எடுத்துக்கொண்டான்; அஸ்திரங்களிலும் அதிக ஊக்கம் வைத்தான்; துரோணருக்குப் பிரியமாகவுமிருந்தான். அர்ச்சுனன் பாணங்களைப்பற்றியும் அஸ்திரங்களைப்பற்றியும் எப்போதும் முயற்சியோடிருப்பதைக்கண்டு, துரோணர் சமையற்காரனை அழைத்து ரகஸ்யமாக, 'நீ ஒருபோதும் அர்ச்சுனனுக்கு மறைவான இடத்தில் அன்னம் போடவேண்டாம். இப்படி நான் சொன்னதை நீ அருச்சுனனிடத்தில் சொல்லக்கூடாது' என்று சொன்னர். பிறகு, ஒரு காலத்தில் அர்ச்சுனன் புசித்துக்கொண்டிருக்கையில் காற்று மிகுதி

யாக அடித்தது. அதனுல், அங்கே எரிந்துகொண்டிருந்த அந்தத்தீபம் அவிக்கப்பட்டது. அர்ச்சுனன் சாப்பிட்டுக் கொண்டேதான் இருந்தான். அந்தத் தேஜஸ்வியான அர்ச்சுனனுடைய கை வாயைத்தப்பி வேறிடம் செல்ல வில்லை. சிறந்த கைகளையுடைய அந்தப் பாண்டுபுத்திரனுகிய அர்ச்சுனன் அது அப்யாஸத்தால் உண்டான தென்று நினைத்து அப்யாஸத்தைச் செய்யக்கருதி ராத்திரியிலும் விற்பயிற்சி செய்துகொண்டிருந்தான். பாரதரே! அவனுடைய வில்லின்நாண் உள்ளங்கையில் உரைந்ததனுலுண்டான சத்தத்தைக் கேட்டுத் துரோணர் எழுந்துவந்து அவனைத் தழுவிக்கொண்டு, 'இந்த உலகத்தில் உன்னைப்போன்ற வில்லாளி வேருெருவன் இல்லாமலிருக்கும்படி பயிற்சி செய்விக்கப்போகிறேன். இதனை உனக்கு உண்மையாகச் சொல்லுகிறேன்' என்று சொன்னுர்.

பிறகு, துரோணர் அர்ச்சுனனை மறுபடியும் குதிரைச் சண்டையிலும் யானைச்சண்டையிலும் தேர்ச்சண்டையிலும் கால்நடை யுத்தத்திலும் பழக்கினுர். அவர், கௌரவர்களுக்குக் கதாயுத்தத்திலும் கத்திச்சிலம்பத்திலும் தோமரங்கள் ஈட்டிகள் சக்தியாயுதங்கள் ஆகிய இவற்றின் சிலம்பத்திலும் பல ஆயுதங்கள் கலந்த சண்டையிலும் கற்பித்தார். துரோணருடைய அந்த ஸாமர்த்தியத்தைக் கேள்வியுற்றுத் தனுர்வேதத்தைக்கற்க ஆவலுடன் அரசர்களும் அரசகுமாரர்களும் ஆயிரக்கணக்காக வந்து சேர்ந்தனர். ஆயுததாரிகளிற் சிறந்தவரான துரோணர் அவர்களெல்லாருக்கும் சிக்ஷை சொல்லிவைத்தார். எப்போதும் சீறின மனமுள்ள துரியோதனனும் பீமனும், அப்போது, துரோணருக்குக் கதைபயிலும் மாணுக்கர்களாயிருந்தனர். அசுவத்தாமா மந்திரத்தியான ரகஸ்யங்களெல்லாவற்றிலும் மேலாக இருந்தார். அப்படியே இரட்

டையராகிய நகுலஸஹதேவர்களிருவரும் மற்றவீரர்களைக் காட்டிலும் மேலான சிலம்பக்காரர்களாக இருந்தனர். யுதிஷ்டிரர் தேர்ச்சண்டையில் சிறந்தவரானார். அர்ச்சுனன் எல்லாவற்றிலும் புகழ்பெற்றுக் கடல் சூழ்ந்த உலகத்தில் தேராளிகளின் அதிபதிகளுக்கும் அதிபதியாகியும், புத்தியிலும் யோகசக்தியிலும் பலத்திலும் உற்சாகத்திலும் எல்லா அஸ்திரங்களிலும் தேர்ச்சியடைந்தவனாகியும், அஸ்திர வித்தையிலும் குருபக்தியிலும் எல்லாரிலும் மேலாக இருந்தான். அஸ்த்ரோபதேசம் எல்லாருக்கும் ஒன்றாக இருந்தும், அந்த வீரனாகிய அர்ச்சுனன் ஒருவனே அவயவங்களின் அமைப்பினால் எல்லாக்குமாரர்களிலும் மேலான வீரனாக இருந்தான். பலத்தில் அதிகரித்த பீமஸேனன் மேலும் வித்தையில் தேர்ந்த அர்ச்சுனன்மேலும் துராத்மாக்களாகிய திருதராஷ்டிர புத்திரர்கள் ஒன்றுசேர்ந்து பொறாமையுற்றனர். எல்லா வித்தைகளிலும் அஸ்திரங்களிலும் கற்றுணர்ந்த அவர்களெல்லாரையும் கூட்டிப் புருஷஶ்ரேஷ்டராகிய துரோணர் லக்ஷ்யத்தை அடிக்கும் விஷயத்தில் பரீக்ஷை செய்யக்கருதி, குமாரர்களுக்குத் தெரியாமல் சிற்பிகளாற் செய்யப்பட்ட பாஸபக்ஷியைப் போன்ற ஒரு பதுமையை மரத்தின் நுனியிலேற்றி அதை அவர்களுக்குக் குறியாகக் காண்பித்தார். அவர், 'நீங்களனைவரும் சீக்கிரமாக வில்லுகளெல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு அம்புகளைத்தொடுத்து இந்தப் பாஸம் என்னும் பக்ஷியைக் குறியிட்டு நில்லுங்கள். என் சொல் புறப்படுங்காலத்தில் இதன் சிரஸைத் தள்ளிவிட வேண்டும். ஒவ்வொருவனாகக் கட்டளையிடுவேன். புத்திரர்களே! அவ்வாறு செய்யுங்கள்' என்று சொன்னார்.

பிறகு, அங்கிரஸ்வம்சத்தாரில் சிறந்தவராகிய துரோணர் முதலில் யுதிஷ்டிரரை நோக்கி, 'பிறரால் வெல்ல முடியாத வீரனே! பாணத்தைத்தொடு; என்

சொல்லின் முடிவில் அதைவிடு' என்ருர். குருவின் வாக்கியத்தினுல் தூண்டப்பட்ட வீரரான யுதிஷ்டிரர், உடனே, முதலில் வில்லையெடுத்துப் பாஸபக்ஷியைக் குறிவைத்து நின்ருர். பரதஸ்ரேஷ்டரே! பிறகு, துரோணர், வில்லை வளைத்துக்கொண்டிருக்கும் அந்தக் கௌரவ புத்திரராகிய யுதிஷ்டிரரை நோக்கிச் சற்றுநேரம் பொறுத்து, 'ராஜகுமாரனே! மரத்தின் நுனியிலிருக்கும் பாஸபக்ஷியை நீ பார்க்கிருயா?' என்று கேட்டார். யுதிஷ்டிரர், 'பார்க்கிறேன்' என்று ஆசாரியருக்கு மறுமொழி சொன்ஞர். மறுபடியும், சற்றுநேரம் பொறுத்து, துரோணர், 'இந்த மரத்தையும் என்னையும் உன்சகோதரர்களை யும் பார்க்கிருயா?' என்று யுதிஷ்டிரரைக் கேட்டார். அதற்கும் அந்த யுதிஷ்டிரர், 'இந்த மரத்தையும் உங்களை யும் என்ஸஹோதரர்களையும் பாஸபக்ஷியையும் பார்க் கிறேன்' என்று பலமுறை சொன்ஞர். துரோணர், மனத் தில் அதிருப்தியுடன், 'இந்த லக்ஷயம் உன்ஞல் அடிக்க முடியாது' என்றிகழ்ந்து, அவரைப் போகும்படி சொன் ஞர். பெரும் புகழ்பெற்ற துரோணர், பிறகு, மற்றச் சிஷ்யர்களாகிய துரியோதனன் முதலான திருதராஷ்டிர புத்திரர்களையும் பீமன்முதலியவர்களையும் அன்னிய தேசத்து அரசர்களையும் பரீக்ஷிப்பதற்கு யுதிஷ்டிரரைக் கேட்ட முறையாகவே கேட்டார். எல்லாரும், 'எல்லா வற்றையும் பார்க்கிருேம்' என்று சொன்னபோது, அவர் கள் அவரால் நிந்திக்கப்பட்டார்கள்.

பிறகு, துரோணர் சிரித்துக்கொண்டு அர்ச்சுனனைப் பார்த்து, 'நீ இப்போது அடிக்கவேண்டும். இந்த லக்ஷியத் தைப் பார்; நான் சொல்லுகிறகாலத்தில் பாணம் விட வேண்டியதாயிருக்கும்; புத்திரனே! தனுசை வளைத்துக் கொண்டு சற்றுநேரம் ஸரியாக நில்' என்று சொன்ஞர். இவ்வாறு சொல்லியதைக் கேட்ட ஸவ்யஸாசி வில்லை

மண்டலமாக வளைத்துக்கொண்டு குருவின் சொல்லினால் தூண்டப்பட்டுப் பாஸபக்ஷியைக் குறிவைத்து நின்றான். சற்றுநேரம் பொறுத்துத் துரோணர் அவனையும் முன் போலவே, 'அர்ச்சுனா! இங்கிருக்கும் இந்தப் பாஸபக்ஷியை யும் மரத்தையும் என்னையும் பார்க்கிறாயா?' என்று கேட் டார். பாரதரே! அவன், 'பாஸம் ஒன்றைமட்டும் பார்க் கிறேன்; மரத்தையும் பார்க்கவில்லை; உங்களையும் பார்க்க வில்லை' என்று துரோணருக்கு மறுமொழி கூறினான். பிறகு, பிறரால் வெல்லமுடியாதவராகிய துரோணர் மனத் தில் திருப்தியடைந்து சற்றுநேரம் பொறுத்துத் திரும் பவும் பாண்டவர்களுள் மஹாரதனாகிய அந்த அர்ச்சுனனை நோக்கி, 'நீ இந்தப் பாஸபக்ஷியைப் பார்க்கிறாயாயின் அந்தச் சொல்லை மறுபடியும் சொல்' என்று கேட்டார். அவன், 'பாஸத்தின் சிரஸைப் பார்க்கிறேன். உடலைப் பார்க்கவில்லை' என்று மறுமொழி கூறினான். அர்ச்சுனனால் இவ்வாறு சொல்லப்பட்டதும், துரோணர், மயிர்க்கூச்ச லெடுத்தவராகி, அர்ச்சுனனை நோக்கி, 'விடு' என்று சொன் னார். அவன் உடனே விட்டுவிட்டான். அப்போது, அந்தப் பாண்டவன் மரத்திலிருக்கும் அந்தப் பாஸபக்ஷியின் தலை யைக் கூர்மையான அர்த்த சந்திரபாணத்தினால் அறுத்து வேகமாகக் கீழே தள்ளினான். அந்தச் செய்கை நிறை வேறினவுடன், துரோணர், அர்ச்சுனனைக் கட்டிக்கொண் டார்; அவன் யுத்தத்தில் துருபதனைச் சேனையோடு கூடத் தோற்கச் செய்யத் தக்கவனென்று நினைத்தார்.

பரதசிரேஷ்டரே! அதன்பிறகு, சிலகாலத்திற் கெல்லாம் அங்கிரஸ்வம்சத்தவரிற் சிறந்த துரோணர் சிஷ்யர்களுடன்கூட ஸ்நானம் செய்யக் கங்கையை நோக்கிச் சென்றார். அங்கே, ஜலத்தில் அமிழ்ந்த துரோ ணாசாரியரை ஜலத்தில் ஸஞ்சரிக்கும் பலமுள்ள ஒருமுதலை காலத்தினால் ஏவப்பட்டுக் கணைக்காலில் பிடித்தது. அவர்

விடுவித்துக்கொள்ள வல்லவராயிருந்தும், 'முதலையைக் கொன்று என்னைச் சீக்கிரம் விடுவியுங்கள்' என்று சிஷ்யர்களெல்லாரையும் துரிதப்படுத்தி ஏவினர். அவர்சொல் புறப்படுங்காலத்திலேயே, அர்ச்சுனன், தடுக்கமுடியாதகூர்மையான ஐந்து அம்புகளினால் நீருக்குள் மூழ்கியிருந்த முதலையை அடித்தான். அப்போது, மற்றவர்கள் ஒன்றுந்தோன்றாமல் அங்குமிங்கும் ஓடினர். செய்கையில் திறமைவாய்ந்த அந்த அருச்சுனனைக்கண்டு துரோணர் எல்லாச்சிஷ்யர்களிலும் சிறந்தவனென்று நினைத்து அப்போது மிகுந்த திருப்தியுள்ளவரானர். அர்ச்சுனனுடைய பாணங்களினால் அனேகம் துண்டுகளாகச்செய்யப்பட்ட அந்த முதலை, மஹாத்மாவான துரோணருடைய கணைக்காலை விட்டுவிட்டு மரணமடைந்தது. சிறந்த பராக்கிரமமுள்ள துரோணர் எல்லாச் செய்கைகளையும் தெரிவிப்பதற்காகச் சிஷ்யர்களை வரவழைத்தார்; துரியோதனனையும் சித்திரஸேனனையும் துச்சாஸனனையும் விவிம்சதியையும் அர்ச்சுனனையும் அசுவத்தாமாவையும் அழைத்து மண்ணால் ஒரு குழந்தை செய்வித்துச் சிஷ்யர்கள் பார்த்திருக்கையில் கங்கையில் போட்டார். கண்களைத் துணியினால் கட்டிவிட்டு வில்லைக்கொடுத்தார். 'கண் கட்டினபடியே ஜலத்திலிருக்கிற இந்தக்குழந்தையை அடியுங்கள்' என்றார். உடனே, ஸமர்த்தனான அர்ச்சுனன், ஜலத்தில் முழுகியிருந்த சிசுப்பதுமையைப் பதினைந்துபாணங்களினால் அடித்தான். அந்தச்செய்கைகளெல்லாவற்றையும் பார்த்துத் துரோணர் எல்லாச்சிஷ்யர்களிலும் அர்ச்சுனனைச் சிறந்தவனாக நினைத்தார்; அப்போது, மிகுந்த ஸந்தோஷமடைந்தார். பிறகு, துரோணர், மஹாரதனும் மஹாத்மாவுமாகிய அர்ச்சுனனை நோக்கி, 'சிறந்தகைகளையுடையவனே! சிறப்புள்ளதும் தாங்குவதற்கு மிக அஸாத்தியமுமாகிய இந்தப் பிரம்மசிரஸ் என்னும் அஸ்திரத்தைப் பிரயோக ஸம்ஹாரங்க

ளோடும் பெற்றுக்கொள். நீ இதை எவ்வகையிலும் மனிதர்களின்மேல் பிரயோகிக்காதே; அற்பசக்தியுள்ளவன்மேல் பிரயோகித்தால் இஃது உலகத்தை எரித்துவிடும். குழந்தாய்! இந்தலோகங்களில் இந்த அஸ்த்ரம் நிகரற்றதென்று சொல்லப்படுகின்றது. இதனை நியமத்துடன் தரித்துக்கொள். நான் இனிச்சொல்லப்போகிற சொல்லையும் கேள். வீரனே! யுத்தத்தில் மனிதரல்லாத தேவர் முதலிய சத்துருக்கள் எவராயினும் உன்னை வருத்துவாராயின் அப்போது அவரை வதஞ்செய்வதற்கு இந்த அஸ்திரத்தைப் பிரயோகஞ்செய்' என்று சொன்னார். அந்த அர்ச்சுனன், 'அப்படியே' என்று பிரதிஜ்ஞை செய்து கைகூப்பி அந்த மேலான அஸ்திரத்தைப் பெற்றுக்கொண்டான். குரு, மறுபடியும் அவனை நோக்கி, 'உலகத்தில் உன்னைப்போன்ற வில்லாளி மற்றொரு மனிதன் இரான்' என்று சொன்னார்.

பாரதரே! துரோணர், திருதராஷ்டிர புத்திரர்களும் பாண்டு புத்திரர்களும்படைக்கலப்பயிற்சியில் தேர்ந்திருப்பதையறிந்து, கிருபர், ஸோமதத்தன், புத்திமானான பாஹ்லீகன், பீஷ்மர், வியாஸர், விதுரர் இவர்களுடைய முன்னிலையில் திருதராஷ்டிர மஹாராஜனைப்பார்த்து, 'அரசனே! குருசிரேஷ்டனே! உனது குமாரர்களுக்கு வித்தை வந்திருக்கிறது. உன் அனுமதியின்மேல் அவர்கள் தங்கள் கல்வியைக் காண்பிக்கக்கடவர்' என்று சொன்னார். பிறகு, திருதராஷ்டிரமஹாராஜன், மனமகிழ்ந்து, 'பரத்வாஜ புத்ரரே! பிராமணசிரேஷ்டரே! நீர் பெரியகாரியம் செய்திருக்கிறீர். நீர் எந்தக்காலத்தையும் எந்த இடத்தையும் என்ன என்ன வகையான செய்கையையும் நினைக்கிறீரோ அதையெல்லாம் அவ்வாறாகச் செய்யும்படி நீங்களே எனக்குக் கட்டளையிடுங்கள். இப்போது எனக்குள்ள துக்கத்தினால், அஸ்த்ரவிஷயத்தில் பராக்ரமத்தைச் செய்

யும் என்புத்திரர்களை எவர்கள் காண்பார்களோ அந்தக் கண்ணைப்பெற்ற மனிதர்கள்மேல் நான் ஆசையுள்ளவனாக இருக்கிறேன். விதுரனே! பெரியவராகிய ஆசாரியர் எதைச்சொல்லுகிறாரோ அதை அப்படியேசெய். தர்மத்தில் விருப்பமுள்ளவனே! இவ்வகையான பிரியம் இனி வருமென்று நான் நினைக்கவில்லை' என்று சொன்னான். பிறகு, சிறந்த புத்திமானாகிய துரோணாசாரியர் திருதராஷ்டிர மஹாராஜனிடத்திலும் விதுரரிடத்திலும் அனுமதிபெற்றுக்கொண்டு மேடுபள்ளமில்லாமலும் மரங்களில்லாமலும் புதர்களில்லாமலும் வடக்கே தாழ்ந்துமிருக்கிற அழகான ஓரிடத்தை அளக்கச்செய்தார். நல்ல நக்ஷத்திரத்தோடுகூடிய திதியில் அந்தப்பூமியில் பலியைச் செய்தார். பரதசிரேஷ்டரே! அந்தப்பலிக்காகப் பட்டண முழுதும் பறையடிக்கப்பட்டது. பெயர்பெற்ற சில்பிகள் சிலம்பம் செய்யுமிடத்தில் மிக்க விசாலமும் சாஸ்திரத்தில் சொன்னபடி ஸரியாக வகுக்கப்பட்டதுமான காட்சிச்சாலையை, துரோணாசாரியர் கட்டளைப்படி செய்தனர். வேந்தரே! தேசத்திலுள்ள ஜனங்கள், அவ்விடத்தில் ஸ்திரீகளுக்காக எல்லா ஆயுதங்களோடுங் கூடிய காவல்களையும், அகலமும் உயரமுமுள்ள மஞ்சங்களையும், மிகுந்த விலைபெற்ற பல்லக்குக்களையும் செய்வித்தனர். பிறகு, அந்தக் குறிப்பிட்டதினம் வந்தபோது, திருதராஷ்டிர மஹாராஜன், வியாஸரிடம் அனுமதிபெற்று, ஸபையாரோடும் அந்தப்புர ஸ்திரீகளோடும் மந்திரிகளோடும் பீஷ்மரையும் ஆசாரியர்களிற்சிறந்த கிருபரையும் முன்னிட்டுக்கொண்டும் பாஹ்லீகனையும் ஸோமதத்தனையும் பூரிசிரவஸையும் மற்றக்கௌரவர்களையும் ஸஹாயமாக அழைத்துக்கொண்டும் பிராமணர்களுடன்கூட நகரத்திற்கு வெளியில் சிலம்பஞ்செய்யுமிடம் சேர்ந்து, சுற்றிலும் முத்துச்சரங்கள் தொங்கவிடப்பட்டதும் வைடூரியங்

களினாலும் ரத்நங்களினாலும் பிரகாசிப்பதும் பொன் மயமும் அற்புதமுமான காட்சிச்சாலையை அடைந்தான்.

ஜயிக்கிறவர்களிற் சிறந்தவரே! மிகுந்த பாக்கிய முள்ள காந்தாரியும் குந்தியும் மற்றுமுள்ள ராஜஸ்திரீக ளனைவரும், தாதிகளோடும் விருதுகளோடும், தேவஸ்திரீ கள் மேருவின்மேல் ஏறுவதுபோல், ஸந்தோஷத்தோடு மஞ்சங்களின்மேல் ஏறினர். பிராமணர்கள் க்ஷத்திரி யர்கள் முதலிய நான்கு வருணத்தார்களும் ராஜகுமாரர்க ளுடைய ஆயுதப்பயிற்சியைப் பார்க்கக்கருதிப் பட்டணத் திலிருந்து விரைவாக வந்தனர். பார்க்கவிரும்பின ஜனங் கள் ஒருகொடியில் அங்கே ஓரிடத்திற் சேர்ந்தனர். அப் போது, அந்த ஸபையானது, செவ்வையாக வாசிக்கப் பட்ட வாத்தியங்களாலும் ஜனங்களின் உத்ஸாகத்தி னாலும் பெருங்கடல் கலங்கினது போலிருந்தது. பிறகு, வெண்மையான ஆடையையுடுத்தவரும் வெளுப்பான யஜ்ஞோபவீதம் தரித்தவரும் வெளுத்த தலைமயிரோடு வெளுப்பான மீசை தாடிகளையுடையவரும் வெளுத்த புஷ்பசந்தனங்களை அணிந்தவருமாகிய அந்தத் துரோணா சாரியர், மேகங்களால் விடுபட்ட ஆகாயத்தில் அங்காரக னுடன் சந்திரன் பிரவேசிப்பதுபோற் சிலம்பக்கூடத் தின் நடுவில் தம்புத்திரருடன்கூடப் பிரவேசித்தார். பலவான்களிற் சிறந்த துரோணர் வியாஸருடைய அனு மதியைப் பெற்றுக்கொண்டு சிலம்பக்கூடத்திற்குப் பூஜை செய்தார். மந்திரங்களைச் செவ்வையாக அறிந்த பிராம ணர்களைக்கொண்டு மங்களகாரியங்களைச் செய்வித்தார். திருதராஷ்டிர மஹாராஜன் துரோணருக்கும் கிருபருக் கும் பொன்னையும் ரத்தினங்களையும் முத்துக்களையும் பல வகை வஸ்திரங்களையும் தக்ஷிணையாகக் கொடுத்தான். ஸுகத்தைத் தரத்தக்கதும் புண்ணியமுமான புண்ணி யாஹவாசனத்தைச் செய்த பிறகு, வேலைக்காரர்கள் பல

வகைகளான ஆயுதக்கருவிகளை எடுத்துக்கொண்டு வந்தனர். அதன்பிறகு, மஹாரதர்களும் பரதசிரேஷ்டர்களுமாகிய ராஜகுமாரர்கள், விரல்களில் உடும்புத்தோலினல் செய்யப்பட்ட விரலுறைகளை அணிந்தும் கச்சைகளையும் தூணிகளையும் கட்டிக்கொண்டும் வில்லுகளை எடுத்துக்கொண்டும் பிரவேசித்தனர். அந்த ஆண்மையிற் சிறந்த வீரர்கள், அரங்கத்தின் நடுவிலிருந்து துரோணசாரியருக்கு வந்தனஞ்செய்து, அவருக்கும் கிருபாசாரியருக்கும் முறைப்படி மரியாதை செய்தனர். அவர்களால் செய்யப்பட்ட ஆசீர்வாதங்களினல் கௌரவர்களெல்லாரும் மனத்தில் ஸந்தோஷமடைந்து திரும்பவும் வந்தனஞ்செய்து முன்னமே பூஜை செய்யப்பட்டிருந்த அஸ்திரங்களைச் செஞ்சந்தனத்தினலும் பூஜைக்குரிய புஷ்பங்களாலும் தாங்களே பூஜித்தனர். செஞ்சந்தனம் பூசிக்கொண்டவர்களும் சிவந்தமாலைகள் தரித்தவர்களும் சிவந்தகொடிகள் பிடித்தவர்களும் சிவந்தகடைக்கண்களுடையவர்களும் மாற்றுயர்ந்த பொன்னுபரணங்களணிந்து கொண்டவர்களும் பற்பல ரூபங்களோடு கூடியவர்களுமாகிய அந்தக்கௌரவவீரர்களனைவரும் துரோணரால் அனுமதி கொடுக்கப்பெற்று ஆயுதங்களை எடுத்துக்கொண்டனர். முதலில் விற்களை எடுத்து நாணேறிட்டு அம்புகளைத்தொடுத்து நாணெலியையும் உள்ளங்கையொலியையுஞ்செய்து, அதனல் ஜனங்களை மூர்ச்சிக்கச் செய்தனர். யுதிஷ்டிரர்முதலிய சிறந்த பராக்ரமமுள்ள அந்தராஜகுமாரர்கள், அங்கே மூத்தவன்முதலாக வரிசைப்படி மிகவியக்கத்தக்க ஆயுதப்பயிற்சியைச் செய்தனர். அரசரே! அந்தஸபையில் சிலருடைய பூமாலைகளில் அம்புகள் விழுந்தன. சிலர் தலையிற்சூட்டிக்கொண்ட புஷ்பங்களில் பாணங்கள் விழுந்தன; சிலர் தங்கள் பெயரடையாளமுள்ள பலவகைப்பாணங்களை லாகவமாகவிட்

டுப் பெரியவைவயும் சிறியவைவயுமான குறிகளை அடித்தனர். சிலமனிதர்கள் பாணம்விழுமென்ற பயத்தினால் தலைகுனிந்தனர். மற்றும் சிலமனிதர்கள் பயமற்று ஆச்சரியத்துடன் பார்த்திருந்தனர். அந்தக்குமாரர்கள் குதிரைகளிலேறிக்கொண்டு தங்கள் பெயர்அடையாளங்களினால் விளங்குகின்ற பலவகைப் பாணங்களை லாகவமாகவிட்டு லக்ஷியங்களை விரைவில்அடித்தனர். பாணங்களையும் வில்லுகளையும் தரித்துக்கொண்டிருக்கும் அந்தக் குமாரர்களின் கூட்டம் கந்தர்வநகரம்போலிருந்ததைக்கண்டு அங்குள்ள ஜனங்கள் திகைத்திருந்தனர். பாரதரே! அங்கே, லக்ஷக்கணக்கான மற்ற ஜனங்கள் ஆச்சரியத்தினால் மலர்ந்தகண்களோடு, 'நல்லது நல்லது' என்று விரைவாகக் கூவினர். மிகுந்த பலமுள்ள அந்தராஜகுமாரர்கள் தேர்கள்மேலும் யானைகள்மேலும் குதிரைகள்மேலும் ஏறி விற் போரிலும் கைச்சண்டையிலும் பல வழிகளைச் செய்து காண்பித்து மறுபடியும் கத்திகேடகங்களைப் பிடித்து யுத்தஞ் செய்து கத்திச்சிலம்பத்தின் வழிகளையுஞ் செய்து உபதேசப்படி எல்லா இடங்களிலும் ஸஞ்சரித்தனர். அந்தக் குமாரர்களெல்லோருக்கும் கத்திகேடகங்களிலுள்ள லாகவத்தையும் அங்கஅமைப்பையும் திருத்தத்தையும் நின்றநிலைதவறாமையையும் பிடித்தபிடிவிடாமையையும் ஸமயத்தில் ப்ரயோகிப்பதையும் அங்குள்ள ஜனங்கள் பார்த்தனர். பிறகு, எப்போதும் உற்சாகமுள்ள துரியோதனனும் பீமஸேனனும் கைகளில் கதைகளை எடுத்துக்கொண்டு ஒற்றைக்கொடுமுடியுள்ள இரண்டுமலைகள்போலக் கிளம்பினர். சிறந்த கைகளையுடையவர்களும் பராக்கிரமம் தவறாதவர்களுமாகிய அவ்விருவர்களும் கச்சைகட்டிக்கொண்டுபோயினர். மஹாபலசாலிகளான அவ்விருவரும் மண்டலஸஞ்சாரத்தை ஆரம்பித்து மதமுள்ள இரண்டு யானைகளைப்போல் வலமும் இடமுமாக அனேக மண்ட

லங்கள் சுற்றினர். திருதராஷ்டிரனுக்கு விதுரரும், காந்தாரிக்குக் குந்தியும் குமாரர்களின் அந்தச் செய்கையையெல்லாம் தெரிவித்தனர்.

குருராஜனுகிய துரியோதனனும் பலவான்களிற் சிறந்த பீமஸேனனும் களத்திலிருக்கும்போது, அவர்களிடம் பக்ஷபாதத்தினுல் சிநேகம்வைத்த ஜனங்கள் இரண்டுவகையாகப் பிரிந்தனர். 'குருராஜனே! ஜயம்பெறு' என்றும், 'பீமனே! ஜயம்பெறு' என்றும் மனிதர்களுடைய பெருங்கூச்சல்கள் உடனே எழுந்தன. பிறகு, சிறந்தபுத்தியுள்ள துரோணர் கலங்கின கடலைப்போலிருந்த ஸபையைக்கண்டு தமது அன்புள்ள புத்திரராகிய அசுவத்தாமாவை நோக்கி, 'இந்த இரண்டு மஹாவீரர்களையும் அடக்கு; இருவரும் பயிற்சியில் தேர்ந்தவர். பீமனுக்காகவும் துரியோதனனுக்காகவும் அரங்கத்திற்கு இந்தக் கலக்கம் உண்டாகக்கூடாது' என்று சொன்னுர். பிறகு, அசுவத்தாமா விரைவாக எழுந்து, 'பீமா! குருவின் கட்டளை' என்றும், 'துரியோதனு! குருவின் கட்டளை' என்றும் சொல்லி, 'உங்களுக்குக் குருவின் உபதேசத்தினுல் உண்டான வேகத்தையும் ஸாகஸத்தையும் காண்பித்ததுபோதும்' என்று தடுத்தார். பிறகு, ஓங்கினகதைகளோடுகூடிய அவ்விருவரும், பிரளயகாலத்துக்காற்றினுல் கொந்தளிக்கின்ற இரண்டு கடல்கள் பெருங்கரைகளுக்கு அடங்குவதுபோல், குருபுத்திரராகிய அசுவத்தாமாவினுல் அடக்கப்பட்டனர்.

அதன்பின், துரோணர் ஸபையின் முன்னின்று பெரிய மேகமுழக்கத்துக்கொப்பான வாத்திய சப்தத்தை அடக்கி, 'என் புத்திரனைவிட எனக்கு மிக்க நண்பனும் எல்லா ஆயுதங்களிலும் நிபுணனும் உபேந்திரனுகிய விஷ்ணுவுக்கொப்பானவனும் இந்திரபுத்திரனுமாகிய இந்தப் பார்த்தனைப் பாருங்கள்' என்று சொன்னுர். உடனே,

ஆசாரியர்வாக்கினுல் ஆசீர்வாதம் செய்யப்பட்டவனும் யௌவனத்தையுடையவனுமான அர்ச்சுனன், விரலில் உறை அணிந்து தூணிகளில் பாணங்களே நிரப்பிக்கொண்டு வில்லேப்பிடித்துப் பொன்மயமான கவசத்தைத் தரித்து, ஸூர்யனேடும் வானவில்லோடும் மின்னலோடுங்கூடிய ஸந்தியாகாலத்துச்சிவப்புமேகம்போல் எதிரில்காணப்பட்டான். பிறகு, ஸபை முழுமைக்குமே ஒரு மலர்ச்சி உண்டாயிற்று. வாத்தியங்களும் சங்கங்களும் எங்கும் முழக்கப்பட்டன. பார்ப்பவர்கள், 'இவன் குந்தி புத்திரன்; இவன் அழகுள்ளவன்; இவன் பாண்டவர்களில் நடுவாமவன்; இவன் தேவேந்திரனுடைய புத்ரன்; இவன் கௌரவர்களேக் காப்பாற்றுகிறவன்; இவன் அஸ்த்ரம் தெரிந்தவர்களிற் சிறந்தவன்; இவன் தர்மிஷ்டர்களிற்சிறந்தவன்; இவன் சீலமுள்ளவர் எல்லாரிலும் சிறந்தவன்; நல்லொழுக்கத்திற்கும் ஞானத்திற்கும் நிதியானவன்' என்று உரக்கச் சொன்னவார்த்தைகளே எல்லாரும் கேட்டனர். குந்தியின் முகம் ஆனந்தக் கண்ணீரால் நனேக்கப்பட்டிருந்தது. அந்தப்பெரிய ஜனத்திரளிலிருந்துண்டாகிய சத்தத்தினுல் நிரப்பப்பட்ட காதுகளேயுடைய திருதராஷ்டிர மஹாராஜன், மனமகிழ்ந்து விதுரரை நோக்கி, 'விதுரனே! கலங்கின ஸமுத்திரத்தின் கோஷத்துக்கொப்பான இந்த மிகப்பெரிய சத்தம் எது? ஆகாசத்தைக் கிழிப்பதுபோல் ஸபையில் திடீரென்று உண்டாயிருக்கிறதே' என்று கேட்டான். அதற்கு விதுரர், 'மஹாராஜாவே! குந்திபுத்திரனும் பாண்டுபுத்திரனுமாகிய இந்தப் பற்குனன் கவசத்துடன் அரங்கத்தில் இறங்கியிருக்கிருன். அதற்காக இந்தப் பெருங்கோஷமுண்டாயிற்று' என்று சொன்ஞர். திருதராஷ்டிரன், 'சிறந்த புத்தியுள்ளவனே! பாக்கியம் பெற்றேன்; குந்தியென்னும் அரணியிலுண்டான மூன்று பாண்டவர்களென்னும் மூன்றக்னிகளால் சிறப்பிக்

கப்பட்டேன்; ரக்ஷிக்கப்பட்டேன்' என்று சொன்னான். அந்த ஸபையிலுள்ள ஜனங்கள் பிரயாஸப்பட்டுவந்து ஸந்தோஷமாக இருக்கும்போது, அர்ச்சுனன் தன் அஸ்திர சாதுரியத்தை ஆசாரியருக்குக் காண்பித்தான். ஆக்நேயாஸ்திரத்தினால் தீயையும், வாருணாஸ்திரத்தினால் ஜலத்தையும், வாயு அஸ்த்ரத்தினால் காற்றையும், மேகாஸ்திரத்தினால் மேகங்களையும், பூமியஸ்த்ரத்தினால் பூமியையும், பர்வதாஸ்த்ரத்தினால் மலைகளையும் உண்டுபண்ணினான். அந்தர்த்தானமென்னும் அஸ்த்ரத்தினால் தானே மறைந்தான்; ஒருக்ஷணம் நெடியவனாகவும் மறுக்ஷணம் குறியவனாகவும் க்ஷணத்துக்கெல்லாம் தேர்த்தட்டிலும் மறுக்ஷணம் தேர்நடுவிலும் அடுத்தக்ஷணம் பூமியிலும் இருப்பவனாகவும் காணப்பட்டான். ஆசாரியருக்கு அன்பனாகிய அந்த அர்ச்சுனன் ஸௌஷ்டவமென்று சொல்லப்பட்ட அங்கங்களின் அமைப்புடன்கூடிப் பலவகைகளான பாணங்களினால் மெதுவும் பெரிதும் சிறிதுமான லக்ஷியங்களை அடித்தான். சுழன்றுகொண்டிருக்கும் இரும்புப் பன்றியின் வாயில் ஒரேகாலத்தில் ஐந்துபாணங்களை ஒரு பாணம்போலத் தடையில்லாமல் விடுத்தான். சிறந்தபராக்ரமமுள்ள அர்ச்சுனன், கயிற்றில் தொங்கி ஆடிக்கொண்டிருக்கும் கூர்மையான மாட்டுக்கொம்பில் இருபத்தொருபாணங்களை நாட்டினான். குற்றமற்றவரே! ஆயுதங்களில் ஸமர்த்தனாகிய அர்ச்சுனன் கத்தியிலும் வில்லிலும் இப்படிப்பட்ட மிகப்பெருங்காரியங்களைச் செய்து, கதையிலும் மண்டல ஸஞ்சாரங்களைக் காண்பித்தான்.

பாரதரே! அப்போது, அந்தவேலை அனேகமாக முடிந்து ஸபையும் வாத்தியகோஷமும் ஓய்ந்திருக்கையில், வஜ்ராயுதத்தின் அடிக்கு ஒப்பானதும் மஹிமையையும் வன்மையையும் அறிவிப்பதுமாகிய தோள்தட்டினசப்தம் வாயிற்பக்கத்திலிருந்து கிளம்புவதாகக் கேட்கப்பட்டது.

அரசரே! 'மலைகள் பிளக்கப்படுகின்றனவா? பூமி வெடிக்கின்றதா? நீர்த்தாரைகள் நிரம்பினமேகங்களினால் ஆகாயம் நிரப்பப்படுகின்றதா?' என்ற எண்ணம் ஒருக்ஷணம் ஸபையிலுள்ளவர்களுக்கு உண்டாயிற்று. அப்போது, பார்ப்பவர்களனைவரும் வாயிலை நோக்கினர். ஸஹோதரர்களாகிய பஞ்சபாண்டவர்களால் சூழப்பட்ட துரோணர், ஹஸ்தநக்ஷத்திரம் ஐந்தோடுகூடிய சந்திரனைப்போல விளங்கினார். பகைவர்களைக் கொல்லுகிறவனாகிய துரியோதனன் எழுந்திருக்க, அசுவத்தாமாவுடன்கூடப் பலமுள்ள நூறுஸஹோதரர்களும் அவனைச் சூழ்ந்துகொண்டனர். ஆயுதங்களைத் தூக்கிக்கொண்டு உறுதியாக நிற்கின்ற அந்தஸஹோதரர்களால் சூழப்பட்டுக் கதையை நுனிக் கையில் பிடித்திருந்த அந்தத் துரியோதனன், முற்காலத்தில் அஸுரஸம்ஹாரஞ் செய்தபோது தேவக்கூட்டங்களினாற் சூழப்பட்ட இந்திரனைப்போல விளங்கினான்.

அ. சுயநலம் பாராட்டல்; அல்லது இறந்த குழந்தை பிழைத்த கதை

யுதிஷ்டிரர், 'அரசரே! மரணமடைந்த மனிதன் திரும்பவும் உயிருள்ளவனானனென்பது உண்டோ? இது பிதாமஹரால் காணப்பட்டதாவது கேட்கப்பட்டதாவது உண்டோ?' என்று கேட்க, பீஷ்மர் சொல்லத் தொடங்கினார்.

'ஏ! பார்த்த! வைதிசமென்னும் நகரத்தில் நடந்ததும் கழுகு நரிகளைச்சேர்ந்த ஸம்பாஷணையுமான பழைய இதிஹாஸத்தை நடந்தபடி கேள். ஒரு பிராம்மணனுக்குக் கஷ்டப்பட்டுக் கிடைத்தவனும் நீண்டகண்ணுள்ளவனு

மான ஒருபுத்திரன் பாலகனுயிருக்கும்பொழுதே பாலக் கிரஹங்களால் பீடிக்கப்பட்டு மரணமடைந்தான். சிலர் குலத்திற்குள்ள எல்லாப் பொருளும் போன்றவனும் யௌவனத்தை அடையாதவனும் மரித்தவனுமான அந்தப் பாலகனை எடுத்துக்கொண்டும் துக்கத்தாலும் சோகத் தாலும் பீடிக்கப்பட்டு அழுதுகொண்டும் மயானத் திற்கு எதிராகவந்து நின்றார்கள். அவர்கள், அப்பாலகன் முன்சொல்லிய சொற்களைத் திரும்பவும் திரும்பவும் நினைத்துச் சோகப்படுகிறவர்களும் மிக்கதுக்கமுள்ளவர் களுமாகி ஒருவரை ஒருவர் கட்டிக்கொண்டு அழுதார்கள். அவர்கள் அப்பாலகனைப் பூதலத்தில் போட்டுவிட்டுத் திரும்பிச் செல்லத் துணிவுள்ளவர்களாகவில்லை. அவர் களின் அழுகைக் குரலால் ஒருகழுகு அவ்விடத்தில் வந்து ஒருவசனத்தைச் சொல்லத் தொடங்கிற்று. 'பிரேதவடிவ மான இக்குழந்தையைக் காலனிடத்தில் விட்டுவிட்டுச் செல்லுங்கள்; தாமஸிக்கவேண்டாம். இவ்விடத்தில் புருஷர்களில் பலவாயிரர்களும் ஸ்திரீகளில் பலவாயிரர் களுமான காலனால் கொண்டுவரப்பட்டவர்களைத் தள்ளி விட்டுப் பந்துக்கள் போகிறார்கள். உலகம் யாவும் ஸுக துக்கங்களால் தொடரப்பட்டிருப்பதை நன்றாகப் பாருங் கள். சேர்க்கையும் பிரிவும் முறையே காணப்படுகின்றன. அந்தமரித்தவர்களை எடுத்துக்கொண்டு எவர்கள் செல்லு கிறார்களோ, எவர்கள் அவர்களைத் தொடர்ந்து செல்லு கிறார்களோ, அந்தமனிதர்களும் தமக்குள்ள ஆயுள் அள வுப்படியே செல்லுகிறார்கள். கழுகுகளாலும் நரிகளா லும் நிறைந்ததும் அதிகமான எலும்புகளுள்ளதும் கோர மும் எல்லாப்பிராணிகளுக்கும் பயத்தை உண்டுபண்ணு வதுமான இந்த மயானத்தில் நிற்பதில் என்ன பயன்? நண்பனானாலும் பகைவனானாலும் மரணத்தை அடைந்த ஒருவன் மறுபடி ஜீவிப்பதில்லை. பிராணிகளின்கதி இவ்

விதமானது. மானிட லோகத்தில் பிறந்தயாவுமே மரிக்க வேண்டும். யமனால் செய்யப்பட்ட வழியிற் சென்று மரித்தவனை எவன் ஜீவிக்கச்செய்வான்? திக்குக்களின் கடைசியிற் சென்ற சூரியன் அஸ்தமயத்தை அடைவதற்குள்ளாகவே, புத்திரனிடமுள்ள ஸ்நேகத்தைத் தள்ளிவிட்டு, உங்கள் இடம் போய்ச் சேரலாம்' என்று சொல்லிற்று. அரசனே! பிறகு, அந்த உறவினர்கள் கழுகின் வசனத்தைக்கேட்டு அப்பொழுது பூதலத்தில் புத்திரனைப் போட்டுவிட்டு மிகவும் அழுதுகொண்டு திரும்பிச் சென்றார்கள்; பிறகு, மரித்தவனென்றே நிச்சயஞ் செய்து அந்தப்பாலகனைப் பார்ப்பதில் ஆசையற்றவர்களாக அழுதுகொண்டு அப்பொழுது அங்குமிங்கும் செல்லத்தொடங்கினார்கள். அவர்கள் யாவரும், மரித்ததை நிச்சயஞ் செய்துகொண்டு தம்புத்திரனைத் தள்ளிவிட்டு அவன் ஜீவிப்பதில் ஆசையற்றவர்களாய்ச் சூழ்ந்து கொண்டு நின்றார்கள்.

அப்பொழுது, காக்கையின் இறகுக்கொப்பான நிறமுள்ள ஒரு நரியானது, வளையிலிருந்து வெளியில் வந்து, போகும் அந்தமனிதர்களை நோக்கிச் சொல்லத் தொடங்கிற்று. 'மனிதர்கள் தயையில்லாதவர்களன்றோ? மூடர்களே! இதோ ஸூர்யனிருக்கிறான்; பயப்படவேண்டாம்; அன்புவையுங்கள். அதிக அழகுள்ள பாலகன் ஒரு முகூர்த்தத்தில் ஜீவிக்கலாம்; புத்திரனிடம் ஸ்நேஹமில்லாதவர்களாகி மயானத்தில் பூமியில் தர்ப்பங்களைப் பரப்பிப் புத்திரனைப் போட்டுவிட்டு என் தயையின்றிச் செல்லுகிறீர்கள்? எவனுடைய வார்த்தையினால்தானே ஸந்தோஷமடைவீர்களோ அப்படிப்பட்ட இனிமையாகப் பேசும் பாலனான இந்தப் புத்திரனிடத்தில் உங்களுக்கு ஸ்நேஹமில்லையே! பசுக்களுக்கும் பறவைகளுக்குங்கூடப் புத்திரர்களிடம் ஸ்நேஹம் எவ்விதமிருக்கிறதென்று நீங்

கள் பார்க்கவில்லையே? மிருகங்கள் பக்ஷிகள் புழுக்கள் என்னும் அந்தப் பிராணிகளுக்கு அவற்றின் புத்திரர்களை ரக்ஷித்துக்கொண்டிருப்பதில் யாதொருபயனும் வருவதில்லை. அந்தப் பிராணிகளுக்குப் புத்திரர்களிடம் ஸ்நேஹத்தினால் இந்த உலகத்திலும் மேலுலகத்திலும் யாதொரு குணமும் காணப்படவில்லை. அவைகளும் தம் பிள்ளைகளை நன்றாகப் போஷிக்கின்றன. பிரியமான புத்திரர்களைப் பாராமலிருக்கும்பொழுது எவர்களுக்குச் சோகமில்லையோ அவர்கள், புத்திரர்களைப் போஷிப்பதில் மிகவும் பிரீதியுள்ள தாய்தந்தைகளே அல்லர். எந்த மனிதர்களுக்கு ஒருவரைப் பாராமலிருக்கும்பொழுது சோகமில்லையோ அவர்களுக்கு அவருடன் ஸ்நேஹமேது? குலத்தை விருத்திசெய்யும் இந்தப்புத்திரனைத் தள்ளி விட்டு எங்கே போகப்போகிறீர்கள்? வெகுநேரம் கண்ணீரை விடுங்கள்; வெகுநேரம் ஸ்நேஹத்துடன் பாருங்கள். இப்படிப்பட்ட பிரியவஸ்துக்களைவிடுவது பெரிய கஷ்டம். குறையை அடைந்தவனுக்கும் அபவாதமுள்ளவனுக்கும் மயானத்தைக் குறித்துச் சென்றவனுக்கும் பந்துக்கள் அநுகூலமாயிருப்பதுபோல மற்றவன் இருக்கமாட்டான். யாவருக்கும் உயிர் விருப்பமானது. யாவரும் ஸ்நேஹத்தையும் அடைவார்கள். கிழான பசு முதலிய பிறப்பிலிருப்பவைகளுக்கும் ஸ்நேஹம் எவ்விதமிருக்கிறதென்று பாருங்கள். புதிதாகக் கல்யாணஞ் செய்துகொண்டு ஸ்நாநத்தாலும் மாலைகளாலும் அலங்கரிக்கப்பட்டவன்போன்றவனும் தாமரைமலர்போலச் சலிக்கும் நீண்ட கண்ணுள்ளவனுமான இவனை விட்டு விட்டு எப்படிப் போகிறீர்கள்?' என்று சொல்லிற்று. இவ்விதம் சோகத்துடன் அழுதுகொண்டு சொல்லும் நரியின் வசனத்தைக் கேட்டு, அந்தமனிதர்கள் யாவரும் அப்பொழுது குழந்தைக்கு வேண்டித் திரும்பினார்கள்.

கழுகு சொல்லத் தொடங்கிற்று: 'அந்தோ! கஷ்டம்! ஹீனபுத்தியுள்ள மானிடர்களே! குரூரமானதும் அல்ப புத்தியுள்ளதும் இழிந்ததுமான நரியின் சொல்லைக்கேட்டு ஏன் திரும்புகிறீர்கள்? ஐந்து பூதங்களாலும் விடப்பட்டதும் காய்ந்து கட்டைத்தன்மையை அடைந்ததும் இயக்கமற்றதுமான இந்தக் குழந்தையைப்பற்றி ஏன் சோகப்படுகிறீர்கள்? உங்களைப்பற்றி ஏன் சோகப்படவில்லை? எதைச்செய்து பாவத்திலிருந்து விடுபடுவீர்களோ அவ்விதத் தீவ்ரமான தவத்தைச் செய்யுங்கள். தவத்தால் எல்லாம் அடையப்படும். அழுகை எதைச்செய்யும்? அனிஷ்டங்களும் பாக்யங்களும் சரீரத்துடன்கூட உண்டாகின்றன. அந்தக்காரணத்தால் இந்தக் குழந்தை முடிவில்லாத சோகத்தைக் கொடுத்துவிட்டுச் செல்லுகிறது. பொருளும் பசுக்களும் பொன்னும் மணிகளும் ரத்தினங்களும் ஸந்தானமும் தவத்தை மூலமாகக்கொண்டவை. தவமானது யோகத்தாலடையப்படும். தாம் செய்திருக்கிறபடி, பிராணிகளிடம் ஸுகமும் துக்கமும் அடைகின்றன. பிராணியானது துக்கங்களையும் ஸுகங்களையும் பற்றிக்கொண்டே உண்டாகிறது. தந்தையின் கர்மத்தால் புத்திரனும் புத்திரனின் கர்மத்தால் தந்தையுமிருப்பதில்லை. மனிதர்கள் புண்ணிய பாபங்களால் கட்டப்பட்டு வேறுவழியாகச் செல்லுகிறார்கள். முயற்சியுடன் தர்மத்தைச் செய்யுங்கள்; அவ்விதமே அதர்மத்திலிருந்து விலகுங்கள்; காலந்தவறாமல் தேவர்களிடத்திலும் பிராம்மணர்களிடத்திலும் இருங்கள்; சோகத்தையும் தீனத்தனத்தையும் விடுங்கள்; புத்திரனிடமுள்ள ஸ்நேஹத்திலிருந்து விலகுங்கள்; இந்த அழுகையை விடுங்கள்; வேகமாக அதிலிருந்து திரும்புங்கள். சுபமான கர்மத்தையும் அவ்விதமே மிக்க குரூரமான கர்மத்தையும் எவன் செய்கிறானோ அவனே அனுபவிக்கவேண்டும். பந்துக்களுக்கு

இதில் என்ன ஸம்பந்தம்? இவ்விடத்தில் பிரியமாயிருக்கும் பந்துவைத் தள்ளிவிட்டுப் பந்துக்களாயிருப்பவர்கள் நிற்ப தில்லை; ஸ்நேஹத்தைத் தள்ளிவிட்டுக் கண்ணீர்நிரம்பிக் கலங்கிய கண்ணுள்ளவர்களாய்ச் செல்லுவார்கள். அறி விற்சிறந்தவனோ மூர்க்கனோ பொருளுள்ளவனோ பொரு ளற்றவனோ சுபாசுபங்களுடன் கூடின யாவருமே காலத் தின்வசத்தை அடைகிறார்கள். சோகப்பட்டு என்ன செய்யப்போகிறீர்கள்? மரித்ததைப்பற்றி ஏன் சோகப் படுகிறீர்கள்? தர்மப்படி ஸமமானபார்வையுள்ளகாலம் யாவர்க்கும் பிரபுவன்றோ? மிருத்யுவானது யௌவனத்தி லிருப்பவர்களையும் சிறுவர்களையும் வயதுசென்றவர்களை யும் கர்ப்பத்திலிருப்பவர்களையும் யாவர்களையும் பிடிக் கிறது. இவ்வுலகம் இப்படியிருக்கிறது!' என்று சொல் லிற்று.

நரி சொல்லத் தொடங்கிற்று: 'அந்தோ! புத்திர னிடமுள்ள ஸ்நேஹத்தால் துன்பமடைந்து மிகவும் சோகப்படும் உங்களுடைய ஸ்நேஹமானது, அல்பபுத்தி யுள்ள இங்கிருக்கும் கழுகால் நன்றாகக்கூறப்பட்டவை களும் காரணத்தை விளங்கச்செய்பவைகளும் தன்கொள் கைக்கு ஒத்தவைகளுமான வசனங்களால் அல்பமாகச் செய்யப்பட்டது. இது முழுமையுந் தெரிந்துகொண்டு, சீக்கிரம் ஆலோசனையையாவது செய்யுங்கள். விடத் தகாத ஸ்நேஹத்தை விட்டுவிட்டு ஜலமுள்ளவிடத் திற்குப் போகிறீர்களே. கஷ்டம்! புத்திரனை விட்டுப் பிரிந்து, இறந்தபுத்திரனில்லாதஇடத்தையடைந்து, அழும் உங்களுக்குக் கன்றையிழந்த பசுக்களுக்கு உண்டாவது போல மிகவும் துக்கமுண்டாகும். பூதலத்தில் மனிதர் களுக்குள்ள சோகத்தை இப்பொழுது அறிகிறேன். ஏனெனில், ஸ்நேஹத்தைக் காரணமாகச் செய்துகொண்டு எனக்கும் கண்ணீர் விழுந்தது. எப்பொழுதும் முயற்சி

செய்யவேண்டும். பிறகு, தெய்வத்தால் ஸித்திக்கும். தெய்வம் முயற்சி இரண்டிலும் ஒரே உறுதியாயிருப்பது யுக்தமாகும். எப்பொழுதும் வெறுப்பில்லாமலிருக்கவேண்டும். வெறுப்படைந்தால் எங்கிருந்து ஸுகமுண்டாகும்? முயற்சியாலன்றோ பொருளடையப்படுகிறது? ஏன் தயையில்லாமற் செல்லுகிறீர்கள்? தன் மாம்ஸத்திலிருந்து உண்டானதும் தன் பாதிச்சரீரம்போன்றதும் பித்ருக்களுக்கு வேண்டி வம்சத்தை உண்டுபண்ணுவதுமான புத்திரனுடைய சரீரத்தை வனத்தில் தள்ளிவிட்டு எங்கே போகிறீர்கள்? ஸூர்யன் அஸ்தமயத்தை அடைந்து ஸந்தியாகாலம் வந்துவிட்டால், புத்திரனை எடுத்துக்கொண்டாவது போங்கள்; அல்லது, இவ்விடத்திலேயே இருக்கவாவது செய்யுங்கள்' என்று சொல்லிற்று.

கழுகு சொல்லத்தொடங்கிற்று: 'மானிடர்களே! இப்பொழுது நான்பிறந்து ஆயிரம் வருஷத்துக்குமேலாகிறது. பெண்ணோ, ஆணோ, அலியோ மரித்தவர் பிழைப்பதைக்காணேன். சிலர் கர்ப்பங்களில் மரித்துப் பிறக்கிறார்கள். சிலர் பிறந்தவுடனும் மரிக்கிறார்கள். சிலர் தவழ்ந்துகொண்டிருக்கையிலும் மரிக்கிறார்கள். சிலர் யௌவனத்தில் மரிக்கிறார்கள். இவ்வுலகில் நாற்காற் பிராணிகளுக்கும் பறவைகளுக்குங்கூடப் பாக்கியங்கள் நிலைத்தவைகளல்ல. அசைவுள்ளவைகளுக்கும் அசையாமலிருப்பவைகளுக்கும் வாழ்நாள் எதிர்காலத்தில் முடிவுபெறுகிறது. இஷ்டமான தாரங்களைவிட்டுப் பிரிந்தவர்களும் புத்திரசோகத்துடன் கூடியவர்களுமாய்ச் சோகத்தால் எரிக்கப்பட்டு ஒவ்வொருநாளும் வீடு செல்லுகிறார்கள். ஆயிரம் அனிஷ்டங்களையும் நூறு இஷ்டங்களையும் இவ்விடத்தில் தள்ளிவிட்டுப் பந்துக்களாயிருப்பவர்கள் மிகவுந் துக்கத்துடன் செல்லுகிறார்கள். தேஜஸின்றிச் சூன்யமாகக் கட்டைத் தன்மையை அடைந்த இந்தச் சிசுவை

விடுங்கள். வேறு தேகத்தில் ஸம்பந்தம் அடைந்து கட்டையாயிருக்கும் சிசுவை உபாஸிக்கிறீர்களே. உயிரை விட்ட குழந்தைக்குக் கண்ணீரை விட்டுவிட்டு ஏன் போகாமலிருக்கிறீர்கள்? இந்தஸ்நேஹம் பயனற்ற தாயிற்றே; சிரமமும் பயனற்றது. இந்தக் குழந்தை கண்களால் பார்க்கிறதுமில்லை; செவிகளால் கேட்கிறது மில்லை. ஏன் இதைத் தள்ளிவிட்டு வேகமாக வீடு செல்லாமலிருக்கிறீர்கள்? மோக்ஷ தர்மமுள்ளவைகளும் யுக்தியுள்ளவைகளும் மிக்க குரூரமானவைகளுமான வசனங்களால் என்னுலுபதேசிக்கப்பட்ட நீங்கள் வேகமாக உங்கள் உங்கள் வீட்டையே போய் அடையுங்கள். அறிவும் பேரறிவுமுள்ளவனும் புத்தியையும் நல்லறிவையுங்கொடுப்பவனுமான என்னுல் நல்ல வார்த்தை சொல்லப்பட்டீர்கள். மானிடர்களே! திரும்புங்கள். நடந்ததை நினைத்தும் கண்டும் சோகமானது இரண்டுமடங்காகும்' என்று சொல்லிற்று. இவ்விதம் இக்கழுகின் வசனத்தைக் கேட்ட பின், மனிதர்கள் திரும்பினுர்கள்.

அப்பொழுது, நரியானது வேகமாகவந்து அக்கழுகு உறங்கி இருப்பதைக்கண்டு சொல்லத் தொடங்கிற்று: 'பொன்போன்ற மேனியுள்ளவனும் ஆபரணங்களால் நன்ருக அலங்கரிக்கப்பட்டவனும் பித்ருக்களுக்குப் பிண்டமளிப்பவனுமான இந்தப்புத்திரனைக் கழுகின்சொல்லால் எப்படி விடுகிறீர்கள்? இறந்த இந்தப் புத்திரனை விடுவதால் ஸ்நேஹத்திற்கும் புலம்பலுக்கும் அழுகைக்கும் நிவிருத்தியில்லை; நிச்சயமாகத் தாபமுண்டாகும். ஸ்ருஞ்சயனென்னும் ராஜரிஷியின் பாலகன் காலத்தின் முடிவை அடைந்து மரித்தவன், தர்மத்தில் நிலைபெற்ற நாரதமுனிவரால் திரும்பவும் ஜீவித்திருக்கும்படி செய்யப்பட்டான். அவ்வாறே, ஸித்தனே, முனியோ, தேவதையோ ஒருவனிருக்கலாம். அவன் துன்பமுள்ளவர்களாக இங்கு

அழுதுகொண்டிருக்கும் உங்களுக்குத் தயைபண்ணலாம்' என்று சொல்லிற்று. இவ்விதஞ்சொல்லப்பட்ட அவர்கள் புத்திரனிடம் ஸ்நேஹமுள்ளவர்களும் சோகத்தால் பீடிக்கப்பட்டவர்களுமாகித் திரும்பினார்கள். அவர்கள் மடியில் புத்திரனின் தலையை வைத்துக்கொண்டு அதிக விஸ்தாரமாக அழத்தொடங்கினார்கள்.

அவர்களின் அழுகைக் குரலைக்கேட்டுக் கழுகு வந்து சொல்லத் தொடங்கிற்று: 'தர்மராஜனின் செய்கையால் நீண்ட தூக்கமென்னும் மரணத்தை அடைவிக்கப்பட்ட சிசுவானது, கண்ணீர் விழுந்து நனைந்ததும் கைகள்பட்டுத் துன்பப்படுத்தப்பட்டதுமாயிருக்கிறது. தவமுள்ளவர்களும் தனமுள்ளவர்களும் பெரிய புத்தியுள்ளவர்களுமாகிய எல்லோரும் மிருத்யுவின்வசத்தை அடைகிறார்கள். இது பிரேதங்களிருக்கும் நகரமாகும். பல்லாயிரம் பாலர்களையும் பல்லாயிரம் கிழவர்களையும் எப்பொழுதும் இங்கு தள்ளிவிட்டுப் பந்துக்கள் பூதலத்தில் பகலும் இரவும் துக்கத்துடனிருக்கிறார்கள். சோகத்தை விலக்கக் காரணமாகாத பிடிவாதத்தை அடைவதில் பயனில்லை. இந்தக் குழந்தைக்கு இப்பொழுது திரும்பவும் பிழைப்பேது? நரியின் வசனத்தால் இந்தக் குழந்தை திரும்பவும் உயிரை அடையமாட்டாது. மரித்துச் சரீரத்தை விட்டதற்குத் திரும்பவும் அச்சரீரம் கிடைக்காது. பலநூறு நரிகளாலும் இந்தக் குழந்தையைப் பல நூறு வருஷங்களிலும் சரீரத்தைக் கொடுத்துப் பிழைக்கும்படி செய்யமுடியாது. ஒருஸமயம், ருத்ரராவது ஸுப்ரம்மண்யராவது பிரம்மாவாவது விஷ்ணுவாவது இக்குழந்தையின் பொருட்டு வரமளிப்பார்களாகில் அப்பொழுது இக்குழந்தை பிழைக்கக்கூடும். கண்ணீர்விடுவதாலும் பெருமூச்சுவிடுவதாலும் நீண்ட அழுகையாலும் இது திரும்பவும் ஜீவனை அடையாது. இவ்வுலகில் நானும் நரியும் இக்குழந்-

தைக்குப் பந்துக்களான நீங்களும்ஆகிய யாவரும் தர்மா தர்மங்களைத் துணையாகக்கொண்டு பரலோகத்துக்குப் போகும்வழியில் சென்றுகொண்டிருக்கிறோம். அறிவுள்ளவன், அப்ரியத்தையும் குரூரத்தையும் பிறர்களுக்கு த்ரோஹத்தையும் பிறன்மனைவியையும் அதர்மத்தையும் பொய்யையும் தூரத்தில் விலக்கவேண்டும். நீங்கள் தர்மத்தையும் ஸத்யத்தையும் சாஸ்திரத்தையும் நியாயம் தவறாமையையும் பிராணிகளிடம் பெரியதயையையும் கோணலில்லாமலிருப்பதையும் வஞ்சகமில்லாமலிருப்பதையும் முயற்சியுடன் தேடுங்கள். தாயும் தந்தையும் பந்துக்களும் அப்படியே ஸ்நேஹிதர்களும் ஜீவிக்கும்படியான முயற்சியைச் செய்யாதவர்களுக்குத் தர்மம் கெடும். எவன் கண்களால் பார்க்கவில்லையோ எவ்விதத்திலும் அசையவில்லையோ அவனது நிலைமை முடிவுபெற்றதென்று நிச்சயமிருக்கும்பொழுது, அழுதுகொண்டு என்னசெய்யப்போகிறீர்கள்?' என்று சொல்லிற்று. இவ்விதஞ் சொல்லக் கேட்ட அந்தப்பந்துக்கள் புத்திரனைப் பூமியில் போட்டுவிட்டுச் சோகத்தால் பீடிக்கப்பட்டவர்களும் புத்திரனிடமுள்ள ஸ்நேஹத்தால் எரிக்கப்படுகிறவர்களுமாகி வீடு செல்லப்புறப்பட்டார்கள்.

நரி சொல்லத் தொடங்கிற்று: 'எல்லாப்பிராணிகளையும் நசிக்கச்செய்யும் இம்மானிடலோகம் குரூரமானது. இவ்வுலகில் நண்பர்களையும் உறவினர்களையும் விட்டுப் பிரியவேண்டியதாயிருக்கிறது. உயிரோடிருக்குங் காலமும் கொஞ்சம். பல கபடங்களுள்ளதும் பொய்யுள்ளதும் அதிகமாகப்பேசுவதும் அப்ரியத்தைப் பேசுவதுமான இவ்வுலகத்தையும் துக்கசோகங்களை வளரச்செய்யும் விஷயத்தையும் பார்க்கையில், ஒரு முகூர்த்தமும் இம்மானிட உலகம் எனக்குப் பிரியமாக இருக்கவில்லை. அந்தோ! சீ! கழுகின் வாக்கியத்தால் புத்தியில்லாதவர்களைப்போலப்

புத்திரனிடமுள்ள ஸ்நேஹத்தைத் தள்ளிவிட்டு ஸ்நேஹமற்றவர்களாக எப்படிப் போகிறீர்கள்? புத்ரசோகத்தால் எரிக்கப்பட்ட மானிடர்களே! பாவியும் புத்தியில்லாததுமான கழுகின் சொல்லைக்கேட்டுத் திரும்புகிறீர்களே. ஸுகத்திற்குப்பின் துக்கமும் துக்கத்திற்குப்பின் ஸுகமும் உண்டு. ஸுகதுக்கங்களால் சூழப்பட்ட உலகத்தில் முடிவடையாத ஸுகமென்பதில்லை. அழகுள்ளவனும் குலத்தை விளங்கச்செய்கிறவனும் பர்லகனுமான இந்தப் புத்திரனைப் பூதலத்தில் தள்ளிவிட்டு எங்கே போகிறீர்கள்? மூடர்களே! அழகும்யௌவனமும் நிறைந்து லக்ஷ்மியுடன் விளங்குகிறவன்போன்ற பாலனை உயிரோடிருப்பவனாகவே நான் மனத்தால் பார்க்கிறேன். இதில் ஸந்தேஹமில்லை. மானிடர்களே! இந்தப்பாலனின் நாசத்தால் ஸுகத்தை அடையவேமாட்டீர்கள். புத்திரசோகத்தால் மிகவும் தபிக்கப்பட்ட உங்களுக்கு இப்பொழுது மரிப்பது உசிதம். ஸுகம் வரலாமென்று நினைத்து நீங்களாகவே ஸுகத்தை உறுதியாகக்கருதிக்கொண்டு அல்பபுத்தியுள்ளவர்களைப்போல இவனைத்தள்ளிவிட்டு இப்பொழுது எங்கே போகப்போகிறீர்கள்?' என்று சொல்லிற்று. அரசனே! அவ்விதம் தர்மத்திற்கு விரோதமாகப் பொய்யான பிரியத்தைச்சொல்லுவதும் மயானத்தில் வஸிப்பதும் தன் காரியத்திற்குவேண்டி எப்பொழுதும் ராத்ரியைத்தேடுகிறதுமான நரியினால் அமிர்தத்திற்கொப்பான வசனங்களால் அவ்விடத்தில் தடுக்கப்பட்ட பந்துஜனங்கள் உடனே நடுவிலிருக்கும் நிலைமையை அடையும்படி செய்யப்பட்டார்கள்.

கழுகு சொல்லத்தொடங்கிற்று: 'இந்த அரண்யப்ரதேசமானது பிரேதங்களால் சூழப்பட்டதும் யக்ஷர்களாலும் ராக்ஷஸர்களாலும் அடையப்பட்டதும் குரூரமானதும் கோட்டான்களால் சப்திக்கப்பட்டதும் பயங்

கரமானதும் மிக்ககோரமானதும் கறுத்தமேகம் போன்ற நிறமுள்ளதுமாயிருக்கிறது. இதில் பிணத்தைப் போட்டு விட்டுப் பிரேதத்திற்குச் செய்யவேண்டிய காரியங்களைச் செய்யுங்கள். ஸூர்யன் அஸ்தமயத்தை அடையுமுன் திக்குக்கள் பிரகாசமாயிருக்கும்பொழுதே இதைத்தள்ளி விட்டுப் பிரேதத்திற்குள்ள காரியங்களைச் செய்யுங்கள். பருந்துகள் கொடுமையாகக் கத்துகின்றன. நரிகள் பயங் கரமாக ஊளையிடுகின்றன. சிங்கங்கள் கர்ஜிக்கின்றன. சூரி யனும் அஸ்தமயத்தைஅடைகிறான். கறுத்ததான சிதை யின் புகையால் மரங்கள் நன்றாக இருட்டுகின்றன. மயா னத்திலுள்ள தேவதைகளும் ஆகாரமில்லாதவைகளாய்க் கூச்சலிடுகின்றன. மிக்ககுரூரமான இவ்விடத்திலுள்ள வர்களும் விகாரமான சரீரமுள்ளவர்களும் விகாரமுள்ள வர்களும் மாம்ஸத்தைப் புஜிப்பவர்களுமான அனைவரும் உங்களை மிகவும் பயப்படும்படி செய்வார்கள். இந்தக் காடு பயங்கரமானது. இப்பொழுது பயமுண்டாகும். கட்டைபோன்றதான இந்தப்பிணத்தைப் போடுங்கள். நரியின் வார்த்தையை விடுங்கள். பயனற்றனவும் பொய்யு மான நரியின் வார்த்தைகளைப் புத்தியிழந்து கேட்பீர் களானால் அப்பொழுது யாவரும் நாசமடைவீர்கள்' என்று சொல்லிற்று.

நரி சொல்லத்தொடங்கிற்று: 'நில்லுங்கள்; உங்க ளுக்குப் பயம் வேண்டாம். எவ்வளவுவரையில் சூரியன் பிரகாசிக்கிறானோ அவ்வளவுவரையில் இந்தப்புத்திரனிடம் ஸ்நேஹத்தால் வெறுப்பில்லாமலிருங்கள். இஷ்டம்போல அழுதுகொண்டு நம்பிக்கையுள்ளவர்களாக நெடுநேரம் ஸ்நேஹத்துடன் பாருங்கள். குரூரமான இந்த அரண்யப் பிரதேசத்தில் உங்களுக்குப் பயமுண்டாகுமென்பதில்லை. இந்த அரண்யப்ரதேசமானது அழகுள்ளதும் பிதிருக் களுக்கு முடிவில் இடமுமாயிருக்கிறது. ஸூர்யனுள்ள

வரையிலிருக்கலாம். மாம்ஸத்தைத் தின்னும் கழுகின் வார்த்தைகளால் உங்களுக்காவதென்ன ? விவேகமற்ற புத்தியுள்ளவர்களாய்க் குரூரமானவைகளும் பரபரப் புள்ளவைகளுமான கழுகின் வசனங்களைக் கேட்பீர்களா கில் உங்களுக்குப் புத்திரனில்லாமற் போவான்' என்று சொல்லிற்று. அரசனே! அஸ்தமயமானால் கழுகு வராது. இரவில் நரி இருக்கும். ஆகையால், பசியுடன் கூடிய அந்தக்கழுகும் நரியும் இறந்தவனைச் சேர்ந்த அந்த ஜனங் களை இவ்விதம்சொல்லின. தம்தம் காரியத்தில் நல்ல உறுதி யுள்ள அந்தக்கழுகும் நரியும் பசியாலும் தாகத்தாலும் மிக்க சிரமமுற்றவைகளாய்ச் சாஸ்திரத்தைத் தொடர்ந்து பேசின. அறிவில் சாமர்த்தியமுள்ள அந்த மிருக பக்ஷி களின் அமிர்தம்போன்ற அந்த வசனங்களால் அவர்கள் சற்று இருக்கவும் சற்றுப்போகவுஞ் செய்தார்கள்; அப் பொழுது சோகத்தாலும் தீனத்தனத்தாலும் பிடிக்கப் பட்டு அழுதுகொண்டு நின்றார்கள். ஸ்வகார்யத்தில் ஸாமர்த்தியமுள்ள அவ்விரண்டினாலும் அவர்கள் ஸாமர்த் தியமாகப் பிரமிக்கும்படி செய்யப்பட்டார்கள். அவ்விதம் விவாதப்படுகின்றவைகளும் அறிவுள்ளவைகளுமான அந் தக் கழுகு நரி இரண்டுக்கும் அங்குநிற்கும் அந்தப் பந்துக் களுக்கும் எதிரில் சங்கரர் வந்தார். பார்வதிதேவியால் தூண்டப்பட்டவரும் அருளால் நனைந்த கண்ணுள்ளவரும் தேவருமான சங்கரர் உடனே அந்த மனிதர்களை நோக்கி, 'நான் வரமளிக்கிறவனாயிருக்கிறேன்' என்று சொன்னார். துக்கமுள்ள அந்தஜனங்கள் வணங்கி நின்றுகொண்டு, 'ஒரே புத்திரனாயிருப்பவனை இழந்தவர்களும் அவன் ஜீவிக்கவேண்டுமென்று விரும்புகிறவர்களுமான எங்கள் அனைவருக்கும், புத்திரனுக்கு ஜீவனையளித்து, வாழ்வைக் கொடுக்கவேண்டும்' என்ற இந்தவசனத்தைச் சொன்னார் கள். இவ்விதஞ்சொல்லக்கேட்ட அந்தப்பகவான், நீர்நிரம்

3B
2-165

பியகையினல் அந்தக் குமாரனுக்கு உயிரையும் நூறுவருஷம் ஆயுளையும் அளித்தார். அப்படியே, எல்லாப்பிராணிகளுக்கும் ஹிதத்தைச் செய்வதில் பிரியமுள்ளவரான பகவான்பிநாகியானவர் நரிக்கும் கழுகுக்கும் பசியைப்போக்குவதான வரமளித்தார். பிரபுவே! பிறகு, அவர்கள் க்ஷேமத்துடனும் ஸந்தோஷத்துடனும் அந்தச் சங்கரரை நமஸ்கரித்துவிட்டுச் செய்யவேண்டியதைச் செய்து கொண்டவர்களாகி மிக்க ஸந்தோஷத்துடன் புறப்பட்டார்கள். தொடர்ந்த வெறுப்பில்லாமையாலும் உறுதியான நிச்சயத்தாலும் தேவதேவரின் அனுக்ரஹத்தாலும் சீக்கிரமாகப் பயன் அடையப்படும். தெய்வத்தின் சேர்க்கையையும் பந்துக்களின் நிச்சயத்தையும் பார். எளிமையுற்று அழுதுகொண்டிருப்பவர்களுக்குக் கண்ணீரானது துடைக்கப்பட்டது; சிறிதுநேரம் நிச்சயத்துடன் தேடியதால், துக்கப்பட்டவர்கள் சங்கரரிடமிருந்து அனுக்ரஹம் பெற்று ஸுகமடைந்தார்கள்; பார். பரதர்களில் மிகச் சிறந்தவனே! அவர்கள் சங்கரரின் அனுக்ரஹத்தால் திரும்பவும் புத்ரன் பிழைத்திருப்பதில் மிக்க ஸந்தோஷமுள்ளவர்களும் ஆச்சர்யமுள்ளவர்களுமானார்கள். அரசனே! பிறகு, அவர்கள் குழந்தையிடமுண்டான சோகத்தைத் தள்ளிவிட்டு ஸந்தோஷமுள்ள மனமுள்ளவர்களாய்ப் புத்திரனை எடுத்துக்கொண்டு வேகமாக நகரத்திற்குச் சென்றார்கள். நான்கு ஜாதியாயிருக்கும் யாவருக்கும் இந்தப்புத்திரனானது காண்பிக்கப்பட்டது. அறம் பொருள் மோக்ஷங்களுடன்கூடிய பழைய இவ்விதிஹாஸத்தைக் கேட்டமனிதன், எப்பொழுதும், இம்மையிலும் மறுமையிலும் மிக்க ஸந்தோஷமடைவான்' என்று சொன்னார்" என்றார்.

Printed at Penrose & Co., [illegible], Sunkurama Chetty Street, G. T., Madras.

B
765

எலிமெண்டரி பாடசாலை மாணவர்களுக்கு உபயோகமான புத்தகங்கள்

* (இக்குறியுள்ள புத்தகங்கள் துரைத்தனத்தாரால் அங்கிகாரம் பெற்றவை.)

	ரூ.	அ.	ப.
இளைஞர் தமிழ் வாசகம்:—			
* முதல் வகுப்பு—முதற் பாகம்	0	2	0
* ,, இரண்டாம் பாகம்	0	2	0
* இரண்டாம் வகுப்பு	0	3	0
மூன்றாம் ,, ...	(அச்சில்)		
நான்காம் ,, ...	,,		
ஐந்தாம் ,, ...	,,		
* பால விநோதக் கதைகள்	0	4	0
* சுகாதார வாசகம்:—முதற் புத்தகம்	0	4	0
,, ,, இரண்டாம் புத்தகம்	0	4	0
* பூமி வர்ணனை:—சென்னை மாகாணம்	0	8	0
* ஈஸப் நீதிக் கதைகள்	0	3	0
விவேக விளக்கம்:—			
* முதற் புத்தகம்	0	2	0
* இரண்டாம் புத்தகம்	0	3	0
நீதிக் கதைக் கோத்து:—			
* முதற் புத்தகம்	0	4	0
* இரண்டாம் புத்தகம்	0	5	0
* மூன்றாம் புத்தகம்	0	5	0
* இலக்கணப் பாடங்கள் (படங்களுடன்)	0	5	0
* சிற்றிலக்கணம்	0	3	0
* இந்துதேச சரித்திரக் கதைகள்:—முதற் புத்தகம்	0	6	0
* நவீன கணிதம்:—(மலர் 1)	0	6	0
* ,, (மலர் 2)	0	9	0
* பாலர் ஸிவிக்ஸ்	0	5	0

இந்தியன் பப்ளிஷிங் ஹவுஸ் லிமிடெட்

சங்குராம செட்டி தெரு, சென்னை